# இயல்-1

## முன்னுரை

இந்திய அரசியலமைப்பின் 73-வது திருத்தச் சட்டத்திற்கு இணங்க 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் உருவாக்கப்பட்டது, அதன்படி மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் அமைக்கப்பட்டு, அவ்வமைப்புகளான ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றிற்கு 1996ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் தேர்தல்கள் நடைபெற்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் 1996ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25ஆம் நாள் அன்று தங்களது பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு உள்ளாட்சி அமைப்புகளை நிர்வகித்து வருகின்றனர்.

1.2. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு கூறு 243-ஜி மற்றும் 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 257-ற்கிணங்க பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களை தீட்டி செயல்படுத்தவும் மற்றும் அச்சட்டத்தின் பட்டியல் IV-ல் கண்டுள்ள இனங்களை செயல்படுத்தவும் தேவையான பொறுப்புகளை ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கலாமாவென்பது குறித்து பரிந்துரைத்து அரசுக்கு அறிக்கையையொன்றை சமர்ப்பிக்குமாறு மாநில திட்டக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறே மாநில திட்டக்குழு இரண்டு அறிக்கைகளை அனுப்பியது. இவ்வறிக்கைகளை பிற துறைகளுடன் கலந்து ஆராய்ந்து அரசு ஆணைகள் வாயிலாக முதல் கட்டமாக மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் ஒப்படைப்பு செய்துள்ளது.

1.3 உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் பணிகள் வழங்குவது குறித்து 1997-98ஆம் ஆண்டு சட்டசபையில் நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போது மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு, கூடுதல் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்க வேண்டுமென்று சட்டமன்றப் பேரவையில் சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகள் விடுத்தனர். சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையினை ஏற்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழ்கண்டவாறு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்:-

"மாநிலத் திட்டக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சிகளுக்கு இதுவரை வழங்கியுள்ள அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் பல்வேறு திட்டங்களை கண்காணிக்கும் பணிகள் ஆகியவற்றை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆய்வு செய்து மேலும் எத்தகைய மாற்றங்களை செய்யலாம், எத்தகைய உரிமைகளையும், பொறுப்புகளையும், அதிகாரங்களையும் அளிக்கலாம் என்பது பற்றி பரிந்துரை செய்ய சட்டப்பேரவையில் உள்ள கட்சி பிரதிதிகளை அமைச்சர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அவர்களை அமைப்பாளாரகக் கொண்டு குழு ஒன்று அமைக்கப்படும். இக்குழுவில் ஆளுங்கட்சி சார்பிலும், பிராதான எதிர்கட்சி சார்பிலும் முறையே இரண்டு உறுப்பினர்களும் மற்ற கட்சிகளின் சார்பில் ஒவ்வொரு உறுப்பினரும் நியமிக்கப்படுவர்."

1.4 மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்களை அமைப்பாளராகக் கொண்டு சட்டமன்ற கட்சிகளின் 12 பிரதிநிதிகளைக் கொண்ட உயர்மட்டகுழு ஒன்று அமைக்கப்பட்டது. ( இணைப்பு 1.1) . இந்த உயர்மட்ட குழுவில் பிரதிநித்துவம் வகிக்காத சட்டமன்ற கட்சிகளிலிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளின் பேரில் உறுப்பினர்களாக மேலும் இரண்டு உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. (இணைப்பு 1.2)

இக்குழுவில் அங்கம் வகிக்கும் அமைப்பாளர் மற்றும் 14 **உறுப்பினர்களின் பெயர்** மற்றும் அவர்கள் சார்ந்துள்ள கட்சியின் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:-

1. மாண்புமிகு திரு.கோசி.மணி, - அமைப்பாளர்
   ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்

2.திரு.பெ.சு.திருவேங்கடம், சட்டமன்ற உறுப்பினர் தி.மு.க. - உறுப்பினர்

3.திரு.பரமத்தி சண்முகம் தி.மு.க. - உறுப்பினர்

4.திரு.கே.எஸ்.அழகிரி, சட்டமன்ற உறுப்பினர் த.மா.கா. - உறுப்பினர்

5.திரு.என்.ஆர்.அழகராஜா, சட்டமன்ற உறுப்பினர் த.மா.கா. - உறுப்பினர்

6.திரு.எம்.அப்துல் லத்தீப், சட்டமன்ற உறுப்பினர் இ.தே.லீக்.- உறுப்பினர்

7.திரு.சொ.கருப்பசாமி, சட்டமன்ற உறுப்பினர் அ.இ.அ.தி.மு.க- உறுப்பினர்

8.திரு.ஏ.இராசேந்திரன் (எ) தீரன், சட்டமன்ற உறுப்பினர் - உறுப்பினர்

9.திரு.இலா.சந்தானம், சட்டமன்ற உறுப்பினர். அ.இ.பா.பிளாக்- உறுப்பினர்

10. திரு.ஐ.கணேசன், சட்டமன்ற உறுப்பினர் பா.ம.க. - உறுப்பினர்

11. டாக்டர் கே.கிருஷ்ணசாமி,சட்டமன்ற உறுப்பினர், புதிய தமிழகம் - உறுப்பினர்

12.திரு.ஜி.இராமகிருஷ்ணன் இ.க.(மார்க்சிஸ்ட்) - உறுப்பினர்

13.திரு.ஏ.எம்.கோபு இந்திய கம்யூனிஸ்ட் - உறுப்பினர்

14.திரு.பி.அய்யாக்கண்ணு ஜனதாதளம் - உறுப்பினர்

15.டாக்டர் வா.மைத்ரேயன் பா.ஜ.க. - உறுப்பினர்

1.5 உயர்மட்டக் குழு தனது அறிக்கையினை 6 மாத காலத்திற்குள் (11.5.98) அரசிற்கு அறிக்கை தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. குழு பல்வேறு பொருட்கள் குறித்து விவாதித்து முடிவு எடுக்க வேண்டியிருந்ததால் குழுவின் பதவி காலம் மேலும் ஆறு மாதத்திற்கு நீட்டிக்கப்பட்டது, அதாவது 10.11.98 வரை நீட்டிக்கப்பட்டது(இணைப்பு 1.3). குழுவின் அறிக்கை முழுமை பெறாததாலும் குழு தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டி மேலும் இரண்டு திங்கள்களுக்கு மறு நீட்டிப்பு அதாவது 10.1.99 வரை குழுவின் கால அளவு நீடிக்கப்பட்டது. (இணைப்பு 1.4)

1.6 குழு அமைக்கப்பட்ட நாளிலிருந்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் குழுவின் கூட்டங்கள் ஏழு முறை கூட்டப்பட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் பணிகள் குறித்து விவாதம் செய்யப்பட்டது. கூட்டம் நடைபெற்ற நாள், இடம் மற்றும் விவாதத்தின் விவரங்கள் பின்வருமாறு:

| வ என் | நாள் | இடம் | கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பொருள்கள் |
|---|---|---|---|
| 1. | 28.11.97 | தலைமைச் செயலக வளாகம் | உறுப்பினர்கள் அறிமுகம், குழுவின் நோக்கம் மற்றும் கால அளவு குறித்து குழுவின் அமைப்பாளர் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது. |
| 2. | 7.4.98 | தலைமைச் செயலக வளாகம் | 1994ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் பட்டியல் IV-ல் கண்டுள்ள முதல் 5 இனங்களின் மீதான மாநிலத் திட்டக்குழுவின் பரிந்துரைகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழஙகுவது குறித்து விவாதிக்கப்பட்டது. |
| 3. | 28.4.98 | தலைமைச் செயலக வளாகம் | 1994ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் பட்டியல் IV-ல் கண்டுள்ள இனங்களின் மீதான மாநிலத் திட்டக்குழுவின் பரிந்துரைகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 4. | 15.6.98 | தலைமைச் செயலக வளாகம் | 1994ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் பட்டியல் IV-ல் கண்டுள்ள இனங்களில் 6 முதல் 10 வரையிலான மாநிலத் திட்டக் குழுவின் பரிந்துரைகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது. |
| 5. | 28.7.98 மற்றும் 29.7.98 | தலைமைச் செயலக வளாகம் | 1994ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் பட்டியல் IV-ல் கண்டுள்ள இனங்களில் 11 முதல் 29 வரையிலான மாநிலத் திட்டக் குழுவின் பரிந்துரைகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது. |
| 6. | 19.9.98 மற்றும் 20.9.98 | கன்னியாகுமரி | ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய பொதுப் பொருள்கள் குறித்து மாநிலத் திட்டக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் உறுப்பினர்களின் கருத்துக்கள் விவாதிக்கப்பட்டது. |
| 7. | 29.12.98 மற்றும் 30.12.98 | ஒக்கேனக்கல் தருமபுரி மாவட்டம் | வரைவு அறிக்கையினை விவாதித்து சில திருத்தங்களுடன் அறிக்கையினை இறுதி செய்து ஒப்புதல் அளித்தது. |

மேற்கண்ட நாள்களில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை குறிப்புகளை இணைப்பு 2.1 முதல் 2.7-ல் காணலாம்.

# மாநில திட்டக்குழுவின் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

1.7 மாநில திட்டக் குழு தனது அறிக்கையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு கூறு 243 ஜி (பதினோறாவது அட்டவணை) மற்றும் 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பட்டியல் IV-ல் கண்டுள்ள 29 இனங்களை (இணைப்பு 3) செயல்படுத்த தேவையான குறிப்பு மற்றும் உரிமைகளை ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டுமென்று பரிந்துரை செய்தது. இந்த பரிந்துரைகளை பிற துறைகளுடன் ஆய்வு செய்து முதல் கட்டமாக வேளாண்மை மற்றும் வேளாண்மை விரிவுபடுத்துதல், நிலச்சீர்திருத்தம், நில உச்சவரம்பு செயல்படுத்துதல், கால்நடை, பால்பண்ணை மற்றும் கோழிப்பண்ணை, மீன்வளம், சிறுதொழில்கள், கதர், கிராம மற்றும் குடிசைத் தொழில்கள், ஊரக வீட்டுவசதி, குடிநீர்வசதி, எரிபொருள் மற்றும் மாட்டுத்தீவனம், மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கல்வி, தொடக்கக் கல்வி மற்றும் ஆரம்பக் கல்வி, தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் வாழ்க்கை தொழில் கல்வி, முதியோர் கல்வி மற்றும் முறைசாரா கல்வி, நூலகங்கள், சந்தைகள் மற்றும் கண்காட்சிகள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள் உள்ளிட்ட சுகாதார நலன்கள். குடும்ப நலம், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு, மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் ஊனமுற்றோர் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டம், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினரின் நலிந்தோர் நலன், பொதுவிநியோக முறை, சமுதாய சொத்துக்கள் பேணுதல் ஆகியவற்றின் மீது அரசு ஆணைகள் எற்கனவே வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆணைகளை தொகுத்து புத்தக வடிவில் 1998-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சட்டமன்ற பேரவையில் உறுப்பினர்களின் தகவலுக்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. இந்த ஆணைகளின் சுருக்கம் இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1.8 நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஊராட்சி அமைப்புகளுக்கு 1996ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் முறையான தேர்தல்கள் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் 1996ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் நாள் முதல் உள்ளாட்சி அமைப்புகளை நிர்வகித்து வருகின்றனர். உள்ளாட்சி

அமைப்புகள் தங்கள் பணிகள் மற்றும் அதிகார அலுவல்களை செவ்வனே செய்வதற்கு ஏதுவாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் அரசு ஆணைகளின் மூலமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவுகள் 110, 111, 112 மற்றும் 163ல் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் பணியமைப்பு மற்றும் அவற்றின் அதிகார அலுவல்கள் செவ்வனே நெறிமுறை படுத்தப்பட்டுள்ளன.

1.9 உள்ளாட்சி அமைப்புகள் மேலும் திறம்பட செயல்பட அவ்வப்போது தமிழ்நாடு 1994ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்திற்கு உரிய சட்டத் திருத்தங்களை செய்து உள்ளது. புதிய அரசு போறுப்பேற்ற பின்பு 1996ல் ஒரு முறையும், 1997ஆம் ஆண்டில் 5 முறைகளும் மற்றும் 1998ஆம் ஆண்டில் 7 முறைகளுமாக மொத்தம் பதிமூன்று சட்டத்திருத்தங்களால் நாற்பதுக்கு மேற்பட்ட பிரிவுகளுக்கு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இவைகள் அனைத்தும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் எவ்வித இடையூருமின்றி முழு அதிகாரம் பெற்ற சுயாட்சி அமைப்புகளாக செயலாற்ற உரிய வகையில் செய்யப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, மாவட்ட திட்டக்குழு அமைத்தல், கிராம ஊராட்சிகளுக்கு குடிநீர் பராமரிப்பை அடிப்படை பணியாக ஏற்படுத்துதல், கிராம சபைக்கு கூடுதல் அதிகாரம் மற்றும் குறைந்த பட்ச வருகையை திருத்தி அமைத்தல், கிராம ஊராடசிகளை தரம் பிரிப்பதற்கு வகை செய்தல், தொழில் வரி விதித்தல் போன்ற பொருள்கள் இச்சட்டத் திருத்தங்களில் அடங்கும்.

# இயல் – II

## பொதுவான பரிந்துரைகள்

உள்ளாட்சி அமைப்புகள் திறமையாக செயல்படுவதற்கு அவசியமான அனைத்து அதிகாரங்களையும் பகிர்ந்தளிக்க தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வருகிறது. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு தேவையான கூடுதல் அதிகாரங்களை ஆராய்ந்து பரிந்துரைக்க நியமிக்கப்பட்ட இந்த உயர்மட்டக் குழுவும் உள்ளாட்சி மன்றங்களுக்கு மேலும் அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் போது வழங்கப்பட்டுள்ள நிர்வாக உரிமைகளும், அதிகாரங்களும் நிதி பகிர்மானத்திற்கு ஒன்றுக்கொன்று முரண்படாத வகையில் கவனமாக பரிசீலித்து (அ) மூன்றடுக்கு நிர்வாக அமைப்புகளை வலுப்படுத்த, பொதுவான நிர்வாக மற்றும் நிதி சம்பந்தப்பட்ட பரிந்துரைகள் மற்றும் (ஆ) 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பட்டியல்-IVல் கண்டுள்ள 29 பொருட்கள் சம்பந்தப்பட்ட பரிந்துரைகள் என்ற இரண்டு நிலைகளில் பரிந்துரைத்துள்ளது.

## மூன்றடுக்கு நிர்வாக அமைப்புகளை வலுப்படுத்த, பொதுவான நிர்வாக மற்றும் நிதி சம்பந்தப்பட்ட பரிந்துரைகள்.

### I. நிர்வாக அமைப்பு சம்பந்தமான பரிந்துரைகள்

#### அ. கிராம சபை

1. கிராம சபை அரசியல் அமைப்பு சாசன அடிப்படையில் அமைக்கப்பட்ட மக்களாட்சியின் அடித்தள அமைப்பாகும். கிராமசபை வலுவோட செயல்படத் தக்கவகையில் சட்ட விதிகள் ஏற்கனவே மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கிராம வளர்ச்சிக்கு உரிய திட்டங்களை வகுத்தல், அவற்றை செயல்படுத்துதல், போன்ற பணிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிரமசபை வழிகாட்டுவதோடு, பல்வேறு துறை வளர்ச்சி பணிகளின் செயல்பாட்டை கண்காணிக்கும் முக்கிய பொறுப்பும் கிராம சபையிடம உள்ளது. எனவே கிராம சபையின் பணியை வலுப்படுத்துவதால் கிராம சபை மூலம் செயல்படுத்தப்படும் திட்ட பணிகளில் பொதுமக்களின் ஈடுபாடும், பங்கும் பெருக வாய்ப்புள்ளது. இந்த கிராமசபை அமைப்பே காலப்போக்கில் வளர்ச்சி பணிகளை சமூக தணிக்கை செய்ய

வழிவகை செய்யும். கிராம ஊராட்சிகளில் ஆண்டுக்கு குறைந்தது நான்கு முறையாவது அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராமசபை கூட்டம் நடத்த அரசு உத்தரவிட்டுள்ளது. எனவே கிராம சபை அடிக்கடி கூட்டவும், இந்த அமைப்பு வலிமையோடு செயல்படவும், அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

## ஆ. கிராம ஊராட்சிகள்

2. கிராம ஊராட்சிகளில் கூடுதலாக ஏற்பட்டுள்ள பொறுப்புகளையும், கடமைகளையும் கருத்தில் கொண்டு ஊராட்சிகளின் வருமானம் மற்றும் மக்கள் தொகை அடிப்படையில் பெரிய மற்றும் இதர ஊராட்சிகளை வகைப்படுத்தவும் முதல் கட்டமாக வசதி உள்ள பெரிய ஊராட்சிகள் அவசியமென கருதினால் அரசு நிர்ணயித்துள்ள தகுதிக்கேற்ப பகுதி நேர எழுத்தர்/ மக்கள் நலப் பணியாளரை முழு நேர பணியாளராக நியமிக்கவும் இருவருக்கும் கல்வித் தகுதி இருப்பின் பணி மூப்பு அடிப்படையில் நியமிக்கும் தகுதியான நபர்கள் இல்லாதபோது அரசாணைக்குட்பட்டு புதிய நபரை நியமித்து கொள்ளவும் குழு பரிந்துரைக்கிறது.

3. வருவாய் துறையில் கிராம பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போன்று அகவிலைப்படி, ஊராட்சி பகுதி நேர எழுத்தர்களுக்கும் வழங்க ஆவன செய்யவேண்டும்.

4. கிராம ஊராட்சிகளின் இன்றைய சூழ்நிலையில் அதிகமான பணிகள் உள்ளன. ஆனால் பஞ்சாயத்துகளுக்கு போதிய நிர்வாக அலுவலர்கள் கிடையாது. ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள இளநிலை பொறியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், குடிநீர், பராமரிப்பு அலுவலர், போன்ற ஒரு சில பணியாளர்களை பஞ்சாயத்துகளுக்கு நியமிக்கலாம்.

5. ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சிகளுக்குச் சேர்த்து ஒரே லைன்மேன் இருப்பதால், மின்சாரப் பழுதுகளைச் சரிசெய்ய காலதாமதமாவதைத் தவிர்க்க ஊராட்சி ஊழியர்களுக்கு பயிற்சியளித்து சிறிய பழுதுகளைச் சரிபார்க்க உரிமம் வழங்கி ஆவன செய்ய தமிழ்நாடு மின்வாரியத்தோடு தக்கதொரு ஏற்பாட்டை உருவாக்க வேண்டும்.

6. மக்கள் நல பணியாளர்கள் ஊராட்சி மன்ற கட்டுப்பாட்டில் இருப்பதுடன் அவர்களை நிர்வகிக்கும் பொறுப்பு ஊராட்சி நிர்வாக அலுவலருக்கு இருக்க வேண்டும்.

7. (அ) வரி அமைப்பு, நிதி, கணக்குகள் மற்றும் திட்டமிடுதல், (ஆ)கல்வி மற்றும் சுகாதாரம் (இ) நலத் திட்டங்கள் மற்றும் பொது விநியோக முறை ஆகிய பொருட்களில் நிலைக்குழு அமைக்கும் உரிமையை கிராம ஊராட்சிக்கே வழங்கப்பட வேண்டும். 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 96ன்படி ஊராட்சிகளுக்கு 4 குழுக்கள் அமைக்கும் அதிகரஙகளைத் தவிர வீடு கட்டுதல் மற்றும் இதர கட்டுமானப்பணிகள், சாலைப்பணிகள், குடிநீர் வழங்கல் மற்றும் பொதுப்பணிகள் , நிதி , வரிகள், போன்றவற்றிக்கு பணிக்குழுக்கள் அமைக்கும் உரிமையையும், நிதி ஆதாரங்ளை பெருக்குவது, மான்யங்களை வெளியிடுதல் மற்றும் பயன்படுத்துதல் போன்றவைகளுக்கு திட்டக் குழு அமைக்கும் உரிமையையும், பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடிகள் நலத்திற்காகவும், வறுமை ஒழிப்புத் திட்டம், ஊரக வளர்ச்சி, பொது விநியோகத் திட்டம், குடும்ப நலம் மற்றும் சுகாதாரம் போன்றவைகளுக்கு நலக்குழு அமைக்கும் உரிமையையும் வழங்கப்பட வேண்டும்.

8. கிராம ஊராட்சிகளில் குடிநீர், மின்பம்பு சம்பந்தப்பட்ட வேலைகளுக்கு ஒன்றிய பொறியாளரைக் கொண்டு திட்ட மதிப்பு செய்து, முடித்த வேலைகளை அளப்பது, சான்று அளிப்பது போன்றவை செய்ய அதிகாரம் வழங்குவதுடன் கிராம ஊராட்சி தலைவர்கள் இது சம்மந்தமாக கடிதம் கொடுத்தால் கூடிய விரைவில் பார்வை இடவும், பார்வை இட மறுக்கும் அரசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு மட்டத்தில் நெறிமுறைகள் வெளியிடுதல் வேண்டும்.

9. ஊராட்சியில் வீடுகளுக்கு தண்ணீர் குழாய் இணைப்பு கொடுக்க ஊராட்சிக்கு அதிகாரம் அளிக்க வேண்டும். வீட்டு இணைப்புகளுக்கு திரும்ப செலுத்த தேவையில்லாத ஒரு தவணையிலான இணைப்பு தொகையும் கனிசமான மாதாந்திர தண்ணீர் தீர்வையும் வீட்டு இணைப்பு இல்லாதவர்களுக்கு மாதம் ரூபாய் 10க்கு குறையாமல் தண்ணீர் தீர்வை விதிக்கவும் குழு பரிந்துரை செய்கிறது.

10. குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தின் (Hut Service) கீழ் ஒரு பல்புக்கு மேல் பயன்படுத்தினால் அது குறித்து சம்பந்தப்பட்ட அலுவலருக்கு புகார் செய்ய ஊராட்சி மன்றத் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

11. கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு அதிகாரம் ஏற்கனவே ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக ஊராட்சி மன்ற தலைவர்கள் காவல் துறையினரின் உதவியை நாடினால் காவல் துறை மற்றும் வருவாய் துறை இதற்கு உதவியாக செயல்பட வேண்டும்.

12. கிராம ஊராட்சிகளுக்கு நூலகம், பொதுமக்கள் கூடும் இடம், பள்ளிக்கூடம், விலங்குகள் நல்வாழ்வு கூடம் கட்டுவதற்கு அரசு இடத்தை எடுத்துக் கொள்ள முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இதற்காக வருவாய் துறையை சார்ந்த பி மெமோ, டி மெமோ 2சி பட்டா மற்றும் மரம் சம்பந்தமான இதர தாக்கீதுகள் வழங்குவதற்கு முன்பு, சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளின் ஆலோசனை பெற வேண்டும்.

13. இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கும் போது ஊராட்சித் தலைவர்களை கலந்தாலோசனை செய்வதுடன் சொந்த வீடு இல்லை என்று உறுதிபடுத்திய பிறகுதான் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட வேண்டும்.

14. தொழில் வரி சட்டவிதிகளின்படி மத்திய அரசு அலுவலர்கள் உள்பட அனைத்துப் பொருளீட்டும் நபர்கள் மீதும் விடுதல் இன்றி வசூலிக்க வழிவகை செய்ய வேண்டும்.

15. கணிமம் மீதான சன்மானவரி (Royalty) கிராம ஊராட்சிகளுக்கு ஒரு பகுதியை அரசு பிரித்து தர குழு பரிந்துரைக்கிறது.

16. நகர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ளது போல் குடிநீர் மற்றும் வடிகால் வரி விதிப்பதுபோல் ஊராட்சிகளிலும் வீட்டு வரி தொகை மீது 20%க்கு மிகாமல் குடிநீர் வரி விதிக்க பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் வழங்க குழு பரிந் துரைக்கிறது. அரசு ஆவண செய்ய நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரைக்கிறது.

17. நகர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ளதுபோல் கிராம புறங்களில் விளம்பர வரி விதிக்க ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கவும் அதற்குரிய சட்ட திருத்தங்களை அரசு கொண்டுவரவும் இக்குழு பரிந்துரைக்கிறது.

18. மின்சார வாரியம் விளக்குகள் அமைக்கும்போது ஊராட்சி சொத்துக்களில் கம்பங்கள் நட ஊராட்சியின் முன்அனுமதி பெறுவதில்லை. ஆனால் பிற்காலத்தில் சாலைகள் அகலப்படுத்துதல் போன்ற வளர்ச்சி பணிகளுக்கு கூட கம்பங்கள் மாற்ற மின்சார வாரியம் தீர்வை விதிக்கிறது. இதுபோன்ற வளர்ச்சி பணிகளை முன்னிட்டு கம்பங்கள் மாற்ற நேரிட்டால் இதுபோன்ற தீர்வை விதிக்காமல் வாரியம் மாற்றித்தர உரிய ஆணை பிறப்பிக்க அரசுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

19. வீடுகளுக்கு மின் இணைப்பு தர மின்சாரவாரியம் கிராம நிர்வாக அதிகாரியின் சான்றிதழை வலியுறுத்துவதை தவிர்த்து ஊராட்சியின் சான்றிதழ் அடிப்படையில் மின்இணைப்பு தர உரிய அரசு ஆணை வழங்க குழு பரிந்துரை செய்கிறது.

20. அபயாகரமான தொழில் மீதான உரிம கட்டணம் வசூலிக்கும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து மாற்றி ஊராட்சிகளுக்கு வழங்க குழு பரிந்துரை செய்கிறது.

21. ஊராட்சி ஒன்றியங்களிலும் மாவட்ட ஊராட்சியுலும் பல்வேறு குழுக்கள், அமைத்து செயல்பட உரிய வழிவகை ஏற்படுத்தப்பட்டு உள்ளது, ஆனால் பல்வேறு பணிகளை செய்துவரும் ஊராட்சிகளில் இதுபோன்ற குழுக்கள் அமைக்க விதிகளில் வழிவகை செய்யப்படவில்லை, எனவே குடிநீர், சுகாதாரம், சம்பந்தமான குழு, உணவு மற்றும் பொதுவிநியோகம் சம்பந்தமான குழு, திட்டப்பணிகள் சம்பந்தமான குழு போன்று ஐந்து குழுக்களுக்கு மிகாமல் ஊராட்சிகள் அமைத்து செயல்பட விதிகள் ஏற்படுத்த குழு பரிந்துரை செய்கிறது.

### இ . ஊராட்சி ஒன்றியங்கள்

22. களப்பணியில் ஏற்கனவே 10 ஊர்நல அலுவலர்கள் இருந்தார்கள். அவர்களை ஊராட்சிகளிலிருந்து எடுத்து ஊராட்சி ஒன்றியத்தில் அலுவலகத்தில்

பணிபுரிய அரசு ஏற்கனவே உத்திரவிட்டு நடைமுறை படுத்தப்பட்டுள்ளது. இதனால் ஊராட்சி அளவிலான நிர்வாகம், அடிப்படை புள்ளி விவரங்கள் ஆகியவை குறித்த விவரங்கள் முழுமையாக சேகரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்ப இயலவில்லை. எனவே இவர்களை மீள களப்பணிக்கே திரும்ப அனுப்ப உத்தரவிட வேண்டும்.

23. சென்னையிலிருந்து 32 கிலோ மீட்டர் எல்லைவரை அடங்கிய ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறும் வேலைகளுக்கு சிட்டி ரேட் முறையை அமுல்படுத்தி மதிப்பீடு தயார் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.

24. அரசு விழாக்களுக்கு தற்போது ஒன்றியங்களின் செலவுத் தொகையாக அனுமதிக்கப்படும் தொகை ரூ.1000/க்குப் பதிலாக ரூ.2000/ஆக அனுமதிக்கப்பட வேண்டும்.

25. அவசரம் அவசியம் கருதி ஒன்றியத்தில் ஏற்படுகின்ற பணிகளை உடனடியாக ஏற்றுச் செய்வதற்கு பொதுப்பணித் துறைக்கும், நெடுஞ்சாலைத் துறைக்கும் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் போல் ரூ.50 ஆயிரம் வரை நியமனதாரர் (offer) மூலமாகவும் வேலை செய்ய ஒன்றிய குழுவிற்கு அனுமதி அளிக்க வேண்டும்.

26. ஊராட்சி ஒன்றியத்தில் வரும் சத்துணவு, மதிய உணவு அமைப்பாளர்கள், சமையல் உதவியாளர்கள், ஆகியோர்களது நியமனத்தை ஒன்றியத்திலுள்ள பணி நியமனக்குழுவிற்கு (appointment Committe) தேர்வு செய்யும் அதிகாரம் வழங்கப்படல் வேண்டும்.

### ஈ. மாவட்ட ஊராட்சி.

27. மாவட்ட ஊராட்சிக்கு என்று தனியாக முழு நேர செயலரை நியமனம் செய்யவும், இதனால் மாவட்ட ஊராட்சிக்கு ஒதுக்கப்படும் நிதியை பயன்படுத்தி திட்டங்கள் செயல்படுத்தும் முழு அதிகாரமும் மாவட்ட ஊராட்சிக்கு அளித்திட வேண்டும்.

28. மாவட்ட ஊராட்சி மன்றங்களுக்கு நிதியை அரசு அளித்து வருகிறது. ஆனால் அவர்களுக்கு நிர்வாக ஊழியர்களோ அல்லது அலுவலர்களோ அதை நிர்வகித்து கண்காணிக்கின்ற பொறுப்புகளோ இல்லை. ஆகவே மாவட்ட ஊராட்சி மன்றத்திற்கு தேவையான அலுவலர்களையும் மற்றும் பணிகளை நிறைவேற்றும் அதிகாரங்களையும் ஒப்படைக்கலாம்.

29. மாவட்ட ஊராட்சிகளுக்கு 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், விதி 97ன்படி ஐந்து நிலைக் குழுக்கள் அமைக்க சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அந்த 5 நிலைக் குழுவிற்கு எந்தவகையான பணிகள், அந்தக் குழுக்களின் அதிகாரம் என்ன?, என்பது வரையறுக்கப்படாததால் இது நாள்வரை அந்தக் குழுக்கள் அமைக்கப்படவில்லை. ஆகவே அந்தக் குழுக்களை அமைக்கவும் அதற்காக பணிகளை தெளிவு படுத்தவும் விதிமுறை வகுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

30. மாவட்ட ஊராட்சி தலைவர்களுக்கு வாகன எரிபொருளாக டீசல் 125 லிட்டர் அல்லது பெட்ரோல் 195 லிட்டர் என வழங்கப்படுகிறது. இதில் தொகை வித்தியாசம் காணப்படுகிறது. மேலும் குறைந்த ஊராட்சிகளைக் கொண்ட மாவட்ட ஊராட்சிகளுக்கும், விழுப்புரம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை போன்ற அதிக ஊராட்சிகளைக் கொண்ட மாவட்டங்களுக்கும் ஒரே அளவாக எரிபொருள் வழங்கப்படுகிறது. இதனை ஊராட்சிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு உயர்த்தி வழங்க வேண்டும்

31. மாவட்ட கொள்முதல் குழுவில் மாவட்ட ஊராட்சி தலைவரை குழுவின் ஓர் உறுப்பினராக சேர்த்துக் கொள்ள வேண்டும்.

32. அனைத்து மாவட்ட ஊராட்சி தலைவர்களின் கூட்டம் வருடத்திற்கு ஒரு முறை முதலமைச்சர்/ உள்ளாட்சித்துறை அமைச்சர் ஆகியோரால் கூட்டப்பட்டு, பணிகளின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்திட வேண்டும்.

## உ. மாவட்ட திட்டக்குழு

33. மாவட்ட திட்டக்குழுவை நிறுவ அரசு விதிமுறைகளில் வழிவகைகள் செய்துள்ளபோதிலும், தற்போதைய விதிமுறைபடி மாவட்ட திட்டக்குழு

நடைமுறைபடுத்த முடியாத அளவுக்கு 100க்கு மேற்பட்ட உறுப்பினர்களை உள்ளடக்கி உள்ளதால் இதை நடைமுறை படுத்த கூடிய வகையில் உறுப்பினர்கள் எண்ணிக்கையை குறைக்க உரிய சட்ட திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும். மேலும் மாவட்ட திட்டக் குழுவின் தலைவராக மாவட்ட ஊராட்சி தலைவரை நியமிக்க வேண்டுமென மூன்று உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தாலும் பெரும்பாலான உறுப்பினர்கள் கருத்துப்படி தற்போதுள்ளபடி மாவட்ட ஆட்சியரே தலைவராக தொடர்வது நல்லது என்றும் மாவட்ட ஊராட்சி தலைவர் மாவட்ட திட்டக்குழுவின் உப தலைவராக நியமிக்கலாம் என்றும் பரிந்துரைக்கப்படுகிறது. இது போன்ற மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கும் மாவட்ட ஊராட்சி தலைவரை மாவட்ட ஆட்சியருக்கு பதில் முகமையின் தலைவராக நியமிக்க மூன்று உறுப்பினர்கள் (திரு.ஜி,இராமகிருஷ்ணன், திரு.ஏ.எம்.கோபு மற்றும் திரு.கே.எஸ்.அழகிரி) மட்டும் கருத்து தெரிவித்தாலும் பெரும்பாலானஉறுப்பினர்கள் முடிவுப்படி தற்போதைய நிலையே தொடர குழு பரிந்துரைக்கிறது.

34. இந்திய அரசியலமைப்பு சட்டம் மற்றும் 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் மற்றும் நகர்புற ஊராட்சிகள் உரிய வருடாந்திர சமூக பொருளாதார வளர்ச்சி திட்டங்களை தீட்டி மாவட்ட திட்ட குழுவில் ஒருங்கிணைத்து மாநில திட்ட குழுவிற்கு சமர்பிக்க உரிய வழிகாட்டி நெறிமுறைகள் இதுவரை வெளியிடப்படவில்லை. எனவே இந்த வழிகாட்டி நெறிமுறைகளை கூடிய விரைவில் அரசின் திட்ட துறையும், மாநில திட்ட குழுவும் வெளியிட அரசு வழிவகை செய்ய வேண்டும். வருங்காலத்தில் மாநில ஆண்டு திட்டத்தில் மாவட்டம் வாரியாக ஒவ்வொரு துறை சம்பந்தமான திட்ட மதிப்பீடு தனித்தனியாக குறிப்பிட்டு காட்டப்பட வேண்டும்.

35. மத்தியில் உள்ள தேசிய வளர்ச்சி குழுமம் போன்று, மாநில அளவில், முதலமைச்சரை தலைவராகக் கொண்டும், சில சட்டமன்ற உறுப்பினர்கள், சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள், மாநகரத் தந்தைகள், அமைச்சர்கள், முதுநிலை நிர்வாகத்தினர்கள், மற்றும் மாநில திட்டக் குழு உறுப்பினர்களையும் கொண்டு, மாநில வளர்ச்சி குழுமம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

36. மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டம், ஊரக பகுதிகளிலும் நகர்ப்புற பகுதிகளிலும் நிறைவேற்றப்படுவதால் இத்திட்ட பணிகளை அனுமதித்து அதன் செயல்பாட்டை கண்காணிக்கும் பொறுப்பு மாவட்ட திட்ட குழுவிற்கே வழங்க வேண்டும்.

37. குழு நிதி பகிர்ந்தளிப்பது பற்றி விவாதிக்கும்போது உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிர்வாக அதிகாரங்களுக்கு ஏற்ப இருக்க வேண்டுமென கருதுகிறது. திரு. கே.எஸ். அழகிரி கருத்து தெரிவிக்கையில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 257 (பட்டியல் 4ல்) கூறப்பட்டுள்ள 29 துறைகளை, உள்ளாட்சி அமைப்புகள் ஆய்வு செய்தல், உதவுதல், கண்டறிதல் என்று மட்டுமே தற்போது கூறப்பட்டுள்ளது. இதனால் 'அதிகாரம் வழங்கியதாக' பொருள் கொள்ள முடியாது என்றும், மாறாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் 243 (ஜி)யில் கூறப்பட்டுள்ளது போல் செயற்படுத்துதல் அல்லது நிர்வகிக்கும் பொறுப்பினை மாநில அரசு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்க வேண்டும் என தெரிவித்தார். மேலும் சில உறுப்பினர்கள் (திரு.கே.எஸ்.அழகிரி, திரு.ஜி.இராமகிருஷ்ணன், திரு.ஏ.எம்.கோபு) மாநில அரசு அதன் மொத்த நிதியில் 29 முதல் 33 விழுக்காடு பகிர்ந்தளிக்க வேண்டுமென கருத்து தெரிவித்தனர். தற்போது கல்வி, சுகாதாரம், கால்நடை, விவசாயம், உள்ளாட்சி பணியாளர் செலவினம் என பெரும்பகுதி செலவிணத்தை அரசே நேரடியாக ஏற்றுக் கொண்டாலும் மொத்த மாநில வருவாயில் 8% க்கு மேல் உள்ளாட்சிகளுக்கும் பகிர்ந்தளிப்பது நல்ல முறை என்று குழு கருதுகிறது. எனினும் இதுபோன்ற நிதி பகிர்மானம் பற்றிய பரிந்துரை மாநில நிதி குழுவின் அதிகார வரம்பிற்குட்பட்டது என்பதை கருத்தில் கொண்டு இதை அடுத்த மாநில நிதி குழு ஆய்ந்து பரிசீலிக்க வேண்டுமென இக்குழு கருதுகிறது.

## ஊ. இதர பரிந்துரைகள்

38. தேர்தலைப் பொறுத்தவரை, ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்,மாவட்ட ஊராட்சி தலைவர் ஆகியோர்களுக்கு நேரடி தேர்தல் நடத்தப்படவேண்டும். மேற்படி தேர்தலில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி தலைவர் ஒன்றிய உறுப்பினராகவும், ஒன்றிய பெருந்தலைவர் மாவட்ட ஊராட்சி உறுப்பினராகவும் செயல்பட வேண்டும். எந்த முறையில் தேர்தல் நடத்தவேண்டும் என்பதை நிர்ணயிக்கும் உரிமை மாநில அரசுக்கு வழங்க மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

39. மூன்றடுக்கு ஊராட்சி நடைமுறை, ஒன்றுக்கொன்று தொடர்பு அற்றதாக உள்ளது. இது சிறப்பாக செயல்படவில்லை. எனவே அரசு சட்ட திருத்தத்தின் மூலம் மூன்றடுக்கு ஊராட்சிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக ஆக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து மூன்றடுக்கு ஊராட்சி தொடர்புடைய அமைப்புகளாக செயல்பட ஆவன செய்யப்பட வேண்டும். உண்மையான அடிமட்ட தேவைகளை அதற்கடுத்த அருகில் உள்ள தலைமைக்கு பிரதிநிதிகள் மூலம் எடுத்துக் கூறப்பட்டு தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். எனவே, ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஊராட்சி ஒன்றிய மன்ற உறுப்பினராகவும், ஊராட்சி ஒன்றிய தலைவர்கள் மாவட்ட ஊராட்சியின் உறுப்பினராகவும், பணியாற்ற வாய்ப்பு ஏற்படும். மேலும் ஊராட்சி ஒன்றியத்தலைவர், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆகியோர் பொது மக்கள் மூலமும் தேர்ந்தெடுக்கப்படலாம்.

40.நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படாமல் மறைமுகமாக உறுப்பினர் களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்களை உரிய வழிமுறைகளை பின்பற்றி நம்பிக்கையில்லா தீர்மானம் மூலம் பதவி நீக்கம் செய்வது பொதுவாக நடைமுறையில் உள்ள விதிமுறை. இதுபோன்ற விதிமுறைகள் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் இருந்த போதிலும், 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படும் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் மற்றும் மாவட்ட ஊராட்சி தலைவர்களை நம்பிக்கையில்லா தீர்மானம் மூலம் சம்பந்தப்பட்ட ஊராட்சி அமைப்பின் உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்ய வழிவகை இல்லை. குழுவில் ஒரு உறுப்பினர் (திரு.ஜி.இராமகிருஷ்ணன்) மட்டும் கட்சித் தாவல் சட்டம் கொண்டுவராமல் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்தால் இது தவறான விதிமுறைக்கு வழிகோலும் என கருத்து தெரிவித்தார். தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 ல் உரிய சட்ட திருத்தங்கள் கொண்டு வந்து ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் மற்றும் மாவட்ட ஊராட்சி பெருந்தலைவரை நம்பிக்கையில்லா தீர்மானம் மூலம் பதவி நீக்கம் செய்ய உரிய வழிவகை செய்ய வேண்டும் என குழு கருதுகிறது.

41. ஒன்றிய பொறியாளரின் மதிப்பீடு அதிகாரம் ரூபாய் 30,000/லிருந்து ரூபாய் 1,00,000/- ஆகவும், கோட்டப் பொறியாளரின் மதிப்பீடு அதிகாரம் ரூபாய் 5 லட்சத்தில் இருந்து ரூபாய் 10 லட்சமாகவும் ஆகவும் உயாத்தப்பட வேண்டும்.

42.உள்ளாட்சி செயல்பாடுகளுக்கு எளிமையான, மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய சட்டதிட்டங்களை உருவாக்கிடவேண்டும். அது தமிழ் மொழியில் இருப்பது மிகவும் அவசியம்.

43. உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பான செயல் விளக்கங்கள், உரிய உள்ளாட்சி அமைப்புகளுக்கு எல்லா துறைகளிலிருந்தும் வழங்க வேண்டும்.

44.உள்ளாட்சி பற்றிய அரசு ஆணைகள் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வந்து சேருமாறு செய்திடல் வேண்டும். அரசு ஆணைகள் ஆண்டுதோறும் தொகுத்து புத்தக வடிவில் அச்சிட்டு வழங்கப்பட வேண்டும்.

45. உள்ளாட்சிக்கு உட்பட்ட புறம்போக்கு நிலங்கள் உரிய பயனில்லாது போனால் உள்ளாட்சிகளே தங்கள் தேவைக்கு பள்ளிகள், மருத்துவமனைகள், உபமின்நிலையங்கள் போன்றவற்றை அமைப்பதற்கு எடுத்துக்கொள்ள உரிய வழிவகை செய்ய வேண்டும்.

46. அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் உடனடி தணிக்கை முறை மற்றும் தொடர் தணிக்கை முறை அறிமுகப்படுத்த வேண்டும்.

47. உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளும் கட்டுமானப் பணிகளை தணிக்கை செய்ய "தொழில் நுட்ப தணிக்கைக் குழு" அமைக்கப்படல் வேண்டும்.

48. 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் அமுல்படுத்தப்பட்டபின் கணிசமான அளவு பெண்களும், பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியின சமுதாயத்தினரும் முதல் முறையாக நிர்வாக பொறுப்பை ஏற்றுள்ளனர். இவர்கள் ஊராட்சி அமைப்புகளின் செயல்பாடுகளை முழுமையாக உணர்ந்து செயல்படுவதில் பல இடர்பாடுகள் உள்ளன. ஏனவே புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகளுக்கு குறிப்பாக பெண்கள், பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடி

இன மக்கள் பிரதிநிதிகளுக்கு ஐந்து ஆண்டு காலத்தில் இரண்டு முறையாவது முறையான பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இவர்கள் பொறுப்பு ஏற்றவுடன் ஒரு பயிற்சியும், இரண்டு ஆண்டுக்கு பிறகு கருத்து பரிமாற்றம் ஏற்படத்தக்க வகையில் ஒரு பயிற்சியும் அளிக்க வேண்டும்.

49.அதேபோல், மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் நிர்வாக பொறுப்பு ஏற்றபின்பு மாறுபட்ட நிலையில் அடிமட்டத்திலிருந்து திட்டமிட்டு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளுவதில் உள்ளாட்சி அமைப்புகளின் பங்கை உணரும் வகையிலும் அலுவலர்கள் இதற்கு உறுதுணையாக ஆற்ற வேண்டிய கடமை பற்றியும், மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படும் அலுவலர்களுக்கும் பிற துறை அலுவலர்களுக்கும் உரிய பயிற்சி அளிக்க வேண்டும்.

50. இதுபோன்ற பயிற்சிக்கு அவசியமான கையேடுகள் தயாரித்து வழங்குவதுடன், பயிற்சி அளிக்கும் ஊரக வளர்ச்சி துறை பயிற்சி நிறுவனங்கள், தனியார் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றில் இதுபோன்ற பயிற்சி அளிப்பதற்குரிய கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

51. உள்ளாட்சி மன்றங்களில் முறைகேடுகள் மற்றும் ஊழலை தடுக்க மாநில அளவிலான அம்புட்ஸ்மான் குழு (Ombudsman Committee) அமைக்க வேண்டும். இக்குழுவில் நீதிபதி, அதிகாரிகள் மற்றும் பொறுப்பு வாய்ந்த வல்லுநர்கள் கொண்ட கண்காணிப்புக்குழு அமைத்து, இக்குழு உள்ளாட்சி நிர்வாகத்தில் முறைகேடு, ஊழல் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். திரு.கே.எஸ்.அழகிரி அவர்கள் கருத்து தெரிவிக்கையில், ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளின் மேல் எடுக்கப்படும் பதவி நீக்கம் மற்றும் இதர நடவடிக்கைகளுக்கு முன் அவைகள் குறித்து அம்புட்ஸ்மான் குழுவின் கருத்துக்களைப் பெற்று அவர்கள் மீது மேல் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

52. கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் பேணப்படும் பதிவேடுகள், படிவங்கள், அறிக்கை முறை போன்றவைகள் கணிப்பொறி மயமாக்கப்பட்டு தொடர்ந்து பேணப்பட வேண்டும். இவ்வினங்களில், நிர்வாகத் தகவல் முறை சீரான முறையில் கையாளப்படல் வேண்டும்.

53. உள்ளாட்சி அமைப்புகளில் திட்டம் தீட்டும்போது வல்லுனர்களை முடிந்தவரையில் செலவில்லாமல் சேவையின் அடிப்படையில் பயனபடுத்த முனைய வேண்டும். முடியவில்லையெனில் ஒப்பந்தமுறையில் செய்து கொள்ள அனுமதிக்கலாம்.

54. மாநில அளவில், தலைமைச் செயலரை தலைவராகக் கொண்டு, ஒரு அதிகார நிலைக்குழு ஏற்படுத்தப்பட வேண்டும். திட்டங்களில், செயல்பாடுகளில் துரிதமாகவும், நிறைவுடனும் செய்வதற்கு ஏதுவாக, தேவைப்படும்போது விளக்கங்களும், உரிய வழிமுறைகளும் தருவது இக்குழுவின் பணியாகும்.

55. குழு தன்னுடைய அறிக்கையை முழுமையாக சமர்ப்பித்து மாவட்ட ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், கிராம ஊராட்சிகளுக்கும் அதிகாரங்களை ஒவ்வொன்றாக கொடுத்த பின்பு அவைகளில் ஏற்படுகின்ற நடைமுறை சிக்கல்கள் ஏதாகிலும் இருந்தால் அந்த சிக்கல்களை தவிர்க்கவோ அல்லது அதற்கு வேறு வழிவகை காணவோ முயல வேண்டி இருக்கலாம். ஆகவே ஒரு கண்காணிப்பு குழுவை அமைத்து மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்கள் செயல்படுகிறதா என்று கண்காணிப்பதற்கு நிரந்தரமாக ஒரு குழுவை அமைக்கலாம்.

## II. திட்டங்கள் நடைமுறை சம்பந்தமான பரிந்துரைகள்

56. திட்ட செயல்பாடு, அடிப்படை சேவைகள், வசதிகள் போன்றவற்றின் விவரம் உடனுக்கடன் பெற "கிராம நிர்வாக தகவல் முறை திட்டம்" எல்லா மாவட்டங்களிலும் கடைபிடிக்கப்பட வேண்டும். கிராமங்களில் நடைபெறும் திட்டங்கள், அவற்றின் மதிப்பீடு மற்றும் செயல்படுத்தும் நபர் போன்ற விவரங்கள் பற்றிய தகவல் பலகை அனைத்து ஊராட்சிகளிலும் வைக்கப்பட வேண்டும்.

57. உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரமும், நிதி ஆதாரமும் அளிப்பதோடு திட்டங்களை நிறைவேற்ற ஊழியர்களையும் அளிக்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகள் உருவாக்கும் திட்டங்களை நிறைவேற்றும் அரசு ஊழியர்களின் பணிகளை மேற்பார்வையிடும் பொறுப்பு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படவேண்டும். படிப்படியாக அரசின் கீழ் இன்றுள்ள பல துறைகளும், துறைசார்ந்த ஊழியர்களும் உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படவேண்டும். மத்திய அரசும், மாநில அரசும் ஊராட்சிகள் செயல்பட ஆரம்பித்த பின்னர் அடிப்படைத் தேவைகளுக்குக்கான திட்டங்கள் தீட்டுவதை குறைத்துக் கொள்ள வேண்டும். இன்றைய நிலையில் பல அலுவலர்கள் உள்ளாட்சிக்கு உட்பட்ட செயல்படும் அலுவலர்களாக மாற்றப்படல் வேண்டும்

58. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம், வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் , வறட்சிப் பகுதி மேம்பாடு திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் இதர திட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் ஒப்படைக்கப்படல் வேண்டும். இவைகளை முறையாக பராமரிக்க சொத்தின் மொத்த மதிப்பீட்டில் குறிப்பிட்ட சதவீதத்தை கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு பராமரிப்பு நிதியாக ஒதுக்கப்படல் வேண்டும். இதை பராமரிப்பதற்கான பொதுவான வழி நெறிமுறைகளை அரசு வெளியிட வேண்டும்.

59.பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்பட்டு வரும் ஒன்றுக்கு மேற்பட்டத் திட்டங்களை ஒருங்கிணைத்து அதிக பட்ச வளர்ச்சியை கொண்டுவர உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுமதி வழங்கி, இதற்குரிய சட்டத் திட்டங்களும், வழிகாட்டு நெறிமுறைகளையும் அரசு வெளியிட வேண்டும்.

60. மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு நிர்வாகம், தொழில் நுட்பம் மற்றும் நிதி தொடர்பாக பரவலாக்கப்பட்ட முறையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் , பணிகள் விரைவாக முடிக்கும் பொருட்டு செயல்படுத்தப்பட வேண்டும். இதற்கான செயல் வழிமுறைகள் எளிதான முறையில் தொகுக்கப்பட வேண்டும். மேலும் பணிகள் சம்பந்தப்பட்ட குழுவின் அதிகாரங்கள் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். கட்டுமானப் பணிகள் சம்பந்தப்பட்ட செயல்முறை கையேடு தொகுக்கப்படல் வேண்டும். இது திட்டமிடுதல், மதிப்பிடுதல், செயலாக்கம், மற்றும் கணிப்பாய்வு பணிகளுக்கு உதவும்.

61. உள்ளாட்சி அமைப்புகளுக்கு எழும் தொழில் நுட்ப ரீதியான சந்தேகங்களை தீர்ப்பதற்கும் மற்றும் தேவையான ஆலோசணைகள் வழங்கவும் சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப துறைகளை பொறுப்பாக்க வேண்டும்.

62.உள்ளாட்சி மன்றங்களுக்கு உறுதுணையாக திட்டங்களைச் செயல் படுத்துவதிலும், அடிப்படை ஆதார வசதிகளான சாலைகள், குடிநீர் விநியோகம் ஆகியவற்றை பராமரிப்பதிலும் உறுதுணையாக இருக்கும் பொருட்டு சமுதாய அமைப்பில் தொடர்புடைய தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பங்கு கொள்ளும் வகையில், இணை நிலைக்குழுக்கள் அமைத்து அவற்றையும் திட்ட செயலாக்கத்தில் பங்கேற்கச் செய்தல் வேண்டும்.உள்ளாட்சி அமைப்புகளில் கல்வி மற்றும் சுகாதார திட்டங்கள் செயல்படுத்துவதால், அந்தந்த அமைப்புகள் தேர்ந்தெடுக்கும் தன்னார்வக் குழுக்களின் உதவியை நாடலாம்.

63. ஆதிதிராவிடர் / மலை வாழ் மக்கள் மற்றும் பெண்கள் போன்ற நலிவுற்றோரின் மேம்பாட்டிற்கென உள்ளூர் வளர்ச்சித் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த "ஒருமுகப்படுத்தப்பட்ட" வளர்ச்சி நிதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

64. மத்திய அரசு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி வளர்ச்சி நிதியாக வருடத்திற்கு ரூபாய் 2 கோடி வழங்குகிறது. மாநில அரசு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூ.35 லட்சம் வழங்குகிறது. அதே போல் மாவட்ட ஊராட்சி தலைவர்களுக்கு தலா ரூ.20 லட்சமும், ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர்களுக்கு தலா ரூ.15 லட்சமும், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கு தலா ரூ.10 லட்சமும், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பனர்களுக்கு தலா ரூ.5 லட்சமும், கிராம ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு தலா ரூ.1 லட்சமும் தொகுதி வளர்ச்சி நிதியாக வழங்கலாம் என்று திரு.கே.எஸ்.அழகிரி அவர்கள் கேட்டுக் கொண்டார். எனினும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரக உள்கட்டமைப்பு வசதி போன்ற பல்வேறு திட்டங்கள் ஊராட்சி அமைப்புகள் மூலமே தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவை தவிர மத்திய அரசின்உதவி பெறும் திட்டங்களை கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி ஆகிய அமைப்புகளே செயல்பபடுத்தி வருகிறது. இதன் அடிப்படையில் உறுப்பினரின் மேற்கண்ட கருத்து குறித்து அரசு தக்க முடிவெடுக்கலாம்.

# இயல்–III

## 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டதின் பட்டியல் IVல் கண்டுள்ள 29 பொருள்கள் சம்பந்தப்பட்ட பரிந்துரைகள்

சனநாயகத்தின் குறிக்கோள் மக்களின் பிரதிநிதித்துவம். இதன் அடிப்படை அமைப்பாக உள்ளாட்சி அமைப்புகள் விளங்குகின்றன. இத்தகைய அமைப்புகளுக்கென்று பல்வேறு பொறுப்புக்கள், கடமைகள் மற்றும் அதிகாரங்கள் கூறப்பட்டுள்ளன. மேலும் என்னென்ன அதிகாரங்கள் தரப்படலாம் என்ற முயற்சி அரசின் அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இயல் இரண்டில் 63 இனங்களில் பல்வேறு பரிந்துரைகள் தரப்பட்டுள்ளன. மேலும் இந்திய அரசியலமைப்புச் சட்டம், 73வது திருத்ததின் 11வது படிவத்தின் படியும், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் IVவது பட்டியல்படியும், கீழ்கண்ட 29 இனங்களின்பால், மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு பொறுப்புக்கள் வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது:-

1. வேளாண்மை சார்ந்த விரிவாக்கம் உள்ளடங்களான வேளாண்மை.
2. நிலச்சீர்திருத்தம், நில உச்சவரம்பு செயல்படுத்துதல்
3. சிறுபாசனம், நீர் மேலாண்மை மற்றும் நீர்ப்பிடிப்பு மேம்பாடு
4. கால்நடை பராமரிப்பு, பால்பண்ணை மற்றும் கோழிப்பண்ணை
5. மீன்வளம்
6. சமூகக்காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள்
7. காடுகளின் சிறு உற்பத்திப் பொருட்கள்
8. உணவு பதப்படுத்தும் தொழில் உள்ளடங்களாக சிறுதொழில்கள்.
9. கதர், கிராம மற்றும் குடிசைத் தொழில்கள்
10 ஊரக வீட்டு வசதி
11 குடிநீர்
12. விறகு மற்றும் தீவனம்.

13. சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், நீர்வழிகள் மற்றும் -பிற தொடர்பு வழிகள்

14. ஊரக மின்மயமாக்கல்

15. மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள்

16. வறுமை ஒழிப்புத் திட்டங்கள்

17. தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளிகள் உள்ளடங்கலாக கல்வி

18. தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் தொழில் கல்வி

19. வயது வந்தோர் மற்றும் முறைசாரா கல்வி

20. நூலகங்கள்

21. பண்பாடுகள்

22. சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்

23. மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள் உள்ளடங்கலாக சுகாதார நலன்கள்

24. குடும்ப நல்வாழ்வு

25 பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

26. உடல் ஊனமுற்றோர் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் நலன் உள்ளடங்கலாக சமூகநலன்

27. பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினரின் நலிந்தோர் நலன்.

28. பொது விநியோக முறை

29. சமூக சொத்துக்களைப் பேணுதல்

# 1. வேளாண்மை சார்ந்த விரிவாக்கம் உள்ளடங்களான வேளாண்மை.

இந்தியா கிராமங்களில் வாழ்கிறது என்ற கூற்றிற்கு ஏற்ப இந்நாட்டில் பெரும்பாலானோர் கிராமங்களில் வாழ்கின்றனர். இவ்வாறு வாழ்வோர் ஈடுபடும் முக்கிய தொழிலான விவசாயம், நாட்டின் உயிர் நாடியாகும். உணவு உற்பத்தியில் மட்டுமின்றி, வியாபாரப் பயிர்கள் உள்ளடங்கலாக பல்வேறு இனங்களில் விவசாயம் முக்கியத்துவம் பெறுகிறது. இக்குழுவின் பல்வேறு கூட்டங்களின் போது உறுப்பினர்கள் வேளாண்மை மற்றும் அவை சார்ந்த பணிகளின் திட்ட செயலாக்கம், கிராம ஊராட்சிகளிலும் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிடமும் தான் இருக்க வேண்டுமென்ற கருத்தினை வலியுறுத்தியுள்ளனர். இதற்கு காரணம், மக்களுக்கு குறிப்பாக விவசாயிகளுக்கு மிக அருகாமையில் நெருங்கிய தொடர்புடைய அமைப்புகள் இவ்விரண்டுமேயாகும். இதனால் இந்த இரண்டு அமைப்புகளும் நிலம் மற்றும் நீர் ஆதாரங்கள் குறித்த அனைத்து விவரங்களை தெளிவான முறையில் அறிந்திருக்க இயலும். மேலும், பெரும்பாலான விவசாய கிடங்குகள் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திற்குள் அமைந்துள்ளதால் நிர்வாக முறை எளிதாக இருக்க உதவும்.

வேளாண்மை சார்ந்த திட்டமிடுதலில், நிலம் மற்றும் நீர் ஆதாரங்களின் பயன்பாடுகள் கிராம ஊராட்சி அமைப்புகளிடமிருந்து ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சிகள் மற்றும் மாநில அரசிற்கு பரிந்துரைக்கப்படல் வேண்டும். இந்த கண்ணோட்டத்தில் இக்குழு தீர ஆலோசித்து மாவட்ட ஊராட்சிகள் இது தொடர்பான திட்ட ஒருங்கிணைப்பு செய்து, மாவட்ட திட்டம் தயாரிக்கும் பணியில் ஒரு முக்கிய பங்கேற்கலாம் என்று கருத்து தெரிவிக்கிறது. ஊரக உள்ளாட்சி அமைப்புகள் வெற்றிகரமாக செயல்படும் மாநிலங்களில் வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பொருள்கள் மற்றும் விவசாய நலத்திட்ட பயனாளிகள் நலன் சார்ந்த பொருட்கள் யாவும் உள்ளாட்சி அமைப்புகளிடமே உள்ளன. இதுகுறித்து, நன்கு கலந்தாலோசித்த பிறகு இக்குழுவானது, விவசாயம் மற்றும் அதை சார்ந்த பொருட்களின் மேலாண்மை, தோட்டக்கலை, நிலச் சீர்திருத்தம்

மற்றும் அவை சார்ந்த பொருட்களின் மேலாண்மை ஆகியவற்றை ஊரக உள்ளாட்சி அமைப்புகள் திறம்பட செயல்படும் தருணங்களில் ஒப்படைக்கலாம் என்று பரிந்துரைக்கின்றது. ஆனால், இந்த பரிந்துறைகளின்படி எல்லா பொறுப்புகளும் உடனடியாக ஒப்படைக்கப் படாவிடினும் படிப்படியாக, திட்டமிட்டு, குறிப்பிட்ட ஓர் ஐந்தாண்டு காலவரையரைக்குள் இவை செய்யப்படல் வேண்டும். இத்தகைய பின்னனியில் ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.377, வேளாண்மை (வதி) துறை, நாள் 4.9.97-ல் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு தனித்தனியே வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் கடமைகளை இக்குழு தீர பரிசீலித்து, கீழ்க்காணும் பரிந்துரைகளை செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்

வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வேளாண் இடுபொருட்களான, விதைகள், ரசாயன உரங்கள், உயிர் உரங்கள் , பூச்சி பூஞ்சாணைக் கொல்லி மருந்துகள் சரியான தருணத்தில் இலகுவில் கிடைக்கின்ற நிலையில் கிராம ஊராட்சிகள் உதவலாம்.

உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு இலாபகரமான விலை கிடைக்கவும், விரைவில் அழுகிவிடக்கூடிய பழங்கள் காய்கறிகளுக்கு லாபகரமான விலை கிடைக்கும் வரை பாதுகாத்து வைப்பதற்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் குளிர்சாதன சேமிப்புக் கிடங்குகள் சம்பந்தப்பட்ட ஊராட்சிப் பகுதிகளில் அமைக்க உதவலாம்.

விவசாயிகளிடையே ஒரு ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்தி, வேளாண் மகசூலை அதிகரிக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படும், பயிர் மகசூல் போட்டிகளில் சம்பந்தப்பட்ட ஊராட்சிப் பகுதி விவசாயிகள் கலந்து பயன்பெற போதிய விளம்பரங்கள் செய்து உதவலாம்.

வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு செயல்படுத்தப்படும் வேளாண் வளர்ச்சித் திட்டங்களான ஒருங்கிணைந்த தானிய மேம்பாட்டுத் திட்டம், (அரிசி) நெல்,சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணைய்

வித்துக்கள், பருத்தி போன்றவற்றைப் பெருக்கிப் பகிர்வு செய்யும் திட்டம், பயிர் மற்றும் செடிப் பாதுகாப்பு குறித்த திட்டங்கள், விதை பரிசோதனை திட்டம், ஒருங்கினைந்த நோய் பூச்சிக் கட்டுப்பாட்டுத் தொழில் நுணுக்கத்தை மக்களிடையே பரவச் செய்யும் திட்டம், நெல் தரிசுகளில் பருப்பு வகைகள் பயிரிட மேம்பட்ட செயல்முறை திட்டம், மண் மற்றும் நீர்வளங்களைப் பேணுதல் தொடர்பான திட்டங்கள், சிறு/குறு விவசாயிகளுக்குப் பயிர் ஈட்டுறுதி காப்புத் திட்டங்கள், சிறு/ குறு விவசாயிகளுக்கு உர மானியம் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களில் பயனாளிகளை கண்டறிய சம்பந்தப்பட்ட விவவசாயத் துறை அலுவலர்களுக்கு உதவலாம். இத்தகைய திட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டு மானியம் மற்றும் திட்ட உதவிகள் வழங்கப்பட்ட பயனாளிகளின் பெயர் மற்றும் திட்ட உதவி விபரங்களை தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டுக்கும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் சிற்றூராட்சிகளுக்குத் தெரிவிக்கலாம்.

5. கிராம ஊராட்சிகள் தங்கள் பகுதிகளில் உள்ள பள்ளிகளைத் தேர்வு செய்து, பள்ளிக் குழந்தைகள் மூலம் தென்னங்கன்றுகளைப் பகிர்ந்தளித்து, பள்ளிகளிலும், அவர்களது வீட்டுக் கொல்லைகளிலும் தென்னங்கன்றுகள் நடவு செய்ய ஏற்பாடு செய்து சாகுபடிப் பரப்பை விரிவு படுத்தலாம்.

6. புரதம் மற்றும் கொழுப்புச் (எண்ணெய்) சத்து உணவு வகைகளில் தன்னிறைவு பெற, ஊராட்சிகள் முனைந்து செயல்பட்டு, சோயா, மொச்சை மற்றும் அவரை போன்ற பயிர்களைத் தனிப்பயிராகவும், ஊடுபயிராகவும், இருபோகச் சாகுபடிகளில் இரண்டாம் பயிராக பயிரிடச் செய்து, பரப்பளவையும், உற்பத்தியையும் அதிகரிக்கச் செய்யலாம்.

7. தோட்டக்கலைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களில் இலவசமாகவும், மானிய விலையிலும் வழங்கப்படும் கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்கி தனிப்பயிராக பயிரிட வாய்ப்புள்ள பகுதிகளிலும் தோப்பாகவும், வரப்புகளிலும் நடவு செய்து, பரப்பளவையும், உற்பத்தியையும், அதிகரிக்கலாம். மேற்படித் துறைத் திட்டங்ளில் உள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்தி, ஊராட்சிகளின் கட்டுப்பாட்டிலுள்ள தரிசு நிலங்களில், பழமரங்களை சாகுபடி செய்வதற்கு உதவி செய்யலாம்.

8. வேளாண் உற்பத்தியில் தரமான விதைகளே முன்முதல் இடுபொருளாகும். விதைகள் தரமற்றதாக இருந்தால், எத்துனை தொழில் நுட்பங்களைப் புகுத்தினாலும், இடுபொருட்களை இட்டாலும், எதிர்பார்த்த மகசூல் கிடைக்காது. எனவே வேளாண் இடுபொருட்களில் மிகவும் முக்கியமான இடுபொருளான விதைகளைத் தரமானதாகவும், சரியான முளைப்புத் திறன் உள்ள நிலையிலும் பாதுகாத்து வைத்தல் மிக முக்கியமானதாகும். எனவே கிராம ஊராட்சிகள் சம்பந்தப்பட்ட ஊராட்சிப் பகுதிகளில், விஞ்ஞான முறைப்படி விதை சேமிப்புக் கிடங்குகள் சம்பந்தப்பட்ட துறையின் மூலம் கட்டுவதற்கான இடத்தைக் கண்டறிந்து உதவலாம்.

9. பெரும்பாலான விவசாயிகள் விளைபொருட்களை இருப்பு வைக்க வசதியில்லாமலும், பண நெருக்கடியினாலும், நல்ல விலையை எதிர்பார்த்து விற்பனை செய்ய முடியாமல், குறைந்த விலைக்கு விற்று, நஷ்டம் அடைகின்றனர். எனவே நல்ல விலையில் விற்று, உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு ஏற்ற விலை கிடைக்க வகை செய்யும் பொருட்டு, ஊராட்சிகள் சம்பந்தப்பட்ட வேளாண்மை விற்பனைத் துறை அலுவலர்களைத் தொடர்பு கொண்டு, ஊராட்சிகளில் ஊரகக் கிடங்குகள் கட்ட உதவலாம். அத்துடன் கிடங்குகளில் இருப்பு வைக்கப்படும் வேளாண் பொருட்களுக்கு, குறைந்த வட்டியில், இருப்பின் மதிப்பில் 50 சதம் வரை முன்பணம் வழங்க ஊராட்சி மன்றம் பரிந்துரைக்கலாம்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த தானிய உற்பத்தித் திட்டத்தில் (அரிசி) வழங்கப்படும் விதை, பூச்சி பூஞ்சான மருந்துகள், பயிர் பாதுகாப்புக் கருவிகள் உயிர் உரங்கள் போன்ற இடுபொருட்களை வாங்குவதற்கு, பயனாளிகளை ஊக்குவித்து, வழங்கப்படுவதை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள், ஒன்றிய வளாகத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் செயல்படுத்தலாம்.

2. மேலே குறிப்பிட்ட ஒருங்கிணைந்த தானிய உற்பத்தித் திட்டத்தைப் போலவே, வேளாண் துறையில் செயல்படுத்தப்படும் இதரத் திட்டங்களான நெல்,

சிறுதானியங்கள் பருத்தி பயறு வகைகள், மற்றும் எண்ணைய் வித்து பெருக்க / உற்பத்தித் திட்டங்களிலும், வழங்கப்படும் பல்வேறு மானியங்களுக்கும், தகுதியான, தேவையுள்ள பயனாளிகளைத் தேர்வு செய்து, வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் வழங்கப்படுவதைச் செயல்படுத்தலாம்.

3. பூச்சி நோய்களைப் பற்றிய சரியான தகவல்கள் பெறாமல் பூச்சி நோய் கொல்லி விஷங்களைப் பயன்படுத்துவதால், எதிர்பார்க்கும் நல் விளைவுகளை விடத் தீமைகளே ஏற்படுகிறது என்பது வல்லுநர்களின் கணிப்பு. இது பொருள் விரயத்துடன் சுற்றுச் சூழல் பாதிப்பும் ஏற்படுகிறது. எனவே ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் ஒன்றியப் பகுதிகளில் ஒருங்கிணைந்த நோய் பூச்சிக் கட்டுப்பாட்டுத் தொழில் நுணுக்கத்தை மக்களிடையே பரப்புவதற்காக திட்டமிடலாம். வயல் வெளிப் பள்ளிகள் அமைத்தும், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பெருவிளக்கப் பாத்திகள் அமைக்கவும் திட்டமிடலாம்.

4. சோயா,மொச்சை/அவரை விதைகளைத் தனிப்பயிராகவும், ஊடுப்பயிராகவும் சாகுபடி செய்வதற்கும், விளைபொருட்களை விற்பனை செய்வதற்கான வாய்ப்புகள் மற்றும் உள்கட்டுமான அமைப்புகளை ஏற்படுத்தவும் ஊராட்சி ஒன்றிய அளவில் திட்டமிடலாம்.

5. வேளாண் விளை பொருட்களைச் சேமித்து வைக்கவும், தற்காலிகமாக கடன் வழங்கவும், ஊராட்சி ஒன்றியங்கள் வாய்ப்புள்ள கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்து, சம்பந்தப்பட்ட ஆரம்ப விவசாய கூட்டுறவு வங்கியுடன் தொடர்பு கொண்டு பயிர் கடன் வழங்கவும் மற்றும் ஊரகக் கிடங்குகள் கட்டுவதற்கும் உதவிடலாம்.

6. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தோட்டக்கலைத் துறையினால் செயல்படுத்தப்படும் திட்டங்களில் மானியத்தில் வழங்கப்படும் பழக் கன்றுகளின் தேவைகள் மற்றும் வாய்ப்புகளை ஆய்வு செய்து, அவற்றை பகிர்ந்தளிக்க உதவிடலாம். மேலும் தனியாரால் நிர்வகிக்கப்படும் நாற்றங்கால் உற்பத்தியினை ஊக்கப்படுத்தலாம்.

7. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளின் வேளாண்மை சார்ந்த பணிகளைப் பார்வையிட்டும், கிராம ஊராட்சிகளின் திட்டங்களை ஒருங்கிணைத்தும், உற்பத்தியைப் பெறுவதக்குவதற்கான வழிமுறைகளைச் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் கலந்தாலோசித்து சம்பந்தப்பட்ட முகமைகளுடன் இணைந்து செயல்படுத்தி மேற்பார்வையிடலாம். உற்பததியைப் பெருக்குவதற்கான வழிமுறைகளையும் விவரங்களையும் உருவாக்கி செயல்படுத்துவதை மேற்பார்வையிடலாம்.

8. இயற்கையின் சீற்றத்தாலோ, இதர காரணங்களாலோ, வேளாண் உற்பத்தி பாதிக்கப்படும் தருவாயில், வேளாண் பெருமக்களின் பளுவைக் குறைக்கவும், நிவாரணம் அளிக்கின்ற முறையிலும், சிறு/ குறு விவசாயிகளுக்கு பயிர் காப்புறுதித் திட்டங்ளை ஊராட்சிகளின் பரிந்துரை அடிப்படையில் செயல்படுத்தி, மேற்பார்வையிடலாம். உர மானியம் வழங்கும் திட்டங்களில் சிறுவிவசாயிகளுக்கு உரிய முறையில் மானியங்கள் ஊராட்சிகளின் பரிந்துரை அடிப்படையில் வழங்கப்படுகிறதா என்பதை மேற்பார்வையிடலாம்.

9. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்குத் தேவைப்படும் வேளாண் இடுபொருட்களைக் கணக்கிட்டு, அவைகள் எந்தெந்த பருவக் காலத்தில் தேவைப்படும் என்பதையும் ஆய்ந்து, தேவைப்படும் அளவு இடுபொருட்களை அந்தப் பகுதிகளுக்கு உரிய காலத்தில் எந்தவித தடைகளும் இன்றி கிடைக்க உதவலாம்.

10. வேளாண்துறையின் விரிவாக்க அலவலர்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களது சேவையை சரியான முறையில் விவசாயிகள் படுத்திக் கொள்ள உதவுவதுடன், பல்வேறு பயிற்சிகளுக்கும் விவசாயிகளையும், விரிவாக்கப் பணியாளர்களையும் கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுத்து ஊராட்சி ஒன்றியம் சம்பந்தப்பட்ட துறைக்கு பரிந்துரை செய்யலாம்.

11. மகசூலை அதிகரிக்க ஏற்ற பல்வேறு உத்திகளில் ஒன்றான பயிர் மகசூல் போட்டியை ஊக்கப்படுத்த தகுதிவாய்ந்த பயனாளிகளைக் கண்டறியவும்,

பயிர் விளைச்சல் போட்டியாளர்களின் மகசூலைக் கணக்கிட்டு, கண்டறியவும் வேளாண்மைத் துறைக்கு கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் உதவலாம்.

12.வேளாண் இடுபொருட்களின் மிக முக்கியமான இடுபொருளான விதைகளை, முளைப்புத் திறன் மற்றும் தரத்திற்கான சோதனைகளை அவ்வப்பொழுது மேற்கொள்வதற்கு உதவலாம். அந்தந்தப்பகுதி விவசாயிகளை ஒருங்கிணைத்து, நெல் பயறு வகைப் பயிர்களைச் சாகுபடி செய்ய உதவலாம்.

13.இயற்கையின் முக்கிய ஆதாரங்களான நீர்வளத்தையும், நில வளத்தையும் பேணும் பொருட்டு, வேளாண்மை மற்றும் வேளாண் பொறியியல் துறைகளின் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இவை குறித்து மக்களிடம் தகவல்களைப் பரப்பி இயற்கை வளங்களைப் பாதுகாக்க உதவலாம்.

14.முறையான திட்டமிடலுக்கு, சரியான புள்ளிவிவரங்கள் தேவை. ஒன்றியப்பகுதிகளில் அடிப்படை புள்ளி விவரங்களான, மொத்தப் பரப்பளவு, சாகுபடிப் பரப்பு, பயிர்வாரியான பரப்பளவு, நீர் ஆதாரங்கள் போன்ற புள்ளிவிவரங்களைத் திரட்டுவதற்கு உதவலாம்.

15.ஊராட்சி ஒன்றியங்கள் அந்தந்தப் பகுதிகளின் நீர், நில வளங்கள் மற்றும் சமூகப் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப பயிர் மற்றும் ரகங்களைத் தேர்வு செய்யவும், சாகுபடி முறைகளைத் திட்டமிடவும் ஆலோசனைகள் வாங்கலாம். உழவர் தினம் போன்ற நாட்களைச் சிறப்பாகக் கொண்டாடி பயிர் மகசூல் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கவும், விளைபொருட்களுக்கான போட்டிகள் நடத்திப் புதிய தொழில் நுட்பங்கள் குறித்து தெளிவு பெறுவதற்கு, அத்தகைய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி அரசு மற்றும் தனியார் பண்ணைகளுக்குச் சென்று பார்வையிட்டு ஆலோசனைகள் பெறவும் உதவலாம்.

16.ஊராட்சி ஒன்றியங்களில், வேளாண் பருவ காலத்திற்கு முன்பே, ஊராட்சிகள் வாயிலாக ஆண்டு பயிர்த் திட்டங்கள் தயார் செய்து, அத்திட்டங்களுக்கு ஏற்ப, காலந்தவறாது, அந்தந்தப் பகுதிகளுக்கு, பயிர்க்கடனும், அத்துடன் வாங்கப்படும் உரம், பூச்சி பூஞ்சான விஷங்களும் வழங்குவதற்கு, முன்னோடி வங்கி நிர்வாகிகளுடன் தொடர்பு கொண்டு, கிளை நிறுவனங்களின் மூலம் கடன்கள் வழங்கப்படுவதை மேற்பார்வையிடலாம்.

17.ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள பல்வேறு மண் வகைகளுக்கு ஏற்ப, மண் ஆய்வுகள் நடத்தப்படுவதையும், ஊராட்சி ஒன்றியப் பகுதிக்கான மண்வள வரைபடங்கள் தயார் செய்யப்படுவதையும் மேற்பார்வையிடலாம்.

18.உரிய அறுவடைக்குப்பின் நேர்த்தி முறைகளைக் கடைப்பிடிக்காததால் மட்டும், நமது நாட்டின் மொத்த உற்பத்தியில் பத்து விழுக்காடுக்கும் அதிகமாக விளைபொருட்கள் சேதமடைந்த வருகின்றன என்பது வல்லுநர்களின் கணிப்பு. எனவே ஊராட்சி ஒன்றியங்கள் அந்தந்தப்பகுதிகளில் உள்ள கூட்டுறவு ஒழுங்கு முறைக் கூட்டங்களைத் தொடர்பு கொண்டு, விளைபொருட்களை விஞ்ஞான ரீதியாக சேமித்து வைக்கவும், தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகும் காலங்களில் விளைபொருட்களை (குறிப்பாக காய்கனிகள், பழங்கள் போன்றவைகள்) பதனிடவும், குளிர் பதன அறைகளை ஏற்படுத்தி, ஏற்பாடுகள் செய்து, இது தொடர்பான பணிகளை மேற்பார்வையிடலாம். கூட்டுறவு அங்காடிகளுக்குத் தேவைப்படும் வகைப் பொருட்களுக்கு ஏற்ப வேளாண் திட்டங்களை வகுத்து, அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்படும் பணிகளை மேற்பார்வையிடலாம். இது தொடர்பாக பயிற்சிகளைத் திட்டமிட்டு செயலபடுத்தலாம். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மற்றும் ஏனைய முகமைகள் மூலம் விளைபொருட்களைப் பதனிடுதல், விற்பனை செய்தல் ஆகிய பணிகளைத் திட்டமிட்டு, அதற்கான உள்கட்டமைப்புகளை மேம்படுத்தும் பணிகளை மேற்பார்வையிடலாம்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. விவசாய மற்றும் தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தியினைப் பெருக்கும் பொருட்டு மாவட்டத்திற்கான விவசாய வளர்ச்சித் திட்டம் ஒன்றினைத் தயாரிக்க மாவட்ட ஊராட்சிகளுக்கு உரிய அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்கலாம்.

2. விவசாய உற்பத்திக் குழுவின் உதவியுடன் மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் தேவைகளை காலமுறையாக ஆய்ந்து கண்டறிந்து தேவையான ஆலோசனைகளை வேளாண்மைத் துறை தோட்டக் கலைத்துறை, வேளாண்மை விற்பனை இயக்குநர்கள் மற்றும் வேளாண்மை பொறியியல் துறையின் தலைமைப் பொறியாளர் ஆகியோருக்கு வழங்கலாம்.

3. விவசாயத் துறையில் ஆராய்ச்சி பூர்வமாக ஏற்படும் தொழில் நுட்பங்களை விவசாயிகளிடம் பரப்பும் பொருட்டும், மேற்கொண்டு ஆலோசிப்பது குறித்தும், ஆண்டிற்கொருமுறை வேளான் விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகளின் பிரதிநிதிகளைக் கொண்டு கருத்தரங்கினை மாவட்ட ஊராட்சிகள் தங்கள் மாவட்டங்களில் நடத்த தேவையான ஏற்பாடுகளையும் உதவிகளையும் செய்யலாம்.

4. வேளாண் விளைபொருட்களை விஞ்ஞான முறைப்படி சேமிக்கவும், குளிர்பதன வசதிகள் செய்வதும், விற்பனைக்கான உள்கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்கான பணிகளை மேற்பார்வையிடலாம். இது தொடப்பாக அவ்வப்பொழுது அரசுக்கு ஆலோசனை வழங்கலாம். மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில், ஒவ்வொரு அமைப்புகளும் பணிகளை வரையறுத்து, மேற்படி பணிகளைச் செயல்படுத்துவதை முறைப்படுத்துவதுடன், மேற்பார்வையிடலாம். மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் அனைத்து வேளாண் திட்டங்களையும், வேளாண்மை வளர்ச்சியையும் மேற்பார்வையிடலாம். வேளாண் சார்ந்த பயிர்க்கடன், கிணறு போன்ற உள் கட்டமைப்புக் கடன்களை, சுணக்கமின்றி உரிய காலத்தில் கிடைப்பதற்கும், இதர வேளாண் இடுபொருட்களான தாவர விதைகள்,

உரங்கள், பூச்சி பூஞ்சான விஷக் கொல்லிகள் போன்ற அனைத்துப் பொருட்களும் உரிய நேரத்தில் கிடைக்க ஏற்பாடு செய்து, அனைத்துப் பகுதிகளிலும் கிடைக்கிறதா என்பதை மாவட்ட ஊராட்சிகள் மேற்பார்வையிடலாம்.

5. பயிர் மகசூல் போட்டியில் மாவட்ட அளவிலான போட்டியை நடத்தி மாவட்ட அளவில் பரிசுகள் வழங்கலாம். மேலும் மாவட்டத்திலிருந்து மாநில அளவு போட்டிகளில் பங்கு பெறும் விவசாயிகளைத் தேர்ந்தெடுக்கவும் அவர்களுக்கு வேளாண்மை துறை மூலம் தொழில் நுட்ப ஆலோசனைகள் கிடைக்கவும் உதவலாம்.

6. மாவட்ட அளவில், தனியார் மற்றும் அரசு விதை விநியோக நிறுவனங்களின் மூலம் தரமான விதைகள் விற்பனை செய்யப்படுகிறதா என்பதை ஆய்வு செய்வதற்கு, சம்பந்தப்பட்ட விதைச் சான்றுத் துறைகளுக்கு ஆலோசனை வழங்கலாம்.

7. மாவட்ட ஊராட்சிகள், மாவட்டத்தின் முதன்மை நிறுவன அமைப்பு என்ற முறையில், அம்மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள், கிராம ஊராட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து, அவ்வப்பகுதிகளின் வேளாண் தேவைகளையும் அதன் அளவுகளையும் ஆய்ந்து, வேளாண்மைத் துறையின் சம்பந்தப்பட்ட மாவட்ட, கோட்ட, வட்டார மற்றும் ஊராட்சிகளின் மட்டங்களில் உள்ள அலுவலர்களின் மூலம் ஒருங்கினைந்த தானிய மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களை ஆய்வு செய்து தேவையான ஆலோசனைகளை மாவட்ட ஊராட்சிகள் வேளாண்ணமைத் துறைக்கு வழங்கலாம்.

# 2. நிலச் சீர்திருத்தம், நில உச்சவரம்பு செயல்படுத்துதல்

நில வளத்தையும், தரத்தையும், மதிப்பீட்டையும் மிகத் துல்லியமாகவும், நெருக்கமாகவும் அறிந்திருக்கும் வாய்ப்புகள் கிராம ஊராட்சிகளுக்கே அதிகமாக உள்ளது. எனவே, உள்ளாட்சி அமைப்புகளுக்கு இப்பொருள் குறித்து அதிகாரம் மற்றும் பொறுப்புகளை வழங்கினால் நிலவளத்தை மேம்படுத்த உதவுவதற்கு வழிவகுக்கும். எனவே, அரசாணை (நிலை) எண்.1006, வருவாய் (நி.வ.II) துறை, நாள் 27.10.97 மூலம் (அ) பகிர்வு உபரிநிலத்தை மேம்படுத்துதல் மற்றும் நில உச்சவரம்புகளை செயலாக்குவதில் உதவுதல் மற்றும் நில ஆவணங்களை இப்போதைய நிலைக்கு கொண்டு வருதல் போன்ற பொறுப்புகளை கிராம ஊராட்சிகளுக்கும், (ஆ) பகிர்வு உபரி நிலத்தை மேம்படுத்துதல் மற்றும் நில உச்சவரம்புகளை செயலாக்கும் திட்டத்தை மேற்பார்வையிடுதல் மற்றும் நில ஆவணங்களை இப்போதைய நிலைக்கு கொணர்தல், திட்டத்தை மேற்பார்வையிடுதல் மற்றும் பிற நில சீர்திருத்தச் சட்டங்களைச் செயலாக்குதல் திட்டத்தை மேற்பார்வையிடுதல் போன்ற பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியத்திற்கும், (இ) பகிர்வு உபரி நிலத்தை மேம்படுத்துதல் மற்றும் நில வரம்புகளை செயலாக்கம், நில ஆவணங்களை தற்போதைய நிலைக்கு கொணர்தல் மற்றும் பிற நில சீர்திருத்தச் சட்டங்களை மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளை மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இப்பொருள் குறித்து ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் அதிகாரம் மற்றும் பொறுப்புகளை வழங்க ஆராய்ந்து குழு கீழ்க்கண்ட பரிந்துரைகளைச் செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்

1. பஞ்சமி நிலங்கள் கைமாறியிருந்தால் கண்டறிந்து அவற்றினை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு அளிக்க வழி வகை செய்தல்.

2. உபரி நிலங்களை எடுத்து நிலமில்லாத விவசாயிகளுக்கு அளிப்பபதற்கு நில சீர்திருத்தச் சட்டத்தின்னபடி அரசிற்கே அதிகாரம் உள்ளதென்பதால், அவற்றினை கண்டறிந்து அரசிற்கு தெரிவிக்க ஊராட்சி மன்றம் உதவுதல்.

3. குத்தகை நிலையினைக் கண்டறிவதில் உதவுதல், குத்தகை உரிமையை ஒழுங்குபடுத்துதல் போன்றவற்றில் வருவாய் அமைப்புக்கு உதவுதல்.

4. உள்ளூர் குடிமக்களின் தொடர் ஈடுபாட்டினை அடைய முயலுதல் - வருவாயை தொகுப்பதில் வருவாய் நிர்வாகத்திற்கு உதவுதல் - ஒவ்வொரு பட்டாதாரருடைய நில உடமைகளை தொகுப்பதில் உதவுதல் - தொகுக்கப்பட்ட பின்னர் ஒதுக்கப்பட்ட இடம், உடைமையின் அனுபவம், உறுதி செய்தல் ஆகியவற்றில் வருவாய் நிர்வாகத்திற்கு உதவுதல்.

5. புறம்போக்கு நிலங்கள் தனியாரிடம் இருக்கும் பட்சத்தில் அது பொது பயனீட்டிற்கு பயன்படாத நிலமாக இருந்தால், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அதனை பிரித்து கொடுக்க ஊராட்சிகள் பரிந்துரை செய்யலாம்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. குத்தகை சட்டம், பங்கு, பயிரிடும் முறை, செயலாக்கம் ஆகிய பணிகளில் வருவாய் அதிகாரிகளுக்கு உதவுதல்.

2. துண்டு நிலங்களை ஒருங்கிணைப்பதில் வருவாய் மற்றும் நில நிர்வாக அதிகாரிகளுக்கு உதவுதல். தொடர் முறையில் சட்ட அமைப்புடன் ஒருங்கிணைத்தல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் அனைத்து நிலச் சீரமைப்புச் சட்டங்கள் பற்றி வருடாந்திர ஆய்வு செய்து வருடாந்திர தகுதிநிலை அறிக்கை தயார் செய்து (Status Report) அச்சட்டங்களின் செயல்பாட்டுக் குறைபாடுகளையும் நிர்வாக சிக்கல்களையும் ஆராய்ந்து, மேற்படி குறைபாடுகளைக களையத் தக்கப் பரிந்துரைகளுடன் அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

2. மாவட்ட வருவாய் அலுவலகத்தின் துணையுடன் மாவட்ட ஊராட்சிகள், ஆய்வுகளையும் மேற்கொள்ளுதல்.

# 3. சிறுபாசனம், நீர் மேலாண்மை மற்றும் நீர் பிடிப்பு மேம்பாடு.

நீர் என்பது மனித வாழ்க்கையில் இன்றியமையாத ஒன்றாகும். விவசாய உற்பத்திற்கும், உணவு பொருள் மேம்பாட்டிற்கும் நீர் அவசியமாகிறது. கிடைக்கும் மழை நீரினை மேம்பட்ட அளவில் பயன்படுத்தும் பொருட்டு எடுக்கப்பட வேண்டிய பணிகள் குறித்து இக்குழு (அ) சிறுபாசனம் (ஆ) நீர் மேலாண்மை ,(இ). நீர்பிடிப்பு மேம்பாடு ஆகிய பொருள்களில் தனித்தனியே தனது பரிந்துரைகளை கீழ்கண்டவாறு செய்கிறது.

## அ) சிறுபாசனம்.

### கிராம ஊராட்சிகள்.

1. கிராம ஊராட்சிப் பகுதிகளில் 100 ஏக்கருக்கு குறைவான பாசனப் பரப்புள்ள ஏரிகளை கண்டறிந்து, அவற்றின் நீர் பரப்பு, நீர்வளம் எவ்வளவு காலத்திற்கு கிடைக்கும் போன்ற விவரங்களைச் சேகரித்து, தேவையான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துதல் மற்றும் தேவையான விவரங்களை ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளித்து ஊராட்சி ஒன்றிய அளவில் திட்டங்கள் தீட்ட உதவலாம்.

2. பயிர் வளர்ப்புக்கு தேவையான நீர் ஆதாரங்களான பாசனக் குளங்களில் மண்படிந்து அதன் கொள்ளளவு குறைந்து கொண்டே வருகின்றது. இதனைத் தவிர்த்து வறட்சிக் காலங்களில் மேற்படி குளங்களில் தூர் எடுக்கும் நடவடிக்கைகளை கிராம ஊராட்சிகள் மேற்கொள்ளலாம்.

3. தேசிய வேளாண்மை வங்கி (நபார்டு) சிறு பாசன மேம்பாட்டிற்க்கான திட்டங்களை நிறைவேற்றுகிறது. இத்திட்டத்தினைப் பயன்படுத்தி ஆழ் குழாய் கிணறுகள் அமைக்கவும் மேலும் பாசனக் கால்வாய்களை சீர் செய்வதிலும் கிராம ஊராட்சிகள் உதவலாம்.

4. மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியுள்ள விவசாயிகளில் தகுதியுள்ள பயனாளிகளை கண்டறிய உதவலாம்.

## ஊராட்சி ஒன்றியங்கள்.

1. ஊராட்சி ஒன்றியங்கள் பல கிராம ஊராட்சிகளைக் கொண்டது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பல சிறு பாசனத் திட்டங்கள் அந்த பகுதி விவசாயிகளின் மேம்பாட்டிற்கு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவற்றில் நீர்பாசன விநியோக முறைகள், நீர்வரத்து கால்வாய் சீரமைப்பு, நுண் நீர்பாசன முறைகள் மற்றும் சொட்டு நீர்பாசனம் ஆகிய திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளை வகைப்படுத்தி, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு பரிந்துரைத்து, பழுதடைந்தவற்றை சீராக்கவும் புதிய பணிகளை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கலாம்.

2. சிறு பாசனம் குறித்த புள்ளி விவரங்களை ஊராட்சி ஒன்றிய அளவில் தொகுத்து, அதனை பராமரிக்க வேண்டும். இதன் பொருட்டு, நீர்வள/ நிலவியல் தொழில் நுட்ப வல்லுநர்களின் தொழில் நுட்ப ஆலோசனையைப் பெற்று மாவட்ட ஊராட்சிக்கு தெரிவிக்கலாம்.

3. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள ஊராட்சி குளங்களைக் கிராம ஊராட்சிகளின் உதவியுடன் கண்டறிந்து, அதன் விவரங்களைப் பெற்று, மழையில்லாக் காலங்களில், குளங்களில் தூர் எடுத்து குளத்தின் நீர் கொள்ளவினை அதிகரிக்க ஊராட்சி ஒன்றிய அளவில் நடவடிக்கைகள் எடுத்தல் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகள் தொடர்புடைய, பாசனக் குளங்களுக்கு நீர் பகிர்மான முறையை சீராக்குதல், பிரச்சனைகளைத் தீர்த்தல்.

4. பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் மூலம் அமைக்கப்படும் நீர் பாசன ஆழ் குழாய் கிணறுகள் திட்டம், வரத்துக் கால்வாய் சீரமைப்பு ஆகிய பணிகளை செயல்படுத்தவும், பயனாளிகளைக் கண்டறியவும், கிராம ஊராட்சிகளை ஒருங்கிணைத்து சம்பந்தப்பட்ட துறைகளுக்கு உதவுதல்.

5. மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகளுக்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கையை ஊராட்சி ஒன்றிய அளவில் மேற்கொள்ளல்.

### மாவட்ட ஊராட்சிகள்.

1. மாவட்ட அளவில் நீர் பாசன வளத்தை மேம்படுத்த மாவட்டம் முழுவதிலும் உள்ள நீர்பாசனக் குழாய்கள், ஏரிகள், வரத்துக் கால்வாய்கள் போன்றவற்றின் துல்லியமான புள்ளி விவரங்களை கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து பெற்று மாவட்ட அளவில் தொகுத்து, திட்டமிடுவதற்கு ஏதுவாக பராமரித்தல்.

2. நீர்பாசன வளத்தை மேம்படுத்தும் பொருட்டு ஓர் தொலை நோக்கு திட்டத்தை தயாரித்து சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள்/ கிராம ஊராட்சிகளுடன் பகிர்ந்து கொள்ளல்.

3. கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுத்தும் தூர் வாரும் பணிகள், வரத்துக் கால்வாய் மராமத்து பணிகள் ஆகிய பணிகளுக்கு மாவட்ட ஊராட்சிகள் உறுதுணையாக இருத்தல் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல்.

4. தமிழ்நாடு பாசனக் குளங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல் தொடர்பாக எடுக்கப்படும் அனைத்து திட்ட பணிகளை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல்.

## ஆ. நீர்மேலாண்மை.

### கிராம ஊராட்சிகள்.

1. சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளில், நிலத்தடி நீரின் அளவு மற்றும் இருப்பு குறித்த விவரங்களை நிலவியல் தொழில் நுட்ப வல்லுநர்களின் மூலம் கண்டறிந்து அந்த விவரங்களை பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கலாம்.

2. விவசாய நிலங்களில் நீர்பாசனத்தை மேம்படுத்தம் பொருட்டு ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கும் சாத்தியக் கூறுகள் குறித்து, கிராம ஊராட்சிகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

3. திறந்த வெளி கிணறுகளுக்கு உரிய அளவு இடைவெளி இருக்க வேண்டும் என்ற நிலையில் தொழில் நுட்ப வல்லுநர்களின் கருத்துக்களை பொதுமக்களிடையே பரப்பலாம்.

## ஊராட்சி ஒன்றியங்கள்.

1. ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள நிலத்தடி நீரின் அளவு மற்றும் இருப்பு குறித்த விவரங்களை நிலவியல் தொழில் நுட்ப வல்லுநர்களின் மூலம் கண்டறிந்து அந்த விவரங்ககளை ஊராட்சி ஒன்றிய அளவில் பயன்படுத்தி நடவடிக்கைகள் எடுக்கலாம்.

2. விவசாய நிலங்களில் நீர்பாசனத்தை மேம்படுத்தும் பொருட்டு ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கும் சாத்தியக் கூறுகள் குறித்து, ஊராட்சி ஒன்றியங்கள் நடவடிக்கைகள் எடுக்கலாம்.

3. நீர் மேலாண்மை குறித்த திட்டங்களை ஊராட்சி ஒன்றிய அளவில் திட்டமிட்டு செயல்படுத்த சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்து பல்வேறு திட்ட பணிகளை ஒருங்கிணைக்கலாம்.

## மாவட்ட ஊராட்சிகள்.

1. மாவட்ட அளவில், நிலத்தடி நீரின் அளவு, நீரின் தன்மை ஆகியவற்றின் விவரங்களை தொகுத்து அந்த விவரங்களை நிலவியல் வல்லுநர்களின் அறிவுரைகளின்படி பயன்படுத்தி மாவட்ட திட்டம் தயாரித்து நீரினை முறையாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கலாம்.

2. விவசாயத்திற்கான நீர் பகிர்வு முறையினை முறைப்படுத்த மாவட்ட அளவில் திட்டங்களை தீட்டி, அந்த திட்டங்களின்படி திட்ட செயல்பாட்டை மேற்பார்வையிடலாம்.

## இ. நீர்பிடிப்பு மேம்பாடு

## கிராம ஊராட்சிகள்.

1. நில ஆவணங்களை மேம்படுத்துதலும் பராமரித்தல் சார்ந்த திட்டங்களில் வேளான் மற்றும் மேய்ச்சல் நிலம், தரிசு நிலம், நீர்த்தேக்கங்கள், நீர் நிலைகள், சாலைகள், கரைகள் போன்ற ஏனைய சமுதாய நிலங்கள் தொடர்பான விவரங்களின் மேம்பாட்டிற்கு கிராம ஊராட்சிகள் உதவலாம்.

2. நீர்பிரி முகடு மேலாண்மை சார்ந்த பொருட்களில் திட்டத்தின் அனைத்து நில/ நீர் பயன்பாடுகள் குறித்து ஊராட்சிகள் மூலம் நடவடிக்கைகள் எடுத்தல்– உற்பத்தியினை அதிகரிக்க சமுதாய பொது நிலம் மற்றும் பொதுச் சொத்துக்களை முறையாக பயன்படுத்துவதை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை அலவலர்களுக்கு உதவுதல், இயற்கை வள ஆதாரங்கள், சுற்றுச் சூழலை மேம்படுத்தும் வகையில் பல துறைகளின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் எடுத்தல்.
3. கிராம ஊராட்சிகள், தங்கள் பகுதியின் நீர்பிடிப்பு மேம்பாடு சார்ந்த திட்டங்களை செயல்படுத்த தேவையான செயல் திட்டங்களைத் தீட்டுதல்– கிராமப் புறங்களின் நில அமைப்புக்கு ஏற்ற மரம் மற்றும் பயிற்களைக் கண்டறிதல்.
4. ஒருங்கிணைந்த நீர்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டத்திற்கான பயனாளிகளைக் கண்டறிய சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உதவலாம்.

## ஊராட்சி ஒன்றியங்கள்.

1. ஊராட்சி ஒன்றியங்கள் நீர்பிடிப்பு மேம்பாடானது திட்டங்கள் குறித்த தேவையான செயல் திட்டங்களைத் தீட்டுவதற்கும், பல்வேறு துறையின் சேவைகளை ஒருங்கிணைப்பதற்கும் நடவடிக்கையில் எடுக்கலாம்.
2. பிடிப்பு மேலாண்மைத் திட்டங்களை செயல்படுத்த, பொது மக்களைக் கொண்ட (அ) நீர் பயன்படுத்துவோர் குழுக்கள் (ஆ) நாற்றாங்கால் அமைப்போர் குழுக்கள் போன்ற குழுக்களை அமைப்பதில், சம்பந்தப்பட்ட துறை அலவலர்களுக்கு உதவுதல்.
3. நிலம் மற்றும் நீரை முறையாகக் பயன்படுத்த ஊராட்சி ஒன்றிய அளவிலான செயல் திட்டங்களைத் தயாரிப்பதில் உதவுதல்– பொது மக்கள் மற்றும் அமைக்கப்படும் குழுக்களின் உறுப்பினர்கள், மற்றும் விவசாயிகளுக்கு தேவையான மண்வளம், நீர்பிடிப்பு மேலாண்மை சார்ந்த பயிற்சிக்கு ஏற்பாடகள் செய்தல்.
4. ஒருங்கிணைந்த நீர்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்காக உதவுதல் மற்றும் திட்ட செயல்பாட்டை ஆய்வு செய்தல்.
5. மண்வள அட்டைகள் பராமரிப்புத் திட்டத்தின்கீழ் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கும், துறை அலுவலர்களுக்கும் உதவுதல்.

## மாவட்ட ஊராட்சிகள்.

1. நீர்பிடிப்பு மேம்பாடு திட்டத்திற்கான மண்வளம், நீர்பிடிப்பு பரப்பு ஆகிய விவரங்களைப் பெற்று பராமரித்தல் - பெறப்பட்ட விவரங்களைக் கொண்டு தொலை நோக்குத் திட்டங்களைத் தயாரித்தல் - மாவட்ட ஊராட்சியின் நிர்பிடிப்பு மேம்பாடு சார்ந்த திட்டங்களின் அனுபவங்களையும் இதர விவரங்களையும் ஊராட்சி ஒன்றியத்திற்கும், கிராம ஊராட்சிகளும் அளித்தல்.

2. மண்வள அட்டைத் திட்டம் குறித்து மாவட்ட அளவில் திட்டமிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

# 4. கால்நடை பராமரிப்பு, பால்பண்ணை மற்றும் கோழிப் பண்ணை.

மாநிலத்தின் பொருளாதாரத்தில் கால்நடை பராமரிப்பானது மிகவும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு இன்றியமையாத பால் மற்றும் இறைச்சி போன்ற உணவு வகைகளை பெருக்குவது அத்தியாவசியமாகும். தமிழ்நாட்டில் கால்நடை பெருக்கம் மற்றும் பராமரிப்பு, கோழிப்பண்ணைகள் அமைத்தல் ஆகிய திட்டப் பணிகளைப் பொறுத்த வரையில் அரசாணை (நிலை) எண் 200, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் (காப.2) துறை, நாள். 22.8.97 மூலம் (அ) துணை மையங்களில் செயற்கை முறையில் இனப் பெருக்கம் செய்யும் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உறை விந்து வங்கு திட்டம், பன்றி வளர்ப்பு திட்டம் போன்ற திட்டங்களுக்கான தகுதி வாய்ந்த பயனீட்டாளர்களை கண்டறிதல், பால் பண்ணை கூட்டுறவு சங்கங்களுக்கு திட்ட செயல்பாட்டில் உதவி செய்தல், ஆகிய அதிகாரங்களை கிராம ஊராட்சிகளுக்கும், (ஆ) கால் நடை துணை மைய திட்டம், இறைச்சிக் கொட்டில்கள் பராமரிப்பு, பன்றி வளர்ப்பு, முயல் மற்றும் கோழி வளர்ப்பு போன்ற திட்டங்களை செயல்படுத்துவதற்கான பொறுப்புக்களை ஊராட்சி ஒன்றியங்களுக்கும், (இ) மேற்கண்ட திட்டங்களை தீட்டுவதிலும், செயல்பாட்டினை மேற்பார்வையிடவும் வேண்டிய அதிகாரங்களும் பொறுப்புக்களும், மாவட்ட ஊராட்சிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை ஆராய்ந்த குழு, மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு மேலும் தேவையான அதிகாரங்களை வழங்கும் பொருட்டு கீழ்கண்ட பரிந்துரைகளை செய்கின்றது.

### கிராம ஊராட்சிகள்.

1. கால் நடை மற்றும் கோழி இனங்களை நல்லமுறையில் பராமரிக்க ஏதுவாக, கால்நடைகளுக்கு நோய் மற்றும் தொற்றுநோய் பரவுதலின் விவரங்ளை கால்நடைபராமரிப்புத்துறை உதவி இயக்குநரிடமோ, ஊராட்சி ஒன்றிய கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநரிடமோ அறிவிக்கலாம்.

2. கால்நடை இறைச்சி வெட்டும் கூடங்களில் நடக்கும் பணிகளை அவ்வப்போது மேற்பார்வையிட்டு, குறிப்புகளை பதிவு செய்யவேண்டும்.

3. இறைச்சி வெட்டும் கூடங்களை நல்ல முறையில் பராமரிக்கலாம்.

4. சமுதாய புல்வெளியில் தீவன பண்ணைகளைகள் அமைத்து, தீவனத்தை அபிவிருத்தி செயய்யலாம்.

5. பால்பண்ணை கூட்டுறவு சங்கங்களுடன் இணைந்து தீவன உற்பத்திக்காகச் சமுதாய நிலங்களை வாங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

6. சமுதாய மேய்ச்சல் நிலங்களில் மற்றும் புல்வெளிகளில் கால்நடைகள் மேய்வதைக் கட்டுப்படுத்த கட்டணம் விதிக்கலாம்.

7. உள்ளூரில், உள்ளூர் தீவன வங்கி ஏற்படுத்தி வறட்சி மற்றும் பற்றாக்குறை காலங்களில் தீவனத்தை பங்கிட்டு அளிக்க ஏற்பாடு செய்யலாம்.

8. தீவன விதைகள், கன்றுகளை கிராமங்களுக்கு பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்யலாம்.

9. உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பால் சேகரிக்கும் மையங்கள் கிராமத்தில் கோழி அபிவிருத்தி செய்யவும் தகுதியான வசதி செய்து தரலாம்.

10. கால்நடை மேம்பாட்டிற்காக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. அவற்றில் கீழ்காணும் திட்டங்களில் பயனாளிகளைக் கண்டறிய கிராம ஊராட்சிகள் உதவலாம்.

அயல்நாட்டு கால்நடைகளைப பெறுதல். உள்நாட்டு இனப் பெருக்க கால்நடைகள்/ எருமைகள் மேம்பாடு. தீவனம் மற்றும் விதை உற்பத்திப் பண்ணை விலங்குகளையும் பறவைகளையும் பகிர்வு செய்தல், சிறப்புப் பகுதி மற்றும் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழான திட்டங்கள், திட்டங்கள் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் மாடுகளுக்கும் எருமைகளுக்கும் ஊசி போடுதல், கோழியின் சேய் நோய்நாடு துயிலகம் அமைத்தல் மற்றும் வான் கோழிப்பண்ணை அமைத்தல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்.

1. உள்ளூர் தேவைகளுக்கும், அது மட்டுமின்றி தேசீய வேளாண்மைக் குழுவில் குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டத்தின்படி கால் நடை பணிகளுக்ாகவும் புதிய கால்நடை மருத்துவ மனைகளை அமைக்கலாம்.

2. தற்போது இயங்கி வரும் கால்நடை மையங்ளை சீராக பராமரிக்கலாம்.

3. பல்வேறு திட்டத்தில் பயனாளிகளுக்கு தரமான கால்நடைகளை விநியோகம் செய்யலாம்.

4. நல்ல தரமான இனவிருத்தி செய்யும் உயர்ரக கால்நடைகளைப் பற்றி விவசாயிகளிடம் செய்தி பரப்பலாம்.

5. கால்நடைகளுக்கான இனப் பெருக்கப்பண்ணை நிறுவி, அவற்றை மேம்படையச் செய்யலாம்.

6. தனியார் இனவிருத்தி மையங்கள் மற்றும் குஞ்சு பொரிப்பகங்களுக்கு உரிமம் வாங்கலாம்.

7. ஊராட்சி ஒன்றியக்குழுவில் உள்ள கால்நடை தொடர்பான மருத்துவப் பணி நடவடிக்கைகளை மேற்பார்வையிடலாம்.

8. கால்நடைகளுக்கான மருத்துவ கவனிப்பை மறு ஆய்வு செய்யலாம்.

9. கால்நடைகளுக்கு, ஊராட்சி ஒன்றியப் பகுதியில் நோய்கள், மற்றும் குறிப்பாக தொற்றுநோய் பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கலாம்.

10. தீவன அபிவிருத்திக்காக, தீவன உற்பத்தி பயிற்சி முகாம்களை அமைத்து, நிதி உதவி அளிக்கலாம்.

11. கோழி வளர்ப்பவர்களுக்கு பயிற்சி அளிக்கவும் கோழி தீவனம் வழங்கவும் ஆவன செய்யலாம்.

12. உள்நாட்டு இனப்பெருக்கக் கால்நடைகள்/ எருமைகள் மேம்பாடு , காளை மாடுகளின் விந்து பரிசோதனை ( வழித்தோன்றல் பரிசோதனை) திட்டம், ஈனாத கன்று உற்பத்தித்திட்டம், ஐரோப்பிய பொருளாதார குழு உதவியுடன் ஆடு வளர்ப்புத் திட்டம் மற்றும் விலங்குகளையும் பறவைகளையும் பகிர்வு செய்தல் போன்ற இதரத் திட்டங்களையும் மேற்பார்வை செய்யலாம்.

## மாவட்ட ஊராட்சிகள்.

1. மாவட்ட ஊராட்சிகளில் கால்நடை பெருக்கத்திற்கும் மருத்துவப் பணிகள். விவசாயிகளின் ஆண்டு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தலையும் திட்டமிடுதல். மாவட்டங்களிலுள்ள கால்நடை அபிவிருத்தியின் எதிர்தோன்றும் சிக்கல்களையும், எதிர்கால விளைவுகளையும் கணக்கெடுத்து ஆராய்ச்சி ஆகியவற்றை திட்டமிடலாம்.

2. வேளாண்மை நிலைக்குழுவின் மூலமாகவும் மாவட்டங்களில் செயல்படும் கால் நடை அபிவிருத்தித் திட்டங்ளை செயல் திட்டங்களை காலாண்டுக்கு ஒருமுறை ஆய்வு செய்தல். அவ்வாய்வு கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை இணை/ துணை இயக்குநர் கலந்து கொண்டு ஆய்வு மேற்கொள்ளுதல்.

3. மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு கோழியின வளர்ப்பு கழகப் பணிகளை ஆய்வு செய்தல்.

4. அயல்நாட்டு கால்நடைகளைப் பெறுதல் ,காளை மாடுகளின் வழித்தோன்றல் பரிசோதனை , ஈனாத கன்று உற்பத்தித் திட்டம் பணிகளை ஆய்வு செய்தல்.

5. சிறப்பு பகுதி மற்றும் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்களின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழான திட்டங்களை ஆய்வு செய்தல். ஐரோப்பிய பொருளாதார குழு உதவியுடன் ஆடு வளர்ப்புத் திட்டம், மற்றும் கால் நடைகள் தொடர்புடைய கால்நடை மருத்துவ சுகாதாரத் திட்டங்களை மேற்பார்வை செய்யலாம்.

# 5. மீன்வளம்

மீன் வளர்ப்பின் மூலம் உற்பத்தியினைப் பெருக்க, தமிழக அரசு, அரசாணை (நிலை)எண்.238, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 16.10.97 மூலம் (அ) மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பு மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டம், உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை திட்டம், நன்னீர் இறால் வளர்ப்பு தொழிற்சாலைகளை அமைக்கும் திட்டம், உவர் நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளை அமைக்கும் திட்டம், நவீன மீன்பிடித் தொழில் நுட்பத்தில் மீனவர்களுக்கான ஊக்கத் தொகையுடன் கூடிய பயிற்சித் திட்டம், சுத்தமான கொள்கலன்கள் மற்றும் மூன்று சக்கர மிதிவண்டிகள் ஆகியவற்றை மீனவர்களுக்கு வழங்கும் திட்டம் போன்ற இதர திட்டங்களுக்கான தகுதிவாய்ந்த பயனாளிகளைக் கண்டறிதல், பொறுப்புகளை கிராம ஊராட்சிகளுக்கும் (ஆ) மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பினை செயல்படுத்த பயனீட்டாளர்களை கண்டறிந்து செயல்படுத்துதல் போன்ற இதர திட்டங்களுக்கான தகுதி வாய்ந்த பயனாளிகளைக் கண்டறிதல், நன்னீர் இறால் வளர்ப்பு தொழிற்சாலையை அமைக்கும் திட்டத்தை அமைக்க தூண்டுதல், முறையாக இறால் மீன் வளர்ப்பு மையங்களை அமைத்தல் ஆகியவற்றிற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதியுதவி செய்தல், கடல் அரிப்புத் தடுப்புத் திட்டங்களுக்கான நிதியுதவி திட்டத்திற்கான செயல் திட்டங்ககளைத் தயாரித்தல், மீனவர் தொகுதி காப்புறுதி திட்டம் மற்றும் மீனவர் சேமிப்பு நிவாரண திட்டம் ஆகியவற்றை செயல்படுத்துதல் போன்ற பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கும் (இ) மாவட்ட ஊராட்சிகளைப் பொறுத்தவரை மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பு மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டம், உள்நாட்டு நீர் நிலைகளில் மீன்வளத்தை பயன்படுத்தி விற்பனை செய்யும் திட்டம், நன்னீர் இறால் வளர்ப்பு தொழிற்சாலையை அமைக்கும் திட்டம், தூண்டுதல் முறை இறால் மீன் வளர்ப்பு மையங்களை நிறுவும் திட்டம் மற்றும் பிற திட்டங்களுக்கு தேவையான திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் மறு ஆய்வு செய்தல், மீன்பிடி துறைமுகங்களை மேம்படுத்தும் பொருட்டு ஆலோசனைகளை வழங்குதல் போன்ற அதிகாரங்கள் மாவட்ட ஊராட்சிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புக்களுக்கு மேலும் அதிகாரங்கள் வழங்க ஆராய்ந்த குழு கீழ்க்கண்ட

பரிந்துரைகளைச் செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்

1. அரசுக்குச் சொந்தமான நீர்த்தேக்கங்களில் மீன்பிடி உரிமம் பெறுவதற்குரியவர்களையும், படகுகள், வலைகள் மற்றும் ஏனைய மீன்பிடி தளவாடப் பொருட்களை ஊராட்சி ஒன்றியம் மூலம் பெற தகுதியுடையவர்களை கண்டறிதல்.

2. படகுகள், வலைகள் மீன்பிடி தளவாடங்களை தனிநபர்/ கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கவும், மீனவர் கூட்டுறவு சங்கங்களை அமைப்பதற்கும் உதவுதல் மற்றும் தகுதியுடையவர்களைக் கண்டறிதல் - கடும் வானிலைக் காலத்தில் விழிப்புணர்வு ஊட்டவும், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், விழிப்புணர்வு முகாம்கள் ஏற்பாடு செய்தல்.

3. சுகாதாரச் சூழலில் மீன்கடைகளை அமைப்பதையும், அங்காடியில் விற்கப்படும் மீன்கள் தரத்தை ஆய்வு செய்வது மற்றும் மீன் பதப்படுத்தும் பிரிவுகளுக்கிடையே சீரான நல்லுறவை ஏற்படுத்தவும் ஊக்குவித்தல்.

4. தொகுதி காப்புறுதித் திட்டங்களின்கீழ் மீனவர் சேர்ந்து கொள்வதை ஊக்குவித்தல் - புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு இட உதவி அளிப்பதில் மற்றும் இழப்பு/சேதம் குறித்து மதிப்பீடு செய்வதில் உதவுதல் - மீனவர் வீட்டு வசதித் திட்டத்தை உயர்வடையச் செய்தல் மற்றும் தகுதியான மீனவர்களைக் கண்டறிதல் - மிக வேக டீசல் எண்ணெய் மற்றம் இதர முதலீடுகளுக்கு ஆயத் தீர்வை ஈடு செய்து வழங்கும் பணிகளை எளிதாக்க வசதி செய்தல்.

5. மீனவர்களுக்கான இலவச வீட்டு வசதி, செயற்கை மற்றும் பருத்தியிலான வலைகள், பொறிகள், பிற துணைக் கருவிகள் போன்றவற்றை மீனவர்களுக்கு வழங்குதல் மற்றும் மீன்பிடி பகுதிகளில் கிளைச் சாலைகளை அமைத்தல் ஆகியவற்றுக்கான பயனாளிகளைக் கண்டறிய உதவுதல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. மீனவர் நலம் நாடும் வளத் திட்டங்களைக் கண்டறிந்து ஒப்பளித்தல் - ஊராட்சி ஒன்றிய குளங்களிலும் நீர்த்தேக்க ஆதாரங்களிலும் மீன்பிடி குத்தகைக்கு கட்டணங்கள் விதித்தல்.

2. தொடர்புடைய கிராம ஊராட்சியுடன் கலந்து கடல்வாழ் உயிரின வளர்ப்பு/உவர் நீர் மீன்வளர்ப்பு ஆகியவற்றிற்குரிய பகுதிகளைத் தேர்ந்தெடுத்தல் - பல்வேறு திட்டங்களின்கீழ் உதவி பெறுபவர்களைத் தேர்ந்தெடுத்தல் – கடலில் மீன்பிடிக்கும் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க வசதி செய்தல் - தேர்ந்தெடுக்கப்பட்ட தனிநபர்/ கூட்டுறவுச் சங்கங்களுக்கு, படகுகளையும் தளவாடங்களையும் ஒப்பளித்து வழங்க உதவுதல் - மீன் பிடிதளம், காயவைக்கும் இடம், சூறாவளி, புகலிடங்கள் ஆகியவற்றைப் பராமரித்தல், கட்டுப்படுத்துதல்.

3. மீன் குளிர்ப் பதனக் கிடங்கு, மீன் பதப்படுத்துதல், சிப்பங்கட்டுதல், பாதுகாத்தல் ஆகியவற்றில் மீனவர்களுக்குப் பயிற்சியளிக்க வசதிச் செய்தல்.

4. உள்நாட்டு கடல் மற்றும் உவர் நீர் மீன் வளர்ப்பு திட்டம் மற்றும் அரசுத் துறையின் அதிகார எல்லைக்குள் செயற்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களையும் ஆய்வு செய்தல், மீன்துறையின் உதவி இயக்குநர், மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை, உவர்நீர் மீன் வளர்ப்போர் முகமை, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் அலுவலரின் அதிகார எல்லைக்குள் உள்ள ஊராட்சி ஒன்றியக்குழுவின் சீராய்வு கூட்டத்தில் கலந்துக் கொள்ளல்.

5. மீனவர்களுக்கான இலவச வீட்டுவசதித் திட்டம், செயற்கை மற்றும் பருத்தியிலான வலைகள், பொறிகள், பிறதுணைக் கருவிகள் போன்றவற்றை மீனவர்களுக்கு வழங்குதல் திட்டம், மீன்பிடிக்கும் பகுதிகளில் கிளைச் சாலைகளை அமைக்கும் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்தல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. மாவட்டத்தில் மீன் பிடிப்பவர்கள் நலன் முதற்கொண்டு ஒட்டுமொத்த மீன் வள மேம்பாட்டிற்கான திட்டங்களைத் திட்டமிட்டு தயாரித்தல்.

2. மாவட்ட ஊராட்சியின் தலைவர் மாவட்டத்திற்கான மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் துணைத் தலைவர் ஆக நியமித்தல்.

3. உணவு மற்றும் வேளாண்மை நிலைக்குழுவானது மீன்வளம் மீனவர் தொடர்பிலான அனைத்துத் திட்டங்களை சீராய்பு செய்து காலமுறைப்படி (மீன்வளத் துறை இயக்குநருக்கு) அரசுக்கு அறிவுரை வழங்குதல்.

4. மீனவர்களுக்கான இலவச வீட்டு வசதித் திட்டம், செயற்கை மற்றும் பருத்தியாலான வலைகள், பொறிகள், பிற துணைக் கருவிகள் போன்றவற்றை மீனவர்களுக்கு வழங்குதல் மற்றும் மீன் பிடி பகுதிகளில் கிளைச் சாலைகளைஅமைத்தல் போன்றவற்றை திட்டமிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

# 6. சமூகக்காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள்

சமூகக்காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள் ஆகிய திட்டங்களை வனத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகள் மாநில, மத்திய மற்றும் அயல் முகமை நிதி உதவியுடன் செயல்படுத்தி வருகிறது. 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் பிரிவுகள் 120, 121, 131 மற்றும் 245ல் பாதுகாக்கப்படாத காடுகள் தொடர்பில், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியத்திற்கும் சில அதிகாரங்களை அளித்துள்ளது. மேற்படி சட்டம், பிரிவு 13 (உ) மற்றும் (ஊ)ன்படி ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பொது சாலைகள் அல்லது புறம்போக்கு நிலத்தில் உள்ள மரங்களை வெட்டவோ, அழிக்கவோ, மரப்பட்டைகளை உரிக்கவோ, இலைகள், பழங்களை எடுக்கவோ ஊராட்சிகள் ஒழுங்குபடுத்தியுள்ளது. மேலும் சமூக காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள் வளர்த்தல், பராமரித்தல் போன்ற பணிகளில் என்னென்ன உரிமைகள் பொறுப்புகள் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கலாம் என்பது குறித்து ஆராய்ந்த குழு கீழ்கண்டவாறு பரிந்துரைகளை செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்.

1. சமூகக் காடுகளையும் பண்ணைக் காடுகளையும் மேம்படுத்தவும் உயிரின வாழ்க்கையும் சுற்றுப்புறச் சூழலையும் மேம்படுத்தும் திட்டமாக சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள் பராமரிப்பு பற்றி செய்தி பரவச் செய்தல். சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகளுக்காக,, சமுதாயக் தரங்குறைந்த தரிசு நிலங்களைக் கண்டறிந்து, இத் திட்டங்களை செயல்படுத்தல்.

2. பங்கிடல் அடிப்படையில் ஆர்வமுள்ள தனியார் குழுவினருக்கு ஊராட்சிக்குச் சொந்தமான நிலங்களை குத்தகைக்கு விடுதல் மற்றும் குத்தகைக் கட்டணம் வசூலித்தல்.

3. உள்ளூருக்கு ஏற்ற வகையில் எரிபொருள், தீவனம் மற்றும் வீடுகட்ட பயன்படுத்தப்பெறும் மரக்கட்டை உற்பத்தி செய்யும் செடிகளைக் கண்டறிந்து, அவற்றை மேம்படுத்துதல். விற்பனைக்கு ஏற்பாடு செய்தல். பண்ணைக்காடுகளின் கீழ் நாற்றங்கால்களையும் மலைத்தோட்டம் எடுப்பதற்கு தனியார் விவசாயிகளை ஊக்கப்படுத்தி தேவையான

நாற்றுகளையும், மரக்கன்றுகளையும் வழங்குதல்.

4. சமூக மற்றும் பண்ணைக் காடுகள், மலைத் தோட்டக் சூழ்மரம் , பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கட்கும் அரசுத் துறைகளுக்கும் தோட்டப் பயிர்களுக்கான விதைகளையும், செடிகளையும் இலவசமாக வழங்குதல், மூங்கில் பண்ணைகளை அமைத்தல், பழங்குடிப் பகுதிகளில் பயிர்களை வளர்த்தல், பழங்குடிப் பகுதிகளில் பள்ளிக் கட்டங்களை கட்டுதல், வனச்சாலைகள் அமைத்தல், மக்கள் நாற்றங்கால்களை நிறுவுதல் , ஊரக வளர்ச்சித் துறையில் சமூகக் காடுகள் திட்டம் , வேளாண்மைத் துறையின் தேசிய தரிசு நில மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பண்ணைக்காடுகள் திட்டங்களில் பயனாளிகளைக் கண்டறிதல்.

5. பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களுக்கும் அரசுத் துறைகளுக்கும் தோட்டப் பயிர்களுக்கான விதைகளையும் செடிகளையும் வழங்குதல் மற்றும் சமூக தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஊராட்சி அதிகாரத்தில் உள்ள சாலைகளில் நிழல்தரும் மரங்களை அமைத்து பேணுதல் திட்டம் ஆகியவற்றினை செயல்படுத்துதல்.

6. வெளிநாட்டு உதவி மற்றும் மத்திய, மாநில உதவியுடன் செயல்படுத்தப்படும் காடுகள் வளர்ப்பு திட்டத்தை செயல்படுத்தும்போது சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் அடங்கிய குழு திட்ட செயல்பாட்டை கண்காணிக்கும் குழுவாக செயல்பட உரிய வழிவகை செய்யப்பட வேண்டும்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1.சமூகக் காடுகளையும் பண்ணைக் காடுகளையும் மேம்படுத்துதல், உயிரின வாழ்க்கையையும், சுற்றுப்புறச் சூழலையும் மேம்படச் செய்ய சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகளை மேம்படுத்தி, அதைப் பற்றி செய்திப் பரவச்செய்தல்.

2.சமுதாயத்தில் தரம் குறைந்த தரிசு நிலங்களைக் கண்டறிந்து, அவற்றில் இத்திட்டம் மேம்படச் செய்யவும், அரசாலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையாலும் அவ்வப்போது வழங்கும் பணிகளையும் செவ்வனே செய்தல்.

3.ஊராட்சி ஒன்றிய சாலைகள், மற்றும் பொது இடங்களில் தேவையான மரங்களை நடச் செய்தல்.

4. சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள் திட்டங்களுக்குத் தேவையான நாற்றுக்களையும் மரக்கன்றுகளையும் உற்பத்தி செய்து வழங்குதல்.

5.எரிபொருள், தீவனம் மற்றும் வீடு கட்ட பயன்படும் மரங்களைப் பற்றிக் கிராம மக்கள் அறியுமாறு செய்தி பரவச் செய்தல் மற்றும் விற்பனைக்கும் ஏற்பாடு செய்தல்.

6.தனது கட்டுப்பாட்டின் கீழ் வரும் ஊராட்சிகளுக்கும் பொதுமக்களுக்கும் நாற்றுக்களையும் மரக்கன்றுகளையும் வழங்க நாற்றங்கால்கள் அமைத்தல்.

7. வனம், வேளாண்மை, வருவாய் மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளினால் செயல்படுத்தப்பட்டு வரும் சமூக பண்ணைக் காடுகள் திட்டங்கள் அனைத்தையும் ஆய்வு செய்தல். (வனக்காப்பாளர்கள், வட்டாட்சியர், வேளாண்மை துறை உதவி இயக்குநர் இவ்ஆய்வில் கலந்து கொள்ளலாம்).

8. தமிழ் நாடு வேளாண்மை சார்ந்த மேம்பாட்டுத் திட்ட சமூகக் காடுகள், சூழலியல் மற்றும் சுற்றுப்புறம் ஆகியவற்றைப் பாதுகாப்பததற்கான விழிப்புணர்வுகளை உருவாக்குதல் மற்றும் அரிய மரவடை, மரவடை, ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கு உதவுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

9. சமூக மற்றும் பண்ணைக் காடுகள் திட்டம், மலைத் தோட்டக் கூழ்மரம், தமிழ் நாடு வேளாண்மை சார்ந்த மேம்பாடு திட்ட சமுகக் காடுகள், பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களுக்கும் அரசுத் துறைகளுக்கும் தோட்டப்பயிர்களுக்கான விதைகளையும் செடிகளையும் வழங்குதல், மரம் பயிரிடுதல், பழங்குடிப்பகுதிகளில் பயிர்களை வளர்த்தல், பழங்குடிப் பகுதிகளில் பள்ளிக் கட்டங்களைக் கட்டுதல், வனச் சாலைகளை அமைத்தல், ஊரக வளர்ச்சித் துறையின் வெளிநாட்டு உதவித் திட்டம் ஆகியவற்றின் கீழ் சமூகக் காடுகள் திட்டம் , வேளாண் துறையின் தேசிய தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பண்ணைக்காடுகள் திட்டம், ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி

அதிகாரத்தில் உள்ள சாலைகளில் நிழல் தரும் மரங்களை அமைத்து பேணுதல் திட்டம் போன்ற திட்டங்களை செயல்படுத்துதல்.

10. ஊராட்சி ஒன்றியங்கள் சமூக தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மக்கள் நாற்றங்கால்களை நிறுவுதல் ஆகிய பணிகளை மேற்பார்வையிடல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள் மேம்பாட்டு நடவடிக்கைகளில் மாவட்டத்தின் செயல்திறத்தை மதிப்பிடுதல்.

2. அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மற்றும் துறைத்தலைமை அலுவலங்கள் மூலமாக செயல்படுத்துவதற்கான தேவையான திட்டங்களையும், செயல்முறை ஏற்பாடுகளையும் தயாரித்தல்.

3. நிதிகளுக்கு ஏற்பளித்து, ஒப்பளிப்பு செய்ததற்கேற்ப, தீர்மானிக்ககப்பட்ட சமூகக் காடுகள் திட்டங்களை தொகுத்தல் பணி.

4. சமூக தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் திட்டமிடல்.

5. அனைத்து சமூக மற்றும் பண்ணைக் காடுகள் திட்டங்கள் அனைத்தையும் வேளாண்மை நிலைக்குழுவின் மூலமாக காலமுறையாக மூன்று மாதத்திற்கொரு முறையும் மற்றும் மூங்கில் பண்ணைகளை அமைத்தல் , சமூக தரிசு நில மேம்பாட்டு திட்டம் , ஊசியிலைக்காடுப் பயிர்கள் , மரம் பயிரிடுதல், பழங்குடிப் பகுதிகளில் பயிர்களை வளர்த்தல் மற்றும் பழங்குடிப் பகுதிகளில் பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுதல், வனச் சாலைகளை அமைத்தல் ஆகியவற்றை ஆய்வு செய்தல்.

6. மாவட்டத்தின் சமூக மற்றும் பண்ணைக் காடுகள் மேம்பாட்டின் இடர்பாடுகளையும், வாய்ப்பு வளங்களையும் பற்றி அரசுக்கு கருத்து தெரிவித்தல்.
7. பழங்குடிப் பகுதிகளில் பள்ளிக் கட்டடங்களைக் கட்டுதல் வனச்சாலைகளை அமைத்தல் ஆகிய பணிகளை மேற்பார்வையிடுதல்.

# 7. காடுகளின் சிறு உற்பத்திப் பொருட்கள்

**சிறு வன உற்பத்திப் பொருளமைப்பை ஊராட்சிகளிலுள்ள பழங்குடிப் பகுதிகளில் மேம்படுத்தவும், வளர்க்கவும் இயலும் பொருட்டு அப்பணியை எடுத்துக் கொண்டு வனத் துறையின் நெருங்கிய ஒருங்கிணைப்போடு மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் திறம்பட செயல்படுவது இன்னறியமையாததாகும். இதனடிப்படையில் இப்பொருள் குறித்து கீழ்க்கண்ட உரிமைகள் மற்றும் பொறுப்புக்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க குழு பரிந்துரை செய்கிறது.**

## கிராம ஊராட்சிகள்

1. சிறுவனப் பொருட்கள் உற்பத்திக்குத் தேவையான கோந்து, மூலிகைத் தாவரங்கள், வாசனைத் திரவியங்கள், தழைகள், எண்ணெய் வித்துக்கள், மரப்பட்டைகள், சாயப் பொருட்கள், விதைகள், பிரம்பு, மூங்கில் போன்ற சிறுவனப் பொருட்களை தரும் மரங்களை நடவிரும்பும் குடும்பங்களை குறிப்பாக, மலைவாழ் மக்களைத் தேர்வு செய்து அவர்களுக்குத் தேவைப்படும் மரக்கன்றுகளை வழங்கலாம். நிலமற்ற விவசாயிக்கூலித் தொழிலாளர் குடும்பங்களைத் தேர்வு செய்து, சமூகத் தரிசு நிலங்களில், மேற்படி சிறு வனப் பொருள்கள் தரும் மரக்கன்றுகளை நடவு செய்து பராமரிக்க உதவலாம். குறிப்பாக பழங்குடியினர், மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் இத்திட்டங்களுக்கு கூடுதலான முக்கியத்துவம் கொடுக்கலாம்.

2. வறட்சிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், சமூகக் காடுகள் திட்டம், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், மேற்குமலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் சிறுவனப் பொருட்கள் தரும் மரக்கன்றுகளை நடுவதற்கு கிராம ஊராட்சிகள் ஊக்குவிக்கலாம்.

3. பாதுகாக்கப்பட்ட காடுகளிலிருந்து சிறுவனப் பொருட்களை கிராமக் கைவினைஞர்கள் சேகரிப்பதற்கு, வனத்துறையினரை அணுகி, உரிமம் பெற்றுக் கொடுக்க கிராம ஊராட்சிகள் உதவலாம்.

4. சிறுவனப் பொருட்கள் தரும் மரக்கன்றுகளை நடவு செய்வது குறித்த

பயிற்சிக்குச் செல்லவேண்டிய பயிற்சியாளர்களைக் கண்டறிந்து, சம்பந்தப்பட்ட பயிற்சி நிறுவனங்களுக்கு பயிற்சியாளர்களை அனுப்பிவைக்க உதவலாம்.

5. சிறுவனப் பொருட்களான தேன், மரப்பட்டைகள், புளி, ஏலக்காய், மூங்கில், ஆகிய உற்பத்தி பொருட்களை சிறு கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தி, அதன்மூலம் கொள்முதல் மற்றும் விற்பனை செய்வது போன்ற முறைப்படுத்தும் செயல்களை மேற்கொள்ளலாம்.

6. அந்தந்தப்பகுதி வனத்துறையினரால் செயல்படுத்தப்படும் சிறு வன உற்பத்திப் பொருள் மேம்பாட்டுத் திட்டத்திற்கான பயனாளிகளைக் கண்டறிந்தும், வனங்கள் பற்றிய நிபுணத்துவம் பெற்ற, வனத்துறையின் மூலம் வாய்ப்புக்களை கண்டறிந்து, மேற்படித் திட்டத்தை வனத்துறையின் மூலம் செயல்படுத்தலாம்.

7. மருத்துவச் செடிகள் உள்ளிட்ட சிறு வன உற்பத்திப் பொருட்களை நடவு செய்ய தகுதியான நபர்களை கண்டறிந்து கிராம ஊராட்சிகள் செயல்படுத்தலாம்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. ஊராட்சி ஒன்றியங்கள், அந்தந்த ஒன்றிய பகுதிகளில் சிறுவனப் பொருட்கள் தரும் காடுகளை ஏற்படுத்தவும், இருக்கின்ற காடுகளைப் பாதுகாத்து மேம்படுத்தவும் வழிவகைகள் செய்யலாம். சேகரிக்கப்படும் சிறுவனப் பொருட்களின் தரத்தை உயர்த்த தாமதமின்றி பதப்படுத்தவும், பதப்படுத்தப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கும் வழிவகை செய்யலாம்.

2. சிறுவனப் பொருட்களைச் சேகரிப்பவர்களுக்கு சேகரிப்பு கட்டணங்கள் குறித்த நேரத்தில் கிடைப்பதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் உதவுதல்.

3. சிறுவனப் பொருட்களை சேகரிக்கவும், பதப்படுத்தவும் மற்றும் விற்பனை செய்யவும் வனத்துறை மற்றும் பிற துறைகளால் (கிராமம் மற்றும்

கைத்தொழில்துறை போன்றவை) செயல்படுத்தப்படும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் உதவுதல்.

4. சிறுவனப் பொருட்கள் தொடர்பான திட்டங்கள் மற்றும் திட்டம் சாரா பணிகளையும் செயல்படுத்துதல்.

5. சிறு வனப்பொருட்களான தேன், மரப்பட்டைகள், புளி, ஏலக்காய், மூங்கில் ஆகிய பொருட்களை முறைப்படுத்துதல் பணிகளை, ஊராட்சி ஒன்றியங்கள் மேற்பார்வையிட்டுச் செயல்படுத்தல்.

6. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலவாழ்வுத் துறையின் துணைத் திட்டமான சிறுதிற வன உற்பத்திப் பொருள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தை வனத்துறையினரால் செயல்படுத்த ஊராட்சி ஒன்றியங்கள் உதவலாம். மேலும் அத்திட்டங்களை மேற்பார்வையிடலாம்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. மாவட்ட ஊராட்சி அமைப்புகள், சிறு வனப்பொருட்களை உற்பத்தி செய்தல், சேகரித்தல், பதப்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள அமைப்பாளர்கள், பயன்படுத்துவோர் மற்றும் அலுவலர்களின் ஆண்டு மாநாட்டைக்கூட்டி, நடைமுறையிலுள்ள செயல்பாடுகளின் திறனை மேம்படுத்தவும், பயன்படுத்துவோரின் தேவைகளை அறியவும், அரசின் மூலம் அதற்கான வழிவகைகளைக் கண்டறியவும் உதவலாம்.

2. சிறுவனப் பொருட்களின் உற்பத்தியை கொள்முதல் செய்தல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றிற்குத் தேவையான நிதியைத் திரட்ட கடன் தொடர்புகளுக்கு ஏற்பாடு செய்யலாம். இது தொடர்பான கருத்துக்களைக் கணித்து, மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மீது அரசுக்கு ஆலோசனை வழங்கலாம்.

3. தேன், மரப்பட்டைகள், புளி, ஏலம், மூங்கில் போன்ற வனத்துறையின் சிறு வன உற்பத்திப் பொருட்களை முறைப்படுத்தி, திட்டமிட்டும் ஆய்வினையும் மற்றும் மருத்துவச் செடிகளின் உற்பத்தியை பெருக்கி பரப்பளவை அதிகரிக்கும் திட்டத்தினையும் மேற்பார்வையிடலாம்.

# 8. உணவு பதப்படுத்தும் தொழில் உள்ளடங்களாக சிறு தொழில்கள்

கிராமிய பகுதிகளில் இயற்கை வளங்களை கண்டறிந்து உணவு பதப்படுத்துதல் மற்றும் பிற தொழில்கள் உருவாக்குதல் போன்றவைகளை உள்ளாட்சி அமைப்புகளால் மட்டுமே திறம்பட செயல்படுத்த முடியும். இதனடிப்படையில், அரசாணை (நிலை) எண்.75, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 24.4.97 மூலம் தொழிற்பேட்டைகளையும் வளர்ச்சி நிலையங்களையும் அமைத்தல், தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், பிற்பட்ட பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைத்தல், தொழில் இயக்குநரால் கட்டுப்படுத்தப்படும் பிற குழுவினருக்கு கடன்கள் அளித்தல், பொது வசதிகளை அமைத்தல் போன்ற திட்டங்களுக்கு அறிவுரை வழங்குதல் மற்றும் உதவி செய்தல் போன்ற பொறுப்புகளை மூன்றடுக்கு அமைப்புகளுக்கு வழங்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இப்பொருள் குறித்து நன்கு ஆராய்ந்த பின்னர், மேலும் கீழ்க்கண்ட பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்களை மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க குழு பரிந்துரை செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்

1. கிராம ஊராட்சிகள் எல்லைக்குட்பட்ட பகுதியில் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு அடிப்படை வசதிகளான இடம், மின்சாரம், கச்சாப் பொருள்கள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

2. மைய மற்றும் மாநில அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள், கிராமப்புறங்களில் சிறப்பாக செயல்படுத்துவதற்கும், தகுதியான பயனாளிகளை தேர்வு செய்வதற்கும் புதிய தொழிற்சாலைகளின் நன்மைகளை மக்களுக்கு அவ்வப்போது தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் பரப்புவதற்கும் ஊராட்சிகள் உதவ வேண்டும்.

3. கிராமப்புறங்களில் துவங்க இருக்கும் சிறுசிறு தொழிற்சாலைகளை உருவாக்க நிதி கிடைப்பதற்கு சம்மந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு கடன் பெற உதவுதல்.

4. பயனாளிகளை தேர்வு செய்து சிறு உப்பு தயாரிப்பு தொழில்களை ஏற்படுத்தி செயல்படுத்துதல்.

5. கிராமப்புறங்களில் ஒரு குறிப்பிட்ட பருவங்களில் கிடைக்கும் உணவுப் பொருட்கள் பதப்படுத்தும் முறையை கண்டறிந்து தொழில் நிபுணர்களுடன் தொடர்பு கொண்டு ஒரு வரைவு திட்டத்தை ஏற்படுத்திட நடவடிக்கை எடுத்தல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. ஒன்றிய அளவில் தொழில்கள் ஆரம்பிக்கவும், அதற்கான வசதி, வாய்ப்புகளை கண்டறிதல்.

2. ஒன்றிய அளவில் தேவைப்படும் அடிப்படை வசதிகள் கண்டறிந்து அதற்கான ஒரு திட்டம் வகுத்து செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுத்தல்.

3. தொழில் துவங்க ஆர்வமுள்ள நபர்களை முறைப்படி தேர்வு செய்து, கடன் வசதி பெறுவதற்கு பெயர்களை முறைப்படி சம்மந்தப்பட்ட வங்கிகளுக்கு பரிந்துரை செய்தல் மற்றும் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி அளிப்பதற்கு உதவுதல்.

4. அரசு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து அவ்வப்போது ஆய்வு செய்தல்.

5. பாரத பிரதமரின் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் மைய அரசின் பிற திட்டங்கள் முறையாக (ஒன்றிய அளவில்) செயல்படுத்திடவும் அவற்றின் விளைவுகளை அவ்வப்போது கண்டறிதல். இதுபோன்ற திட்டங்களின் பலன்கள் உரியவர்களுக்கு செல்கிறதா என்பதை கண்டறிதல்.

6. ஒன்றிய அளவில் சிறிய தொழில்கள் துவங்க ஆர்வமுள்ள நபர்களை கண்டறிதல். அவசியமான நிதியினை கடனாக பெற்றுத் தருவதில் உதவுதல்.
7. சிறுதொழில்கள் துவங்க ஆர்வமுள்ளவர்களுக்கு சிறப்புக் கடன்கள் அரசு மூலம் அல்லது வங்கி மூலம் பெற்றுத் தருதல்.

8. உப்பு தயாரிப்பதில் ஆர்வமுள்ள பயனாளிகளை தேர்வு செய்து அத்தொழில் புரிய நிதி வசதிக்கான திட்டம் செயல்படுத்துதல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. மாவட்ட அளவில் தொழில் துவங்குவதற்கான ஆதாரங்கள் தயாரித்து அதனை செயல்படுத்த ஒரு திட்டம் தயாரித்தல் வேண்டும். ஆண்டுதோறும் தொழில் வளர்ச்சி மாநாட்டினை நடத்தல் வேண்டும்.

2. மாவட்ட அளவில் சிறுதொழில் துவங்குதற்கு வேண்டி அடிப்படை வசதிகளை மாவட்ட ஊராட்சி ஏற்படுத்தல் மற்றும் தொழில் துவங்குபவர்களுக்கு அறிவுரை மற்றும் ஆலோசனை வழங்கல்.

3. மாவட்ட அளவில் சிறுதொழில் துவங்க ஆர்வமுள்ள பயனாளிகளை தேர்வு செய்தல் மற்றும் அவர்களுக்கு சம்மந்தப்பட்ட பயிற்சி நிறுவனங்களில் முறையான பயிற்சி அளிக்க ஆவன செய்தல்.

4. சிறுதொழில் தொடங்க ஆர்வமுள்ள நபர்களுக்கு, அரசு/முகமை/ நிறுவனங்கள் மூலம் கடன் வசதி பெற்றுத் தருவதில் அவ்வப்போது அரசுக்கும் வங்கிகளுக்கும் ஆலோசனை வழங்குதல்.

5. மாவட்ட அளவில் தொழில்கள் மற்றும் தொழிலாளர் பற்றிய நிலைக் குழுவை அமைத்து அதன் மூலமாக அறிவுரை வழங்குதல் மற்றும் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல்.

6. மாவட்ட அளவில் பிரதம மந்திரியின் வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற ஏனைய திட்டங்களுக்கு பயனாளிகளை தேர்வு செய்வதிலும் செயல்படுத்துதல், பார்வையிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

7. மாவட்ட அளவில் சிறுதொழில் துவங்குவதற்கு விருப்பம் உள்ள தகுதியானவர்ககளை தேர்ந்நதெடுத்தல் மற்றும் அவர்களுக்கு கடன் மற்றும் நிதி வசதியை ஏற்படுத்தித் தருதல், உதவுதல் மற்றும் ஆய்வை மேற்கொள்ளுதல்.

8. மாவட்ட அளவில் சிறுதொழில் துவங்குவதற்கு அரசு மூலம் சிறப்புக் கடன் வசதி கிடைக்க உதவுதல்.

9. மாவட்ட அளவில் தகுதியான உப்பு தயாரிக்க நபர்களை தேர்ந்தெடுத்தல் மற்றும் அவர்களுக்கு உதவியளிக்க திட்டத்தினை உருவாக்குதல்.

## 9. கதர், கிராம மற்றும் குடிசைத் தொழில் திட்டங்கள்.

கதர், கிராம மற்றும் குடிசைத் தொழில்கள் சார்ந்த திட்டங்களின்பால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளில் மூன்றடுக்கு ஊராட்சிகளுக்குரிய உரிமைகள், பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை வழங்கும் பொருட்டு அரசாணை (நிலை) எண்.75, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 14.3.97-ல் (அ) ஊராட்சி அளவிலான செயல்பாடுகளைக் கண்டறிந்து அவைகளுக்கான திட்டங்களை உருவாக்குவதற்கு உதவுதல், பயிற்சிக்கும், திறமையை வளர்ப்பதற்கும் பயனாளிகளை தேர்ந்தெடுத்தல், பயிற்சிக்கும், விற்பனைக்குமான வாய்ப்புகளை கிராம கைவினைஞர்களுக்கு எடுத்துரைத்தல் போன்ற பணிகளை கிராம ஊராட்சிகளுக்கும், (ஆ) கிராமக் கைவினைஞர்கள் திறமைகளை வளர்க்கவும், தொழில்நுணுக்கத்தை கற்பிக்கவும், புதிய பயிற்சி மற்றும் தொழில் மையங்களை தொடங்குதல், ஏற்கனவே உள்ள அலகுளை மாற்றியமைத்தல், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்பனை செய்ய உதவுதல், கைவினைஞர்களுக்கான கடன் வசதி பெற உதவுதல் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் மேம்பாட்டிற்கு பயனாளிகளை தேர்வு செய்ய உதவுதல் ஆகிய பணிகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கும், (இ) கதர், ஊரகத் தொழில்கள், பட்டு வளர்ப்பு, கைத் தொழில்கள் முதலியவற்றிற்கான வளர்ச்சிக்கு திட்டங்களை உருவாக்குதல் மற்றும் இவற்றிற்கான பயிற்சி நிலையங்களை கண்டறிதல் போன்ற பொறுப்புக்களை மாவட்ட ஊராட்சிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை குழு ஆராய்ந்து மேலும் வழங்க வேண்டிய அதிகாரங்கள் குறித்து விவாதித்து, கீழ்க்கண்ட பரிந்துரைகளைச் செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்

1. கதர், கிராம மற்றும் குடிசைத் தொழில் திட்டங்களுக்கு தகுதியான பயனாளிகளை தேர்வு செய்து, முறையான பயிற்சி நிறுவனங்கள் உள்ள இடங்கள் பற்றி தகவல் பயனாளிகளுக்கு தெரிவித்து, தொழில் நுட்பம் மற்றும் செயல்திறம் பற்றி பயிற்சி அளிக்க ஊராட்சி நடவடிக்கை எடுக்கலாம்.
2. கிராம ஊராட்சி அளவில் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்த, கிராம ஊராட்சி உதவிடவேண்டும். உள்ளூரிலேயே கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களைக் கொண்டு தொழில் துவங்க ஏற்பாடு செய்தல். உள்ளூரில் தயாரிக்கபட்ட பொருட்களின் விலையையும் ஊராட்சியே நிர்ணயம் செய்யலாம்.
3. ஊராட்சி அளவில் கதர் மேம்பாட்டிற்கான புதிய திட்டத்தை தமிழக கதர் வாரியத்தின் ஒப்புதலுடன் ஊராட்சிகள் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கலாம்.
4. ஊராட்சி அளவில் தறிகளை நவீனப்படுத்துவதற்காக கைத்தறி மற்றும் கதர் துறை அலுவலர்களுடன் கூடிப் பேசி திட்டம் தயாரித்து, அதனை செயல்படுத்தி அவ்வப்போது ஊராட்சிகள் மேற்பார்வையிடவேண்டும்.
5. சம்மந்தப்பட்ட துறையுடன் தொடர்பு கொண்டு, கிராமப்புறங்களில் வாழும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தேனீ வளர்க்கும் பெட்டிகள் வழங்கி அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கவும் அவ்வப்போது இத்திட்டத்தினை கிராம ஊராட்சிகள் மேற்பார்வையிடலாம்.
6. கிராம ஊராட்சி அளவில் உள்ள கதர்பட்டு நெசவாளர்களுக்கு, சம்மநதப்பட்ட துறையுடன் தொடர்பு கொண்டு, ஒரு திட்டம் தயாரித்து ஜகார்டு பெட்டி வழங்கி மேற்பார்வையிடலாம்.
7. வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் மக்களின் வருமானம் உயர்வதற்கு நூற்புக்கதிர் கொண்ட கைராட்டைகளில் கதற் நூற்புக்கான திட்டங்களை வகுக்க, சம்மந்தப்பட்ட தமிழக கதர் மற்றும் கைத்தறித் துறை சார்ந்த அலுவலர்களின் உதவியை நாடலாம்.

8. பதனீர் எடுக்கும் பனை ஏறும் தொழிலாளர்களுக்கு மரம் ஏறுவதற்கான கருவி வழங்க ஒரு திட்டத்தை செயல்படுத்தி, அத்திட்டத்தினை ஊராட்சிகள் மேற்பார்வையிடலாம்.

9. கல்வி கற்பதற்கான உபகரணங்கள் இலவசமாக வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி மேற்பார்வையிடலாம்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. பிற முகைமைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்து கதர், ஊரக மற்றம் குடிசைத் தொழில் மற்றும் பிற கைவினைஞர்களுக்கான செயல்பாட்டுத் திட்டத்தை தீட்டுதல் மட்டும் மேற்பார்வையிடுதல்.

2. பல்வேறு உற்பத்தி, வணிகம், மற்றும் கைத்திறன் தொழிலில் தொழில் நுட்பவியல் சென்றடையவும் அவற்றை மேம்பாடு அடைய உதவி செய்தல்

3. பொதுவான பணியிடங்களில் பட்டறை பணி வளாகங்கள் கட்டுவது போன்ற உள்ளமைப்பு வளர்ச்சிக்காக பாடுபடுவது.

4. ஒன்றிய அளவில் தொழில் துவங்குபவர்களுக்கு கடன் மற்றும நிதியுதவி ஏற்பாடு செய்தல் மற்றும் ஆய்வு செய்தல்.

5. ஒன்றிய அளவில் உற்பத்தியாகும் கதர் துணி மீதான விற்பனை வரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதா என்பதை மேற்பார்வையிடல்.

6. ஒன்றிய அளவில் கதர் மேம்பாட்டிற்கான புதிய திட்டத்தை வகுத்து அது முறையாகசெயலபடுகிறதா என்பதை மேற்பார்வையிடுதல்.

7. ஒன்றிய அளவில் கதர் நெசவுக்கு பயன்படும் தறிகளை நவீனப்படுவதற்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்தல்.

8. ஒன்றிய அளவில், உள்ள ஆதிதிராவிடர் மற்றம் பழங்குடியினருக்கு தேனீ

வளர்க்கும் பெட்டிகளை வழங்கி அவர்களுடைய வருமானத்தை பெருக்க நடவடிக்கை எடுத்தல்.

9. ஒன்றிய அளவில் உள்ள பனை ஏரித் தொழிலாளர்களுக்கு பன மரத்தில் இருந்து பதனீர் எடுக்க நவீன கருவிகள் வழங்க ஏற்பாடு செய்தல். இவை வழங்கப்பட்டதா அதை பயனாளிகள் முறையாக பயன்படுத்துகிறார்களா என்பதை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்பார்வையிட வேண்டும்.

10.கல்வி கற்பதற்கான உபகரணங்களை இலவசமாக வழங்கி, அதை பயனாளிகள் முறையாக பயன்படுத்துகின்றனரா என்பதை மேற்பார்வையிடவேண்டும்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. கதர், கைவினைப் பொருள்கள், பட்டுப்புழு வளர்ப்பு, குடிசை மற்றும் ஊரகத் தொழில் வளர்ச்சிக்காக மாவட்ட நிலையில் திட்டம் தயாரித்தல்.

2. உரிய தொழில்நுட்பவியல் பயிற்சி மையங்களையும், நிலையங்களையும் கண்டறிந்து, அவ்விவரங்களை ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சிகளுக்கும் பரப்புதல்.

3. மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய இயல் திறங்களைப் பயன்படுத்துவதற்கு தேவையான உள்ளமைப்புகள் பற்றி கதர் மற்றும் ஊரகத் தொழிற் வாரியத்திற்கு ஆலோசனை அளித்தல்.

4. மாவட்டம் முழுவதற்குமான கடன் திட்டத்தின் ஒரு பகுதியாக மாவட்டத்திலுள்ள இப்பிரிவுக்கு ஏற்ற கடன் வசதிக்கு வடிவமைத்துத் தருதல்.

5. கதர் செலவுக்கான தறிகளை நவீனப்படுத்தும் திட்டம், தேனீ வளர்க்கும் பெட்டிகளை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கும் திட்டம், கதர் பட்டு நெசவாளர்களுக்கு ஜெகார்டு பெட்டி வழங்குவதற்கான திட்டம், நூற்புக்கதிர் கொண்ட கைராட்டிகளில் கதர் நூற்புக்கான திட்டம், பதனீர் எடுக்க பனை மரம் ஏறுவதற்கான கருவி வழங்கும் திட்டம், கல்விக்கான உபகரணங்களை இலவசமாக வழங்கும் திட்டம், கதர் பட்டு

நெசவாளர்களுக்கு வடிவமைப்பு அட்டைகளையும் ஜெகார்டு வழங்கும் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலைத் திட்டத்தின்கீழ் கிராமத் தொழில் மேம்பாட்டுக்கான திட்டம் மற்றும் நீலகிரியில் தேனீ வளர்ப்பு கிராமத் தொழில் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றை திட்டமிடுதல் மற்றும் ஆலோசனை வழங்குதல்.

# 10. ஊரக வீட்டு வசதி

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக உறைவிடம் கருதப்படுகிறது. கிராமப்புறங்களில் முறையான வீட்டு வசதியற்றோருக்கு வீட்டு வசதி அளிக்கும் பொருட்டு செயல்படுத்தப்படும் திட்டங்களில் அரசாணை (நிலை) எண்.340, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 3.12.97-ல் மூலம் (அ) ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோர்க்கு வீட்டுமனை ஒதுக்கிடும் திட்டம், தமிழ்நாடு ஊரக வீட்டு வசதித் திட்டம், ஊரகப் பகுதிககளில் இருப்பிடத்தை மேம்படுத்துவதற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கான வீட்டு வசதித் திட்டம், பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டடோர் ஆகியோருக்கான வீட்டு வசதித் திட்டம் ஆகிய திட்டங்களின் பயனாளிகளைக் கண்டறிதல், பொறுப்பினை கிராம ஊராட்சிகளுக்கும், (ஆ) மேற்கண்ட திட்டங்களில் தகுதிவாய்ந்த பயனாளிகளைக் கண்டறிவதில் கிராம ஊராட்சிகளுக்கு உதவுதல் மற்றும் பணியினை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல் போன்ற பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கும், (இ) மேற்கண்ட திட்டங்களுக்கான திட்டங்களை மாவட்ட அளவில் தீட்டுதல் மற்றம் திட்டங்களை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்யும் பொறுப்புக்கள் மாவட்ட ஊராட்சிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், பொறுப்புக்கள் வழங்க ஆராய்ந்த குழு கீழ்க்காணும் பரிந்துரைகளைச் செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்

1. வீடு இல்லாதவர்களுக்கு வழங்கப்படக்கூடிய வீட்டுமனைகள் மற்றும் ஊரக வீட்டு வசதி திட்டங்களின் கீழ் வழங்கப்படக்கூடிய வீடுகளுக்கான ஒட்டுமொத்த தேவையை கணக்கிட்டு விவரங்களை பராமரித்தல்.

2. வீட்டு மனைகள் / வீடுகள் கட்டத் தகுந்த நிலங்களைக் கண்டறிந்து அதன் விவரத்தை பராமரித்தல்.

3. வீடு கட்டுவதற்கான மனைகளை பகிர்ந்தளிக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உதவுதல்.

4. ஊரக வீட்டு வசதியில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் மற்றும் பிற வீட்டு வசதி திட்டங்களின் கீழ் பயனாளிகளைத் தெரிவு செய்யும்போது ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சமுதாயத்தின் பிற நலிவுற்ற பிரிவினருக்கான வீட்டு வசதி திட்டங்களில் தகுதியுள்ள பயனாளிகளை தேர்ந்தெடுத்தல்.

5. ஊரக வீட்டுவசதியை மேம்படுத்துவதில் கூட்டுறவு அமைப்புகன் மற்றும் தனியார் வீடு கட்ட உதவுதல்.

6. மீனவர்களுக்கான வீட்டு வசதி திட்டங்களின் செயல்பாட்டினை மேற்பார்வையிட்டு தேவையான அறிவுரைகளை வழங்குதல்.

7. கைத்தறி நெசவாளர்களுக்கான சிறப்பு வீட்டு வசதித்திட்டங்களின் செயல்பாட்டினை மேற்பார்வையிட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

**ஊராட்சி ஒன்றியங்கள்**

1. வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் வழங்கும் வகையில் வீடு கட்ட பயனுள்ள மனைகளை கண்டறிந்து, கையகப்படுத்தி முறையாகப் பகிர்வு செய்தல்.

2. ஊரக வீட்டுவசதி திட்டங்களின் செயல்பாட்டுக்கு வழிகாட்டி தேவையான தொழில் நுட்ப உதவியை, கிராம ஊராட்சிகளுக்கு அளித்தல். ஊரக வீட்டு வசதிக்காக பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டுமானத்திற்காக கட்டிடப் பொருட்கள் வழங்குதல். ஊரக வீட்டு வசதி திட்டங்களை திறம்பட செயல்படுத்த ஆய்வுக் குழுக்களை அமைத்து, அதன் செயலை மேற்பார்வையிடல்.

3. ஊரக வீட்டுவசதி திட்டங்களின்செயல்பாடுகள், சிறப்பான முறையில் நடைபெற தொடர்ச்சியான மேற்பார்வை செய்தல் , கட்டுமானப் பணிகளின் தரத்தினை மேற்பார்வை செய்து, ஆய்வு மேற்கொள்ளல். மேலும் ஊரக வீட்டு வசதிக்கான பல்வேறு வகையான திட்டங்களை ஊராட்சி ஒன்றிய அளவில் செயல்படுத்துதல்.

4. மீனவர்களுக்கான வீட்டுவசதி திட்டம் மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கான வீட்டு வசதி திட்டங்களின் செயல்பாடுகள் எவ்வாறு உள்ளது என்பதை மேற்பார்வையிட்டு தேவையான ஆலோசனைகள் வழங்குதல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. தங்கள் மாவட்டத்தில், ஊரக வீட்டு வசதிக்கான திட்டங்கள் தீட்டும்போது அம்மாவட்டத்தின் ஊரக வீட்டு வசதி எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு, திட்டமிடுதல். மாவட்டத்திலுள்ள அனைவருக்கும் ஒரு வீடு என்ற கொள்கையளவில் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை தயாரித்து பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் மூலம் செயலாக்க நடவடிக்கைகள் எடுத்தல். மாவட்டத்தில் ஊரக வீட்டு வசதியின் கீழ் கட்டிடங்கள் கட்ட ,கட்டிட மையத்தின் தொழிற்நுட்ப ஆலோசனைகளைப் பெறுதல். மேலும், கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்குதல்.
2. மாவட்ட ஊராட்சிகள் தங்கள் பகுதிகளில் ஊரக வீட்டு வசதி திட்டங்களின் செயல்பாடுகள், மற்றும் முன்னேற்றங்கள் குறித்து ஆய்வுகள் மேற்கொண்டு தக்க அறிவுரைகள் வழங்குதல்.

3. மீனவர்களுக்கான வீட்டு வசதி திட்டங்கள் மற்றும் கைத்தறி நெவாளர்களுக்கான திட்டங்களை மாவட்ட அளவில் உருவாக்குதல் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல்.

# 11. குடிநீர்

ஊரக குடிநீர் திட்டம் முன்னுரிமை பெற்றதொரு திட்டமாகும். இதனடிப்படையில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் குடிப்பதற்கு, குளிப்பதற்கு மற்றும் துவைப்பதற்கு தேவையான நீராதாரங்கள் உருவாக்குதல் மற்றும்

பராமரிக்கும் பொறுப்புகளை உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய கடமைகளாக வகை செய்யப்பட்டுள்ளது. இந்த பொறுப்புகளை திறம்படி செவ்வனே செயலாற்ற ஆரசு ஆணை(நிலை)எண்.75, ஊரக வளர்ச்சி துறை நாள் 14.3.97 –ல் (அ) கைம்பம்புகள் , கிணறுகள், ஊரணிகள், மேல்நிலைத் தொட்டிகள் உட்பட கிராம குடிநீர் வழங்கும் திட்டங்களையும் அதற்கான இடங்களையும் கண்டறிய உதவுதல் மற்றும் சுத்தமான குடிநீர் விநியோகம் மற்றும் நீரின் தரத்தை சோதித்தல் போன்ற பொறுப்புக்களை கிராம ஊராட்சிகளுக்கும் (ஆ) கிராமங்களுக்கான குடிநீர் திட்டங்களை கண்டறிதல் மற்றும் முன்னுரிமை அளித்தல், திட்டங்களின் தரம் மற்றும் முன்னேற்றத்தினை மேலாண்மை செய்தல் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள குடிநீர் வழங்கு திட்டங்களை பராமரித்தல் மற்றும் எங்கெல்லாம் இயலுமோ அங்கெல்லாம் தண்ணீர் கட்டணங்களை நிர்ணயித்தல் போன்ற பொறுப்புக்களை ஊராட்சி ஒன்றியங்களுக்கும் (இ) பெரிய குடிநீர் திட்டங்களை உருவாக்கல் போன்ற பொறுப்பை மாவட்ட ஊராட்சிக்கும் வழங்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இப்பொருள் குறித்து ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் பொறுப்புகளை வழங்க ஆராய்ந்து குழு கீழ்கண்ட பரிந்துரைகளைச் செய்கின்றது.

## கிராம ஊராட்சிகள்

1. கிராம ஊராட்சி மற்றும் அரசினால் குடிநீர் வழங்குதல் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கி, அத்திட்டங்கள செவ்வனே மேற்கொண்டு தங்கள் பகுதிகளுக்கு முறையாக குடிநீர் வழங்க உறுதிசெய்தல்.

2. கிராம ஊராட்சி செயல்படுத்தும் குடிநீர்த்திட்டங்களை கண்காணித்து மேற்பார்வையிட்டு திட்ட முன்னேற்றம் குறித்த அறிக்கையினை அளித்தல், மற்றும் குடிநீர் திட்டங்களின் செயலாக்கத்தினை மேற்பார்வையிடுதல்.

3. குடிநீர்த்திட்டங்களை செம்மையக செயல்படுத்த பராமரிப்புப் பணிகள் மற்றும் சிறப்பாக இயக்குவதற்கு பணியாளர்களை அமர்த்துதல்.

4. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஊரக உறைவிடங்கள் உள்ளடங்காத பகுதிகளுக்கு ஊரக நீர் வழங்கும் திட்டத்தின் செயல்பாட்டினை மேற்பார்வை செய்தல்.

5. தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நீர் வழங்கும் பகுதிகளின் செயல்பாட்டினை மேற்பார்வை செய்தல்.

6. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான ஊராட்சி ஒன்றிய நலத் திட்டங்களின் செயல்பாட்டினை மேற்பார்வையிடுதல்.

7. மிகுதியாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் குழாய் மூலம் நீர் வழங்கும் முனைப்பு திட்டங்களின் செயல்பாட்டினை மேற்பார்வையிடுதல்.

8. குறைந்தபட்ச தேவைகள் திட்டத்தின் கீழ் உவர்நீரினால் ஏற்படும் பாதிப்புகளை முனைப்பாக கட்டுப்படுத்தி உப்புத் தன்மையால் வெகுவாகப்பாதிக்கப்பட்ட உறைவிடங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவதை மேற்பார்வை செய்தல் .

9. குடிநீரின் உப்புத்தன்மையை அகற்றிட இயந்திரங்களை பயன்படுத்தும் திட்டத்தின் செயல்பாட்டினை மேற்பார்வை செய்திடல்.

10. ஊரகப்பகுதிகளுக்கான சிறப்பு நீர் வழங்கும் திட்டங்கள் சரியான முறையில் செயல்படுகிறதா என்பதனை மேற்பார்வையிடுதல்.

11. விரைவான ஊரக நீர் வழங்கும் திட்டத்தின் செயல்பாடுகளை மேற்பார்வை செய்திடல்.

12. ஒன்றுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்கும் சிறிய கூட்டு குடிநீர் திட்டங்களை செயலாக்குதல், பராமரித்தல் மற்றும் குடிநீர் கட்டணங்களை வசூலித்தல் போன்ற பணிகளை கிராம ஊராட்சிகளில் கூட்டிணைவுக் குழுவிடம் குடிநீர் வடிகால் வாரியம் ஒப்படைத்தல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. குடிநீர் வழங்குவதற்கன வசதிவாய்ப்புகள் மற்றும் அவற்றினை மேம்பாடு செய்வதற்கான திட்டங்களை தீட்டுதல். அவ்வாறு மேற்கொள்ளப்படவிருக்கும்

அல்லது மேற்கொள்ளும் திட்டங்களுக்கு தொழில் நுட்ப வசதி மற்றும் நிர்வாக நிதி ஏற்பு செய்தல்.

2. கூட்டு குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு தேவையான தொழில் நுட்ப உதவியினை வழங்கி ஒருங்கிணைந்து செயல்படுத்துதல்.

3. ஊராட்சி ஒன்றிய அளவில் குடிநீர் சுத்திகரிப்புக்கான இடு பொருட்களை வழங்குதல்.

4. ஒன்றிய அளவிலான ஊரக குடிநீர் திட்டங்கள் சிறப்பான முறையில் செயல்படுகின்றனவா என்பதனை மேற்பார்வையிடல் மற்றும் அப்பணிகளின் முன்னேற்றம், தரம் ஆகியவற்றை கண்காணித்தல்.

5. ஒன்றியப் பகுதிகளில் உள்ள குடிநீர் அமைப்புகளைப் பராமரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.

6. மேலும், ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்கிளுக்கான திட்டங்களின்குடிநீர்க் கட்டணத்தை ஊராட்சிகள் மூலமாக வசூலித்தல்.

7. தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகளின் நீர் வழங்கு பகுதிகளின் செயல்பாடுகளை மேற்பார்வையிட்டு கண்காணித்து மேற்கொண்டு சிறப்பாக செயல்படத் தேவையான ஆலோசனைகளை வழங்கல் .

8. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தனிக்கவனம் செலுத்தி ஊராட்சி ஒன்றிய குடிநீர் நலப்பணிகள் சரியாக செயல்படுகின்றனவா என்று மேற்பார்வையிடல்.

9. மிகையாகப்பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு குழாய் மூலம் நீர் வழங்கு முனைப்பு திட்டத்தினை செயல்படுத்தி அதன் செயல்பாடு சரியன முறையில் உள்ளதா என்பதை மேற்பார்வையிடல்.

10. தன்னிறைவுத்திட்டம், ஊரக உறைவிடங்கள உள்ளடங்காத பகுதிக்கான ஊரக குடிநீர் வழங்கும் திட்டத்தினை தங்கள் ஒன்றிய பகுதிகளில் செயல்படுத்தி அவை சரியான முறையில் செயல்படுகின்றனவா என்பதனை மேற்பார்வையிடல் .

11. குறைந்தபட்ச தேவைகள் திட்டத்தின்கீழ் உவர்நீரினை மிக முனைப்பாக கட்டுப்படுத்துதல் மற்றும் உப்புத்தன்மையால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட உறைவிடங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டங்களை செயல்படுத்தி அவ்வாறு செயல்படுத்தப்படும் திட்டங்களை மேற்பார்வையிடல் .

12. ஒன்றியப் பகுதிகளில் உப்புத்தன்மையால் பாதிக்கப்பட்ட தண்ணீரை இயந்திரங்கள் மூலம் சுத்தப்படுத்தி உப்புதன்மையை அகற்றி விரைவாக குடிநீர் வழங்க செயல்திட்டங்கள் செயல்படுத்தி அவற்றினை சிறப்பாக செயல்படுத்துதலை மேற்பார்வையிடல்.

13. ஊரகப்பகுதிளில் சிறப்பு நீர் வழங்கு திட்டங்களை செயல்படுத்தி அவற்றின் செயல்பாடுகளை மேற்பார்வை செய்தல் அவசியம்.

14.விரைவாக ஊரக நீர் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தி அவற்றின் செயல்பாட்டினை மேற்பார்வையிடுதல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. மாவட்டத்தில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் அவற்றின் செயல்பாடுகள்மற்றும் மேம்பாடு குறித்து மேற்பார்வையிடுதல் மற்றும் முழுமையான குடிநீர்த்திட்டங்களைக் கண்காணித்தல்.

2. தன்னிறைவுத்திட்டம், ஊரக உறைவிடங்கள் உள்ளடங்காத பகுதிக்கான ஊரக நீர் வழங்கு திட்டங்கள் தொடர்பாக திட்டமிடுதல் ஆலோசனை வழங்குதல் மற்றும் மேற்பார்வையிடுதல்.

3. தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் நீர் வழங்கும் பகுதிகள் தொடர்பாக திட்டமிட்டு, ஆலோசனைகள் வழங்கி அத்திட்டங்களின்

செயல்பாடுகள் திருப்திகரமாக உள்ளதா என்பதனை மேற்பார்வையிடுதல்.

4. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஊராட்சி ஒன்றிய நலன்கள் குடிநீர் தொடர்பாக கிடைக்க ஆலோசனை வழங்கி மேற்பார்வையிடுதல்.

5. மிகையாகப்பாதிக்கப்பட்ட பகுதிகளில் குழாய் மூலம் நீர் வழங்கு முனைப்பு திட்டத்திற்கான திட்டங்களுக்கு திட்ட ஆலோசனை மற்றும் அவற்றின் செயல்பாடுகள மேற்பார்வை செய்தல்.

6. குறைந்தபட்ச தேவைகள் திட்டத்தின்கீழ் உவர் நீரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவற்றை கட்டுப்படுத்தி உப்புத்தன்மையால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட உறைவிடங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க திட்டமிட்டு, அவற்றுக்கான ஆலோசனை வழங்கி இத்திட்டங்களின் செயல்பாடுகள் மேற்பார்வையிடல்.

7. உப்புத்தன்மையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உப்புத் தன்மையை அகற்றிட விரைவாக குடிநீர் வழங்கும் செயல்திட்டத்தினை தீட்டுதல், ஆலோசனை வழங்குதல் மேலும் அத்திட்டத்தின் செயல்பாட்டினை மேற்பார்வையிடுதல் அவசியம்.

8. மாவட்டத்தின் ஊரகப்பகுதிகளில் சிறப்புநீர் வழங்கு திட்டம், விரைவான ஊரக நீர் வழங்கு திட்டம் ஆகியவற்றிற்கான திட்டங்கள் தீட்டுதல், திட்டங்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடுதல் அவசியம்.

9. பொதுவாக கூட்டு குடிநீர் திட்டத்திற்கு மாவட்ட ஊராட்கிள் திட்டமிட்டு, அவற்றை செயல்படுத்தி மேலும் இத்திட்டத்தை பராமரிக்க தொழில்நுட்ப அமைத்திட வேண்டும்.

# 12. விறகு மற்றும் தீவனம்

எரிபொருள் என்பது கிராமப் புறங்களில் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகும். உணவுப் பொருட்களை சமைப்பதற்கும், விவசாயம் சார்ந்த பயன்பாட்டிற்கும் எரிபொருள் தேவைப்படுகிறது. இதேபோன்று தீவனம்

உற்பத்திற்கும் பால் உற்பத்தியினைப் பெருக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் அவசியமாகும். இப்பொருள் குறித்த மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் கடமைகளாக குழு கீழ்கண்ட பரிந்துரைகளைச் செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்

1.கால்நடைகளுக்குத் தேவையான மாட்டு தீவனம் உற்பத்தியைப் பெருக்க தனிக் கவனம் செலுத்தலாம். அதற்கு தேவையான செடிகொடிகளை வளர்க்க நடவடிக்கைகள் எடுக்கலாம். கிராமத்திற்குத் தேவையான அளவு எரிப்பொருள் மற்றும் தீவனம் ஆகியவற்றை தோராயமாக மதிப்பீடு செய்து தொடர் நடவடிக்கைகள் எடுக்கலாம்.

2.பயன் தரும் மரங்களைப் பெருக்க தரிசு நிலங்கள் மற்றும் தரமற்ற நிலங்கள் பரப்பளவை கண்டறிந்து மரங்கள் நடுவதற்கான இடங்களை தேர்வு செய்தல்.

3. தேர்ந்தெடுக்கப்படும் நிலங்களில் மரம் வளர்க்க நாற்றங்கால்கள், விதைப் பண்ணை போன்ற பணிகளின்பால் தனிக் கவனம் செலுத்தி ஊக்குவிக்கலாம்.

4.புகையில்லா அடுப்புகள் மற்றும் சூரிய அடுப்பு போன்ற மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களை பொதுமக்கள் பயன்படுத்த ஊக்குவிக்கலாம். இதுபோன்ற எரிபொருட்களை சிக்கனமாகப் பயன்படுத்தக் கூடிய கருவிகளை இனங்கண்டு அவைகளை பெருவாரியாக பொதுமக்கள் பயன்படுத்த தேவையான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தலாம்.

5. வனத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் ஊரக எரிப்பொருள் மற்றும் விறகு பயிரிடல் போன்ற பணிகளை மேற்பார்வையிடலாம், அத்துறையின் மூலம் திட்டங்கள் செயல்படுத்தப்படும் காடுகளில் மீன் வளர்ச்சி தீவனம் உற்பத்தி செய்யலாம். எரிபொருள் பயிரிடும் திட்டம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை மேற்பார்வையிட்டு உரிய தொடர் நடவடிக்கை எடுக்கலாம்.

6. தரிசுநிலங்களில் எரிபொருள் மற்றும் தீவனம் கிடைக்கப் பெற மரங்கள் வளர்க்கும் திட்டங்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடலாம்.

7. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தக் கூடிய தமிழ் நாடு வேளாண் வளர்ச்சி திட்டம், தீவன மேம்பாட்டு திட்டம், கால்நடை பராமரிப்பு இயக்குநர் கட்டுப்பாட்டுக் கீழ் செயல்படும் தமிழ் நாடு வளர்ச்சசி திட்டம், தீவன சிறு தொட்டிகள் வழங்குதல், வேர் நாற்று முனைகள் வழங்குதல் ஆகிய பணிகள் மூலம் மாட்டு தீவனம் பெருக்கும் திட்டம் ஆகியவற்றை மேற்பார்வையிட்டு திட்ட செயல்பாட்டிற்கு உதவலாம்.

8. தேசிய, தரிசு நில மேம்பாட்டு வாரியம் அளிக்கும் நிதி உதவியுடன் வனத்துறையால் நிறைவேற்றப்படும் தீவன மேம்பாட்டு திட்டம், ஊரக வளர்ச்சி துறையின் மூலம் நிறைவேற்றப்படும் எரி வாயு தேசிய வளர்ச்சி திட்டம், ஊரக வளர்ச்சி துறையின் எரி அடுப்பிற்கான தேசிய திட்டம் ஆகிய பணிகள் செவ்வனே நிறைவேற்றப்பட தேவையான உதவிகளைச் செய்து மேற்பார்வையிடலாம்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. எரிப்பொருளின் முக்கியத்தை கருத்தில் கொண்டு அவற்றினை பெருக்கக்கூடிய இனங்களின்பால் தனிக்கவனம் செலுத்தி எரிபொருள் உற்பத்தி பெருக்கலாம்.

2. தீவன உற்பத்தியின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு மரங்கள் மற்றும் மாட்டு தீவனம் உற்பத்தி பெருக்கும் பொருட்டு ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அரசு நிலங்களை அடையாளம் கண்டு தனியே ஒதுக்கலாம்.

3. எரிபொருள் சிக்கனம் பெறத்தக்க தொழில் முன்னேற மர அடுப்புகள் மற்றும் சூரியசக்தி பயனால் இயங்கும் அடுப்புகளின் பயன்கள் பற்றி மக்களிடையே தனி விழிப்புணர்ச்சி ஏற்பட நடவடிக்கைகள் எடுக்கலாம்.

4.தீவனத்திற்கு பயன்படும் மரங்களின் தன்மைகளை இனங்கண்டு, அவற்றை வகைப்படுத்தி எந்த எந்த நிலத்தில் பயிர் செய்யலாம் என்பதை முறைப்படுத்தி சாதகமாக உள்ள நிலங்களில் மரக்கன்றுகளை நடலாம். அப்பணியினை தனிக்கவனம் கொண்டு தீவன உற்பத்தியின் பயனை நேரிடையாக ஆய்வு மேற்கொள்ளலாம்.

5. வனத்துறையின் வாயிலாக நிறைவேற்றப்படும் எரிபொருள் பிரபலமாக்கும் திட்டம் மற்றும் அடுப்பு எரிக்க பயன்படும் விறகுகள் அளிக்கும் மரங்கள் பயிரிடல் திட்டத்தில் இணைத்து வனத்துறை அலுவலர்களுக்கு உதவலாம். அதே போன்று வனத்துறையின் மூலம் செயல்படுத்தும் இதர திட்டங்களான தரம் தாழ்ந்த நிலையிலுள்ள காடுகளைப்பேணி காத்தல் திட்டம், மீன் தீவன உற்பத்தியின் அடிப்படையில் கிடைக்கப் பெறும் மீன் தீவனம் மேலும் எரிபொருளாகப் பயன்படும் மரங்கள் வளர்ப்பு திட்டம் ஆகிய திட்டங்களை செயல்படுத்தி மேற்பார்வையிடலாம்.

6. சமூக தரிசு நிலங்களில் மற்றும் குளங்களின் பாசனப் பகுதிகளில் பயிர் செய்யும் தீவனமரங்களின் உற்பத்தியில் நேரிடையாக பார்வையிடட்டு செயல்படுத்தி மேற்பார்வையிடலாம்.

7. ஏனைய மலைப்பகுதிகளில் விறகு மரம், மற்றும் கால்நடைத் தீவனம் அளிக்கும் காடுகள் வளர்க்கும் திட்டத்தின் செயல்பாட்டை பார்வையிட்டு, மேற்பார்வை செய்யலாம்.

8. தேசிய தரிசு நில மேம்பாடு வாரியத்தின் நிதி உதவியுடன் வனத்துறையானது தீவன உற்பத்தியைப் பெருக்க பல திட்டங்கள் தீட்டி நிறைவேற்றி வகுகிறது. மேலும், ஊரக வளர்ச்சி துறையின் மூலம் நிறைவேற்றப்படும். எரி வாயு, தேசிய வளர்ச்சி திட்டம் செயலாக்கப்படுகிறது. அதே போல் ஊரக வளர்சி துறையின் துணைக் கொண்டு எரிஅடுப்பிற்கான தேசிய திட்டம் திட்டமிட்டு செயல்படுத்தப்படுகின்றன. இது போன்ற தீவன எரிபொருள் முன்னேற்ற திட்டங்கள் அந்தந்த துறை செயல்பாட்டினையும் பார்வையிட்டு உரிய ஆலோசனைகளை ஊராட்சி ஒன்றியங்கள் வழங்கலாம்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. வனத்துறை செயல்படுத்தும் பல திட்டங்களில் ஊரக எரிபொருள் மற்றும் விறகு பயிரிடுதல் திட்டங்களில் மாவட்ட ஊராட்சி தனிக்கவனம் செலுத்தலாம். இத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்து திட்டமிடலாம்.

2. வனத்துறை செயல்படுத்தும் தரம் தாழ்ந்த காடுகளின் இனம் கண்டு உரிய மரம் வளர்க்கும் திட்டத்தை பார்வையிடலாம். வனத்துறையின் மீன் வளர்ச்சி தீவனத்திட்டத்தை மேற்பார்வையிடலாம். அப்பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யலாம்.

3. மாவட்ட ஊராட்சி பகுதிகளில் உள்ள தரிசுகாடுகளில் வளரக்கூடிய மரங்களின் மூலம் மாட்டு தீவன உற்பத்தி பெருக்கலாம். அது போன்றே பல்வேறு குளங்களில் பாசன வசதி குளங்களாக உள்ளன. அவைகளின் கரைகளில் தீவனம் அளிக்கக்கூடிய பயிர்கள் மரங்கள் வளர்க்கலாம். அதனால் தீவன உற்பத்தி பெருகும். இது போன்ற பணிகளில் தனிக்கவனம் கொண்டு திட்டமிடலாம்.

4. ஏனைய மலைப்பகுதிகளில் விறகு மரம் மற்றும் கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்யும் திட்டம் மாநில பொது திட்டத்தின் கீழ் நடைபெறுகிறது. அவைகளைதிட்டமிட்டு ஆய்வு செய்யலாம்.

5. கால்நடை பராமரிப்பு இயக்குநர் நிறைவேற்றும் தமிழ் நாடு வேளாண் வளர்ச்சி திட்டம் தீவன உற்பத்தி பெருக்க பெரிதும் உதவி செய்கின்றன. அப்பணிகளை நேரில் ஆய்வு செய்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

6. தீவன சிறு தொட்டிகள், வேர் நாற்று முனைகள் விநியோகம் திட்டத்தினை மக்களுக்கு செயல்படுத்த திட்டங்கள் தயார் செய்து, செயல்படுத்தி மேற்பார்வை செய்யலாம்.

7. தேசிய தரிசு நில மேம்பாட்டு வாரியத்தில் நிதி உதவி பெற்று வனத்துறை தீவன மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அப்பணிகளின் முன்னேற்றம் குறித்து துறையுடன் இணைந்து திட்டமிடலாம். திட்டத்தினை நிறைவேற்றி பணிகள் ஆய்வு செய்யலாம். மேலும், மேற்பார்வை செய்யலாம்.

8. ஊரக வளர்ச்சி துறையின் எரிவாயு தேசிய வளர்ச்சி திட்டம் மற்றும் எரி அடுப்பிற்கான தேசிய திட்டம் ஆகையவைகள் மூலம் நிறைவேற்றப்படும் தீவன உற்பத்தி பணிகளில் அத்துறையுடன் சரிவர பயன்பெற திட்டமிட்டு ஆய்வு மேற்கொள்ளலாம். இதனால் எரிபொருள் மற்றம் தீவனம் உற்பத்தி பெருக்கலாம் உரிய பயன்பெறலாம்.

# 13.சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், நீர்வழிகள் மற்றும் பிற தொடர்பு வழிகள்.

1. இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். கிராம மக்கள் முன்னேற்றம் அடைய, பல திட்டங்கள் அரசாங்கத்தால் நிறைவேற்றப்படுகின்றன. மக்களின் வாழ்க்கைத்தரம் உயர, அவர்களின் வருமானம் பெருக, பொருளாதாரத்தில் நாம் தன்னிறைவு பெற வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கு சாலைகள் மிகவும் இன்றியமையாததாகும். எனவே, கிராமத்தில் சாலைப்பணிகள் பலவற்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அரசாணை (நிலை) எண்.75 ஊரக வளர்ச்சி துறை, நாள். 14.3.97ல் (அ) ஊராட்சி சாலைகள் பராமரித்தல் மற்றும் மேம்படுத்தும், பணிகளுக்குத் தேவையான நிதியினைத் திரட்டும் பொருட்டு வரி விதித்தல், தண்டக் கட்டணம் வசூலித்தல் முதலிய பொறுப்புகள் கிராம ஊராட்சிகளுக்கும், (ஆ) ஊராட்சி ஒன்றியச் சாலைகளை பராமரித்தல், மேம்படுத்துதல் சாலையோர ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் மற்றும் தண்டக் கட்டணம் வசூலித்தல் போன்ற பொறுப்புக்களை ஊராட்சி ஒன்றியங்களுக்கும், (இ) மாவட்டத்தில் உள்ள சாலைகளை மேம்படுத்த திட்டமிடுதல், வளர்ச்சித் திட்டங்களை ஆய்வு செய்தல், போன்ற பொறுப்புகளை மாவட்ட ஊராட்சிகளுக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. மேலும் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் வழங்குவது குறித்து ஆராய்ந்த குழு கீழ்க்கண்ட பொறுப்புகளை மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்க பரிந்துரை செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்.

1. சாலைப்பணிகள் நடைபெறுவதற்கான நிதி ஆதாரங்களை உரிய துறையிடமிருந்து பெற்று செயல்படுத்தப்படும் பணியினை மேற்பார்வையிடுதல்.

2. ஊராட்சி சாலைகள் மேம்படுத்தும் பணியை மேற்கொள்ள திட்டமிடல், செயல்படுத்துதல், மற்றும் மேற்பார்வையிடல் பணிகளுக்காக கிராம ஊராட்சிகள், தொழில் நுட்ப வல்லுநர்களை பணியமர்த்துதல்.

3. ஜவகர் வேலை வாய்ப்பு திட்டம், இதர வளர்ச்சித் திட்டங்கள் , நாடாளுமன்ற மற்றும் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், வெளிநாட்டு நிதி ஆதாரங்களை கொண்டு நிறைவேற்றப்படும் சாலைப்பணிகள், இணைப்பு சாலைப்பணிகள் ஆகியவற்றினை மேற்பார்வையிடுதல்.

4. மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட சாலைகள், ஏனைய பிற சாலைகள், ஊரக சாலையிடும் சிறப்பு சாலைகள் திட்டம், தமிழ்நாடு வேளாண்மைத் திட்டத்தின் கீழ் புயலால் பாதிக்கப்பட்ட திட்டங்களுக்கான சாலை திட்டங்கள், தேசிய வங்கி (நபார்டு) கடனுடவியுடன் ஊரகச் சாலைகள் மேம்படுத்தும் திட்டங்கள், அங்காடி மையங்களுக்கான ஊரகச் சாலைகள் அமைக்கும் திட்டம், பழங்குடியினர் வாழுகின்ற பகுதிகளில் சாலைகள் அமைக்கும் திட்டம் , ஊரக சாலைகள் செயற்திட்ட சிறப்பு பகுதி திட்டம் மற்றும் மலைப் பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சாலை பணிகள் மேம்படுத்தும் திட்டம் ஆகியவற்றிற்கு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு உதவிபுரிதல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்.

1. ஜவகர் வேலை வாய்ப்பு திட்டம், சிறப்பு முனைப்பிலான ஜவகர் வேலை வாய்ப்பு திட்டம், நாடாளுமன்ற மற்றும் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் , வெளிநாட்டு நிதி ஆதாரங்களை கொண்டு நிறைவேற்றப்படும் சாலைப்பணிகள், இணைப்பு சாலைப்பணிகள் திட்டம் மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் சாலைகள் ஆகியவற்றினை செயல்படுத்துதல்.

2. மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட சாலைகள், ஏனைய மாவட்ட சாலைகள், பிற சாலைகள், ஊரக சாலையிடும் சிறப்பு சாலைகள் திட்டம், தமிழ்நாடு வேளாண்மைத் திட்டத்தின் கீழ் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான சாலை திட்டங்கள், ஊரக மேம்பாட்டிற்கான தேசியவங்கி கடனுதவியுடன்

பேரூந்து சாலை வழி தடங்களை மேம்படுத்துதல், வேளாண்மைத் திட்டத்தின் கீழ் அங்காடி மையங்களுக்கான ஊரக சாலைகள், கிழக்கு கடற்கரை சாலைகள் மற்றும் ஊரக சாலைகள் ஆகியவற்றினை மாவட்ட ஊராட்சிகளுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளுதல்.

## மாவட்ட ஊராட்சிகள்.

1. ஜவகர் வேலை வாய்ப்பு திட்டம், சிறப்பு முனைப்பிலான ஜவகர் வேலை வாய்ப்பு திட்டம், நாடாளுமன்ற மற்றும் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் , வெளிநாட்டு நிதி ஆதாரங்களை கொண்டு நிறைவேற்றப்படும் சாலைப்பணிகள், இணைப்பு சாலைப்பணிகள் திட்டம் மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டு திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் அமைக்கப்படும் சாலைப் பணிகளுக்கான திட்டங்களை தீட்டுதல் ஆய்வு செய்தல்.

2. மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட சாலைகள், ஏனைய மாவட்ட சாலைகள், பிற சாலைகள், ஊரக சிறப்பு சாலைகள் திட்டம், தமிழ்நாடு வேளாண்மைத் திட்டத்தின் கீழ் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான சாலை திட்டங்கள், ஊரக மேம்பாட்டிற்கான தேசியவங்கி கடனுதவியுடன் பேரூந்து சாலை வழி தடங்களை மேம்படுத்துதல், வேளாண்மைத் திட்டத்தின் கீழ் அங்காடி மையங்களுக்கான ஊரக சாலைகள், கிழக்கு கடற்கரை சாலைகள் மற்றும் ஊரக சாலைகள் போன்ற சாலை பணிகளை மேற்கொள்ள ஊராட்சி ஒன்றியங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல், பணிகளை மேற்பார்வையிடல்.

# 14.ஊரக மின்மயமாக்கல்

ஊரக மின்மயமாக்கும் திட்டங்களின் செயல்பாட்டில் தமிழக அரசு அரசாணை எண்.75 ஊரக வளர்ச்சி நாள்.4.3.97ன் மூலம் அ) கிராமப்புறங்களில் தெரு விளக்குகள் பராமரித்தல், புதிய விளக்குகள் மற்றும் புதிய மின் இணைப்புகள் வாங்குதல் ஆகிய பொறுப்புக்களை கிராம ஊராட்சிகளுக்கும், ஆ) ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், தமிழ்நாடு மின்வாரியம் மற்றும் அரசு ஆகியவற்றால் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து திட்டங்களையும், குறிப்பாக நீரிறைக்கும் விசை பம்புகளுக்கு மின்சாரம்

வழங்குதல், ஆதி திராவிடர் குடியிருப்புக்கள் மற்றும் குடிசைகளுக்கான ஓர் விளக்கு திட்டத்தின் கீழ் நடைபெறும் திட்டங்களை கண்காணித்தல் மற்றும் மேல் ஆய்வு செய்தல் ஆகிய பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியத்திற்கும், இ) மாவட்டத்தில் ஊரக மின்மயமாக்கல் சம்பந்தமான அனைத்து அரசுத் திட்டங்களையும் நிறைவேற்றல் மற்றும் ஆய்வு செய்தல், போன்ற பொறுப்புகளை மாவட்ட ஊராட்சிகளுக்கும் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

இதன் அடிப்படையில் , இப்பொருள் குறித்து, பரிசீலனை செய்து, விவாதத்தின் அடிப்படையில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் கீழ்க்கண்ட பொறுப்புகளை வழங்க குழு பரிந்துரைக்கிறது.

## கிராம ஊராட்சிகள்.

1. தெரு விளக்குகளை பராமரிக்கும் பொறுப்புகள் கிராம ஊராட்சிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தெரு விளக்குகளுக்கான மின்கட்டணங்களை அந்தந்த ஊராட்சிகள் செலுத்தி வருகின்றன. நிதி ஆதாரம் குறைவாக உள்ள கிராம ஊராட்சிகளுக்கு, அவ்வூராட்சிகள் தெருவிளக்குகள் பராமரிப்பது போன்ற அடிப்படை பொறுப்புக்களை நிறைவேற்றிக் கொள்ள சமன்பாடு மற்றும் ஊக்க நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யலாம்.

2. ஒரு குடிசைக்கு ஒரு மின்விளக்கு திட்டத்தின் கீழ் பயன்பெறத் தகுதியான குடியிருப்புகளின் பட்டியல் மற்றும் மில்லியன் கிணறு திட்டத்தின் கீழ் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு பெற வேண்டிய பயனாளிகள் குறித்த விவரத்தை கிராம ஊராட்சிகள் தமிழ்நாடு மின்வாரியத்திற்குத் தெரிவிக்க வேண்டும். இணைப்புக்கள் கொடுக்கப்பட்ட விவரத்தை, மின் துறை, பயனாளிகளுக்கு மின் இணைப்புக்கள் வழங்கும் தகவல்களை சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு மின்வாரியம் தெரிவிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயற்பொறியாளர்கள் இப்பணிகளுக்கு பொறுப்பாளர்களாக ஆக்கலாம்.

3. மின்சார திருட்டை கண்டறியும் பொறுப்பினை கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைப்பு செய்யலாம். இப்பணிகளை ஊராட்சிகள் செவ்வனே செய்ய தமிழ்நாடு மின்சார வாரியம் கிராம ஊராட்சிகளுக்கு தக்க சன்மானம் வழங்கலாம்.

4. மின் அழுத்த மாற்றி (Transformers) மற்றும் மின்கம்பங்கள் அமைப்பதற்கான இடங்களை முடிவு செய்யும் போது தமிழ்நாடு மின்சார வாரியம் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளை கலந்தாலோசித்த பின்னரே முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. (அ) மின்சக்தி மூலம் வேளாண்மை, குடிநீர் ஆதாரங்கள் மேம்படுத்துதல் மற்றும் பம்பு செட்டுகள் நிறுவுவதல், (ஆ) தெருவிளக்குகள் அமைத்தல் மற்றும் (இ) ஒரு குடிசைக்கு ஒரு மின்விளக்கு வழங்குதல் போன்ற திட்டப் பணிகளை ஊராட்சி ஒன்றியங்கள் ஆய்வு செய்யும் பொறுப்புகளை ஒப்படைக்கலாம். மின்துறையின் சம்பந்தப்பட்ட பொறியாளர், ஊராட்சி ஒன்றிய குழுவின் மின்துறை பணி சார்ந்த ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து, அந்தந்தப் பகுதிகளுக்கு தேவைப்படும் மின்சார அளவு, தற்போது வழங்கப்படும் மின்சக்தி, உடனடித் தேவையாக உள்ள புதிய நிர்மானப் பணிகள் ஆகியவை சார்ந்த புள்ளி விவரங்களைப் பெற்று, மாவட்ட அளவில் தொகுத்து, ஆராய்ந்து மாவட்டம் முழுமைக்கும் தேவையான மின்சாரம் சீராகக் கிடைக்கும் பொருட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு பரிந்துரை செய்யலாம்.

2. கிராமபுறங்களில் வழங்கப்படும், ஒரு குடிசைக்கு ஓர் மின் விளக்கு திட்டத்தின் கீழ் தேவையான புள்ளி விவரங்களை பெற்று மாவட்ட அளவிலான திட்டங்களைத் தீட்டுவதிலும், மேற்கண்ட திட்டத்தினை செயல்படுத்த தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பங்கேற்பை பெற்று ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

3. கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து கிடைக்கப்பெறும் விவரங்களைக் கொண்டு, விவசாய பெருமக்கள் பயன்படுத்தும் மின் பம்பு செட்டுக்கான மின்சாரம் வேளாண்மை உற்பத்திக்காக சீராக கிடைக்க, தமிழ்நாடு மின்வாரியத்துக்கு பரிந்துரை செய்யலாம்.

4. மாவட்டத்தில் உருவாக்கப்படுகின்ற மின் திட்டப் பணிகளை ஆய்வு செய்து வழங்கப்படும் மின்சாரத்தின் தரத்தை உயர்த்தவும் மற்றும் சீரான விநியோகம் செய்வதற்கும் அறிவுரைகள் வழங்கும் பொறுப்புகளை வழங்கலாம் என்று குழு பரிந்துரை செய்கிறது.

# 15. மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள்

மரபு சாரா எரிசக்தி என்பது சூரியஒளி, காற்று அலை, குப்பை மற்றும் சாண எரிவாயு ஆகியவை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய கிராம புறங்களில் வாய்ப்பு அதிகமாக உள்ளது. அரசு ஆணை (நிலை)எண்.75, ஊரக வளர்ச்சித் துறை நாள் 14.3.97-ன் மூலம் (அ) தனிப்பட்ட சாண எரி வாயுகலன்கள், குழல் விளக்குகள், இணைப்புகள் முதலியவை வாங்குதல் பயனாளிகளுக்கு தகுந்த மையங்களில் பயிற்சி ஏற்பாடு செய்தல், கிராம அளவில் இக்கலன்களை மேற்பார்வையிட உதவுதல், எரிசக்தியை மிச்சப்படுத்தும் கலன்களையும் மற்றும் மரபுசாரா எரிசக்தி வளங்களை பற்றியும் மக்களிடம் எடுத்துரைத்தல் ஆகிய பொறுப்புகளை கிராம ஊராட்சிகளுக்கும், (ஆ) ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களை பயன்படுத்துவதற்கான திட்டங்களை உருவாக்குதல், சாண எரிவாயு, காற்றாலை மற்றும் பிற திட்டங்களை நடைமுறைபடுத்துதல் ஆகிய பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கும், (இ) மாவட்டத்தில் நிறைவேற்றப்படக்கூடிய தகுதி வாய்ந்த மரபு சாரா எரிசக்தி வளங்களைப் பற்றி அரசுக்கு ஆலோசனைகள் வழங்குதல் மரபுசாரா எரிபொருள் சாதனங்கள் தயாரிப்பாளர்கள் மற்றும் உபயோகிப்பாளர்களுடன் மாவட்ட அளவிலான பயிற்சி மாநாடுகள் ஏற்பாடு செய்தல் மற்றும் மாவட்டத்தில் நிறைவேற்றப்படும் இது சம்பந்தமான திட்டங்களை ஆய்வு செய்தல் ஆகிய பொறுப்புகளை மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இப்பொருள்கள் குறித்து மேலும் கீழ்கண்ட அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் மூன்று அடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்க குழு பரிந்துரை செய்கிறது:

## கிராம ஊராட்சிகள்

1. கிராமப்புறங்களில் காற்றாலை, சூரிய ஒளி அடுப்பு, சாண எரிவாயு ஆகிய திட்டங்கள் மூலம் பயன்பெறும் பயனாளிகளை கண்டறிந்து வட்டார வளர்ச்சி அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி

கிளை மேலாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு கிராம ஊராட்சிகள் உதவுதல்.

2. ஊரக மக்களுக்கு மின்சாரத்தின் முக்கியத்துவம் பற்றியும் அவற்றின் சேமிப்பை பற்றியும் அவ்வப்போது தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்சாரவாரியம் கிராம ஊராட்சிகளுக்கு வழிகாட்ட உதவுதல்.

3. கிராமப்புறங்களில் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறத் தகுதியுடைய பயனாளிகளை தேர்வு செய்வதற்கு அவர்களுக்கு மரபு சாரா எரிசக்திகள் (சாண எரிவாயு, சூரிய ஒளி அடுப்பு மற்றும் காற்றாலை) சம்பந்தமாக பயிற்சி அளிக்க கிராம ஊராட்சிகள் ஏற்பாடு செய்தல்.

4. மரபு சாரா எரிசக்தி திட்டங்களான சாண எரிவாயு, சூரிய சக்தி மற்றும் காற்றாலை ஆகிய திட்டங்களின் கீழ் பயனாளிகளை ஊராட்சிகள் கண்டறிவது மற்றும் கிராம வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் பயனாளிகளை கண்டறிய கிராம ஊராட்சிகள் உதவுதல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. ஊராட்சி ஒன்றிய அளவில் சூரியசக்தி, காற்றாலைகள், சாண எரிவாயு கலங்கள் மற்றும் அதன் விரிவாக்கம் உள்ளிட்ட மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களை கண்டறிந்து அவற்றை மேம்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பொது மக்களுக்கு மரபு சாரா எரிசக்தியின் முக்கியத்துவம் பற்றியும் அவற்றின் நன்மைகள் பற்றியும் அவ்வப்போது தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் விவரங்களை பரப்பலாம்.

2. இந்த எரிசக்தியை பயன்படுத்தும் மக்களுக்கு முறையான பயிற்சியும் கல்வியும் கொடுப்பதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்பாடு செய்தல்.

3. ஊராட்சி ஒன்றிய அளவில், சூரிய அடுப்பு, சூரிய ஆற்றல் மின் நீரேற்றும் முறை மற்றும் சூரிய சக்தி மூலம் நீரை கொதிக்க வைக்கும் முறை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான திட்டங்களை செயல்படுத்தும் அதிகாரங்களை ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைப்பு செய்யலாம். தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி

நிறுவனம் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களை செயல்பாட்டு முகமைகளாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

4. ஊராட்சி ஒன்றிய அளவில் சாண எரிவாயு கலன்களை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு தனிப்பட்டவர்களுக்கும் அதன் முக்கியத்துவம் மற்றும் நன்மை பற்றி அவ்வப்போது ஊராட்சி ஒன்றியம் எடுத்துரைக்க வேண்டும். ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்த ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி திடடத்தை செயல்படுத்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகாரங்களை ஒப்படைப்பு செய்தல் வேண்டும். இத்திட்டத்தின் கீழ் பயனடையும் பயனாளிகளை கிராம ஊராட்சிகள் கண்டறிந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு விவரங்களை அளித்து உதவுதல்.

## மாவட்ட ஊராட்சி

1. மரபு சாரா எரி சக்தி திட்டத்தின் மேம்பாட்டிற்கு திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பு சார்ந்த பணிகளை மாவட்ட ஊராட்சிகள் மேற்கொள்ளலாம். சாண எரிவாயு, காற்றாலை மற்றும் சூரிய அடுப்பு ஆகியவற்றினை மேம்படுத்துவதற்கு மாவட்ட அளவிலான மூலதிட்டத்தினை (Master Plan) உருவாக்க மாவட்ட ஊராட்சிகள் உதவுதல்.

2. மாவட்ட அளவில் சூரிய ஒளி, காற்று, சாண எரிவாயு மூலம் எரிசக்தியை உருவாக்குவதற்கும், அதற்கான ஆதாரங்களை கண்டறியவும், மாவட்ட ஊராட்சிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்திட்டங்களை மாவட்டம் முழுவதும் விரிவுபடுத்தி செயல்படுத்துவதற்கு மாவட்ட ஊராட்சிகள் உரிய நடவடிக்கை எடுத்தல்.

# 16. வறுமை ஒழிப்புத் திட்டங்கள்

வறுமை ஒழிப்புத் திட்டத்தின் குறிக்கோளான வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்பவர்கள் என்று கண்டறியப்பட்டவர்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் உதவி செய்தல் மற்றும் சமுதாய உடமைகளை உருவாக்குதல் ஆகிய இருவகையிலான திட்டங்களின் வாயிலாக ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதாகும். வறுமை ஒழிப்புத் திட்டம் 1975ஆம் ஆண்டு முதல் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் வாயிலாக

செயற்படுத்தப்பட்டு வருகிறது. அரசு ஆணை (நிலை) எண்.75, ஊரக வளர்ச்சித் துறை நாள் 14.3.97ல் (அ) வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், இளைஞர்கள் சுய வேலைவாய்ப்புத் திட்டம், மில்லியன் கிணறுகள் திட்டம் மற்றும் ஏனைய தனிநபர் பயணடையும் திட்டங்களுக்கான பயனாளிகளைக் கண்டறிதல் மற்றும் தேர்ந்தெடுத்தல் ஆகிய பணிகளை கிராம ஊராட்சிகளுக்கும் (ஆ) மேற்குறிப்பிட்ட திட்டப் பணிகளை ஊராட்சிகள் செயல்படுத்துவதற்கு தொழில் நுட்ப மற்றும் நிர்வாக உதவிகள் செய்தல், இத்திட்டங்கள் குறித்து மேலாய்வு செய்தல் மற்றும் முன்னேற்றம் குறித்த புள்ளி விவரங்கள் சேகரித்தல் போன்ற பணிகள் ஊராட்சி ஒன்றியத்திற்கும் பொறுப்புகள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன. மேலும் பொறுப்புகள், உரிமைகள் வழங்குவது குறித்து ஆய்வு செய்த இக்குழு கீழ்கண்ட பணிகளை மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்க பரிந்துரை செய்கிறது.

## கிராம ஊராட்சி

1. தனிநபர் பயன்பெறும் திட்டங்களை செயல்படுத்துவதில் உதவி செய்தல்.

2. சொத்துக்கள், மானியத்தொகை மற்றும் கடன் ஆகியவற்றை பயனாளிகள் தவறாகப் பயன்படுத்துவதை ஊராட்சி ஒன்றியங்களுக்கு தெரியப்படுத்துதல்.

3. கிராம கைவினைஞர்களுக்கு நவீன கருவிகள் வழங்கும் திட்டத்திற்கு பயனாளிகளைத் தேர்வு செய்ய ஊராட்சி ஒன்றியத்திற்கு உதவுதல்.

4. ஊதிய வேலை வாய்ப்பு திட்டங்களளான ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், ஜவஹர் வேலை வாய்ப்புத் முனைப்புத் திட்டம், வேலை வாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டம் போன்றவற்றிற்கு அடையாள அட்டை வழங்குதல், ஊராட்சி ஒன்றியத்தின் தொழில் நுட்ப ஒப்புதலைப் பெறுதல் பணிகள்/திட்டங்கள் நிறைவேற்றுவதற்கான பணிக்குழுக்களை அமைத்தல், மற்றும் மேற்பார்வையிடுதலில் உதவி செய்தல்.
5. மில்லியன் கிணறுகள் திட்டத்திற்கு ஏற்பளித்து நிதி ஒதுக்கீடு செய்தல், பயனாளியின் நிலத்திற்கு அப்பால் பாசனக் கிணறுகள் இருப்பின் அந்நிலத்தை மாறுதல் அல்லது குத்தகைக்கு எடுத்து, பயனாளிகளுக்கு

உதவி புரிதல் ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டம், ஜவஹர் வேலை வாய்ப்பு முனைப்புத் திட்டம், வேளாண்மை உதவித் திட்டம் ஆகிய திட்டங்களில் வேளண் வளர்ச்சிக்காக உள்ள திட்டங்களில் பயனாளிகள் தேர்விற்கு உதவி புரிதல்.

6. நில வளர்ச்சிக்கான திட்டங்களில் திட்டத் தயாரிப்பு பணிகளில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உதவி புரிதல்.

7. பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்தில் திட்டங்களை மாவட்ட அளவில் தயாரிக்க ஏற்பாடுகள் செய்தல்.

8. வறட்சி இலக்காகும் திட்டத்தில் உதவி பெறுபவர்களைக் கண்டறிதல்.

9. சுய வேலை வாய்ப்பில் ஊரக இளைஞர்கள் சுய வேலை வாய்ப்புக்கான பயிற்சி திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம், ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு திட்டம், ஜவகர் வேலை வாய்ப்புத்திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் ஆகிய திட்டங்களில் பயனாளிகளை கண்டறிய உதவுதல். தெரிவு செய்யப்பட்ட பின்தங்கிய மாவட்டங்களில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தை செயற்படுத்துதல் மற்றும் தகுதி வாய்ந்த பயனாளிகளை கண்டறிய உதவுதல்.

10. பத்தாவது நிதிக்குழுப் பரிந்துரைகளின் கீழ் உள்ளாட்சி மன்றங்கள் மானியங்களை சரிவர பயன்படுத்துவதை உறுதி செய்தல்.

11. ஆசிரியைகளுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு உதவி செய்தல்

12. டானிடா உதவியுடன் கடலூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக துப்புரவு மற்றும் நீர் வழங்கல் திட்டத்தில் பயனாளிகளை கண்டறிய உதவுதல்
13. கட்டணக் கழிப்பிடங்களைக் கட்டி பராமரித்தல்.
14. ஊரகத் துப்புரவுத் திட்ட பயனாளிகளை கண்டறிய உதவுதல்.

15. சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் முகவர்களுக்கு உதவுதல்.

16. மலை வாழ் மக்கள் மேம்பாடுத் திட்டத்தின் கீழ் சமுதாய வானொலிப்பெட்டி வழங்குதல்

17. மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்புத் திட்டத்தின் மீதான செயல்முறை விளக்கங்களுக்கு ஏற்பாடு செய்தல், தேசிய புகையில்லா திட்டத்தில் உதவி பெறுவதற்குரியவர்களைக் கண்டறிதல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத்திட்டம், ஊரக பெண்கள் மற்றம் குழந்நதைகள் மேம்பாட்டு திட்டம் ஆகிய திட்டங்களை வட்டார அளவில் திட்டமிட்டு செயற்படுத்துதல் மற்றும் பயனாளிகளுக்கு வங்கிகள் மூலம் கடன்/மானியம் கிடைக்க தேவையான ஏற்பாடுகள் செய்தல்.

2. ஊரக இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்பு திட்ட பயனாளிகளுக்கு குறிப்பிட்ட பணிகளுக்குத் தேவையான உள்ளமைப்பு வசதிகளைச் செய்து கொடுத்தல்.

3. மாவட்ட ஊராட்சிகளுக்கு இத்திட்டப்பணிகள் தொடர்பான காலாண்டு அறிக்கைகள் அனுப்புதல்.

4. கிராம கைவினைஞர்களுக்கு நவீன கருவிகள் வழங்கும் திட்டத்திற்கு தகுதி வாய்ந்த கைவினைஞர்களை தெரிவு செய்து அவர்களுக்குத் தேவையான நவீன கருவிகளை கிராம ஊராட்சிகள் மூலம் வழங்குதல்.

5. கிராம ஊராட்சிகளால் தயாரிக்கப்படும் திட்டங்களை ஆய்வு செய்து தொழில் நுட்ப இசைவு மற்றும் தொழில் நுட்ப உதவிகள் அளித்தல் மேலும் அவற்றை ஆய்வு செய்து காலாண்டு அறிக்கைகயையும் பயனீட்டு சான்றுகளையும் பெற்று மாவட்ட ஊராட்சிகளுக்கு அளித்தல்.

6. மில்லியன் கிணறுகள் திட்டம், சிறு பாசன திட்டம் ஆகியவற்றிற்கு பயனாளிகளை கிராம ஊராட்சிகள் மூலம் தெரிவு செய்தல் அத்துடன் பயனாளிகள் உதவியுடன் கிணறுகள் தோண்டவும், அதற்கான செலவு தொகை வழங்கும் பணியினை மேற்பார்வையிடல் மற்றும் பணி முடித்தற்கான சான்றிதழ் வழங்குதல். மில்லியன் கிணறுகள் திட்டத்தின் கீழ் தோண்டப்பட்ட கிணறுகளுக்கு மின் இணைப்பு பெற மின் வாரியத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுதல், திட்டப்பணிகள் குறித்து மேற்பார்வையிட்டு அதன் முன்னேற்றம் பற்றி மாவட்ட ஊராட்சிக்கு அறிக்கை அனுப்புதல்.

7. நில வளர்ச்சிக்கான திட்டங்களின் கீழ் செயல்திட்டங்களை உருவாக்க மாவட்ட ஊராட்சியிடமிருந்து தொழில் நுட்ப ஏற்பினையும் நிதி ஒதுக்கீட்டினை பெறுதல்.

8. கிராம ஊராட்சிகளின் ஒத்துழைப்போடு திட்டங்களைச் செயற்படுத்தல் மேலும் அப்பகுதிக்கான செயல்திட்டங்களை வறுமை ஒழிப்பு திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல்.

9. மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டப் பணிகளை மேற்பார்வையிட்டு மாவட்ட ஊராட்சிகளுக்கு விவரங்களை வழங்கி உதவி செய்தல். வறட்சிக்கு இலக்காகும் திட்டத்திற்கு திட்டமிடுதல் .

10. ஊரக இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு பயிற்சிக்கான திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம், ஊரக பணிகளில் மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டுக்காக திட்டம், ஆகிய திட்டப் பணிகளை கிராம ஊராட்சியுடன் இணைந்து செயலாக்குவதில் உதவுதல்.

11. தெரிவு செய்யப்பட்ட பின் தங்கிய மாவட்டங்களில் முனைப்பிலான ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தை செயல்படுத்துதல்.

12. இந்திரா நினைவு குடியிருப்பு, மில்லியன் கிணறு திட்டம் ஆகியவற்றை திட்டமிட்டு செயல்படுத்துதல்.

13. உள்ளாட்சி மன்றங்களால் மேற்கொள்ளப்படும் உள்ளமைப்புகள் மேம்பாடு அடையதிட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல்.

14. ஊராட்சி ஒன்றியங்களின் வாயிலாக கால்நடைப் பராமரிப்புத் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடல்.

15. ஆசிரியர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியம் அளித்தல், அவற்றிற்கு திட்டமிடுதல், திட்ட செயல்பாட்டை மேற்பார்வையிடுதல்.

16. டானிடா உதவியுடன் கடலூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக துப்புரவு மற்றும் நீர் வழங்கல் திட்டத்திற்கு, திட்டமிடுதல் செயல்படுத்தும் மற்றும் பார்வையிடல்.

17. ஊராட்சி ஒன்றியங்களின் வாயிலாக செயல்படுத்தப்படும் நீர் வழங்கல் திட்டங்களை திட்டமிட்டு செயல்படுத்தல.

18. கட்டணக் கழிப்பிடங்களை கட்டுவதற்கு ஊராட்சிகளுக்கு உதவியளித்தல் மற்றும் செயல்படுத்துதல்.

19. மைய ஊரக துப்புரவு திட்டத்திற்கு திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்தல்.

20. சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்ட இணைப்புச் செயலாக்கத்திற்கு திட்டமிடுதல் மற்றும் உதவி செய்தல்.

21. மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்புத் திட்டத்தின் மீதான செயல் முறை விளக்கத்தேசிய திட்டத்திற்கு திட்டமிட்டு செயல்படுத்துதல்.

## மாவட்ட ஊராட்சி

1. மாவட்ட அளவில் வறுமை ஒழிப்பு திட்டங்களுக்கான மாவட்டத்திற்கென திட்டமிடுதல்.

2. கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியம் அளவில் திட்டமிடுதலில் தொழில் நுட்ப உதவி வழங்கல் மேலும் பணிகளை கவனித்து மதிப்பீடு செய்தல்.

3. வறுமை ஒழிப்பு திட்டங்களை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல்.

4. வறட்சிக்கு இலக்காகும் பகுதியில் செயல்படுத்தப்படும் திட்டத்தை பார்வையிடல் மற்றும் ஆய்வு செய்தல்.

5. சுய வேலை வாய்ப்பில், ஊரக இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தை ஆய்வு மற்றும் மேற்பார்வையிடுதல்.

6. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் மேற்பார்வையிடுதல்.

7. ஊரகப் பகுதிகளில் மகளிர் மற்றம் குழந்தை மேம்பாடு திட்டக்குழுக்களை மேற்பார்வையிடல் மற்றும் ஆய்வு செய்தல்.

8. பரவலாக்கப்பட்ட திட்டத்திற்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு உதவியளித்தல், ஆய்வு மற்றும் மேற்பார்வையிடுதல்.

9. ஜவகர் வேலை வாய்ப்பு திட்டததை ஆய்வு செய்தல் மற்றும் மேற்பார்வையிடுதல்.

10. தெரிவு செய்யப்பட்ட பின் தங்கிய மாவட்டங்களில் சிறப்பு முனைப்பிலான ஜவகர் வேலை வாய்ப்பு திட்டங்களை செயல்படுத்துதல், ஆய்வு மற்றும் மேற்பார்வையிடுதல்.

11. பத்தாவது நிதிக்குழுப் பரிந்துரைகளின் கீழ் உள்ளாட்சி மன்றங்களுக்கான மானியங்கள் சார்ந்த திட்டங்களை ஆய்வு செய்தல் மேற்பார்வையிடுதல்.

12. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தை ஆய்வு செய்தல் மற்றும் மேற்பார்வையிடுதல்.

13. மில்லியன் கிணறுகள் தோண்டும் திட்டத்தை ஆய்வு செய்தல் மற்றும் மேற்பார்வையிடுதல்.

14. உள்ளாட்சி மன்றங்களால் மேற்கொள்ளப்படும் உள்கட்டமைப்புகள் மேம்பாடு திட்டத்தை ஆய்வு செய்தல் மற்றும் மேற்பார்வையிடுதல்.

15. வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தை மேற்பார்வையிடுதல்.

16. நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டுதல் ஆகியவற்றை மேற்பார்வையிடுதல், மற்றும் ஆய்வு செய்தல்.

17. உள்ளாட்சி மன்றங்களுக்குச் சமூகக் கல்வி மானியம் சார்ந்த திட்டத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தல்.

18. ஊராட்சி ஒன்றியங்களின் வாயிலாகக் கால்நடை பராமரிப்புத் திட்டங்களைச் செயற்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல்.

19. ஆசிரியர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியம் அளித்தல் அவற்றை ஆய்வு செய்து மேற்பார்வையிடுதல்.

20. டானிடா உதவியுடன் கடலூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக துப்புரவு மற்றும் நீர் வழங்கல் திட்டத்தை ஆய்வு செய்து மேற்பார்வையிடுதல்.

21. ஊராட்சி ஒன்றியங்களின் வாயிலாகச் செயற்படுத்தப்படும் நீர் வழங்கு திட்டங்களை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல்.

22. கட்டண கழிப்பிடங்களை கட்டுவதற்கு ஊராட்சிகளுக்கு உதவியளித்தல் மற்றும் ஆய்வு செய்து மேற்பார்வையிடுதல்.

23. மைய ஊரக துப்புரவுத் திட்டத்தை மேற்பார்வையிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

24. சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ், பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்ட இணைப்பு செயலாக்கத்திற்கு உதவி செய்தல், மேற்பார்வையிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

25. மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சமுதாய வானொலிப் பெட்டி வழங்கும் திட்டத்தை மேற்பார்வையிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

26. கல்ராயன், ஜவ்வாது மற்றும் ஏலகிரி குன்றுகளில் மலைவாழ் மக்கள் வட்டார தொகுதிகளை அமைத்தல், ஆய்வு செய்து மேற்பார்வையிடுதல்.

27. தனி நபர் மற்றும் சமுதாய நலனுக்காக சாண எரிவாயு கலன்கள் அமைக்கும் திட்டத்தை ஆய்வு செய்து மேற்பார்வையிடுதல்.

28. மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்பு திட்டத்தின் மீதான செயல் முறை விளக்க தேசிய திட்டத்தை ஆய்வு செய்தல் மற்றும் மேற்பார்வையிடுதல்.

# 17. தொடக்கக் மற்றும் இடைநிலைப் பள்ளிகள் உள்ளடங்களாக கல்வி.

கல்வி என்பது மனித சமுதாயத்தை மேம்படுத்தும் ஓர் கருவியாக உள்ளது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த செயல்பாடுகளின்பால் தனிக்கவனம் செலுத்துவது இன்றியமையாததாகிறது. இது குறித்து பள்ளிக்கூட கட்டிடம், கழிப்பறைகள் ஆகியவற்றை பழுதுபார்த்தல், பராமரிப்பு செய்தல், குடிநீர் வசதி செய்து தருதல், பள்ளிகளை பார்வையிட்டு உதவித் தொடக்க கல்வி அலுவலர்களுக்கு அறிக்கை அனுப்பவும், படிப்பகங்கள் திறக்கவும் கிராம ஊராட்சிகளுக்கு, அரசாணை எண்.248, பள்ளிக் கல்வித் துறை, நாள் 11.6.97-ல் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்காண் பணிகளை கவனித்து, அறிக்கை அனுப்புவதற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மற்றும் மாவட்ட

ஊராட்சிகளுக்கும் அதிகாரம் அரசு ஆணை எண்.75, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 14.3.97 மற்றும் அரசாணை எண்.248, பள்ளிக் கல்வித் துறை, நாள் 11.6.97-ன்படி முறையே பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஏற்கனவே வழங்கப்பட்ட அதிகாரங்களை பரிசீலிக்கையில், இக்குழுவின் பல உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்கையில் உள்ளாட்சி அமைப்புக்கள் வெற்றிகரமாக செயல்படும் மாநிலங்களான மேற்கு வங்காளம், கேரளா போன்றவற்றில் கல்வி சார்ந்த பொருட்கள் உள்ளாட்சி அமைப்புக்களிடமே உள்ளது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரம் தரும் பொருட்டு அரசு விளையும் இத்தருணத்தில் கல்வி சார்ந்த பொருட்களை ஒட்டு மொத்தமாக இல்லாவிடினும், படிப்படியாக, ஐந்தாண்டு காலக்கட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றம் செய்ய அரசு தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதனடிப்படையில் கீழ்கண்ட இனங்களில் இக்குழு பரிந்துரைக்கிறது.

## கிராம ஊராட்சிகள்

1. புதிய பள்ளிகளைத் தொடங்குதல் மற்றும் கல்வி வசதிகளை அளித்தலில் உதவி செய்தல்.

2. பள்ளிச் சிறுவர்களின் கல்வித் தரத்தினை மதிப்பிடுவதற்கு கிராம ஊராட்சிகள் ஆய்வு மேற்கொள்ளலாம்.

3. பள்ளிச் செல்ல உரிய வயது வந்த சிறுவர்கள் அனைவரையும் பள்ளியில் சேர்க்கும் பொருட்டு கிராம அளவில் பள்ளி நிர்வாகிகளுடன் சேர்ந்து விழிப்புணர்வு நடவடிக்கைகள் எடுக்கலாம்.

4. கிராம ஊராட்சியிலுள்ள பள்ளியை ஆரம்பப் நிலைப்பள்ளி அல்லது இடைநிலைப் பள்ளியாக உயர்த்துவதற்குத் தேவையான பிரேரனையை ஊராட்சி ஒன்றியத்திற்கு பரிந்துரைத்தல்.
5. சிறப்பு பள்ளிகள்/உள்ளுறை பள்ளிகள் மற்றும் விடுதிகள் திறப்பதற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குப் பரிந்துரைத்தல்.

6. பள்ளி வரைபடம் தயாரிப்பதில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உதவி செய்தல்.

7. சிறார்கள் படிப்பை இடையில் நிறுத்துவதைத் தவிர்த்து, குழந்தைகளைத் தொடர்ந்து பள்ளிகளுக்கு அனுப்ப பெற்றோர்களுக்கு அறிவுறுத்துதல்.

8. மாநில/மைய அரசின் ஆதரவு பெற்ற மாணவர் நலத் திட்டஙகளைச் செயல்படுத்துதல். மேலும் கற்பதற்கு உதவும் பொருட்கள், புத்தகங்கள், சீருடைகள் இலவச காலணிகளை மாணவர்களுக்கு வழங்க உதவுதல்.

9. கரும்பலகை இயக்கம், மாவட்ட தொடக்க கல்வி திட்டங்கள் மற்றும் இதர திட்ட முறைகளை செயல்படுத்த உதவுதல்.

10. கிராமப்புறங்களில் கல்வி கட்டுமான உள்ளமைப்புகளை நிறுவுதல்.

11.பள்ளி நிருவாகம், ஊராட்சி தலைவரை தலைவராகவும், தொகுதி உறுப்பினர்கள், தொடக்க கல்வி, ஆதாரப் பள்ளி தலைமை ஆசிரியர்/ஆசிரியை ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட 'ஊராட்சி கல்வி குழு' ஒன்றை உருவாக்கி கிராம அளவில் கல்வியை வளர்த்தல்.

12. 6முதல்11 வயதுள்ள மாணவர்களை கூடுதலாக பள்ளியில் சேர்ப்பதற்கு பயனாளிகளை கண்டறிதல் மற்றும் மேற்பார்வையிடல்.

13. 11முதல்14 வயதுள்ள மாணவர்களைக் கூடுதலாக சேர்பதற்கான முயற்சிகள் எடுத்தல் மற்றும் மேற்பார்வையிடல்.

14. ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்ககு தேவையான கட்டிடங்களை, சிறப்பு நல நிதியிலிருந்து கட்டுதல் மற்றும் செயல்படுத்துதல்.

15. அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுதல் ம்ற்றும் அதற்கான போதிய இடங்களை கண்டறிதல்.

16. மாவட்ட தொடக்க கல்வி திட்டத்தை மேற்பார்வையிடுதல்.

17. பள்ளி செல்லும் சிறார்களுக்கு இலவசமாக காலணிகள் வழங்குதல் மற்றும் அதற்கான குழந்தைகளைக் கண்டறிதல்.

18. கிராம அளவில் திட்டமிடுவதின் மூலம் 100 சதவீதம் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான திட்டத்திற்கு பயனாளிகளை கண்டறிதல் மற்றும் மேற்பார்வையிடல்.

19. தொடக்க மற்றும் ஆரம்ப பள்ளிகளுக்கு தேவையான அளவு விளையாட்டுப் பொருட்கள், மின்விசை வழங்க திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல்.

20. தொடக்கப் பள்ளிகளுக்கு ஒலிநாடா பெட்டி வழங்குதல் மற்றும் மேற்பார்வையிடல்.

21. மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் வழங்குதல், ஆதிதிராவிடர்களுக்கு சிறப்பு திட்டத்திற்கு பயனாளிகளை கண்டறிதல் மற்றும் அறிவுரை வழங்குதல்.

22. மாணவ மாணவியருக்கு பள்ளி சீருடை வழங்கல்.

23. நடுநிலைப் பள்ளிகளுக்கு தமிழாசிரியர்கள் பதவியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதன் செயலாக்கத்தினை மேற்பார்வையிடுதல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. பள்ளியின் அமைவிடத்தை கண்டறிதல், புதிய பள்ளிகளை திறப்பதற்கும், மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கும் தேவையான முடிவுகள் எடுக்கவும், நிறுவகிக்கவும் உதவுதல்.

2. தொடக்க, ஆதார பள்ளிகளின் செயல்பாடுகளை தொடர்ந்து ஆய்வு செய்தல்.

3. கல்வி கற்பதற்காக வழங்கப்படும் பொருட்களான எழுது பலகை மற்றும் இதரப் பொருட்கள் வழங்குவதை தொடர்ந்து ஒருங்கிணைத்தல்.

4. படிப்பை இடையில் நிறுத்துவோரின் எண்ணிக்கையை குறைக்க தொடர் இயக்கம் நடத்துதல்.

5. ஆசிரியர்களின் வருகை, பள்ளிகளின் திறமையான செயல்பாடு குறித்து கிராம ஊராட்சி அனுப்பும் முறையீட்டு அறிக்கையை ஆய்வு செய்தல்.

6. கட்டுமானத்திற்காக கிராம ஊராட்சிகளுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதியுதவி ஆதரவுக்கு வழிவகை செய்தல்.

7 பள்ளிகளின் நடவடிக்கைகளை கவனிக்க ஊ்ராட்சி ஒன்றிய அளவில் கல்விக்குழு ஒன்றை அமைத்தல்.

8. 6முதல்11 மற்றும் 11முதல்14 வயதுள்ள மாணவர்களை கூடுதலாகச் சேர்த்தல், அதற்கான செயல்பாடுகளை ஆய்வு செய்தல்.

9. நடுநிலைப் பள்ளிகளுக்கான பட்டதாரி தலைமையாசிரியர்களை ஆய்வு செய்து போதிய அறிவுரைகளை வழங்குதல்.

10. ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகள் ஊரகப் பகுதிகளில் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி ஆகியவற்றுக்கு தேவையான கட்டிடங்களை, சிறப்பு நல நிதியிலிருந்து கட்டுதல் மற்றும் மேற்பார்வையிடுதல்.

11. மாவட்ட தொடக்க கல்வி திட்டம், கிராம அளவில் திட்டமிடுவதன் மூலம் 100 சதவீதம் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான திட்டம், கரும்பலகை திட்டம் ஆகியவற்றை செயல்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்.

12.தொடக்க ஆரம்ப பள்ளிகளுக்கு குறைந்தபட்சமான அறைகள், விளையாட்டுப் பொருள்கள், மின்விசை ஆகியவை வழங்கப்பட அறிவுரை வழங்கல் மற்றும் மேற்பார்வையிடல்.

13.தொடக்க பள்ளிகளுக்கு ஒலிநாடா பெட்டி வழங்கல், மாணவர்களுக்கு பாடபுத்தகங்கள் வழங்குதல், ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு திட்டம், மாணவ, மாணவியருக்கு பள்ளிச் சீருடை வழங்கல், நடுநிலைப் பள்ளிகளுக்கு தமிழாசிரியர்கள் பதவியிடங்களை நிரப்ப அறிவுரை வழங்கல், யுனிசெப் நிதியுதவியுடன் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான நிறுவனம் செயற்படுத்தும் தொடக்க கல்வி திட்டத்திற்கு உதவுதல் மற்றும் இவற்றை ஆய்வு செய்தல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. ஆரம்ப கல்வியை விரிவுபடுத்தி அதன் தரத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் கல்வி மேம்பாட்டுக்கு திட்டமிட உதவி செய்தல்

2. காலமுறைப்படி முன்னேற்றத்தை மறு ஆய்வு செய்ய மாவட்ட அளவில் கல்வி மாநாட்டுக்கு ஏற்பாடு செய்தல்.

3. தேவைப்படும் பள்ளிகள் மற்றும் ஆசிரியர்கள் பற்றி மதிப்பீடு செய்த பின்னர், தொடக்க நிலைப் பள்ளிகளுக்கான மாவட்ட அளவிலான திட்டத்தை தயாரித்தல்.

4. கல்வியில்லாதவர்களுக்கு கல்வியை புகட்ட அரசுக்கு நடைமுறைத் திறன்கள், கருத்துரைகள் பற்றி அறிவுரை வழங்கல்.

5. கல்விக்கான முதலீட்டுப் பணிகளுக்கும், கற்பிப்பதற்கு தேவையான தளவாடங்களுக்கும் மாவட்ட அளவில் வள ஆதாரங்களை உயர்த்துவதற்கு கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு அறிவுரை வழங்குதல்.

6. கல்வி சார்ந்த பல்வேறு திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

7. பத்தாம் நிதிக்குழு பரிந்துரையின்படி கல்வி நிர்வாகத் தரத்தை உயர்த்துதல் மற்றும் ஆய்வு செய்தல்.

# 18.தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் தொழில் கல்வி

தொழில் நுட்ப பயிற்சி மற்றும் தொழில் கல்வி சார்ந்த அரசின் திட்டங்களின் செயல்பாட்டில் கிராம ஊராட்சிகள் திறம்பட பங்கேற்க முடியும். அரசாணை (நிலை) எண்.75, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 14.3.97-ன் மூலம் (அ) குறிப்பிட்ட தொழில்களிலும், கலைகளிலும் பயிற்சிக்கான தேவைகளைக் கண்டறிதல், தொழில் நுட்ப பயிற்சி நிலையங்கள் பயிற்சிகள் பற்றிய செய்திகளை பரப்புதல் ஆகியவற்றினை ஊராட்சிகளுக்கும், (ஆ)

தொழிற் பயிற்சிப் பள்ளிகள் தோற்றுவிப்பதற்கான தேவைகளை மதிப்பிடுதல் மற்றும் பரிந்துரைத்தல் ஆகிய பணிகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கும், (இ) தொழில் நுட்ப பணியாளர்களுக்கான திட்டம் தயாரித்தல், தனியார் மற்றும் அரசினுடைய தொழிற் பயிற்சி நிலையங்கள் செயல்படுத்துதல் மாவட்ட ஊராட்சிகளுக்கும் வழங்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இப்பொருள் குறித்து மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் அதிகாரம் மற்றும் பொறுப்புகளை வழங்க ஆராய்ந்த இக்குழு கீழ்க்கண்ட பரிந்துரைகளைச் செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்

1. தற்போதைய கல்வி அமைப்பில் தொழிற்கல்வி என்பது இன்றியமையாத ஒன்ருக இருக்கும் சூழலில், தொழில்நுட்பம் மற்றும் தொழிற் பயிற்சிகளுக்குப் பொருத்தமான ஊரக மனித வள ஆற்றலை கண்டறிய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2. தகுதி வாய்ந்த மாணவர்களை தொழிற்கல்வி பாடத்திட்டங்களில் சேர்ப்பதற்கு அவர்களை ஊக்குவிக்கும் வகைகளில் தொழிற்கல்வியின் அவசியத்தை அவர்கள் உணரும் வகையில் எடுத்துரைக்க வழிவகைகளை செய்தல்.

3. மக்களுக்கு உதவும் வகையில் தேவையான இடங்களை தேர்ந்தெடுத்து, தொழில்பள்ளிகள் மற்றும் தொழில்பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றை நிறுவுவதற்கு ஏதுவாக சூழ்நிலையை உருவாக்கி அவைகளை நிறுவுதல்.

4. அரசு தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையம் இவற்றை நிறுவிட உதவிபுரியும் வகையில் சூழ்நிலைகளை உணர்ந்து மக்களின் எதிர்பார்ப்பை நனவாக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

5. ஊராட்சிகளில் உள்ள மேல்நிலை பள்ளிகளில் அவர்களின் பாடங்களுடன் வாழ்க்கைக்கான தொழிற்கல்வி பாடத்திட்டங்களையும் சேர்த்து அவர்கள் கற்கும் வகையில் போதிய ஏற்பாடுகளை தொடங்கிவைக்க முறையான பரிந்துரைகளை செய்தல்.

6. மகளிருக்கு இதர பாடத்திட்டங்களுடன் சேர்த்து வாழ்க்கைக்கு உடனடியாக

உதவும் வகையில் புதிய தொழிற்பள்ளிகளைத் துவக்குவதற்கு ஏதுவாக போதிய இடங்களை தெரிவுசெய்து மேற்படி பள்ளிகளை துவக்குவதற்கு தேவையான அறிவுரைகளை சரியான தருணங்களில் வழங்குதல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. ஊரக இளைஞர்களுக்கு சாதாரண கல்வியுடன் தொழில்நுட்ப பயிற்சியளிப்பதற்கு உதவும் வகையில் தொழில் நுட்பக்கூடங்களை உருவாக்கி அவர்கள் பயிற்சிப்பெற ஆவனசெய்தல்.

2. தொழிற்பயிற்சி பாடங்களில் தகுதிவாய்ந்த ஊரக இளைஞர்களைச் சேர்ப்பதற்கு உதவுதல்.

3. தொழில் மற்றும் தொழில்துறை நிறுவனங்களுக்கு அவ்வப்போது தேவைப்படும் தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற மனித ஆற்றலைப் பெறுவதற்குத் தேவைப்படும் திட்டங்களை தயாரித்தல்.

4. மக்களுக்கு உதவும் வகையில் தேவையான இடங்களை தேர்ந்தெடுத்து, தொழில் பள்ளிகள் மற்றும் தொழில்பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றை நிறுவுவதற்கு ஏதுவாக சூழ்நிலையை உருவாக்கி அவைகளை நிறுவுதல்.

5. மேல்நிலை பள்ளிகள் பங்கேற்க ஏதுவாக தேவையான வாழ்க்கை தொழிற்கல்விக்கான தொழில்கள் மற்றும் பாடங்களை குறிப்பிடுதல்.

6. ஊராட்சிப்பகுதியில் நடைபெற்றுவரும் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பள்ளிகளில் கட்டாயமாக இடம்பெறக்கூடிய பகுதி மற்றும் கைத்தொழில்களுக்கான பயிற்சி கல்வி பற்றி விவரமாக குறிப்பிடுதல்.

7. தொழிற்பயிற்சிப் பள்ளிகளை திறம்பட நடத்த ஏதுவாக திட்டமிடுதல்.

8. தற்போதுள்ள தொழிற்பயிற்சிப் பள்ளிகளை நவீனமயமாக்க தகுந்த நிபுணர்களின் உதவியை நாடி அதற்குத்தகுந்தாற்போல் திட்டமிடுதல்.

9. மகளிருக்கு இதர பாடத்திட்டங்களுடன் சேர்த்து வாழ்க்கைக்கு உடனடியாக உதவும் வகையில் புதிய தொழிற்பயிற்சிப் பள்ளிகளைத் துவக்குவதற்கு ஏதுவாக போதிய இடக்ளை தெரிவுசெய்து மேற்படி பள்ளிகளை துவக்குவதற்கு தேவையான அறிவுரைகளை சரியான தருணங்களில் வழங்குவதோடு, சரியான பயனாளிகளைத் தெரிவுசெய்தல்.

10.மக்களுக்கு பயன்தரும் வகையில் உள்ளூர் தொழில்களை முறையாக வகைப்படுத்தி பயன்பெறும் நபர்களை முறைப்படி கண்டறிதல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. தற்போதுள்ள தொழிற்பயிற்சிப் பள்ளிகளை நவீன மயமாக்க தகுந்த நிபுணர்களின் உதவியை நாடி அதற்குத் தகுந்தாற்போல் திட்டமிடுவதுடன் மேற்பார்வையிடுதல்.

2. மகளிருக்கு இதர பாடத்திட்டங்களுடன் சேர்த்து வாழ்க்கைக்கு உடனடியாக உதவும் வகையில் புதிய தொழிற்பயிற்சிப் பள்ளிகளைத் துவக்குவதற்கு ஏதுவாக போதிய இடங்களை தெரிவுசெய்து மேற்படி பள்ளிகளை துவக்குவதற்கு உரியத் திட்டங்களை வரைந்து வழங்குவதோடு, அவ்வப்போது தகுந்த மேற்பார்வையிட்டு தகுந்த அறிவுரைகளை வழங்குதல்.

3. மக்களுக்கு பயன்தரும் வகையில் தொழில்களை முறையாக வகைப்படுத்தி போதிய வசதிகள் பெற திட்டங்கள் வரைந்து வழங்குவதோடு, மேற்பார்வையிடுதல்.

# 19. வயது வந்தோர் மற்றும் முறை சாரா கல்வி கிராம ஊராட்சிகள்.

முதியோர் கல்வி மற்றும் முறை சாராக்கல்வி சம்பந்தமான பொறுப்புகளும் கடமைகளும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குவது குறித்து ஆராய்ந்த குழு கீழ்க்கண்ட பரிந்துரைகளைச் செய்கின்றது.

## கிராம ஊராட்சிகள்

1. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி மையங்களை தொடங்கி முறைசாராக் கல்வித் திட்டம் திறம்படச் செயல்படுகின்றனவா என்பதனை உறுதி செய்ய மேற்பார்வையிடுதல் மற்றும் பயனாளிகளை கண்டறிதல்.
2. இடையில் நிறுத்தி விட்டவர்களையும் (6 வயது முதல் 11 வயது வரை) கல்வி பயிலத் தொடங்காதவர்களையும் முழு அளவில் சேர்பதற்காக இயக்கம் நடத்துதல்.
3. அமைப்பாளர்களையும் பள்ளிசாராக் கல்வி வட்டங்கள், மையங்கள் ஆகியவைகளை கண்டறிதல், படிப்பறிவற்ற சிறார்கள் கல்வி மையங்களுக்கு அனுப்புவதற்காக பெற்றோர்களுக்கு தகுந்த ஆலோசனைகள் வழங்கல்.
4. கல்வி உள்ளமைப்பு மற்றும் நிர்வாக சம்பந்தமாக ஊராட்சி குழு வாயிலாக பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி மையங்களின் கடடுமான கட்டிட உள் கட்டமைப்பு அமைப்புகளை பராமரித்தல்.
5. தொடர் கல்வி இயக்கத்தின் கீழ் உள்ள பள்ளிசாராக் கல்வி மையங்கள், மற்றும் மற்றும் கிராம நூலகங்களையும் பேணுதல் மற்றும் பயனாளிகளை கண்டறிதல்.
6. நலப் பணியாளர்கள் வாயிலாக வயதுவந்தோர் எழுத்தறிவுத் திட்டத்தைச் செயல்படுத்தல் மற்றும் பயனாளிகளைக் கண்டறிதல்.
7. டானிடா உதவிபுரியும் மீனவர்களுக்கான வயது வந்தோர் எழுத்தறிவு மக்கள் கல்வி திட்டத்திற்கு பயனாளிகளைக் கண்டறிதல்.
8. தொடர்கல்விக்கான பயனாளிகளை கண்டறிதல்.
9. எழுத்தறிவு பெற்றவருக்கான மேல்நிலை கல்வி திட்டத்திற்கு பயனாளிகளை கண்டறிதல்.
10. அறிவொளி இயக்கம் வாயிலாகக் கல்வி அறியாமையை முழுவதுமாக அகற்றுவதற்கான சிறப்பத் திட்டம் மற்றும் பழங்குடியினர் பகுதியில் வயது வந்தோர் கல்வியறிவுத் திட்டத்திற்கு பயனாளிகளைக் கண்டறிதல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. பள்ளிசாரா கல்வி மையங்கள் தொடர்கல்வி நிலையங்களை நிருவகித்தல் மற்றும் பள்ளிகளின் செயல்பாட்டினை மேற்பார்வையிடுதல்.
2. தொடர்கல்வி நிறுவனங்களின் விரிவான அமைப்பை வலுப்புடுத்துதல்.

3. ஊராட்சிகள் வாயிலாக பள்ளிசார கல்வி மையங்களுக்கு தொடர் கல்வி நிலையங்களுக்கு ஆற்றல் மற்றும் கற்பித்தலுக்கான பொருட்களை கொள்முதல் செய்து பிரித்து அளித்தல்.
4. பள்ளி சாராக் கல்வி மையங்களின் தொடர் கல்வி நிலையங்கள் மற்றும் கிராமபுற நூலகங்களின் செயற்பாட்டை மேற்பார்வையிடல்.
5. பள்ளிசார மற்றும் வயதுவந்தோர் கல்வி மையக் கூடங்களின் கட்டுமானத்தை மேற்கொள்வதுடன் பராமரிப்பிற்காக அதனை ஊராட்சிகளுக்கு மாற்றம் செய்தல்.
6. முழு நேர எழுத்தறிவு இயக்கத்திட்டங்கள் உள்பட வட்டார நிலையிலான பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி மேற்பார்வையாளர்கள், உதவிதிட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரின் பணிகளை மேற்பார்வையிடுதல், தன்னார்வ பயிற்றுநர்கள், ஆசிரியர் பயிற்சியளிப்பவர்கள், அமைப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள் முதலானோர்களுக்கு நேரடியாக அல்லது ஊராட்சி மூலமாக மதிப்பூதியம வழங்கல்.
7. இத்திட்டங்களின் செயலாக்கத்தை கல்வி மீதான நிலைக்குழு வாயிலாகப் காலமுறைப்படி மறு ஆய்வு மேற்கொள்ளல்.
8. நலப் பணியாளர் வாயிலாக வயது வந்தோர் எழுத்தறிவு திட்டம் மற்றும் டானிடா உதவி புரியும் மீனவர்களுக்கான கல்வித் திட்டம் ஆகியவற்றை செயற்படுத்தல், மேற்பார்வையிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.
9. தொடர் கல்வி மையம், பள்ளி, பள்ளி சாராக் கல்வி பள்ளி நிலையம், எழுத்தறிவு பெற்றவருக்கான மேல்நிலைக்கல்வி திட்டம் அறிவொளி இயக்கம் மற்றும் பழங்குடியினர் பகுதியிலுள்ள வயது வந்தோர் கல்வி அறிவுத்திட்டம் ஆகியவற்றை மேற்பார்வையிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்டத்திற்கு திட்டமிடுதலும், அவற்றை மேற்பார்வையிடுதலும்.
2. முழு அளவில் கல்வி அறிவை பெறுவோர்க்கு தற்போதைய நிலை அறிக்கையையும், எதிர்கால திட்டங்களையும் தயாரித்தல். மேலும் கல்வியின் முன்னேற்றத்தையும், கல்வி பரப்ப ஆதரவு திரட்டினதையும் மறு ஆய்வு செய்வதற்குக் காலமுறைபடி மாநாடுகளுக்கு ஏற்பாடு செய்தல்.

3. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்ட செயலாக்கத்தை கல்வி மீதான அதன் நிலைக்குழுமம் அல்லது பிறவழிகளின் வாயிலாக மேற்பார்வையிட்டு, மதிப்பீடு செய்தல் மற்றும் ஊராட்சிகளிடமிருந்தும், ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்தும் பெறப்படும் அறிக்கைகளின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுத்தல்.

# 20. நூலகங்கள்

மாநிலத் திட்டக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகார ஒப்படைப்பு செய்து அரசாணை (நிலை) எண்.75, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 14.3.97-ல் ஆணையிடப்பட்டது. இவ்வாணையில் பொது நூலகங்கள் தொடர்பாக மாவட்ட ஊராட்சியின் உறுப்பினர் ஒருவரை மாவட்ட நூலக ஆணைக்குழுவுக்கு தேர்ந்தெடுத்து அனுப்ப ஆணையிடப்பட்டது. இதன்படி அரசாணை (நிலை) எண்.248, பள்ளிக் கல்வித் துறை, நாள் 11.6.97-ல் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஒருவரை மாவட்ட நூலக ஆணைக்குழு உறுப்பினராகச் சேர்க்க தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948-க்கு திருத்தம் கொண்டுவர ஆணையிடப்பட்டது. மேலும் உள்ளாட்சி அமைப்புகள் படிப்பகங்கள் (Reading Rooms) திறக்கலாம் என்றும், நூலகங்களை திறப்பது மற்றும் பராமரிப்பு செய்வது, பொது நூலகத் துறையின் பொறுப்பில் இருக்கும் என்றும், அரசாணை எண்.248, பள்ளிக் கல்வித் துறை, நாள் 11.6.97-ல் ஆணையிடப்பட்டுள்ளது. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் பொறுப்புகள் வழங்குவது குறித்து ஆராய்ந்த குழு கீழ்கண்ட பரிந்துரைகளை செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்

1. கிராமப் பகுதிகளில் உள்ளூர் நூலக ஆணைக்குழு நூலகங்களை அமைத்து அதனை பொது மக்களின் நலனுக்கு ஏற்றவாறு செயல்படுத்துதல்.

2. வட்டார நூலக ஆணைக்குழுக்களின் மூலம் புதிய நூலகங்களைத் திறப்பதற்கான மானியத்தைப் பெற சம்மந்தப்பட்ட அலுவலர்களைத் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்தல்.

3. படிப்பகங்கள் மற்றும் கிளை நூலகங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டுதல்.

4. கிளை நூலகங்களை மேற்பார்வையிடுதல் மற்றும் அவைகள் சரிவர இயங்க ஆலோசனை வழங்குதல்.

5. கிளை நூலகங்களில் பணிபுரியும் பணியாளர்களின் முறைகேடுகளை சம்பந்தப்பட்ட அலுவலகங்களின் நடவடிக்கைக்கு கொண்டு செல்லுதல்.

6. கிராமங்களில் உள்ள கிளை நூலகங்களை சரியாக பயன்படுத்த வாசகர் வட்டம் மற்றும் நூல் அறிமுக கூட்டங்கள் நடத்துதல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. அந்தந்த ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தேவையான இடங்களில் மக்களுக்கு உதவும் வகையில் வட்டார நூலகங்களைத் திறத்தல்.

2. வட்டார நூலக ஆணைக் குழுக்களின் மூலம் புதிய நூலகங்களை ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் திறப்பதற்கு ஏதுவாக மாவட்ட நூலகக் குழுவிடமிருந்து மானியம் பெற நடவடிக்கைகள் எடுத்தல்.

3. நூலகங்களில் ஏதேனும் குறைகள் இருக்கின்றனவா என்பதைத் தெரிந்துக்கொள்ள சம்பந்தப்பட்ட நூலகங்களை ஆய்வு செய்தல்.

4. நலிவடைந்த வட்டார நூலகங்களுக்கு தேவைப்படும் நூல்களை வாங்குவதற்கு நிதி திரட்டும் வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

5. வட்டார கிளை நூலகங்களை மேற்பார்வை செய்தல் மற்றும் அவைகள் சரிவர இயங்க ஆலோசனை வழங்குதல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. மாவட்டத்தில் வாழும் மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த அவர்களிடையே விழிப்புணர்ச்சியை உண்டாக்க இயக்கம் நடத்துதல் .

2. அனைவருக்கும் எழுத்தறிவு, முறைசாராக் கல்வி, மற்றும் முதியோர் கல்வி போன்ற திட்டங்களை நூலகப் பணிகளோடு ஒருங்கிணைத்துச் செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

3. நூலகத்தின் பல்வேறு செயல்பாடுகளை முறைப்படி ஆய்வு செய்து, அத்துடன், ஊராட்சிகளுக்கென்று உள்ள பல்வேறு நூலக மானியங்களை அரசிடமிருந்து பெறுவதற்கு ஏதுவாக தேவையான வசதிகளையும், வழிமுறைகளையும் உரிய நேரத்தில் பெற்றுத்தர ஆவன செய்தல்.

4. வட்டார நூலக ஆணைக் குழுக்களின் மூலம் புதிய நூலகங்களைத் திறப்பதற்கு ஏதுவாக மானியங்கள் பெற தேவையான அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் மாவட்ட ஊராட்சிகள் வழங்கலாம். இதற்கு தேவையான திட்டங்களை தீட்டி ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

5. போதுமான அடிப்படை மற்றும் ஆதார வசதிகள் அல்லாத வட்டார நூலக ஆணைக் குழுக்களை மேம்பாடு அடைய தகுந்த முயற்சிகளை மேற்கொள்வதோடு, வருங்காலத்தின் தேவைகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து திட்டமிடவும், நடைபெற்ற செயல்பாடுகளை ஆய்வு செய்யவும் மாவட்ட ஊராட்சிகள் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.

6. மாவட்ட தலைநகரங்களில் இயங்கிவரும் மாவட்ட நூலகங்களை நிர்வகித்தல்.

# 21. பண்பாடுகள்

பண்பாடுகள் என்பது மனித சமுதாயத்தில் வேரூன்றிவிட்ட ஒன்று என்றாலும் இதனை பேணிக் காப்பது அரசின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும். நமது பராம்பரிய பண்பாடுகளை பேணிக் காக்கும் பொருட்டு, அரசாணை (நிலை) எண்.75, ஊரக வளர்ச்சி(சி1)த் துறை, நாள் 29.9.97-ல், (அ) தற்போது நலிந்த நிலையிலுள்ள சிறந்த கலைஞர்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தினை மேற்பார்வையிடுதல், புதிய கலைப் பள்ளிகளுக்கு ஊக்கமளித்தல் போன்ற திட்டப்பணிகளை மேற்பார்வை செய்யவும், விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு நிதியுதவி செய்தல் மற்றும் உரிய தகுதிவாய்ந்த பயனாளிகளைக் கண்டறியும் பொறுப்புக்களை

கிராம ஊராட்சிகளுக்கும், (ஆ) கரந்தை தமிழ்ச் சங்கத்திற்கு உதவியளிக்கும் திட்டம், ஜவகர் சிறுவர் இல்லத்திற்கு உதவியளிக்கும் திட்டம், மாவட்ட கலைக் கூடங்களையும், கலை மன்றங்களையும் நிறுவும் திட்டம், இசைப் பள்ளிகளை நிறுவுதல் போன்ற திட்டப் பணிகளை ஆய்வு செய்யும் பொறுப்புக்கள் மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பண்பாடுகள் சார்ந்த திட்டப்பணிகளில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்து கீழ்கண்ட இனங்களில் குழு பரிந்துரை செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்.

1. கிராமப்புறங்களில் நடைமுறையில் உள்ள விளையாட்டுகளை அடிக்கடி நடத்துவதோடு, திருவிழாக்களையும், அதோடு தொடர்புடைய பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளையும் நடத்த கிராம ஊராட்சிகள் ஆவன செய்தல்.
2. கிராம மக்களை அதிகம் கவரும் இசை, நாட்டுப்புறக் கலைக்குழுக்கள் மற்றும் நாடக / நடன பண்பாட்டுக் குழுக்களை ஏற்படுத்தி, அவற்றை முறையாக ஒருங்கிணைத்து, அதன் மூலம் மக்களிடையே போதுமான கல்வியறிவினையும் அதன் மூலம் விழிப்புணர்வையும் உருவாக்க கிராம ஊராட்சிகள் உதவுதல்.

3. சிறுகுடும்ப கோட்பாட்டின் இன்றியமையாமை, தேசிய ஒருமைப்பாடு மத நல்லிணக்கம், தீண்டாமை ஒழிப்பு, மது விலக்கு போன்றவற்றின் அவசியத்தை வலியிறுத்தி, நம் பண்பாட்டை உயர்ந்தோங்கிட நடவடிக்கைகள் எடுத்தல்.

4. தற்போது நலிந்த நிலையில் வாழும் சிறந்த கலைஞர்களைக் கண்டறிந்து, அரசின் நிதியுதவியை அவர்கள் பெறுவதற்கு ஏதுவாக விவரங்களைத் தொகுத்து, மாவட்ட ஊராட்சி மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

5. விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு நிதியுதவி செய்தல், விளையாட்டு வளாகங்ககளை நிறுவுதல், திறமையான விளையாட்டு வீரர்களை கண்டறிந்து, சம்மந்தப்பட்ட விளையாட்டு அமைப்புகளுக்கு முறைப்படி

தெரிவித்து விளையாட்டுக்களைக் கற்றுக் கொடுக்க தேவையான பயிற்சிகளை ஏற்பாடு செய்ய சம்பந்தப்பட்ட மாவட்ட அளவிலான அலுவலருக்கு பரிந்துரைகள் செய்தல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. கிராம ஊராட்சிகள் மற்றும் உள்ளூர் கலாச்சார நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இவற்றின் உதவியுடன் கலாச்சார விழா மற்றும் விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றை ஊராட்சி ஒன்றிய அளவில் திட்டமிட்டு தேவையான ஏற்பாடுகளை செய்தல்.

2. ஊராட்சி ஒன்றியங்கள், சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளின் உதவியுடன் உள்ளூர் திருவிழாக்கள் நடத்த வேண்டிய ஏற்பாடுகளை செய்தல்.
3. விளையாட்டுக்களையும் கலாச்சார நடவடிக்கைகளையும் கிராம நிலையில் அபிவிருத்தி செய்ய சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளில் உள்ள நிபுணர்களின் அறிவுரைகளுடன் விளையாட்டு வளாகங்கள், நாடக சபாக்கள் போன்ற ஏனைய உள்ளமைப்புகளை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. இயல் இசை நாடக மன்றம், ஓவிய பள்ளிகள் கலைக்குழுக்கள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு ஆணைக்குழு இவைகளின் உதவியுடன் மாவட்டங்களில், ஓவியம் தீட்டுதல் இசை மற்றும் நாடகம் போன்ற போட்டிகள் நடத்துதல், விளையாட்டு பயிற்சி முகாம்கள், கண்காட்சிகள், பந்தயங்கள், குழுப்போட்டி விளையாட்டுகள், உள்ளூர் திருவிழா்க்கள் நடத்துதல், போன்ற நிகழ்ச்சிகளை மாவட்ட ஊராட்சி அளவில் ஏற்பாடு செய்யலாம்.மேற்படி நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு வேண்டிய அனைத்து வழிகாட்டுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு கலைஞர்களை ஊக்குவித்து இதன் தொடர்பான சேவைகளை ஒருங்கிணைத்தல்.

2. கலைஞர்கள், கைவினைஞர்கள், விளையாட்டு வீரர்கள் போன்றவர்களை சிறப்பித்து பரிசளித்தல். மாவட்ட அளவில் ஐந்தாண்டிற்கு ஒருமுறை ஓர் சிறப்பு கருத்தரங்கு நடத்தி அதன் மூலம், மாவட்டத்தில் உள்ள அனைத்து

புராதன கலைகளான, வில்லுப்பாட்டு, மயிலாட்டம், கரகம், சிலம்பாட்டம், இசை, மற்றும் கிராமிய கலைகள் சார்ந்த சிறந்த கலைஞர்களின் முழு விவரங்களைத் தயாரித்து ஓர் பன்முகப் பட்டியலாக பராமரித்தல்.

3. மாவட்ட அளவில், இயல், இசை, நாடகம், ஓவியம், புராதன கலைகளின் கலைஞர்களைப் பற்றிய விவரப் பட்டியல் ஒன்றினை தயாரித்து பராமரித்தல்.

4. கிராம ஊராட்சி அளவில் விளையாட்டு போட்டிகள் நடத்தி அதன் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, திட்டமிட்டு அதற்கு தேவையான அடிப்படை ஆதார வசதிகளை ஊராட்சி ஒன்றியங்கள் செய்து தருதல்.

5. தற்போது நலிந்த நிலையில் வாழும் சிறந்த கலைஞர்களுக்கு அரசின் நிதியுதவியை அவர்கள் பெறுவதற்கு ஏதுவாக விவரங்களை அரசுக்கு பரிந்துரை செய்தல்.

6. புதிய கலைப்பள்ளிகளுக்கு ஊக்கமளித்தல் மற்றும் அதனுள் சிறந்த கலைஞர்களைக் கண்டறிந்து, மேற்படி கலைகள் செம்மையாக அமைந்திட வழிவகைகள் செய்திடல்.

7. மாவட்டங்களில் உள்ள தடகளப் போட்டிகள், பிரபலாமான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் இதர விளையாட்டுகளைக் கண்டறிந்து அதனை ஊக்கப்பாடுத்தும் வகையில் சிறப்பு பயிற்சிகள் நடத்தி, விளையாட்டு - வீரர்களுக்கு பரிசுகள் வழங்கி ஊக்குவித்தல்.

# 22. சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்

கிராமப்புறங்களில் உற்பத்தி செய்யப்படும் வேளாண்மை மற்றும் இதர பொருட்களை ஒட்டுமொத்தமாக விற்பனை செய்யவதற்கு கிராமிய சந்தைகள் வழி வகுக்கின்றன. சுற்றுப்புற பகுதிகளிலுள்ள மக்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை ஒரே இடத்தில் பெறவும் இத்தகைய சந்தைகள் உதவி புரிகின்றன. இவ்வாறு மக்கள் பெருந்திரளாக கூடும் இடங்களான இவை முறைப்படுத்தப்பட்டு கட்டுப்பாட்டிற்குள் வைத்தல் அவசியமாகிறது. மேலும் இதுபோன்ற இடங்களில் சட்டம் ஒழுங்கு, நிலைநாட்டப்பட வேண்டியது

அவசியமாகும். சந்தைகள் மற்றும் கண்காட்சிகளில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் அரசாணை(நிலை) எண்.297, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 29.9.97-ன் மூலம் (அ) பொது அங்காடிகள் மற்றும் அங்காடிகள் திறக்க திட்டமிடுதல், பயனாளிகளைக் கண்டறிதல் மற்றும் திட்ட செயல்பாடுகளைப் பார்வையிட்டு திட்டங்களை செயல்படுத்துதல், ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்தல், தொடக்க கூட்டுறவு அங்காடிகள் திறப்பதில் உதவுதல், ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் எடுத்தல் போன்ற பொறுப்புகளை கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், (ஆ) மேற்கண்ட பொருட்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, அறிவுரைகள் வழங்குதல் ஆகிய பொறுப்புக்கள் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்க ஆராய்ந்த குழு கீழ்கண்ட பரிந்துரைகளைச் செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்

1. கிராம ஊராட்சிகள் தங்கள் பகுதிகளில் உள்ளாட்சி அமைப்பு மற்றும் தனியார் அங்காடிகளை புதிதாக ஏற்படுத்தி நடத்துவதற்குரிய இடங்களை தேர்வு செய்தல்.

2. கிராம ஊராட்சிகளுக்கு சொந்தமான அங்காடி கட்டிடங்களை பராமரிக்க நடவடிக்கைகள் எடுத்தல்.

3. கடைகள், அங்காடிகள், திருவிழாக்கடைகள், திருவிழாக்கள் நடத்துவது போன்றவற்றிற்கான உரிமங்களை வழங்குதல் மற்றும் கட்டணங்களை நிர்ணயித்து, அதனை முறையாக வசூலித்தல்.

4. சந்தைகள், அங்காடிகள் போன்றவற்றை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல். வரையறைகளை மீறி நடப்போர் இருப்பின், அளித்த உரிமத்தை ரத்து செய்து, மேலும் சட்ட மீறல்கள் இருப்பின் தண்டனை மற்றும் அபராதம் விதிப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளல்.

5. கிராம ஊராட்சி அளவில் நடைபெறும் சமுதாய விழாக்கள், வழிபாடுகள் சார்ந்த திருவிழாக்களின்போது சுத்தம் மற்றும் சுகாதாரம் முறையாக பேணப்படும் வகையில், தேவையான சுகாதார நடவடிக்கைகளை எடுத்தல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தினசரி மற்றும் வார சந்தைகளை ஏற்படுத்தி, அவைகளை செயல்பட வைக்க தேவையான நடவடிக்கைகள் எடுத்தல். அதே சமயத்தில், தினசரி மற்றும் வார சந்தைகளுக்கான உரிமங்களை வழங்கி வரி வசூல் செய்தல். இவ்வாறு அமைக்கப்படும் அங்காடிகள் பராமரிக்கும் பொறுப்புக்ககளை ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்க வேண்டும். இவை தவிர, நடத்தப்படும் அங்காடிகளால் சுற்றுபுறச் சூழல் மாசுபடாமலும், மனித சுகாதாரத்திற்கு கேடுகள் விளையாமலும், அதே நேரத்தில் சட்டம் ஒழுங்கு நிலை நாட்டப்படவும் தேவையான நடவடிக்கைகளை ஊராட்சி ஒன்றியங்கள் எடுத்தல்.

2. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பிரபலமான மற்றும் குறிப்பிடத்தக்க வகையில் இயங்கும் தினசரி மற்றும் வார அங்காடிகளை இனங்கண்டு, அவற்றை ஊராட்சி ஒன்றிய சிறப்பு அங்காடிகளாக அறிவித்து, அவற்றின் மேம்பாட்டுக்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் .

3. கிராமப்புறங்களில் நடைபெறும் அங்காடிகள் மற்றும் சந்தைகளுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் உரிய நியாமான உதவிகளை கிராம ஊராட்சிகளுக்கு செய்தல்.

4. இவ்வகை திருவிழாக்கள் கிராம ஊராட்சிகளில் நடத்தப்படும் போது, சுகாதாரம், சட்டம் ஒழுங்கு நிலைநாட்ட தேவையான அனைத்து நடவடிக்கைகளில் ஊராட்சி ஒன்றியங்கள் உதவுதல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. வருமானம் ஈட்டக்கூடிய வகையில் மாவட்டத்தின் முக்கிய பகுதிகளில் அங்காடி வளாகங்கள் கட்டுவதற்குரிய திட்டங்களைத் தீட்டி, கட்டிடங்களைக் கட்டி, வாடகைக்கு விடலாம். இத்தகைய அங்காடிகளை பராமரிப்பதும்

மாவட்ட ஊராட்சிகள் கடமைகளாக அளிக்கலாம். மேலும் இவ்வாறு நிர்வகிக்கப்படும் அங்காடிகளுக்கான வரி மற்றும் வாடகை வசூல் செய்வது மாவட்ட ஊராட்சிகளின் பொறுப்பாகும். வரி/வாடகை செலுத்த தவறியவர்கள் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

2. மாவட்ட பகுதியில் நலிவடைந்த அங்காடிகள் மற்றும் பெரிய சந்தைகளை திறம்பட செயல்பட வைக்க தேவையான நடவடிக்கைகளை மாவட்ட ஊராட்சிகள் மேற்கொள்ளலாம்.

3. மாவட்டத்தில் பிரபலமான சந்தைகள் மற்றும் சிறப்பு அங்காடி வளாகங்களை மாவட்டத்தின் சிறப்பு இனங்களாக பிரகடனப்பபடுத்தி அரசுக்கு தெரிவிக்கலாம்.

4. மாவட்டத்தில நடத்தப்பபடும் விழாக்கள் மற்றும் கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருத்தல் மற்றும் தேவையான ஆலோசனைகள் வழங்குவது மாவட்ட ஊராட்சிகளை பொறுப்பாக்கலாம்.

# 23. மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள் உள்ளிட்ட சுகாதார நலன்கள்.

மனித வாழ்க்கையில், நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற முதுமொழிக்கேற்ப, மனிதன், குறிப்பாக ஏழை எளிய மக்கள் வாழ்வில் நோயின்றி வாழவும், நோய்வாய்படும் கால கட்டங்களில் அவர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதும் அரசின் இன்றியமையாத கடமைகளில் ஒன்றாகும். இப்பொருட்கள் குறித்து அரசாணை (நிலை) எண்.220, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 4.7.97-ல் மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கென்று கடமைகள், பொறுப்புக்கள் என்ற வகையில் பயனாளிகளை இனம் கண்டறிதல், பல்வேறு திட்ட செயல்பாட்டில் உதவுதல் போன்ற பல்வேறு பணிகள் முறையே கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஏறகனவே

வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பரிசீலித்து, மேலும் எந்தெந்த வகையில் அதிகாரங்கள் வழங்கலாம் என்பதனை விவாதித்து இக்குழு கீழ்கண்ட இனங்களைப் பரிந்துரைக்கின்றது. இதுகுறித்து விவாதிக்கும் போது, குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புக்கள் வெற்றிகரமாக இயங்கும் இந்திய நாட்டின் பல்வேறு மாநிலங்களில், மருத்துவம், ஆரம்ப மற்றும் துணை சுகாதாரம் சார்ந்த நிர்வாகப் பொறுப்புக்கள் உள்ளாட்சி அமைப்புக்களிடமே உள்ளன என்றும், அரசு உள்ளாட்சி அமைப்புக்களுக்கு அதிகாரம் அளிக்கும் பொருட்டு சிறப்பான நடவடிக்கைகள் எடுக்கும் இத்தருணத்தில், மருத்துவம் சார்ந்த பொருட்களின் நிர்வாகப் பொறுப்புக்களை உள்ளாட்சி அமைப்புக்களிடம் ஒப்படைக்கவும், ஒட்டுமொத்தமாக ஒரே சமயத்தில் இது செய்யப்படாவிடினும், படிப்படியாக ஓராண்டு காலத்திற்குள் இது அரசினால் செய்து முடிக்கப்பட வேண்டும் என்று கருத்து தெரிவித்தனர்.

## கிராம ஊராட்சிகள்

1. ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களின் சேவைக்கான எல்லைப் பரப்பினை விரிவுபடுத்தும் பொருட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு பரிந்துரை செய்து இது குறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு உதவுதல்.

2. மாவட்ட பயிற்சிக் குழுக்கள் வாயிலாக தொண்டு நிறுவனங்களைச் சார்ந்த செவிலியர்கள், மருத்துவர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு சுகாதார பயிற்சியளித்து கிராம அளவில் மக்கள் பயன்பெறும் வண்ணம் உதவுதல்.

3. நாட்டு மருத்துவர்களின் சேவைகளை ஆய்ந்து அறிந்து தகுதியுடைய மருத்துவர்களின் செயல்பாட்டினை ஊக்குவித்து உதவுதல்.

4. கருவுற்ற மற்றும் கருவுறக்கூடிய பெண்களின் புள்ளிவிவரங்களை பதிவு செய்து மருத்துவ சேவைகள் வழங்க மருத்துவ நல பணியாளர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்தல்.

5. குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்கள் குறித்த புள்ளி விவரங்களைத் திரட்டி அவற்றிற்கான காரணங்களை கண்டறிந்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு

தெரிவித்து உதவுதல்.

6. பேறுகால இறப்பு மற்றும் பிறந்து ஓராண்டிற்குள் இறக்கும் குழந்தைகளின் இறப்பிற்கான காரணங்களைக் கண்டறிந்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்குத் தெரிவித்து மேல்நடவடிக்கைகள் எடுக்க உதவுதல்.

7. அத்தியாவசியமாகத் தேவைப்படும் உயிர்காப்பு மருந்துகள் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், துணை சுகாதார நிலையங்களிலும் நோயாளிகளின் தேவைக்கு இருப்பில் இருக்க மேற்பார்வையிட்டு மருந்துகள் இருப்பில் இருப்பதனை உறுதி செய்தல்.

8. கிராமப் பகுதிகளில் பணியமர்த்தப்பட்டுள்ள கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் இதர சுகாதார பணியாளர்களை அந்தந்த பொறுப்பு பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு காலமுறை அடிப்படையில் சென்றுவர ஊக்கமளிப்பதுடன், பொதுமக்கள் அரசின் மருத்துவத் துறை சார்ந்த சேவைகளை முறையாக பயன்படுத்திக்கொள்ள தேவையான விழிப்புணர்வினை அளித்தல்.

9. ஆரம்ப மற்றும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவிகளில் உடல் நலன் குறித்து மருத்துவ அட்டை பராமரிக்கப்படுகின்றதா என்பதனை ஆய்வு செய்து, மாணவ/மாணவிகளுக்கு காலமுறையிலான மருத்துவ பரிசோதனை, வயது வந்த மாணவிகள் மற்றும் பெண்களுக்கான ஊட்டச்சத்து மற்றும் உடற்கூறுகள் சார்ந்த அடிப்படை விவரங்களை தெரிவித்தல் மற்றும் மருத்துவ பரிசோதனையில் கண்டறியும் நோய்களுக்கான சிகிச்சை அளிக்கப்படுகின்றனவா என்பதையும் மேற்பார்வையிட்டு உறுதி செய்தல், பள்ளிகளில் உடல்நலம், நல்ல சத்துணவு, மக்கட்தொகை கல்வி ஆகியவை குறித்து மாணவர்களுக்கு அடிப்படை அறிவினைப் புகட்ட சம்பந்தப்பட்ட துறைகளை அணுகி, சேவைகளை ஒருங்கிணைத்தல்.

10. கிராமங்களில் செயல்படும் கிராம நலவாழ்வுக்குழு பள்ளிகளை காலமுறை அடிப்படையில் தொடர்ந்து பார்வையிடுகின்றதா என்பதனை அறிந்து அக்குழுவினை ஊக்கப்படுத்துதல்.

11. நோய் தடுப்பு மற்றும் கட்டுபாடு குறித்து செயல்பட கிராம அளவில் கிராம நலவாழ்வு குழுக்களை கிராம ஊராட்சிகள் அமைக்கலாம். இக்குழுவில் கிராம ஊராட்சித் தலைவரை குழுவின் தலைவராகவும், குழு உறுப்பினர்களாக கிராம சுகாதார செவிலியர்கள், மரபு மருத்துவ செவிலியர்கள் மற்றும் பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோரை சேர்த்து சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவை ஆகியவை மக்களுக்கு கிடைக்க நேரடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

12. கிராமத்தில் ஏற்படும் நோய்கள், தொற்று நோய்கள் மற்றும் தீராத நோய்களைக் கண்டறிந்து தகுந்த மருத்துவ சேவை அளிக்க ஏதுவாக மருத்துவத் துறை பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு உதவலாம்.

13. கிராம அளவில் பொதுமக்களின் நலனுக்காக சுகாதார மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்துதல்.

14. பிறப்பு மற்றும் இறப்பு விவரங்களை பதிவு செய்யும் அதிகாரம் ஊராட்சிகளுக்கு வழங்குதல், பேறுகால இறப்பு விகிதம், இறந்து பிறக்கும் குழந்தைகள், ஒன்று முதல் ஐந்து வயதிற்குள் இறக்கும் குழந்தைகள் சார்ந்த புள்ளிவிவரங்களை அறிக்கையின் வாயிலாக சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அளித்தல். பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் வழங்குதல்.

15. கிராமப்புறங்களில் நடைபெறும் உணவு கலப்படத்தை தடுக்க, சட்டத்தின் உரிய சரத்துக்களின்படி மேல்நடவடிக்கை எடுத்தல்.

16. கிராம குடிநீர் தேக்கத் தொட்டிகளை காலமுறையில் சுத்தம் செய்தல், கிணறுகளுக்கு குளோரின் மருந்து கலவை தெளித்தல் மற்றும் தனியார் வசமுள்ள நீர்தேக்கத் தொட்டிகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்வதை உறுதி செய்தல் மற்றும் குடிநீர் ஆதாரங்கள் மாசுபடுவதிலிருந்து காத்தல்.

17. தெருக்களில் தேங்கும் அசுத்தங்களை அப்புறப்படுத்தியும், கழிவுநீரினை அப்புறப்படுத்த தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்துதல்.

18. பயன்படுத்தப்படாத கிணறுகள் மற்றும் குளங்கள், சிறுகுட்டைகள் போன்றவற்றில் போடப்பட்டுள்ள கழிவுகளை அகற்றி சுகாதார கேடு விளைவதைத் தடுத்தல் மற்றும் திடக்கழிவுகளை அகற்றுதல்.

19. 1939-ம் ஆண்டு பொது உடல்நலச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு வடிகால் மற்றும் துப்புரவு வசதிகளை ஏற்படுத்துதல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. கிராம அளவில் நோய் மற்றும் கொள்ளைநோய் தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளின் மீதான விளைவுகளை மதிப்பீடு செய்து சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிக்கும், மாவட்ட ஊராட்சிக்கும் அறிக்கைகள் அனுப்பி உதவலாம்.

2. ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகள் மூலம் செயல்படுத்தப்படும் மகப்பேருக்கு முன் மற்றும் பின் எடுக்கப்படவேண்டிய தாய்,சேய் நலம் சார்ந்த பணிகள் திறம்பட நிறைவேற்றப்பட கிராம ஊராட்சிக்கு உதவுதல்.

3. மரபுவழி மகப்பேறு செவிலியர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்கும் பயிற்சிகள் நடத்துதல், கிராம அளவிலான பணியாளர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் நடத்தி திறம்பட பணியாற்ற உதவுதல்.

4. வயதுவந்த பள்ளி மாணவிகளுக்கு உடல் கூறுகள் குறித்த விவரங்கள் மற்றும் இதர பொருட்களின் மீதான முழு அறிவு சார்ந்த தகவல்களை தருவதற்கு களப் பணியாளர்களுக்கு உதவுதல்.

5. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் கிடைக்கும் மருத்துவ மற்றும் சுகாதார சேவைகளை கண்டறிந்து அந்தந்தப் பகுதி கிராம ஊராட்சிகளுடன் தொடர்பினை ஏற்படுத்தி சேவைகளை ஒருங்கிணைக்கலாம்.

6. காலமுறைப்படி அம்மை குத்துதல் மற்றும் தடுப்பூசி போடுதலை மேற்பார்வையிட்டு உறுதி செய்தல். இதனை கிராம ஊராட்சிகள் மூலம் செயல்படுத்துதல். ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் ஆகியவற்றில் பணியமர்த்தப்பட்ட மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் பணியாற்றுவதை மேற்பார்வையிட்டு உறுதி செய்து குறைபாடுகள் இருப்பின் சம்பந்தப்பட்ட மேல்நிலை அலுவலரிடம் தெரிவித்தல்.

7. மைய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் உரிய முறையில் செயல்படுத்தப்பட்டு பொதுமக்கள் இத்திட்டங்களினால் பயன்பெறுகின்றனரா என்பதனை ஆய்ந்து அறிந்து சம்பந்தப்பட்ட மேல்நிலை அலுவலர்களுக்கும், மாவட்ட ஊராட்சிகளுக்கும் அறிக்கைகள் அனுப்பி மேல்நடவடிக்கைகள் கோரலாம்.

8. கிராம ஊராட்சிகள் அளவில் செயல்படுத்தப்படும் தாய், சேய் நலத் திட்டங்களின் அறிக்கைகள் பெற்று திட்டங்கள் திறம்பட செயல்படுத்துவதற்கான அறிவுரைகளை கிராம ஊராட்சிகள் மற்றும் சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளுக்கும் தெரிவித்தல்.

9. கிராம ஊராட்சிகள் மூலம் நோய்தடுப்பு விழிப்புணர்வு முகாம்களை நடத்துதல்.

10. காலமுறையாக, தாய்சேய் நலன் குறித்த திட்டங்கள், நோய்தடுப்பு உத்திகள் ஆகிய திட்டங்கள் குறையின்றி செயல்படுகின்றதா என்பதனை மேற்பார்வையிட்டு உறுதி செய்தல்.

11. ஊராட்சிகளிடமிருந்து பெறப்பட்ட பள்ளி குழந்தைகள் சார்ந்த உடல்நலத் தன்மைகள், பரவிவரும் நோய்கள் குறித்த அறிக்கைகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்புகளின் தொகுப்புக்களை ஆய்ந்து, கருத்துரைகளுடன் மாவட்ட ஊராட்சிக்கு அனுப்புதல். பொதுமக்களிடையே நோய் மற்றும் கொள்ளைநோய் மற்றும் உயிர்கொல்லி

நோய்களுக்கெதிரான தடுப்பூசிகள் மற்றும் அம்மை தடுப்பு மருந்துகள் போடப்படுவதை மேற்பார்வையிட்டு உறுதி செய்தல்.

12. ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையம் மற்றும் இதர மருந்தகங்களுக்கு பணியமர்த்தப்பட்ட மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் முறையாக வருகை புரிந்து பணியாற்றுகின்றனரா என்பதனை மேற்பார்வையிட்டு உறுதி செய்தல்.

13. கிராம அளவில் நடைபெறும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகளை சட்டத்திற்குட்பட்ட கூறுகளின்படி நடைமுறைப்படுத்துதல்.

14. உணவு கலப்படத்தை தடுக்க 1954-ம் ஆண்டு உணவு கலப்படத் தடுப்பு சட்டத்தின் வழிகளை செயல்படுத்துதல்.

15. துப்புரவு, வடிகால், பொது கழிப்பிடங்கள் போன்றவற்றின் கட்டுமானப் பணிக்காகவும், அவைகளை பராமரிப்பதற்காகவும், தேவையான நிதியுதவியும், தொழில்நுட்ப உதவியும் ஊராட்சிகளுக்கு அளித்தல் மற்றும் செயல்பாட்டினை மேற்பார்வையிடுதல். திடக்கழிவுகளை அகற்றும் பணிகளை மேற்பார்வையிடல்.

16. அரசு மருத்துவமனைகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களுக்கு வழங்கப்படும் மருந்துகள் மற்றும் கருவிகளின் இருப்பினை உறுதி செய்து மற்றும் கருவிகள் வழங்கலை மேற்பார்வையிடல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. மக்களின் நலவாழ்வு தொடர்பாக செயல்படுத்தப்பவும் அனைத்து திட்டங்களையும் ஆய்ந்து அறிந்து ஆண்டு அறிக்கைகள் தயார் செய்தல். இவ்வாறு தயார் செய்யப்பட்ட அறிக்கையினை பிற மாவட்ட அறிக்கைகளுடனும், மாநில அறிக்கையுடனும் ஒப்பிட்டு பார்த்து தங்கள் தங்கள் மாவட்டத்தின் நிலையை அறிதல்.

2. ஊராட்சி ஒன்றியப் பணிகளை மேம்படுத்துவதற்காகவும், உரிய ஆண்டுத்

திட்டம் தயாரிப்பதற்காகவும், 4 மாதங்களுக்கொருமுறை நலவாழ்வு மற்றும் மேம்பாடு சார்ந்த அலுவலர்களின் ஆய்வுக்கூட்டங்களை நடத்தி, கலந்துரையாடல்கள் மூலம் சேவைகளை மேம்படுத்த உதவுதல்.

3. நோய் மற்றும் உயிர்கொல்லி நோய்களை தடுக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளை மாவட்டப் பகுதிகளில் பார்வையிட்டு ஆய்வு செய்தல். இவை தொடர்பாக சிறிய மற்றும் பெரிய அளவில் மதிப்பீடு அறிக்கைகளைத் தயாரித்தல் அந்த அறிக்கைகளை அரசுக்கு அனுப்பி ஆலோசனைகள் வழங்கல்.
4. அனைத்து மருத்துவமனைகளுக்கும், தேவையான மருந்துப்பொருட்கள் மற்றும் மருத்துவ கருவிகள் வழங்கப்படுவதனை மேற்பார்வையிட்டு உறுதி செய்தல்.

5. வட்டார அளவில் திட்டங்கள் தயாரித்து செயல்படுத்துவதில் மாவட்ட திட்டக் குழுவிற்கும் மருத்துவ மற்றும் சுகாதாரத் துறைக்கும் உதவுதல்.

6. மனிதவளத்தினை முறையாகப் பயன்படுத்தும் பொருட்டு பேணி காக்க மாவட்ட அளவிலான மனிதவள மேம்பாடு வாழ்க்கைத்தர அட்டவணையை தயாரித்தல்.

7. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலிருந்து திட்டப்படும் பிறப்பு மற்றும் இறப்பு எண்ணிக்கை பேறுகாலங்களில் நடைபெறும் இறப்பு எண்ணிக்கை, இறந்து பிறக்கும் குழந்தைகள் எண்ணிக்கை பிறந்து ஓராண்டிற்குள் (ஒரு வயது) இறந்துபோகும் குழந்தைகள் விவரம் மற்றும் இவை தொடர்பான புள்ளி விவரங்களை தொகுத்து மாவட்ட அளவில் அறிக்கைகளாக தயார் செய்து இந்த அறிக்கைகள் அரசு மாநிலத் திட்டக்குழு, மாவட்டத் திட்டக்குழு, மாவட்ட அளவிலான அலுவலர்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்து அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை திட்டமிடுதல் தொடர்பான பணிகளுக்கு பயன்படுத்த ஏதுவாக்கலாம்.

8. ஆரம்ப மற்றும் தொடக்கப் பள்ளிகளில் செயலாக்கப்படும் மருத்துவ பரிசோதனை, மருத்துவ அட்டவணைகள் பராமரித்தல் மற்றும் இது

தொடர்பான செயல்பாடுகளை மேற்பார்வையிட்டு அரசுக்கு அறிக்கைகள் அனுப்பலாம். திட்டங்கள் செவ்வனே செயல்படும் பொருட்டு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு அறிவுரைகள் வழங்கலாம்.

9. மாவட்டங்களில் செயல்படும் நலவாழ்வு மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான தகவல்களைப் பொதுமக்களிடையே பரப்புவதற்கும் மேலும் கருத்தரங்குகள், கலடந்துரையாடல்கள் நடத்துவதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உதவலாம்.

10. மருத்துவ, சுகாதார பணிகள் சார்ந்த பணியாளர்களை தேர்வு செய்வதிலும், பதவி அமர்த்துவதிலும், ஆவன செய்தல். மேலும் அயர்பணியில் பணியமர்த்தப்படுவது மற்றும் பணி மாறுதல் செய்வது குறித்து அரசுக்கு ஆலோசனைகள் வழங்கலாம்.

11. உணவுக் கலப்படத்தை தடுத்தல் குறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல். மாவட்ட உணவு/பருப்பு ஆய்வு கூட்டங்களின் செயல்பாடு குறித்து ஆய்வுக்கூட்டங்கள் நடத்தி எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து ஆலோசனைகள் வழங்கலாம்.

12. மாவட்ட அளவில் புராதன மருத்துவ முறைகளான சித்த மருத்துவம், ஆயுர்வேதா, யுனானி முறை மருத்துவங்களின் பலன் மற்றும் சேவைகளை மக்கள் பெரும் பொருட்டு ஊக்குவித்தல்.

13. மாவட்ட பகுதியில் இயங்கும் மருத்துவமனைகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மருத்துவ நிலையங்களுக்கு மருந்துகள் மற்றும் சிகிச்சை கருவிகள் வழங்குவதை மேற்பார்வையிடுதல்.

14. அனைத்து மருத்துவமனை கழிவுகளை பாதுகாப்பான முறையில் ஒதுக்குபுறமான இடங்களுக்கு வெளியேற்ற உதவுதல்.

# 24. குடும்பநல்வாழ்வு

குடும்ப நலம் என்பது சமுதாயத்தில் வாழும் குடும்பம் என்ற அமைப்பினை பேணிக்காக்கவும், இதில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்யவும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது அவசியம். குடும்ப நல மையங்களை உள்ளாட்சிகள் அமைத்து பராமரித்தல், பயனாளிகளை கண்டறிதல், அரசு சாரா அமைப்புகளை ஈடுபட செய்தல், குடும்ப நலம் குறித்து பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல், திட்டத்தை செயற்படுத்துதல், மக்களுக்கு தகவல்களை எடுத்துரைத்தல், நிதியுதவி, ஆண்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை திட்டம் போன்ற திட்டங்களையும் வட்டார மற்றும் மாவட்ட குடும்ப நல பயிற்சி மையம் அமைக்கும் திட்டங்களையும், பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் திட்டத்தையும் ஆய்வு செய்ய ஊராட்சி ஒன்றியங்களுக்கும்,மேற்காண் திட்டங்களை மறு ஆய்வு மற்றும் மேற்பார்வையிட மாவட்ட ஊராட்சிகளுக்கும் அரசு ஆணை எண். 220, ஊரக வளர்ச்சித் துறை, நாள். 4.7.97ல் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. குடும்பநலன் சார்ந்த பொருளின்பால் விவாதிக்கும் போது, ஆரம்ப சுகாதாரம் என்ற பொருள் இதற்கு முன்னர், ஊராட்சி ஒன்றியத்திடமும், ஜில்லா போர்டுகளிடமும் இருந்தது. 1984ம் ஆண்டில் அரசானது, இந்த சேவைகள் மற்றும் மருத்துவர்கள் மருத்தவ பணியாளர்களை தன்வசம் அழைத்துக் கொண்டது. இருப்பினும் பல மாநிலங்களில் ஆரம்ப சுகாதாரம் நிலையில் மற்றும் துணை சுகாதார நிலையங்களை அதில் பணிபுரியும் மருத்துவர்கள்/ பணியாளர்கள் சம்பந்தப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புக்களால் நிர்வகிக்கப்பட்டு மேலாண்மை செய்யப்படுகின்றன. 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் உள்ள மருத்துவ சேவை புரியும் மருத்துவர்கள் மற்றும் இதர செவிலியர்கள் அரசாங்க ஊழியர்கள் என்ற 109ம் பத்தியில் கூறப்பட்டுள்ளது. இருப்பினும், 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், ஊராட்சி ஒன்றியங்கள் மருந்தகங்களை, குழந்தை நல மையங்கள், அமைத்து அதனை பராமரிக்கும் பொறுப்பையும், தாய் சேய்நல சேவைகளை தொடர்ந்து ஊராட்சி ஒன்றியங்கள் அளிக்கவும், வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் பகுதிகளில் தடுப்பூசி, மறு தடுப்பூசி போன்ற பணிகளையும் நிறைவேற்ற கடமைகள் உள்ளது. குழு உறுப்பினர்களின் விவாதத்தின் போது உள்ளாட்சி அமைப்புகள் நல்ல முறையில் செயல்படும் மாநிலங்களில் குடும்ப நலன் சார்ந்த நிர்வாக முறை ஊரக உள்ளாட்சி

அமைப்புகளிடமே உள்ளது என்றும் உள்ளாட்சி அமைப்புகள் வலிமை பெறும் இத்தருணத்தில், குடும்பநலம் சார்ந்த நிர்வாகப் பொறுப்புகளை உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்க கருத்து தெரிவித்தனர். இப்பொறுப்புகள், ஒட்டு மொத்தமாக ஒப்படைக்கப்படாவிடினும், படிப்படியாக ஓராண்டு காலத்திற்குள் ஒப்படைக்கும் வகையில் அரசு நடவடிக்கைகள் எடுக்கலாம். இந்தப் பின்னணியில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்கும் வகையில் இக்குழு கீழ்கண்ட இனங்களில் பரிந்துரை செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்

1. குடும்ப நல மேம்பாட்டிற்க்கென செயல்படுத்தப்படும் திட்டங்களில் ஒன்றான கருவுற்ற தாய்மார்களின் மருத்துவ வசதிகள் குறித்து சுகாதாரத் துறை பணியாளர்கள், பதிவேடுகள் பராமரிப்பதற்கு உதவுதல்.

2. கர்ப்பிணி பெண்களின் பேறுகாலங்களில் முறையான மருத்துவ உதவிகள் அளிக்கும் பொருட்டு அந்தந்தப் பகுதிகளில் உள்ள தாய் சேய் நல மையங்களுடன் தொடர்பு கொண்டு தேவையான உதவிகளைச் செய்தல்.

3. பேருகாலத்திற்கு முன்னும் பின்னும் எடுக்க வேண்டிய மருத்துவ நடவடிக்கைகள், சுக பிரசவம் ஆவதற்கு வேண்டிய அறிவுரைகள் மற்றும் பிறந்த குழந்தைக்கான மருத்துவ பாதுகாப்பு ஆகியவை குறித்து மருத்துவ பணியாளர்கள் தக்க பயிற்சிகள் பெறுவதை உறுதி செய்து அவர்கள் முறையான பயிற்சி பெற உதவுதல்.

4. அந்தந்தப் பகுதிகளில் பணியாற்றும் பல்வேறு பணி தொடர்பான தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தர்ம ஸ்தாபனங்களின் ஆதரவைத் திரட்டி, கருத்தரித்திருக்கும் பெண்கள் அனைவரும் மருத்துவ வசதி பெறும் வகையில் தாய் மற்றும் குழந்தைகயின் நோயற்ற வாழ்விற்கான அடிப்படை ஆதார வசதிகளைப் பெருக்குதல்.

5. குழந்தைகளுக்கு தாய்பால் அளித்தல் மற்றும் நோய் தடுப்பு சக்தியை அதிகரித்தல் போன்ற பொருள்களின்பால் பெண்களிடையே போதிய விழிப் -புணர்ச்சியை ஏற்படுத்த மருத்துவத் துறை பணியாளர்களுக்கு உதவுதல்.

6. வைட்டமின்-அ, இரும்பு மற்றும் அயோடின் சத்துக்குறைவை கட்டுப்படுத்துதல், வெறிநாய் கடி தடுப்பு மற்றும் சிகிச்சை ஆகிய சேவைகளை ஒருங்கிணைத்து சேவைகள் திறம்பட வழங்கும் வகையில் உதவுதல். இது தொடாபாக தாய்சேய் நலப் பணியாளர்களுக்காக கிராம அலுவலர்களுடனும், குடும்பநலத் துறையுடன் சேர்ந்து காலமுறையிலான ஆய்வுக் கூட்டங்களை நடத்தி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு உதவலாம்.

7. உயிர்கொல்லி நோய் , பால்வினை நோய்கள் மற்றும் எய்ட்ஸ் நோய் குறித்து சிறப்பு விழிப்புணர்வு முகாம்களுக்கு கிராம அளவில் ஏற்பாடுகள் செய்தல்.

8. கிராம அளவில் மகளிர் மன்றங்களையும், இதர பிற மக்கள் குழுக்களையும் அமைத்து கருவுற்றிருக்கும் பெண்கள் மற்றும் பின்னாட்களில் கருவுறவிருக்கும் பெண்களுக்கும் பிரசவத்திற்கு முன்னும், பின்னும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள், சிறுகுடும்ப நெறி, தாய்ப்பால் போன்றவற்றின் மீது சிறப்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் குடும்பநலனைக் காக்க தக்க அறிவுரைகள் வழங்கும் வகையில் உதவலாம்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. கிராம ஊராட்சிகளிடமிருந்து பெறப்படும் குடும்பநலம் சார்ந்த புள்ளி விவரங்களை ஊராட்சி ஒன்றிய அளவில் தொகுத்து பராமரிக்கலாம். ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து மாவட்ட ஊராட்சிக்குத் தேவையான புள்ளி விவரங்களை தக்க பரிந்துரைகளுடன் கொடுத்து திறம்படத் திட்டமிடுவதற்கு உதவலாம்.

2. கிராம அளவில் மற்றும் பல கிராம ஊராட்சிகளில் நடைபெறும் குடும்பநலன் காக்கும் திட்டங்களை மேற்பார்வையிட்டு, அவற்றின் செயல்பாட்டில் ஏற்படும் இடையூறுகளைக் களைய தேவையான நடவடிக்கைகள் எடுக்கலாம்.

3. ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மகப்பேறு மையங்கள், சிறுகுடும்ப நெறி

சார்ந்த அறுவை சிகிச்சை அளிக்கும் வசதிகள், துணை சுகாதார மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார மையங்களை நிறுவி பராமரிக்கலாம்.

4. குடும்பநலத் திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மருத்துவமனைகளுக்கு தேவையானத் மருத்துவக் கருவிகள் வழங்குவதற்கு குடும்பநலத் துறையின் சம்பந்தப்பட்ட அலுவலர்களைத் தொடர்பு கொண்டு மேல்நடவடிக்கைகள் எடுத்தல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. மாவட்ட அளவில் குடும்பநலன் சார்ந்த திட்டப் பணிகளின் செயலபாட்டு தகுதி அறிக்கையை தயாரித்து, அதனை பிற மாவட்டங்கள் மற்றும் மாநிலத்தின் அறிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்து அந்தந்த மாவட்டத்திலுள்ள அறிக்கையின் ஏற்றத்தாழ்வுகளின் மேல் கருத்துரைகளை மாவட்ட ஊராட்சிகள் வழங்கலாம். இதனை அடிப்படையாகக் கொண்டு, மாவட்ட குடும்பநலத் திட்ட கருத்துருக்களை தயாரித்து, செயல்பாட்டிற்காக அதனை மாநில குடும்ப நல இயக்குநருக்கு அனுப்பலாம்.

2. திட்டங்களின் செயல்பாட்டிலுள்ள குறைகளை பார்வையிட்டு கண்டறிந்து அவைகளை நீக்க சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் ஆதரவினைத் திரட்டி, திட்டங்கள் திறம்பட செயலாக்க வழிவகைகள் செய்யலாம்.

3. பொருளாதார வளங்களைப் பொறுத்தவரை கிராம மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவிலான வளங்கள் மற்றும் ஆதாரங்களையும், துணை வரவு செலவு திட்ட வள ஆதாரங்களையும் உயர்த்தும் பொருட்டு சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் அந்தந்தப் பகுதிகளில் பணியாற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தர்ம ஸ்தாபனங்களை அணுகி தேவையான முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

4. குடும்பநலன் சார்ந்த திட்டங்களின் முறையான நடவடிக்கைகளுக்கும் செயல்படுத்தப்படும் பணிகளின் மீதான சமூக தணிக்கை முறைகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் காப்பாளர்களிடமிருந்து உதவிகளைப் பெற்று

ஒருங்கிணைத்தல்.

5. பேறுகால காப்பு பணிகள் குறித்து மாவட்ட அளவிலான விவரக்குறிப்பினை தயாரித்து வழங்குதல் மற்றும் தகவல் பரிமாற்ற மேலாண்மை முறையினை மேம்படுத்துதல்.

6. ஊராட்சி ஒன்றியத்தால் குடும்பநலன் சார்ந்த திட்டப்பணிகளின் நடவடிக்கைகளின் செயல்விளைவுகளை மதிப்பிட்டு குறைகளைக் கண்டறிந்து அவற்றை களைவதற்கான வழிமுறைகளை ஆய்ந்து அறிவுரைகள் வழங்கல்.

7. அந்தந்தப் பகுதிகளில் தேவையான மருந்துப் பொருட்கள் இருப்பில் இருக்கவும், இருப்பில் இருக்கும் மருந்துப் பொருட்களை வைத்து பாதுகாக்க தேவையான இடவசதி, குளிர்சாதன வசதிகள் ஆகியவை ஏற்படுத்தவும் அரசுக்கு பரிந்துரைத்தல்.

8. குடும்ப நலத் திட்ட இயக்கங்களிலும் திட்டத்தின் செயல்பாட்டிலும், தனியார் மருத்துவர்களையும், மருத்துவமனைகளையும் ஒன்றினைத்து மருத்துவ சேவைகள் அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

9. குடும்பநலத் திட்டத்தின் நடைமுறை செயல்திறனை மேம்படுத்துவதற்கு கருத்தரங்குகள், கலந்துரையாடல் நிகழ்ச்சிகள், பணிமனைக் கூட்டங்களையும் மாவட்ட அளவில் நடத்துதல்/நடத்துவதற்கு உதவுதல்.

## 25. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு கிராம ஊராட்சிகள்

சமுதாயத்தில் பெண்கள், மற்றும் குழந்தைகள் நலிவுற்றவர்களின் வரிசையில் இனம் காணப்பட்டுள்ளது. உடல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், சமூகத்தில் அந்தஸ்து ரீதியாகவும் இவர்களின் நிலையை மேம்படுத்தும் சீறிய நோக்கத்தோடு அரசின் சமூக நலத் துறையின் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இவற்றில் கிராம ஊராட்சிகள்

பொது மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதால் திட்ட செயல்பாட்டில் சம்பந்தப்பட்ட பயணாளிகளை கண்டறிய உதவும் பொருட்டு கீழ்கண்ட பொறுப்புகளை ஒப்படைக்கலாம். இப்பொருள் குறித்த அரசாணை (நிலை)எண். 2, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட துறை நாள் 5.1.98ல் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு தனித்தனியே அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே வழங்கப்பட்ட அதிகாரங்களை பரிசீலித்து மேலும் எந்த வகையான பொறுப்புகளை மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்கலாம் என விவாதித்து இக்குழு கீழ்கண்ட இனங்களில் பரிந்துரை செய்கிறது.

1. குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு பொதுவாக ஏற்படும் சோகை, நுண்ணுயிர் ஊட்டச்சத்து குறைவு , முன் கழுத்து கழலை போன்ற ஊட்டச்சத்து குறைபாடுள்ளவர்களை கண்டறிந்து சமூக நலப் பணியாளர்களுக்கு தெரிவிக்கலாம்.

2. தொழில் நுட்ப உதவிகள், பயிற்சிகள் மற்றும் சுய வேலைவாய்ப்புகள் தொடங்க முன்வரும் தகுதிவாய்ந்த பெண்களை தேர்ந்தெடுப்பதில் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உதவுதல்.

3. மகளீர் சார்ந்த குழுக்களையும், தாய்மார்களை கொண்ட குழுக்களையும் அமைத்து சமூக நலத்துறையின் திட்டங்களை அமுலாக்குவதில் இக்குழுக்களோடு சமூக நலத் துறையின் திட்ட பணியாளர்களையும் ஒருங்கிணைத்து இதனை மேற்பார்வை இடுதல்.

4. கிராமங்களில் வாழும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கைத்தரம், மேம்படுத்த கடைப்பிடிக்க வேண்டிய சுகதாரம் மற்றும் நல்ல உணவு பழக்கவழக்கங்கள் தாய்ப்பால் இது தொடர்பாக அரசின்திட்டங்கள் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், தகவல்களை பரப்புதல்.

5. கீழ்க்காணும் தேவையான ஒருங்கிணைப்பு உதவிகளை கிராம ஊராட்சிகள் சம்பந்தப்பட்ட சமூக நலத்துறை பணியாளர்களுக்குச் செய்யலாம்.

(அ). அரசின் ஆதரவுடன் நடைபெறும் மையங்களைப் பார்வையிட்டு குறைகளை காட்டி அவைகளைக் களைந்திடல்.(ஆ).சத்துணவு திட்ட மையங்களுக்கு தேவையான காய்கறிகள், இதர பொருட்களை சத்துணவு

அமைப்பாளர்கள்பெறும் பொருட்டு உள்ளூரில் ஆதரவினை திரட்டி ஊக்குவித்தல். (இ). இதற்கான உதவியை பெற்று பராமரிப்பதில் குழுக்களை ஈடுபடுத்துதல்.(ஈ). குழுந்தைகள் வளர்ச்சி கண்காணிப்பு, பிரசவத்திற்கு முந்தைய, பிந்தைய மருத்துவ வசதிகள், எடை குறைவாக பிறந்த குழந்தைகளின் உடல் நலம், பாதுகாப்பு, ஆகியவற்றில் பணியாற்றும் சமூக நலப் பணியாளர்களுக்கு கிராம ஊராட்சியின் பெண் பிரதிநிதிகள் உதவலாம்.(உ)தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்துவதில் திட்ட பணியாளர்களுக்கு உதவுதல்.

1. பொதுவான மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் குழந்தைகள், பெண்கள் சார்ந்த புள்ளி விவரங்களை திரட்டுவதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் உதவுதல்.

2.குழந்தைகள் நல மையங்கள் இதர சத்துணவு மையங்கள் கட்டுவதற்கான மனைகளைத் தேர்ந்தெடுப்பதில் உதவுதல். கவனமும். மருத்துவ பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளை கணக்கெடுப்பின் மூலம் கண்டறிதல்.

3. குழந்தை தொழிலாளர்களை இனம் காணுதல், மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களில் ஈடுபடச் செய்ய சமூக நலத்துறை பணியாளர்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருத்தல்.

4. பெண்கள் மத்தியில் சுய உதவிக்கு குழுக்களை அமைத்து, சேமிக்கும் பழக்கத்தை உருவாக்குதல் உதவுதல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ஊட்டச்சத்து குறைபாடுகளுடன் கூடிய குழந்தைகள் மற்றும் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோரின் நலம் கருதி செயல்படுத்தப்படும் அரசுத் திட்டங்களில் பயன்பெறும் பொருட்டு, தகுதிவாய்ந்த பயனாளிகளைக் கண்டறிதல்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு குறித்து நிறைவேற்றப்படும் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து ஆற்ற வேண்டிய மேற்பார்வை சார்ந்த பணிகளில் கீழ்க்கண்ட இனங்களை ஊராட்சி ஒன்றியங்களுக்கு பொறுப்பாக்கலாம்.

1. மதிய உணவு மையங்களை, செயல்படுத்தும், கிராம ஊராட்சிகளின் பணிகளை ஊராட்சி ஒன்றிய மேற்பார்வையிடுதல்.

2.ஊட்டச்சத்து சார்ந்த திட்டங்களின் செயல்பாட்டிற்கான புள்ளி விவரங்களை அனைத்து ஊராட்சிகளிடமிருந்து பெற்று, மேற்பார்வையிட்டு ஆய்வு செய்து மாவட்ட ஊராட்சிகளுக்கு அனுப்பலாம். இதன்அடிப்படையில் மதிப்பீடு அறிக்கைகள் தயார் செய்து வழங்கலாம்.

3.பெண்களுக்கான ஏற்படுத்தப்படும் வழிகாட்டி மையங்களை நேரிடையாகப் பார்வையிட்டு ஆய்வுகள் மேற்கொண்டு கண்டறிந்த இடர்பாடுகளை நீக்க, மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு குறித்து நடைமுறையில் உள்ள திட்டங்களின்செயல்பாட்டில் ஊராட்சி ஒன்றியங்கள் சமூக நலத் துறைக்கு கீழ்க்காணும் இனங்களில் உதவலாம்.

1. கிராம ஊராட்சிகள் செயல்படுத்தும் குழந்தைகள் காப்பகம், முன்பருவ கல்வி நடவடிக்கைகள் மற்றும் மையங்களில் உள்ள குழந்தைகளின் பின்கல்வி நடவடிக்கைகளுக்கு ஒன்றியங்கள் உதவலாம்.

2.குழந்தைகளுக்கான நல மையங்களுக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கு தேவையான தொழில் நுட்ப வசதிகள், குடிநீர் வசதி, விளையாட்டுப் பொருட்கள் போன்ற வசதி இம்மையங்கள் பெறுவதற்கும் ஊராட்சி ஒன்றியங்கள் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு உதவலாம்.

3. ஊட்டச்சத்து மற்றும் நலவாழ்வு கல்வி குறித்து விவரங்களை மற்றும் விழிப்புணர்வினை செய்திகளாகவும், மக்கள் தொடர்பு சாதனங்களை பயன்படுத்தியும் மற்றும் நாட்டுப்புறக்கலைகளை உபயோகித்தும் பாடல்கள், சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள் தயாரித்தும் வழங்குவதில் ஊராட்சிகளுக்கு உதவுதல்.

4. கால முறையிலான ஆய்வுகளை மேற்கொண்டு திட்ட செயல்பாட்டினை மதிப்பீடுகள் செய்ய மருத்துவ மனைகள் மற்றும் கல்வி நிறுவனங்களை ஈடுபடுத்த உதவுதல்.

5. குழந்தைத் தொழிலாளர்கள் சார்ந்த புள்ளிவிவரங்கள் கிராம ஊராட்சிகளிடமிருந்து பெற்று, தொகுத்து மாவட்ட ஊராட்சிக்கு வழங்குவதில் உதவுதல்.

6. குழந்தைகள் காப்பகங்கள், பகல் நேர கவனிப்பு மையங்கள் நடத்துதல்,

அனாதை விடுதிகள் பராமரித்தல் கைவிடப்பப்பட்ட குழந்தைகளுக்கான மையங்களை அமைத்து மற்றும் பராமரித்தல் போன்ற நடவடிக்கைகளில் கிராம ஊராட்சிகளும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் சமூக நலத்துறை அலுவலர்களுக்கு உதவுதல்

7.மகளீர் நலத்திட்டங்களுக்குரிய தகவல்களைப் பொதுமக்களிடம் பரப்புவதற்கு கிராம ஊராட்சி உதவுதல்.

8.பெண்களுக்கு சுயவேலைவாய்ப்பு பெறும் பொருட்டு, தேவைப்படும் தொழில் நுட்ப பயிற்சி, தொழில் துவங்க நிதி ஆதாரம் ஆகியவற்றை பெறவும், தகுந்த வேலைவாய்ப்பு வசதிகளை கண்டறிவதில் கிராம ஊராட்சிகளும் அரசு சாரா அமைப்புகளும் அரசிற்கு உதவலாம்.

9.வரதட்சனைக் கொடுமைகள், பாலியல் பாகுபாடுகள், பெண்களுக்கெதிரான கொடுமைகள் போன்றவற்றை சமுதயாத்திலிருந்து களைய அரசும், அரசு சாரா நிறுவனங்களும் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உதவலாம்.

10. குடும்ப ஆலோசனை மையங்கள் அமைத்து நடத்துவததில் கிராம ஊராட்சிகளுக்கும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும், தேவையானஅறிவுரைகளையும், உதவிகளையும் வழங்கலாம்.

## மாவட்ட ஊராட்சிகள்

பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு திட்ட செயல்பாடுகளில் மாவட்ட ஊராட்சிகள் கீழ்க்கண்ட இனங்களில் திட்டமிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

1. ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பெறப்படும் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலம் சார்ந்த புள்ளி விவரங்களை கொண்டு, மகளிர் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை, குழந்தைகளின் சமூக நிலை, பெண்களின் சமூக பொருளாதார நிலை ஆகியவற்றை மாவட்ட அளவில் தயாரித்து அவற்றை பிற மாவட்ட அறிக்கைகள், தமிழ்நாடு மாநில அறிக்கைகள் மற்றும் பிறமாநில அறிக்கைகளுடன் ஒப்பிட்டு கருத்துரைகள், மற்றும் அறிவுரைகள், வழங்கி திட்டமிடுவதற்கு பயன்படுத்துதல்.

2. பெண்களுக்கான வழிவாட்டி நிலையங்கள் அமைக்க மாவட்ட அளவில் திட்டங்கள் தீட்டுதல்.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் மேம்பாடு குறித்து திட்டங்களைச் செயல்படுத்துவதில் கீழ்காணும் இனங்களில் மாவட்ட ஊராட்சிகளுக்கு மேற்பார்வை மற்றும் மறு ஆய்வில் செய்யும் பொறுப்புகளை வழங்கலாம்.

1.மாவட்ட அளவில் செயல்படுத்தப்படும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மேம்பாடுத் திட்டங்களின் செயல்முறை திட்டங்கள் குறித்து கூட்டங்கள் நடத்தி ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

2.ஊட்டச்சத்து சார்பான பணிகள் குறித்து ஊராட்சி ஒன்றியத்தின் செயல்பாடுகளையும், கிராம ஊராட்சியின் செயல்களையும் மேற்பார்வையிட்டு ஆய்வு நடத்தி அறிவுரைகள் வழங்குதல்.

3.ஊட்டச்சத்து திட்டங்களைச் செயல்படுத்த தேவையான பொருட்களின் கொள்முதலையும், பகிர்வினையும் மாநில மற்றும் மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்களின் செயலாக்கத்தையும் மேர்பார்வையிட்டு ஆய்வு செய்தல்.

4.குழந்தைகள் நல மையங்கள், மதிய உணவு மையங்கள் நிறுவி இயக்குவதிலும் தொடர்ந்து பராமரித்தலிலும் தேவையான தொழில் நுட்பஉதவிகளை வழங்கி மேற்பார்வை பணிகளை மேற்கொள்ளலாம்.

5. குடும்ப நலவாழ்வு கல்வித் திட்டம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி தகவல்களை பரப்புவதற்கும், கல்வி, குடிநீர், ஊரக வளர்ச்சி போன்ற திட்டங்களைத் திறம்படச் செயல் படுத்துவதிலும் ஊராட்சி ஒன்றியங்களின் நடவடிக்கைகள் மேற்பார்வையிட்டு சேவைகளை ஒருங்கிணைக்கலாம்.

6.குழந்தைகள் தொழிலாளர்கள், பெண் சிசுக்கொலை ஆகிய சமூகக் கொடுமைகள் மீதான விவரங்களை ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து திரட்டி, அதனை ஒருங்கிணைத்து திட்டமிடுவதற்கு பயன்படுத்தல்.

7.குழந்தைகள் நலம் பேண செயல்படுத்தப்படும் திட்டங்களின் நேரடி ஆய்வினை மேற்கொண்டு அறிவுரைகள் வழங்கல்.

8.பெண்களின் வருமானத்தை உயர்த்தும் பொருட்டு இயக்கப்படும் சுய வேலைவாய்ப்பு திட்டங்கள் மற்றும், தொழில் துவங்க தேவையான கடன் வசதிகளைப் பெறுவதில் உள்ள இடர்பாடுகளை அகற்றி தகுந்த பயனாளிகள் தேர்ந்தெடுப்பதிலும், செயல்படுத்துவதிலும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாவட்ட ஊராட்சிக்கு உதவலாம்.

# 26.உடல் ஊனமுற்றோர் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் நலன் உள்ளடங்கலாக சமூக நலன்

சமுதாயத்தில் வாழும் அனாதைக் குழந்தைகள், மன வளர்ச்சி குன்றியோர், உடல் ஊனமுற்றோர், இளங்குற்றவாளிகள், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு ஆகியோரின் நலனைப் பேணுவது அரசின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும். அரசாணை (நிலை)எண்.2இ சமுக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை நாள் 5.1.98ல் (அ) பார்வையற்றோர்/ உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு இல்லங்கள், உடல் ஊனமுற்றோர்க்காக நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் விடுதிகள், படிப்பு உதவி தொகை திட்டம், ஒருங்கிணைந்த இளம்பிள்ளை வாத ஒழிப்புத் திட்டம், உடல் ஊனமுற்றோர் / மனநலம் குன்றிய குழந்தைகளின் மறுவாழ்வு போன்ற திட்டங்களின் செயல்பாட்டிற்கு பயனாளிகள் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உதவுதல் ஆகிய பொருள்களை கிராம ஊராட்சிகளுக்கும் (ஆ) மேற்கண்ட திட்டங்களில் பயனாளிகளைத் தேர்வு செய்வதற்கும், திட்ட செயல்பாட்டில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உதவும் கடமைகள் ஊராட்சி ஒன்றியங்களுக்கும், (இ) மேற்கண்ட திட்ட செயல்பாடுகளை மேற்பார்வையிடவும், ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் ஆராய்ந்து மேற்கொண்டு கொடுக்கப்பட வேண்டிய பொறுப்புக்கள் குறித்து விவாதித்து இக்குழு கீழ்கண்ட இனங்களை பரிந்துரைக்கிறது.

## கிராம ஊராட்சிகள்.

1. கிராமப்புறங்களில் உள்ள உடல் ஊனமுற்றோர் எண்ணிக்கை மற்றும் விவரங்களைத் தயாரித்து கிராம ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுப்புதல்.

2. உடல் ஊனமுறுவதற்கான காரணங்களை மக்களிடையே பரப்பி விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
3. உடல் ஊனங்கள் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு தக்க நடவடிக்கைகளை எடுக்கலாம். அபாயமிக்க விபத்துக்களைக் கண்டறிந்து அவற்றை குறைக்க வழி காணுதல்.
4. அரசு சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களை அணுகி அவர்களின் உதவி பெற்று உடல் ஊனமுற்றோர் நலனை பாதுகாக்கவும் மற்றும் இவை சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.
5. பதினாறு வயதுக்கு மேற்பட்ட உடல் ஊனமுற்ற எழுத்தறிவற்ற குழந்தைகளுக்கு முறைசாராக் கல்வி மற்றும் இதர எழுத்தறிவுத் திட்டங்களின் மூலம் அவர்களுக்கு எழுத்தறிவு புகட்ட கிராம அளவில் தக்க நடவடிக்கைகள் எடுத்தல். இவர்களுக்கு இலவச பாட புத்தகங்கள், சீருடை, உதவித் தொகை, பேருந்து இலவச அனுமதிச் சீட்டு ஆகியவகைகள் கிடைக்க ஏற்பாடு செய்தல்.
6. கிராமப்புறங்களில் உள்ள படித்தோரின் மனித ஆற்றலைப் பயன்படுத்தி உடல் ஊனமுற்ற கல்வியறிவற்ற குழந்தைகளுக்கு கல்வி அறிவினைக் கொடுத்தல்.
7. உடல் ஊனமுற்றோரில் குறிப்பாக காது கேளாதோர், மனநலம் குன்றியவர்கள் மற்றும் இசிப்பு நோய்க்கு ஆட்பட்ட குழந்தைகளுக்கான சிறப்பு பள்ளிகளையும், இவர்கள் நலம் பேண தேவையான நிறுவனங்களையும் அமைக்க அரசுத்துறை அலுவலர்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருத்தல், இதற்க்கென தன்னார்வ தொண்டு நிறுவனங்ளை அணுகி தக்க உதவி பெறுதல். மேற்படி அமைக்கப்படும் பள்ளிகளுக்கு தேவையான அடிப்படை ஆதார வசதிகள் , உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தேவையான கருவிகளை சம்பந்தப்பட்ட துறை மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை அணுகி பெறுதல்.
8. கிராமப் புறங்களில் உடல் ஊனமுற்றவர்க்கு தகுதியின் அடிப்படையில் வேலை வாய்ப்பு மற்றும் சுயவேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு துணைக் கருவிகள் ( காது கேட்கும் கருவி, செயற்கை கை, செயற்கை கால், ஊன்று கோல்கள்) ஆகியவை வழங்குவதற்கு தகுதிவாய்ந்த பயனாளிகளை தங்கள் ஊராட்சியின் எல்லைப் பகுதியில் கண்டறிந்தும் சலுகை விலையில்

முன்னுரிமை அடிப்படையில் வீடு கட்டுவதற்கான நிலங்கள் ஒதுக்கீடு செய்ய தகுதிவாய்ந்த பயனாளிகளை கண்டறிந்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு பரிந்துரை செய்தும், மேலும் இவர்கள் சுய தொழில் துவங்கும் பொருட்டு தொழில் மையங்கள் அமைக்க பயனாளிகளை கண்டறிவதில் அரசுத் துறைக்கு உதவுதல். அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களில் தேவையான பயிற்சிகள் மூலம் தொழில் திறன் பெறவும், சுயமாக தொழில் துவங்க உரிய கட்டிட வசதிகளை வங்கிகள் மூலமும் அரசுத் துறை திட்டங்கள் மூலமும் பெரும் பொருட்டு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு கிராம ஊராட்சிகள் பரிந்துரைத்தல்

9. அறுபது வயதுக்கு மேற்பட்ட வயதானவர்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டும், முதியோர் அடையாள அட்டைகள் வழங்குவதற்கும் முதியோர் உதவித் தொகை பெரும் பொருட்டும் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உதவுதல்.

10. மாநிலத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டமான சீர்திருத்த பள்ளிகளிலிருந்து விடுவிக்கப்பட்ட இளங்குற்றவாளிகளுக்கான தொடக்கப்பள்ளி பயிற்சித் திட்டத்தில் உரிய பயனாளிகளை இனங்கண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு பரிந்துரை செய்தல்.

11. குடிப்பழக்கம் என்பது சமுதாயத்தில் புரையோடிப்போய் உள்ளது. இது குடிப்பழக்கத்திற்கு அடிமையான தனிநபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்ளை நேரிடையாகவும் மேலும் சமுதாயத்தையும் பாதிக்கின்றது. பொதுவாக இப்பழக்கத்தின் விளைவால் துன்புறுவோர் பெண்களேயாவர். இத்தகைய தீய பழக்கத்தினை ஒழிக்க இதன் தீமைகள் குறித்தும், விளைவுகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான திட்டத்திற்கு தகுதிவாய்ந்த பெண் பயனாளிகளை சிற்றூராட்சிகள், கண்டறிந்து சம்பந்தப்பட்ட சமூக நலத்துறை அலுவலர்களுக்கு பரிந்துரை செய்தல்.கிராமப் புறங்களில் பார்வையற்ற மாணவர்களுக்கு எழுத்தர் உதவி திட்டத்தின் கீழ் பயன்பெற தகுந்த பயனாளிகளை சிற்றூராட்சிகள் இனங்கண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு பரிந்துரை செய்யலாம்.

12. உடல் ஊனமுற்றோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோரை ஊக்கப்படுத்துவதற்காக கிராம ஊராட்சிகள் அவர்களுக்கென சிறப்பு விளையாட்டு போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவைகள் நடத்தி பரிசுகள் வழங்க நடவடிக்கை எடுக்கலாம். மேலும் இதற்காக தனைார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் உதவியை கிராம ஊராட்சிகள் பெறலாம்.

13. போதை மருந்து மற்றும் இதர பொருட்களை தவறாக பயன்படுத்துவதால் விளையும் சமுதாயக் கொடுமைகள் ஆகியவற்றை பொது மக்கள் குறிப்பாக மாணவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவியுடன், சிறப்பு பயிற்சிகள் நடத்த கிராம ஊராட்சிகள் ஏற்பாடு செய்தல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்.

1. கிராம ஊராட்சிகள் தத்தம் பகுதிகளில் சேகரிக்கும் நலிவுற்றோர் சார்ந்த புள்ளி விவரங்களைச் சேகரிக்கவும், சேகரிக்கப்பட்ட விவரங்களை திட்டங்களின் செயல்பாட்டிற்க்கு உதவும் வகையில் ஒருங்கிணைத்த ஆய்வு செய்து மாவட்ட ஊராட்சிகளுக்கு அனுப்புதல்.

2. அந்தந்த பகுதி ஊராட்சிகளில், அரசினால் செயல்படுத்தப்படும் நல வாழ்வு, ஊட்டச் சத்து மற்றும் உடல் ஊனமுற்றோர் நலத் திட்டங்களின் செயல்பாட்டில் சம்பந்தப்பட்ட துறைகளுக்கும் கிராம ஊராட்சிகளுக்கும் உதவி இணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

3. உடல் ஊனமுற்றோர் மற்றும் மன வளர்ச்சி குன்றியோர்க்காக ஏற்படுத்தப்படும் சிறப்பு பள்ளி அமைப்பதில், முறை சாரக் கல்வி, தொழில் சார்ந்த பயிற்சி, அடிப்படை ஆதாரவசதிகள் அமைப்பதிலும், வீட்டு மனைக்கான நிலத்தை சலுகை விலையில் முன்னுரிமை அடிப்படையில் பெற இணைப்பு நடவடிக்கைகள் எடுத்தல் போன்ற திட்டங்களில் உடல் ஊனமுற்றோர், மன வளர்ச்சி குன்றியோர் ஆகியோர்க்கு நல வாழ்வு மற்றும் மறுவாழ்வு அளிக்கும் நடவடிக்கையில் தேவையான காது கேட்கும் கருவிகள், செயற்க்கை கைகள், கால்கள் இன்னும் பிற துணைக்கருவிகள் அளிப்பதனை மேற்பார்வையிட்டு குறைகளை களைதல். உடல்

ஊனமுற்றோர் மற்றும் மனநலம் குன்றியோர்களின் நலம் குறித்து செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயல்பாட்டில் ஏற்படும் இடர்பாடுகளை கண்டறிந்து திட்டங்கள் செவ்வனே நடைபெறும் வகையில் நடவடிக்கைகள் எடுத்தல். உடல் ஊனமுற்றோர்க்கான அடையாள அட்டைகள் முறையாக வழங்கப்பட்டுள்ளதா என்பதனை மேற்பார்வையிட்டு உறுதி செய்தல். அடையாள அட்டைகள் வழங்கப்படாத பட்சத்தில், சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் கூட்டம் நடத்தி, விரைவாக வழங்க நடவடிக்கைகள் எடுத்தல்.

4. சமூக நலத்துறையின் மறுவாழ்வு மற்றும் சாலையோர குழந்தைகளின் நலன் கருதி செயல் படுத்தப்படும் திட்டத்திற்கு, தேவையான புள்ளி விவரங்களை கிராம ஊராட்சிகளிடமிருந்து பெற்று, ஊராட்சி ஒன்றிய அளவில் பதிவேடுகளில் பதிந்து அதனை பராமரித்து, பராமரிக்கப்பட்ட புள்ளி விவரங்களை மாவட்ட ஊராட்சிகளுக்கு அனுப்பி இணைப்பு நடவடிக்கைகள் எடுத்தல்.

5. அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களின் நலன் காக்க, முதியோர் புள்ளி விவரங்களை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளிடம் பெற்று, ஊராட்சி ஒன்றிய அளவில் உள்ள பதிவேடுகளில் பதிந்து பராமரித்து, புள்ளி விவரங்களை ஒருங்கிணைத்து மாவட்ட ஊராட்சிகளுக்கு அனுப்பி திட்டங்கள் முறையாக செயல்படுத்தப்பட இணைப்பு நடவடிக்கைகள் எடுத்தல்.

6. கிராம ஊராட்சிகள் சேகரிக்கும் இளம் குற்றவாளிகள் தொடர்புடைய புள்ளி விவரங்களைப் பயன்படுத்தி, ஆண்டறிக்கைகள் தயாரித்து புள்ளி விவரங்களை ஒருங்கிணைப்பதில் சம்பந்தப்பட்ட சமூக நலத்துறை அலவலர்களுக்கு உதவுதல் மற்றும் இவற்றை மாவட்ட ஊராட்சிக்கு அனுப்பி வைத்தல்.

7. கிராம ஊராட்சிகள் தங்கள் பகுதிகளில் மேற்கொள்ளும், முதியோர் முக்கியத்துவம், போதை மருந்து பழக்க ஒழிப்பு, ஊனமுற்றோர் மறுவாழ்வு ஆகியவை சார்ந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு ஊராட்சி ஒன்றியம் உதவுதல்.

8. உடல் ஊனமுற்றோர்க்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு வேலை வாய்ப்பு வசதிகள் அரசினால் அளிக்கப்படுகின்றன. இந்த திட்டத்தில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஆதரவைத் திரட்டி, பொறுத்தமுடைய வேலை வாய்ப்பினை அளித்தல், தொழில் பயிற்சி, வேலை வாய்ப்பு நிறுவனங்களில் பதிவு, சுயமாக வேலை வாய்ப்பு பெற தேவையான கடன் வசதிகள் ஆகியவற்றில் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்த உதவலாம். வேலை வாய்ப்புக்கள் தொடர்புடைய 1995ஆம் ஆண்டு சட்டத்தின்படி ( சம வாய்ப்புக்கள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் பங்கு பெறுதல்) உடல் ஊனமுற்றோர்க்குரிய நலன் சார்ந்த திட்டங்களை நிறைவேற்றுவதில் சம்மந்தப்பட்ட சமூக நலத்துறை அலுவலர்களுடனும் காலமுறை கூட்டங்களை நடத்தி, வேலை வாய்ப்புக்கள் வாங்குவதற்க்கு வேண்டிய நடவடிக்கைகளை ஒருங்கிணைந்து உதவுதல்.

9. இயலாத ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு பாலாருக்கும் இரவு பாதுகாப்பிடத்தையும், பகல் கவனிப்பு மையங்களை அமைக்கும் பணியிலும், சாலையோர குழந்தைகளின் மேம்பாட்டிற்கு கிராம ஊராட்சிகள் மேற்கொள்ளும் நல நடவடிக்கைகளுக்கு உதவுதல்.

10. 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் அரசினால் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் பெற கிராம ஊராட்சிகள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் உதவுதல். மேலும் கிராம ஊராட்சிகளின்முதியோர் தொழில் பயிற்சி சார்ந்த நடவடிக்கைகளுக்கு உதவுதல்.

11. போதை பழக்கம் மற்றும் இதனால் ஏற்படும் தனிமனித மற்றும் சமூதாய தீமைகளின்பால் கிராம ஊராட்சிகள் மேற்கொள்ளும் விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு ஊராட்சி ஒன்றியம் உதவுதல். மேலும் கிராம ஊராட்சிகள் மேற்கொள்ளும் போதை மருந்து பழக்க விடுவிக்கும் பணிகள், போதை பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்களுக்கு கல்வி புகட்டுவதற்குரிய சமுதாய பணியாளர்களுக்கு உறுதுணையாக பணிபுரிய கிராம ஊராட்சிகளுக்கு உதவுதல். மேலும் கிராமப் புறங்களில் உள்ள குடிப்பழக்கத்தினால் பெரிதும் பாதிக்கப்படும் பெண்களுக்கு உதவ

முன்வரும் மகளிர் அமைப்புகளுக்கு குடிப்பழக்கத்தினை ஒழிக்க ஊராட்சி ஒன்றியம் உதவுதல்.

12. ஒருங்கிணைந்த நலவாழ்வு ஏற்பட அமைக்கப்படும் "குடும்ப கலந்தாய்வு மையங்களை" அமைக்க ஊராட்சி ஒன்றிய சம்பந்தப்பட்ட சமூக நலத்துறை அலுவலர்களுக்கு ஊராட்சிகளும் உதவுதல்.

13. குழந்தைகளுக்கு கல்வி புகட்டுதல், அவர்கள் குற்றங்கள் புரிவதிலிருந்து தடுத்தல் ஆகியவற்றிக்கு, ஒட்டு மொத்த சமுதாயம் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஆதரவினைத் திரட்டி ஒருங்கிணைத்த வழங்கலாம்.

14.ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாயத்திற்கு நல்வழிகாட்டும் நெறிமுறைகளை பரப்பவும், சுயமுன்னேற்ற அறிவிற்கான பயிற்சி வகுப்புக்கள் நடத்தவும் சம்பந்தப்பட்ட சமூக நலப் பணியாளர்களுக்கு உதவலாம்.

15.தீங்கு இழைக்கும் இளங்குற்றவாளிகளுக்கு நீதி வழங்கும் பொறுப்பில் ஈடுபட்டிருக்கும் அரசு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சார்ந்த அலுவலர்கள் பயிற்சி அளிப்பதில் உதவுதல். குற்றங்கள் இழைத்து தண்டனைக் காலம் முடிவுற்ற நிலையில் சிறையிலிருந்து வெளிவந்தவர்களை சமூதாயத்தின் ஒர் அங்கமாக பொதுமக்கள் ஆங்கீகரித்து நடத்த தேவையான விழிப்புணர்வினை உருவாக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கும், கிராம ஊராட்சிகளுக்கும் உதவுதல்.

16.கிராமப்புறங்களில் உள்ள இளங்குற்றவாளிகளுக்கும் சமுதாயத்தில் கைவிடப்பட்ட பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்கும்பொருட்டு காவலர்களின் மனித நேய அணுகுமுறையினை கடைபிடிக்கின்றனரா என்பதனை மேற்பார்வையிட்டு உறுதி செய்தல். இளங்குற்றவாளிகள் மற்றும் நலிவடைந்தோர்க்காக நடத்தப்படும் கடன் நோக்கு இல்லங்கள், பாதுகாப்பு இல்லங்கள், மறுவாழ்வு இல்லங்கள், விழிப்பு பணி இல்லங்கள், பிற்காப்பு நிறுவனங்கள் ஆகியவற்றை மேற்பார்வையிட்டு அவைகள் திறம்பட செயல்பட நடவடிக்கைகள் எடுக்கலாம். இளம் சிறார்கள் மற்றும் சமூதாயத்தில் வழிதவறிய பெண்கள் மறு வாழ்விற்க்கென

செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயல்பாட்டில் உள்ள இடையூறுகள் மற்றும் குறைகளைக் களைய சம்பந்தப்பட்ட சமூக நலத்துறை பணியாளர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி தலைவர்களைக் கொண்ட இணைப்புக் கூட்டங்கள் நடத்தி, ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் எடுத்து, மேற்பார்வையிடல்.

17.அரசினால் செயல்படுத்தப்படும் சீர்திருத்தப் பள்ளிகளிலிருந்து விடுவிக்கப்பட்ட இளங்குற்றவாளிகளை தொடக்கப் பள்ளிகளில் பயிற்சி அளிப்பதற்கான மாநிலத் திட்டத்தின் செயல்பாட்டினை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்பார்வையிட்டு தேவையான தொடர் நடவடிக்கைகளை எடுத்தல்.

18.பார்வையற்ற மாணவர்களுக்கு எழுத்தர் உதவியளிக்கும் பொருட்டு கிராம ஊராட்சிகள் மேற்கொள்ளும் திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்பார்வையிட்டு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1.ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பெறப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பு, பதிவுகள் செய்யப்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு புள்ளி விவரங்கள், உடல் ஊனமுற்றோர் விவரங்கள், குழந்தை தொழிலாளர்கள், சாலையோர குழந்தைகள், மாவட்டத்தில் உள்ள முதியோர்,பிச்சைக்காரர்கள் மற்றும் போதை பழக்கக விளைவுகளால் பாதிக்கப்பட்டவர்கள், சமுதாயத்தில் வழிீ தவறிய பெண்கள் ஆகியோர் சார்ந்த விவரங்களடங்கிய பட்டியல்களின் அடிப்படையில் ஆய்வு அறிக்கைகள் தயாரித்து அதனை திட்ட மேம்பாட்டிற்காக பயன்படுத்துதல்.

2.மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் சமூக நலன் சார்ந்த் திட்டங்கள், மறுவாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பிற்கான திட்டங்களை மாவட்ட ஊராட்சிகள் நேரிடையாகக மேற்பார்வையிட்டு, திட்டங்க்ள் திறம்பட செய்ய இயலாமல் தடுக்கும் தடைகளை களைந்து, துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதற்கான உததவிகளையும் தேவையான ஆதரவுகளையும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகளிடமிருந்து பெறுதல்.

3.திட்டங்களின் ஒட்டு மொத்த செயல்பாட்டில் மாவட்டத்தில் உள்ள அரசு சார தனியார் நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், ஆகியவற்றின் மூலம் கிடைக்கக்கூடிய வள ஆதாரங்களை ஆய்ந்து அதனைக் மேம்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல்.

4.முதியோர் இல்லங்களை நேரிடையாகப் பார்வையிட்டு ஆய்வு நடத்தி அதில் உள்ள குறைபாடுகளைக் களையவும், முதியோர்களுக்கு அரசு வழங்கும் ஓய்வூதியம், இலவச வேட்டி மற்றும் சேவைகள் முறையாக உரிய காலத்தில் வழங்கப்படுகின்றனவா என்பதனை பயனாளிடமிருந்து கேட்டு தெரிந்து கொண்டு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களின் கால முறையிலான கூட்டங்கள் நடத்தி குறைபாடுகளைக் களைய தேவையான மேல் நடவடிக்கைகள் எடுத்தல்.

5.போதை மருந்துகளை உட்கொள்ள தூண்டுவோரையும், போதை மருந்துகள் வியாபாரம் செய்வோரை அறவே ஒழிக்க சட்டபூர்வமான நடவடிக்கைகளை நீதித்துறை மற்றும் காவல் துறைகளின் துணை கொண்டு நடவடிக்கைகள் எடுத்தல்.

6.சமூக நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் சமூக நலன், உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு மற்றும் சமூக பாதுகாப்பு, இளம்குற்றவாளிகள், சாலையோர குழந்தைகள் மறுவாழ்வு, முதியோர் நலன், போதை மருந்து பழக்கத்தை ஒழித்தல், பிச்சைகாரர்களின் மறுவாழ்வு, சமுதாயத்தில் வழிதவறிய பெண்களுக்கு புணர்வாழ்வு ஆகிய அனைத்து திட்டங்களையும் செயலபடுத்த வேண்டி மாவட்டட ஊராட்சிகளிடம் அதிகாரங்களை வழங்கலாம். மாவட்ட நிலையில் இத்திட்டங்களை நிறைவேற்றுகின்ற பணியாளர்களே மாவட்ட ஊராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருதல்.

7.சமுதாய அளவில் உடல் ஊனமுறுவதற்கான முக்கிய காரணங்களையும், மன வளர்ச்சசி குன்றியோரை சமுதாயத்தில் ஒர் அங்கமாக நடத்துவதற்கும் தேவையான விழப்புணர்ச்சியினை பொது மக்களுக்கு அளிக்க செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிட்டு, சேவைகளை ஒருமித்தல்.

8.உடல் ஊனமுற்றோர் மற்றும் மன வளர்ச்சி குன்றியோரின் வளர்ச்சிக்காக செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களின் நிலை குறித்து ஆய்வு செய்ய கால முறையிலான கூட்டங்களைக் கூட்டி அதில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களை பங்கேற்கச் செய்து, மதிப்பீடு அறிக்கைகள் தயாரித்து முறையான நடவடிக்கைகள் எடுக்க கருத்துகள் மற்றும் அறிவுரைகள் வழங்குதல்,

9.திட்டங்களின் செயல்பாடு குறித்து சமூகநலத் துறையின் பணியாளர்களுக்கு வழங்கப்படும் அடிப்படை பயிற்சிகள் மற்றும் இதர பிற பயிற்சிகளையும் கால முறையாக மறு ஆய்வு செய்து, கருத்துக்களைத் தெரிவித்தல்.

10.ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பெறப்படும் மறுவாழ்வு குழந்தை தொழிலாளர்கள் மற்றும் சாலையோரக் குழந்தைகள் குறித்து புள்ளி விவரங்களைக் கொண்டு ஆராய்ச்சி மேற்கொண்டு திட்டத்தினை மேற்பார்வை செய்தல்.

11.பெண்கள் மற்றும் ஆண்களுக்கான இரவு பாதுகாப்பு மையங்கள் மற்றும் பகல் நேர பராமரிப்பு மையங்கள் முறையாக செயல்படுகின்றனவா என்பதனை மா.ஊ.தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நேரடியாக பார்வையிட்டு, திட்டங்களின் சீரிய செயல்பாட்டினை உறுதி செய்தல்.

12.மாவட்ட ஊராட்சிகள், முதியோர் நலன் சார்ந்த திட்டங்களுக்கான கிராம ஊராட்சிகள் வாரியான புள்ளி விவரங்ககளைள ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகப் பெற்று அவற்றை மாவட்ட அளவில் ஏற்படுத்து பராமரித்தல்.

13.பிச்சைக்ககாரர்கள், குழந்தைக் தொழிலாளர்கள் ஆகியோருக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு நடத்தப்படும் இல்லங்களை மா.ஊராட்சி தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நேரிடையாகக பார்வையிட்டு இல்லங்கள் நன்முறையில் பராமரிக்கப்பட தேவையான அறிவுரைகளை வழங்குதல்.

14. 1986ம் ஆண்டின் வழி தவறிய சீறார்கள் சட்டத்தின் கூறுகளின் படி சிற்றுராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கும் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

(அ).இளம் குற்றாவாளிகள் மற்றும் சமுதாயத்தில் வழி தவறிய பெண்களுக்கான திட்டங்கள் இதர இரு உள்ளாட்சி அமைப்புகள் மட்டத்தில் திறம்படச் செயல்படுகின்றனவா என்பதனை உறுதி செய்தல்.(ஆ).இது குறித்து செயல்படுத்தப்படும் திட்டங்களை மேற்பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு கருத்துக்கள் தெரிவித்தல்.(இ).ஊராட்சி ஒன்றிய அளவில் மேற்கொள்ளப்படும் இளைஞர் நிதி நிர்வாகத்திற்கான நாணயத்தினை பெறுவதில் உதவுவதல். (ஈ).சமூக ஒழுக்க நெறிகள் சார்ந்த அறிவு மற்றும் விழிப்புணர்வினைப் பரப்ப, பள்ளிக் கல்வி பாட திட்டத்தில் சேர்க்க உறுதிபடுத்துதல். (உ).ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் சமூக நலத் துறையின் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் மாதாந்திர ஆய்வுக் கூட்டங்களை நடத்தி தக்க அறிவுரைகள் வழங்கல்.

15.கல்வி நிறுவனங்களிலும் அரசுத் துறைகளிலும், உடல் ஊனமுற்றோர்கான இட ஒதுக்கீடுகள் முறையாக கடைப்பிடிகக்கப்படுகின்றதா என்பதனை மேற்பார்வையிட்டு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு ஆய்வு மேற்கொள்ளுதல்.

16.போதை மருந்து பழக்கம் மற்றும் இதர உயிர் போக்கும் தீய பழக்கங்களுக்கு பொது மக்கள் குறிப்பாக இளைஞர்கள் அடிமையாகமால் இருக்க வேண்டி கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியம் எடுக்கும் விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு மாவட்ட அளவில் துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள், திட்டத்திற்கு பொது நிதி ஆதாரங்களை வலுப்படுத்துதல் ஆகிய பணிகளில் மாவட்ட ஊராட்சி உதவுதல். இத்திட்ட பயனாளிகளுக்கென நடத்தப்படும் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு இல்லங்களை பார்வையிட்டு காணப்படும் குறைபாடுகளை களைய சமூக நலக் துறைக்கு மா.ஊராட்சி உதவலாம்

17.குடும்ப நல கலந்தாய்வு மையங்களை மாவட்டங்களிளல் அமைத்து கலந்துரையாடல்கள் நடைபெற்று இதன் மூலம் சிறு குடும்ப நெறி சமூகப் பாதுகாப்பு போன்ற முக்கியமான அம்சங்கள் பாதுகாக்கப்பட சமூக நலத்துறைக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மா.ஊராட்சி உதவலாம். சமுதாயத்தில் உழைத்துப் பிழைக்காமல் பிச்சை எடுக்கும் பெரியவர்கள் மற்றும் சிறுவர்கள் மேல் சட்டத்தில் உள்ள சரத்துக்களின் படி நடவடிக்கைகளில் மேற்

கொள்ள காவல்துறை, நீதித்துறை மற்றும் இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கு உதவுதல்.

18.மாவட்டத்தில் இனம் காணப்பட்ட இளம் குற்றாவாளிகளுக்கான சமூக சரிபடுத்தல்களின் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கான நலச் சீர்திருத்தநிலையங்கள், கண்காணிப்பு நிறுவனங்கள் மற்றும் அரசு பொறுப்பேற்றுள்ள பள்ளிகள் ஆகியவற்றின் அமைப்பு மற்றும் செயல்பாட்டிற்கான திட்டங்கள், குடிப்பழக்கத்தின் தீமைகளை பொதுமக்களுக்கு உணர்த்துவது, இதில் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது, முதியோர் இல்லம் செயல்பாடு, பார்வையற்ற மாணவர்களுக்கு எழுத்து உதவி வழங்கல் திட்டம் போன்ற நலத் திட்டங்கள் சார்ந்த பொருட்கள் மாவட்ட திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பெறப்படும் புள்ளி விவரங்களை ஆய்வு செய்வதன் மூலம் கிடைக்கும் தகவல்களைச் கொண்டும் இதர பிற விவரங்களைக் கொண்டும், மாவட்ட ஊராட்சி திட்டங்களை தயார் செய்தல்.

# 27. பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினரின் நலிந்தோர் நலன்

1991-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கின்படி தமிழ்நாட்டில் 107.12 இலட்சம் பட்டியல் சாதியின மக்களும் 5.74 இலட்சம் பட்டியல் பழங்குடியின மக்களும் உள்ளனர். பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினரை மேம்படுத்தி வளர்ச்சி அடைய மாநில அரசு பல்வேறு துறைகள் மூலம் படிப்புதவித் தொகை, கல்விக்கடன், சீருடைகள், பாடப்புத்தகங்கள் வழங்குதல், தொடக்கநிலை, இடைநிலை மற்றும் மேல்நிலை ஆகிய நிலைகளில் தனிப் பள்ளிகள் நடத்துதல், வீட்டுமனைகள், கறவை மாடுகள் மற்றும் உழவு மாடுகள் வழங்குதல், ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கடன் வழங்குதல் போன்ற திட்டங்களை பல்வேறு துறைகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினரின் சமூக நீதியைக் காக்க 1955- ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு ஆணை(நிலை)எண்.77, ஊரக வளர்ச்சித் துறை நாள் 25.4.98-ல் (அ) பட்டியல் இன மற்றும் பழங்குடியினர் நலனுக்காக செயற்படுத்தப்பட்டுவரும் பிற

நல திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் மேற்பார்வையிடுதல் உதவுதல், இடுகாடு/ சுடுகாட்டிற்கு நடைபாதைகள் அமைக்கும் திட்டம், சமுதாய கூடம், துணி வெளுக்கும் இடம் கட்டுதல் போன்ற திட்டங்களை செயற்படுத்துதல், வீட்டு மனைகளுக்கு வகை செய்யும் திட்டங்களுக்கும் மின்வசதி அளித்தல் தொடர்பாக உதவி செய்பவர்களையும், கலப்பு திருமண பரிசு திட்டம் பயனாளிகளையும் மற்றும் சிறு வியாபாரத் திட்டத்தில் பயனாளிகளையும், கண்டறிதல், 1955 ஆம் ஆண்டு குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டு வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றை செயல்படுத்த காவல் துறையினருக்கு ஒத்துழைத்தல், பொது மக்களிடம் தீண்டாமை ஒழிப்பை பரப்புதல் ஆகிய திட்டங்களை ஊராட்சிகளுக்கும், (ஆ) கொத்தடிமை தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு திட்டம், பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களுக்கான சிறப்பு பயிற்சி திட்டங்களுக்கு திட்டமிடல் , 1955 ஆம் ஆண்டு குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றை செயல்படுத்த காவல் துறையினருக்கு ஒத்துழைத்தல், பொது மக்களிடம் தீண்டாமை ஒழிப்பை பரப்புதல் ஆகிய பொறுப்புகள் ஊராட்சி ஒன்றியங்களுக்கும், (இ) இடுகாடு, சுடுகாடு நடைபாதை அமைத்தல், துணி வெளுக்கும் இடங்கள் மற்றும் சமுதாயக்கூடங்கள் கட்டுதல் மற்றம் பிற திட்டங்கள் மேற்பார்வை செய்தல் மாவட்ட ஊராட்சிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் உரிமைகள், பொறுப்புகள் வழங்க ஆராய்ந்த குழு கீழ்கண்டவற்றை மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்க பரிந்துரை செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்

1.ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி மற்றும் எழுத்தறிவு மேம்பாடு நிலைகளை மதிப்பீடுசெய்து புள்ளி விவரங்களை ஆவணமாக தொகுத்து ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்புதல்.

2கல்வியை இடையில் நிறுத்தியவர்களின் எண்ணிக்கைய குறைக்கும் நடவடிக்கைகளில் உதவுதல்.

3. ஊரக அளவில் பள்ளி குழந்தைகளின் நல்வாழ்வுத் தேவைகளை அளிக்க செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு உதவுதல்.

4.குறைந்த விழுக்காடு மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தல் மற்றும் மாணவர்களுக்கு ஊக்கம் அளிப்பதை உறுதி செய்தல்.

5.பழங்குடி மாணவர்களுக்கிடையே குறைந்தபட்ச எழுத்தறிவு திட்டத்தை செயல்படுத்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவுதல் .

6. பள்ளிகள், உள்ளுறை பள்ளிகள் போன்றவற்றிற்கு தண்ணீர் வகதியுடன் கூடிய கழிவறைகள் கட்டுதல், குடிநீர் வழங்கல், வகுப்பறைகள், கற்பிப்பு உதவிபொருட்கள், அறிவியல் பரிசோதனை கூடங்கள ஆகிய அடிப்படை சாதனங்கள் மற்றும் உள்ளமைப்பு வசதிகளையும் அளிக்க ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவுதல்.

7. தொழில் பயிற்சியளிப்பதற்காக ஊராட்சியில் உள்ள பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களைக் கண்டறிந்து அப்பட்டியலை ஊராட்சி ஒன்றியத்திற்கு அளித்தல்.

8.பள்ளிகள் மற்றும் விடுதிகள் திறத்தல், கட்டுதல் போன்ற தேவைகளை அறிந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு தகவல் அளித்தல்.

9.பள்ளிகளை மேல்நிலை தகுதி பெற முயற்சி செய்தல்.

10.ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வீட்டு மனைகளுக்கு தேவையான நிலத்தை கண்டறிந்து கையகபடுத்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு தகவல் அளித்தல்.

11.ஆதிதிராவிடகுடியிருப்புகளுக்கு தெருவிளக்கு அமைத்தல், குடிநீர் வழங்குதல், மின்சாரம் வழங்குதல், சாலைகள் அமைத்தல் போன்ற திட்டங்களை செயல்படுத்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவுதல்.

12.ஊக்கத் தொகை மற்றும் கடன் பெறுவதற்காக பயனாளிகளை தேர்ந்தெடுக்க உதவுதல்.

13.சுய வேலை வாய்ப்பு, தனி நபர் தொழில் முனைவோர் மற்றும் குழு நடவடிக்கைகள், ஆகியவற்றிற்கான உதவியின் கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியனரின் குடும்பங்களை கண்டறிய உதவுதல் மேலும் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டதொகை பயன்படுத்துவதை உறுதி செய்தல், திட்டங்களின் முன்னேற்றத்தை காலமுறைப்படி மறு ஆய்வு செய்தல்.

14.1955ஆம் ஆண்டு குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989ஆம் ஆண்டு வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்படி பொதுகுடிநீர் ஆதாரம், சுடுகாடு, கிராம தேநீரகத்தில் இரட்டை குவளை பயனபடுத்துதல், வழிபாட்டுத் தலங்களில செல்லத் தடை , முடிதிருத்துபவர், சலவையளர் பணிகளை செய்ய மறுத்தல், திருமண ஊர்வலம் செல்ல தடை செய்தல் போன்ற வன்கொடுமைகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படாமல் நடவடிக்கைகளை கண்டறிந்து காவல் துறைக்கு புகார் அனுப்புதல்.

15.1995ம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்பு சட்டம் மற்றும் 1989ம் ஆண்டு வன்கொடுமை தடுப்புச் சட்டம் ஆகியவற்றை வட்டார மொழியில் மொழி பெயர்த்து மக்கள் அறிய உதவுதல்.

16.தீண்டாமைய ஒழிப்பதற்கு சமூக ஆதரவை திரட்டுதல்.

17.நில உச்ச வரம்பு சட்டத்தின் கீழ் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட நிலங்கள் உடைமையாக்கப் பெறுவதை உறுதி செய்ய உதவுதல்.

18.மதிப்பற்ற மரபு தொழில்களான பிணத்தை எடுத்துச் செல்லல், டாம் டாம் அடித்தல், புதை குழியைத் தோண்டுதல் முதலிய பணிகளை செய்ய துண்புறுத்தாமல் இருப்பதை உறுதி செய்தல்.

19.கொத்தடிமை தொழிலாளர்களின் மறுவாழ்வுக்காக, கிராமத்தில் உள்ள கொத்தடிமை தொழிலாளர்களின் எண்ணிக்கையை மதிப்பீடு செய்ய

நடவடிக்கை மேற்கொள்ளுதல். 1976ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டம் கட்டாயமாக்கப்படுவதை உறுதி செய்தல்.

20. துப்புரவாளாகள் மற்றும் அவர்கள் சார்ந்தவர்களுக்கான மறுவாழ்வுக்காக தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் பயனாளிகளை கண்டறிய ஆய்வு நடவடிக்கைகள மேற்கொள்ளுதல்.

21. மனித கழிவுகளைத் தாமே சுமந்து அகற்றுகின்ற பணியிலிருந்து அவர்களை விடுவிப்பதிலும், பல்வேறு வகையான நடவடிக்கைகளுக்கு அவாகளுக்கு நிதியுதவியுடன் மறுவாழ்வு அளிப்பதற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவுதல்.

22. பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்காக நடத்தப்படும் பள்ளிகளையும் விடுதிகளையும் மேற்பார்வையிட்டு சம்பந்தப்பட்ட அலுவலருக்கு தகவல் அனுப்புதல்.

23. ஆதி திராவிடர் மாணவர்கள் கல்லூரிப் படிப்பை தொடர்வதற்கு முதலமைச்சர் தகுதி விருதுக்கு பயனாளிகள் தெரிவு செய்தல்.

24. தொழில் நுட்பத்தில் பயிற்சி பெற்ற நபர்களுக்கு உவி செய்வதற்கும் இத்திட்டத்திற்கான பயனாளிகள் கண்டறிதல்

25. இடுகாடு நில எடுப்பு தேவை கணிப்புப் பட்டியல் தயாரிக்கலாம். பாதை அமைக்க தேவையான நிதி பிரித்தளிக்கலாம். இப்பணிகள் பட்டியல் இனத்தவர்க்கே ஒப்படைக்க வேண்டும்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1.கிராம ஊராட்சியிலிருந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கிடையே உள்ள கல்வி நிலைப் பற்றி மதிப்பிட்டு அறிக்கைகளை திரட்டி அவற்றை ஒருங்கிணைத்து மாவட்ட ஊராட்சிகளுக்கு அனுப்புதல்.

2.குறித்த காலத்தில் பாடநூல்கள், சீருடைகள், படிப்பு உதவித்தொகை ஆகியவை மாணவர்களுக்கு கிடைக்கச் செய்தல்.

3.பள்ளிகள், உள்ளூர் பள்ளிகள் மற்றும் விடுதிகள் ஆகியவற்றிற்கு அடிப்படை சாதனங்களையும் உள்ளமைப்பு வசதிகளையும் அளிப்பதை உறுதி செய்தல். காலமுறைப்படி மறு ஆய்வு கூட்டங்களை நடத்தி இடைவெளியை கண்டறிந்து சரிபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆலோசனை வழங்குதல்.

4.வீட்டு வசதிகள் மற்றும் வீட்டு மனைகளுக்கு நிலத்தை கையகபடுத்தி அரசால் நடத்தப் பெறும் ஊக்குதவித்தொகை வழங்கும் ஆதரவு திட்டங்களின் கீழ் வீடுகளை கட்டும் பணியை மேற்கொள்ளுதல், வீட்டு மனைகள் வழங்குதல், வசதி மற்றும் சாதனங்கள் ஆகியவற்றை அளிக்க பல்வேறு துறைகளால் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை சீராய்வு செய்து ஒருங்கிணைத்தல்.

5.பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவித் தொகை மற்றும் கடன் வசதிகளுக்கு வழிவகை செய்வதை உறுதி செய்வதுடன் அவற்றை மேற்பார்வையிடுதல், சுய வேலை வாய்ப்பிற்கு வட்டார, ஒருங்கிணைத்த பழங்குடியினர் திட்ட அளவில் உதவி செய்தல்.

6.உள்ளமைப்பு மேம்பாடு திட்டங்களுக்காக பழங்குடியினர் வளர்ச்சித் திட்டங்ளை தயாரித்தல், மற்றும் சுயவேலை வாய்ப்பு, கூலி அடிப்படையிலான வேலை வாய்ப்பு, ஊரக துப்புரவு திட்டங்கள் முதலியவற்றிற்கு நிதியைப் பயன்படுத்துவதற்கும் திட்டத்தின் செயலாக்கத்தை மேற்பர்வையிடுதல்.

7.காலமுறைப்படி சீராய்வு கூட்டங்களை நடத்தி குறைகள கண்டறிந்து அவற்றை சரி செய்வதற்காக நடவடிக்கைகளை எடுத்தல்.

8.வட்டார நிலையில்ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு பயிற்சி திட்டங்களுக்கும், சிறப்பு பயிற்சிகளுக்கும் உதவுதல் மற்றும் பயிற்சி திட்டங்களின் செயல் விளைவுகளை மதிப்பீடு செய்ய காலமுறைப்படி சீராய்வு கூட்டங்களை நடத்துதல்.

9.தீண்டாமையை ஒழித்தல் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு எதிரான நடவடிக்கைகளை தடுக்க காவல் துறைக்கு உதவுதல்.

10. 1995ம் ஆண்டு குடியியில் உரிமைகள், பாதுகாப்பு சட்டம் குறித்த விழப்புணர்ச்சி முகாம்கள் அமைத்தல், ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2ம் நாள் தீண்டாமை ஒழிப்பு வாரம் கொண்டாடுவதை உறுதி செய்தல்.

11.துயறுற்றவர்களுக்கு சட்ட உதவி கிடைக்க உதவி செய்தல் மேலும் அதற்கான ஏற்பாடுகளை செய்தல்.

12.1989ம் ஆண்டு பட்டியலில் கண்டசாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன் கொடுமை தடுப்பு) சட்டத்திற்கு பரவலான விளம்பரம் அளிக்க ஏற்பாடு செய்தல்.

13.கிராமத்தில் உள்ள கொத்தடிமை தொழிலாளர்களின், எண்ணிக்கையை மதிப்பீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுதல், அறிக்கையை திரட்டி மாவட்ட ஊராட்சிக்கு அனுப்புதல்.

14.1976ம்ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டம் கட்டாயமாக்கப்படுவதை உறுதி செய்தல்.

15.ஊராட்சியிலிருந்து கொத்தடிமை தொழிலாளர்கள் பற்றிய மதிப்பீடு அறிக்கையை திரட்டி, ஒருங்கிணைத்து மாவட்ட ஊராட்சிக்கு அனுப்புதல் மேலும் 1976ம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டத்தின் படி மறுவாழ்வு நடவடிக்கைகள் செயற்படுத்துவதை மேற்பார்வையிடுதல்.

16.துப்புரவாளர்கள் மற்றும் அவர்கள் சார்ந்துள்ளவர்களுக்கான மறுவாழ்வு அளிக்க கிராம அளவில் மறுவாழ்வு நடவடிக்கைகள் செயலபடுத்தப்படுவதை மேற்பார்வையிடுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

17.மேற்கண்டவர்களுக்கு தடையின்றி ஆதாயங்கள் கிடைக்க பெறுவதை மதிப்பிட மறு ஆய்வு கூட்டங்கள் நடத்துதல்.

18. 3 முதல் 6 வரையிலான வகுப்பில் படிக்கும் தாழ்த்தப்பட்ட இனத்தைசேர்ந்த மாணவர்களிடையே கல்வியறிவை மேம்படுத்த உள்ள சிறப்பு ஊக்கத் திட்டத்தை மேற்பார்வையிடுதல்.

19.ஆதிதிராவிட மாணவர்கள் கல்லூரி படிப்பைத் தொடர்வதற்கு முதலமைச்சர் தகுதி விருது பெறுவதற்கு பயனாளிகள் தேர்வை மதிப்பீடு செய்தல்.

20.தொழில் நுட்பத்தில் பயிற்சி பெற்ற நபர்களுக்கு உதவி செய்தலை ஆய்வு செய்தல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1.ஆதிதிராவிடர், பழங்குடியினர் கொத்தடிமை தொழிலாளர்கள் மற்றும் துப்புரவாளர்கள் ஆகியோருக்கு தொடர்புள்ள ஆவன விபரங்கள், மதிப்பீடுகள் புலனாய்வு, அறிக்கைகள்ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து திரட்டுவதுடன் ஆண்டறிக்கையையும் தயாரித்தல்.

2.ஆதிதிராவிடர், பழங்குடியினர் கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் துப்புரவு தொழிலாளாகள் நலனுக்கு ஆண்டு தகுதிநிலை அறிக்கையை தயாரித்தல்.

3.ஊராட்சி ஒன்றியங்களுக்கு திட்டம் தீட்டுதலில், தொழில் நுட்ப தொடர்பான உதவிகளை அளித்தல்.

4.ஆதிதிராவிடர், பழங்குடியினர் கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் துப்புரவாளர்கள் ஆகியோருக்கு அளிக்கப்படும் பணிகள் மீதான ஆய்விற்காகவும், சமுதாயநடவடிக்கைகள விடுபடுத்தவும், தேர்ந்தெடுக்கப்படட சார்பாளர்களிடமிருந்து கருத்துக்களையும், உதவிகளையும் பெறுவதற்காக வேண்டி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

5.ஆதி திராவிடர் பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்திற்கு மேலாண்மை தகவல் அமைப்பு முறையை மாவட்ட அளவிலான அடிப்படை விபரங்களின் பேரில் உருவாக்குதலும் அதனை மேம்படுத்தலும், மேற்பார்வைசெய்தலும்.

6.ஆதிதிராவிடர், பழங்குடியினரின் கல்வித் தகுதியை பற்றிய ஆண்டறிக்யை தயாரித்தல், மேலும் அவர்களுக்கு கல்வி வசதிகளுக்கு வழிவகை செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்பார்வையிட்டு, காலமுறைப்படி சீராய்வு கூட்டங்கள நத்தி இடைவெளியை கண்டறிந்து அவற்றை சரி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7.ஆதிதிராவிடர், பழங்குடியினர்களுக்கு வீடு மற்றும் வீட்டுமனை வசதிகள் அளிக்கப்படுவதையும் அவர்கள் குடியிருப்பிடங்களில் அடிப்படை வசதிகள் செய்து தருவதையும் மேற்பார்வையடுதல்.

8.ஆதிதிராவிடர், பழங்குடியினர், சமூக முன்னேற்றம் அடையாத பழங்குடிகள் ஆகியோருக்கான பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் வேலைவாய்ப்பு வசதிகள் ஆகியவை அளிக்கப்படுவதை மேற்பார்வையிடுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

9.பயிற்சித் திட்டங்கள், சிறப்பு பயிற்சித் திட்டங்கள் ஆகியவற்றை செயல்படுத்துவதை மேற்பார்வையிடுதல்.

10.ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான தீண்டாமையை ஒழித்தல் மற்றும் எதிரான நடவடிக்கைகள் போன்ற ஊராட்சி ஒன்றியம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மேற்பார்வையிடுதல், மேலும் இது குறித்து சீராய்வுக் கூட்டங்களை நடத்துதல்.

11.கொத்தடிமை தொழிலாளர்களின் மறுவாழ்வுக்கு ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து மதிப்பீட்டு அறிக்கைகள பெற்று ஒருங்கிணைத்து அரசுக்கு அனுபுதல்.

12.1976ம் ஆண்டு கொத்தடிமை ஒழிப்பு முறை சட்டத்தின் படி மறு வாழ்வு நவடிக்கைகளை மேற்பார்வை செய்வதுடன் ஊராட்சி ஒன்றியத்திற்கு உதவி செய்தல் மேலும் சீராய்வுக் கூட்டங்கள நடத்தி இடைவெளியைக் கண்டறிந்து சரி செய்யும் நடவடிக்கை குறித்து ஆலோசனை வழங்குதல்.

13.ஊராட்சி ஒன்றிய நிலையில் துப்புரவாளர்கள் நலம் மற்றும் மறுவாழ்வு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல்.

14.ஆதி திராவிட மாணவர்கள் கல்லூரிப் படிப்பைத் தொடர்வதற்கு முதலமைச்சர் தகுதி விருதுக்கான திட்டத்தை மேற்பார்வையிடுதல்.

15.தொழில் நுட்பத்தில் பயிற்சி பெற்ற நபர்களுக்கு உதவி செய்தல் மேலும் திட்டமிடுதலும் மேற்பார்வையிடுதலும்.

16.பல்வேறு திட்டங்கள் மற்றும் வீடு மேம்பாட்டின் கீழ் வீடுகள் கட்டுதல், வீட்டு மனைகளுக்கு வகை செய்யும் திட்டங்களை மேற்பார்வையிடுதல், அதற்காக திட்டமிடுதல்.

17.பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடி இன மாணவர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ள கல்விச் சலுகைகளை (புத்தகங்கள், சீருடைகள், படிப்பு உதவி தொகைகள் முதலியன) திட்டமிட்டு மேற்பார்வை செய்தல்.

# 28. பொதுவிநியோக முறை

ஊராட்சித் தலைவர்கள் அவ்வூராட்சியிலுள்ள நியாய விலைக் கடைகளை ஆய்வு செய்யும் பொருட்டு ஊராட்சி அளவிலான குழுவில் ஒரு உறுப்பினராக இருப்பதற்கும், ஊராட்சி உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் நியாய விலைக் கடைகளை பார்வையிடுதல், குறைகள் ஏதும் காணப்பட்டால் மாநில மற்றும் வருவாய் கோட்ட அளவிலான அமைப்புகளுக்கு தெரிவித்தல் போன்ற பொறுப்புக்களை அரசாணை எண்.75, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 14.3.97-ல் கிராம ஊராட்சிகளுக்கும், இக்கடைகளை பார்வையிடவும், குறைகள் தெரிவிக்க ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கும் அரசு ஆணை எண்.203, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 29.7.97-ல் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்து மேலும் ஊராட்சி அமைப்புகளுக்கு பொறுப்புகளை வழங்க ஆராய்ந்த இக்குழு கீழ்க்கண்ட பரிந்துரைகளைச் செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்

1. பொது விநியோக முறை ஊராட்சியில் எந்தெந்த பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான பகுதியை அடையாளம் காணல் மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் குடும்பத்தினரைக் கண்டறிந்து, அப்பட்டியலை பெற்று கிராம சபையால் அதற்கு உரியவாறு ஏற்பளித்தல் மற்றும் பின்னேற்பு அளித்தல்.

2. பொது விநியோக முறைத் திட்டத்தின் கீழ் எளிதில் கிடைக்கும் இன்றியமையாப் பொருட்களின் நடமாட்டம், தேவை ஆகியவற்றை மதிப்பிட்டு கடைகளில் பொருட்களின் இருப்பு விவரம், விலை விவரம் மாதத்திற்கு ஒருவருக்கு வழங்கக்கூடிய விநியோக அளவு, பொருட்கள் வாங்கக்கூடிய காலங்கள் போன்ற விவரங்களை மக்களுக்கு தெரியப்படுத்தல். உணவுப் பொருட்கள் இடையூறு இன்றி மக்களுக்கு கிடைப்பதற்கான அதற்கான சாத்தியகூறுகளை ஆய்வு செய்து ஒருங்கிணைத்தல். பொருட்களின் கூடுதல் தேவையை உள்ளூர் மக்களின் தேவைக்கேற்ப கண்டறிந்து உரிய அதிகாரிகளிடம் தெரிவித்தல்.

3. கிராம ஊராட்சிகள் நியாய விலைக்கடைகளை நடத்தி பராமரித்தல் அல்லது பகுதிநேர நியாய விலைக்கடைகளை அமைக்க அதற்கான இடத்தை தேர்ந்தெடுத்தல்.

4. உணவுப் பொருளை சேமித்து வைத்தல் மற்றும் பொது விநியோக முறையை முறைப்படுத்துதல், புதிய குடும்ப அட்டைகளை வழங்க உதவுதல் மற்றும் போலி குடும்ப அட்டைகளை அடையாளங்கண்டு ஒழித்தல்.

5. நியாய விலைக்கடைகள் மற்றும் பொது விநியோக முறை தொடர்பாக பொதுமக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்திட அவற்றின் செயல்பாடுகளை உயர்த்துதல் மற்றும் மக்களின் பொது விநியோக முறை தொடர்பான குறைகளை தீர்த்தல். கிராம அளவில் பொது விநியோக முறையில் குறைகளுக்கான தீர்வு காண விசாரணைக்குழு அமைத்து நியாய விலைக்டைகளில் திடீர் சோதனை செய்து ஒழுங்கீனங்கள், முறைகேடுகளை கண்டறிந்து அவற்றை வட்டார வழங்கல் அதிகாரிகளிடம் அல்லது ஊராட்சி

ஒன்றியத்திடம் தெரிவித்தல்.

6. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், தீவிரமான வேலைவாய்ப்புத் திட்டம், வேலை உறுதி அளிப்புத் திட்டம் முதலான வறுமை ஒழிப்புத் திட்டங்களுடன் பொது விநியோக முறை தொடர்பு படுத்தி அல்லது ஒருங்கிணைத்து செயல்படுத்துதல். இத்திட்டங்களுக்கு தேவையான உணவு தானியங்களின் அளவினை மதிப்பிட்டு அவற்றை பயனடைவோருக்கு பிரித்து வழங்கிட உதவுதல். அத்தானியங்களின் தரத்தினை கவனித்து ஒழுங்கீனங்களையும், முறைகேடுகளையும் கண்டுபிடித்து அவற்றை சரிசெய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

7. பொதுவிநியோக முறை நுகர்வோர்களுடன் மிகவும் தொடர்புடைய துறையாகும். எனவே கிராம ஊராட்சிகள் நுகர்வோர் பாதுகாப்பு கல்வி மற்றும் நுகர்வோர் உரிமைகள் பற்றிய விவரங்களில் கவனம் செலுத்தி அது தொடர்பான செய்திகளை அச்சிட்டு வழங்குதல் மற்றும் காட்சிக்கு வைத்தல்.

8. பொதுவிநியோக முறையில் புதிய நியாய விலைக்கடைகள் மற்றும் பகுதிநேர நியாய விலைக் கடைகளை திறக்க உதவுதல் மற்றும் அக்கடைகளைப் பராமரித்தல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. பொது விநியோக முறைக்கான பகுதியை அடையாளம் கண்டறிதல், கிராம ஊராட்சிகளுக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழ் வசிப்பவர்களை அடையாளம் காண வழிகாட்டியும் ஒருங்கிணைந்தும் செயல்படல்.

2. பொது விநியோகத் திட்டத்தில் எளிதில் கிடைக்கக்கூடிய மற்றும் இன்றியமையாய் பொருட்களின் நடமாட்டம், தேவை ஆகியவற்றை மதிப்பிடுதல். இன்றியமையாப் பொருட்கள் தடங்களின்றி கிடைப்பதற்கு உதவுதல் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உதவிடல்.

3. பொதுவிநியோக திட்டத்தில் இன்றியமையா பொருட்களின் போக்குவரத்து, அவற்றை சேமித்து வைத்தல் மற்றும் விநியோக முறை ஊராட்சிகளில்

ஒருங்கிணைந்து செயல்படல். புதிய நியாயவிலைக்கடைகளை ஊராட்சி ஒன்றிய அதிகார எல்லையில் திறக்க ஒருங்கிணைப்பு ஏற்படுத்தி உதவுதல். பொது விநியோக முறைக்குத் தேவையான சேமிப்பு கிடங்குகள் அமைக்க இடத்தை தேர்ந்தெடுக்க உதவுதல். ஊராட்சிகளில் புதிய குடும்ப அட்டைகள் வழங்க மற்றும் போலி அட்டைகளை நீக்கவும் வழிகாட்டுதல்.

4. பொது விநியோக முறை சிறப்பாக நடைபெற ஊராட்சி ஒன்றிய அளவில் குழு அமைத்து மேற்பார்வையிட்டு பொது விநியோக முறைக்கு மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துதல். பொது விநியோக முறைக்கு வழங்கும் பொருட்களின் விவரங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், வட்டார வழங்கல் அலுவலகம் மற்றும் பிற அலுவலகங்களிடமிருந்து பெறுதல்.

5. குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை ஊராட்சிகளிடமிருந்து பொது விநியோக முறை தொடர்பாக அறிக்கை பெற்று அதனை ஆய்வு செய்து மேல்நடவடிக்கை எடுத்தல்.

6. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், தீவிர ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், வேலை உறுதியளிப்பது திட்டம் முதலான வறுமை ஒழிப்புத் திட்டங்களுடன் பொது விநியோக முறையை தொடர்பு படுத்தி கூலியின் ஒரு பகுதியாக வழங்கக்கூடிய உணவு தானியங்களை வழங்கல்.

7. நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான கல்வி, நுகர்வோர் ஊக்குவிப்புப் பணிகளுக்கு ஊராட்சிகளுக்கு உதவி செய்தல்.

8. பொது விநியோக முறையில் புதிய நியாய விலைக்கடைகளை திறக்க ஊராட்சிகளுக்கு அறிவுரை வழங்கல் மற்றும் ஆய்வு செய்தல்.

9. பகுதிநேர நியாய விலைக்கடைகளின் செயல்பாட்டினை ஆய்வு செய்தல்.

10. ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் நுகர்வோர் கல்வி மற்றும் பாதுகாப்புக்கான உதவிகளைச் செய்தல் மற்றும் ஆய்வு செய்தல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. பொது விநியோக முறையின் கீழ் மாவட்டத்தில் புதிய நியாய விலை கடைகளையும், பகுதிநேர நியாய விலைக் கடைகளையும் திறக்க திட்டமிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

2. நுகர்வோர் கல்வி மற்றும் நுகர்வோர் பாதுகாப்புக்கான உதவிகளைச் செய்தல் நுகர்வோர் கல்வி மற்றும் பாதுகாப்புத் திட்டங்களின் செயல்பாடுகளை பார்வையிடுதல் மற்றும் ஆய்வு.

# 29. சமூக சொத்துக்களைப் பேணுதல்.

உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சமுதாய சொத்துக்களை கண்டறிந்து, அவற்றினை பராமரிப்பதற்கு வரி விதித்தல், சுங்கம் வசூலித்தல் மூலம் ஊராட்சி மன்றங்கள் வருவாயினை பெருக்கி கொள்வதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் அரசாணை நிலை(எண்.) 297, ஊரக வளர்ச்சித் துறை நாள் 29.9.97 மூலம் சமுதாய சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்வோர், சேதம் விளைவிப்போர் மற்றும் தவறாக பயன்படுத்துபவர்களை கண்டறிந்து அவற்றினை பாதுகாத்தல், அச்சொத்துக்களை பதிவு செய்தல், பயன்படுத்துபவர்களிடமிருந்து கட்டணங்கள் வசூலித்தல் ஆகியவற்றினை கண்டறிதல் மற்றும் திட்டமிடல், குத்தகை, விற்பனை, மாற்றம் ஆகியவற்றிற்கான கருத்துரு வழங்குதல், திட்டமிடுதல் மற்றும் மேற்பார்வையிடல் போன்ற பொறுப்புகளை மூன்று அடுக்கு உள்ளாட்சிகளுக்கு வழங்கி அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இப்பொருள் குறித்து மேலும் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க ஆராய்ந்த இக்குழு கீழ்க்கண்ட பரிந்துரைகளை செய்கின்றது.

## கிராம ஊராட்சிகள்.

1. கிராம ஊராட்சியின் ஆளுகையிலுள்ள பல்வேறு சமூகச் சொத்துக்களை கண்டறிந்து முறையான "கிராம ஊராட்சி சொத்துக்கள் பதிவேடு"-ல் பதிவு செய்து பராமரிக்க வேண்டும். இதே போல் அந்த கிராமத்திற்கு சொந்தமான அனைத்து அசையும்/ அசையா சொத்துக்களை ஓர் தனி பதிவேட்டில் பதிவு செய்தல்.

2. பல்வேறு துறைகள் மூலம் கிராம ஊராட்சி பொது சொத்துக்களை உதாரணமாக கட்டிடங்கள், வணிக வளாகங்கள், பொருட்காட்சி இடம், சந்தைகள், பள்ளிக்கட்டிடங்கள் போன்றவற்றை ஒப்படைக்கும் போது அதனை பேணிப் பாதுகாக்க தேவையான " கிராம பொது நிதிக் குழுமத்தை" உருவாக்கி அதில் வரும் வட்டி தொகையைக் கொண்டு சொத்துக்களை பராமரிக்க பயன்படுத்தலாம்.

3. வணிக மற்றும் பிற சொத்துக்களுக்கான வரி, வாடகை, உபயோகிப்போர் கட்டணம் நிர்ணயித்தல் மற்றும் வசூலித்தல்.

4. கிராம ஊராட்சி பகுதியிலுள்ள சொத்துக்களை குத்தகைக்குவிட்டு வாடகை வசூலிக்கலாம்.

5. ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள சமூக சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தப்படாமல் மேற்பார்வையிடுவதும், ஆக்கிரமிப்பு மற்றும் இழப்பீடு ஏற்படாமல் விழிப்போடு இருப்பதுடன் அவ்வாறு நடந்தால் தேவையான நேரத்தில் அதற்கான சட்டபடி நடவடிக்கைகள் எடுத்தல்.

6. சமூக சொத்துக்களை மேம்படுத்தவும் பேணிப் பாதுகாக்கவும் தேவையான நிதி ஆதாரங்களையும் நன்கொடையாக பெறுதல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்.

1. ஊராட்சி ஒன்றியத்தின் சொத்துக்களை கண்டறிந்து அவ்விவரங்களை முறையாக ஊராட்சி ஒன்றிய சொத்து விவர பட்டியலில் பதித்து பராமரிக்கவும் அவற்றை பேணுதலுக்காக மதிப்பீடு செய்து தேவையான பராமரிப்பு நிதியினை திரட்டலாம்.

2. ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைக்கப்படும் அல்லது சொந்தமான கட்டிடங்கள், வணிக வளாகங்கள், நிலம் பொருட்காட்சி இடம், சந்தைகள் , பள்ளிக்கூடங்கள் போன்றவற்றை பேணிப் பாதுகாக்க தேவையான ""ஊராட்சி ஒன்றிய பொது நிதி குழுமத்தை உருவாக்கி அதில் வருட் வட்டித்

தொகையைக் கட்டிடங்கள் பராமரிக்க பயன்படுத்தலாம்.

3. வணிக மற்றும் பிற சொத்துக்களுக்கான வரி, வாடகை, உபயோகிப்போர் கட்டணம் ஆகியவற்றை நிர்ணயித்து வசூலித்தல் .

4. ஊராட்சி ஒன்றிய சொத்துக்களை , குத்தகைக்குவிடவும் அதற்குரிய வாடகை வசூலிக்கலாம்.

5. சமூகச் சொத்துக்களை தவறாக பயன்படுத்தப்படாமல் மேற்பார்வையியடுவதும், ஆக்கிரமிப்பு மற்றும் இழப்பீடு ஏற்படாமல் விழிப்போடு இருத்தலும், அவ்வாறு நடந்தால் தேவையான நேரத்தில் அதற்கான சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கலாம்.

6. சமூகச் சொத்துக்களை மேம்படுத்தவும், பேணி பாதுகாக்கவும் தேவையான நிதி ஆதாரங்களை நன்கொடையாகப் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தர்மஸ்தாபனங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து பெறுதல்.

## மாவட்ட ஊராட்சிகள்.

1. மாவட்ட ஊராட்சியின் சொத்துக்களை கண்டறிந்து அவற்றை "மாவட்ட ஊராட்சி சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்து பராமரிக்கலாம். மேலும் பராமரிப்பதற்காக அவற்றை மதிப்பீடு செய்து தேவையான பராமரிப்பு நிதியினை பெற ஏற்பாடு செய்தல்.

2. மாவட்ட ஊராட்சிகளுக்கு சொந்தமான கட்டிடங்கள்/ வணிக வளாகங்கள், பொருட்காட்சி இடங்கள், சந்தைகள் போன்றவற்றை கட்டி முடித்து ஒப்படைக்கும்போது அதனை பேணி பாதுகாக்க தேவையான மாவட்ட ஊராட்சி பொது நிதி குழுமத்தை உருவாக்கி அதில் வரும் வட்டித் தொகையைக் கொண்டு சொத்துக்களை பராமரிக்க பயன்படுத்தலாம்.

3. கடந்த ஜில்லா போர்டு கால கட்டத்தில் ஜில்லா போர்டுகளுக்கு சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் காலப் போக்கில் அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டது. இவைகளை கண்டறிந்து முறையாக மாவட்ட ஊராட்சி வசம் ஒப்படைக்கலாம்.

4. வணிக மற்றும் இதர சொத்துக்களுக்கான வரி, வாடகை, உபயோகிப்போர் கட்டணம் ஆகியவற்றை நிர்ணயித்து, அவற்றை வசூலித்தல்.

5. மாவட்ட அளவிலான சொத்துக்கள், குத்தகைக்கு விட்டு அதற்குண்டான வாடகை வசூலிக்கலாம்.

6. மாவட்ட அளவிலான சமுதாய சொத்துக்களை தவறாக பயன்படுத்தப்படாமல் மேற்பார்வையிடுவதுடன், ஆக்கிரமிப்பு மற்றும் இழப்பீடு ஏற்படாமல் விழிப்போடு இருத்தல் மற்றும் சட்டப்படியான நடவடிக்கை எடுத்தல்.

7. தங்கள் பொறுப்பிலுள்ள சொத்துக்களை மேம்படுத்தவும், பேணி பாதுகாக்கவும் தேவையான நிதி ஆதாரங்களை தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பொது மக்களிடம் நன்கொடைகளையும் பெறுதல்.

# இயல் - IV

## ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான திட்டமிடல்.

தமது சமூக பொருளாதார வளர்ச்சிக்காக ஊரக உள்ளாட்சி அமைப்புகள் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் கீழும், 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படியும் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை தயாரிக்க வேண்டும். தயாரிக்கப்பட்டு பெறப்படும். திட்ட ஆவணங்களை, சட்ட பூர்வமான அமைப்பாகிய மாவட்டத்திட்டக் குழு தொகுத்து, மாவட்ட வளர்ச்சித் திட்டத்தை உருவாக்க வேண்டும். இவ்வாறு ஆண்டுதோறும் தயாரிக்கப்படும் திட்டமானது ஐந்தாண்டுகளுக்கான திட்டமாக மட்டுமின்றி தேசிய அளவிலான ஐந்தாண்டு திட்டங்களோடும் ஒருங்கிணைந்து உருவாக்கப்படுவதாக அமைய வேண்டும். மாவட்ட திட்டக்குழுவானது மாவட்ட முழுமைக்குமான தொலைநோக்கு திட்டத்தை பல்வேறு வளர்ச்சி முனைகளை உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட வேண்டும். தமிழ்நாடு அரசு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட திட்டக்குழுக்களை அமைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதோடு மாவட்ட திட்டக்குழுவிற்கு உதவும் வகையில் மாவட்ட திட்டமிடும் பிரிவை அனுமதிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. மாநில திட்டக்குழுவானது மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வளர்ச்சித் திட்டங்கள் தயாரிப்பதற்கான வழிமுறைகளை வகுக்கும்.

எனினும், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான வளர்ச்சித் திட்டத்தை உருவாக்குவதற்கு தனித்தனியே வெவ்வேறு அலுவலர்கள் ஒவ்வொரு பகுதி வளர்ச்சித் திட்டத்திற்கும் பொறுப்பாக்கப்பட வேண்டுமென இக்குழு பரிந்துரைக்கிறது.

அவ்வாறே உருவாக்கப்படும் பல்வேறு பகுதிக்கான திட்டங்கள் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டமாக கிராம ஊராட்சிகளுக்கு கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலராலும், ஊராட்சி ஒன்றிய வளர்ச்சித் திட்டங்களை வட்டார வளர்ச்சி அலுவலரும் மாவட்ட ஊராட்சியின் செயலாளர் மாவட்ட ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தையும் தயாரிக்க வேண்டுமென இந்தக்குழு பரிந்துரைக்கிறது.

மேலும் பின்வரும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் ஆண்டு வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டுமெனவும் இக்குழு பரிந்துரைக்கிறது.

கிராம ஊராட்சிகள் அடுத்து வரக்கூடிய நிதியாண்டுக்கான வளர்ச்சித் திட்டத்தை அக்டோபர் மாதத்திலேயே தயாரித்து, கிராம ஊராட்சி மற்றும் கிராம சபையின் ஒப்புதல் பெற்று ஊராட்சி ஒன்றியங்களுக்கு நவம்பர் மாதத்தில் அளிக்க வேண்டும்.

ஊராட்சி ஒன்றிய வளர்ச்சித் திட்டமானது வட்டார வளர்ச்சி அலுவலரால் கிராம ஊராட்சித் திட்டங்களையும் உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்டு டிசம்பர் மாதத்தில் ஊராட்சி ஒன்றியக்குழுவின் ஒப்புதல் பெற வேண்டும்.

மாவட்ட ஊராட்சி செயலாளர் ஊராட்சி ஒன்றிய வளர்ச்சித் திட்டத்தை தயாரித்து ஜனவரி மாதத்தில் மாவட்ட ஊராட்சியின் ஒப்புதல் பெறுவதோடு மாவட்ட திட்டக்குழுவிற்கும் அதனை சமர்ப்பிக்க வேண்டும்.

ஒருங்கிணைந்த மாவட்ட வளர்ச்சித் திட்டம், மாவட்ட திட்டக்குழுவினால் ஜனவரி 31ம் தேதிக்குள் மாநில திட்டக்குழுவிற்கு சமர்பிக்க வேண்டும்.

மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி அளவில் திட்டம் தயாரிப்பதற்கு பொறுப்பேற்கும் அரசு அலுவலர்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புக்கு திட்டம் தயாரித்தல்,

| வஎ | பொருள் | துறை | திட்டம் தயாரிக்க பொறுப்புடைய அதிகாரிகள் | | |
|---|---|---|---|---|---|
| | | | ஊராட்சி | ஊராட்சி ஒன்றியம் | மாவட்ட ஊராட்சி |
| | அனைத்து செயல் திட்டங்களையும் உள்ளடக்கிய ஆண்டு மற்றும் ஐந்தாண்டு திட்டம் தயாரித்தல் | | | | |
| 1. | பயிர் பாதுகாப்பு | வேளாண்மை மற்றும் தோட்டக் கலை | வேளாண்மை அலுவலர் தோட்டக்கலை அலுவலர் | உதவி வேளாண்மை அலுவலர் | இணை இயக்குநர், உதவி இயக்குநர் வேளாண்மை |
| 2. | மண்வளம், நீர்வளம், பாதுகாப்பு | வேளாண்மை மற்றும் வன துறை | வேளாண்மை அலுவலர்– வன சரகர் | மாவட்ட வன அலுவலர் | மாவட்ட வன அலுவலர் |
| 3.. | கால்நடை பராமரிப்பு | கால்நடை துறை | கால்நடை ஆய்வாளர் | உதவி இயக்குநர் | இணை இயக்குநர் |
| 4. | பால் வள மேம்பாடு | பால்வளத் துறை | பால் சேமிப்பு அதிகாரி | உதவி பதிவாளர், பால் உற்பத்தி மற்றும் வளர்ச்சி | மேலாண்மை இயக்குநர், பால் உற்பத்தி மற்றும் வளர்ச்சி |
| 5. | மீன்வளம் | மீன்வளத் துறை | மீன்வள ஆய்வாளர் | உதவி இயக்குநர், மீன் வளம் | உதவி இயக்குநர், மீன் வளம் |
| 6. | சமூக காடுகள் | காடு வள துறை | வன சரகர், சமூக காடுகள் | மாவட்ட வன அலுவலர், சமூக காடுகள் | இணை வன சரகர், (ச.கா) |
| 7. | கூட்டுறவு | கூட்டுறவுத் துறை | சார் பதிவாளர், கூட்டுறவு | துணை பதிவாளர், கூட்டுறவு | இணை பதிவாளர், கூட்டுறவு |
| 8. | ஊரக வளர்ச்சிக்கான சிறப்பு திட்டங்கள் | ஊரக வளர்ச்சித் துறை | விரிவாக்க அலுவலர் (ஊராட்சி) | வட்டார வளர்ச்சி அலுவலர் | திட்ட அலுவலர், மா.ஊ.வ.மு |
| 9. | நிலநீர் திருத்தம் | வருவாய் துறை | வருவாய் ஆய்யவாளர் | வட்டாட்சியர் | மாவட்ட வருவாய் அலுவலர் |
| 10. | சமுதாய மேம்பாடு | சமூக நலம் , சத்துணவு துறை | ஊர்நல அலுவலர் (சமூக நலம்) | விரிவாக்க அலுவலர், (சமூக நலம்) | மாவட்ட சமூக நல அலுவலர் |
| 11. | பெரிய மற்றும் நடுத்தர நீர்பாசனம் மற்றும் வெள்ள கட்டுப்பாடு | வருவாய் மற்றும் பொது பணித்துறை | லஸ்கர் மற்றும் கிராம நிர்வாக அதிகாரி | வருவாய் ஆய்வாளர், உதவி கோட்ட அலுவலர் (நீர் பாசனம்) | உதவி செயற்பொறி யாளர், (நீர்பாசனம்) மற்றும் வட்டாட்சியர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12. | சிறுபாசனம் | பொதுப்பணி த்துறை | லஸ்கர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் | வருவாய் ஆய்வாளர், உதவி கோட்ட அலுவலர் (நீ.ப,வே) அலுவலர் | செயற்பொறி யாளர் (நீர்பாசனம்) மற்றும் வட்டாட்சியர் |
| 13 | பாசன பகுதி மேம்பாடு | வேளாண்மை பொறியியல் துறை | உதவி பொறியாளர், | உதவி செயற்பொறி யாளர், | செயற் பொறியாளர், வேளாண்மை |
| 14. | பொதுக்கல்வி | கல்வித் துறை | – | உதவி கல்வி அலுவலர், சமூக நலம் | முதன்மை கல்வி அலுவலர் |
| 15. | தொழில் நுட்ப கல்வித் துறை | தொழில் நுட்ப கல்வித் துறை | ஊர் நல அலுவலர், உதவி கல்வி அலுவலர் | – | மேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 16. | இளைஞர் விளையாட்டு பணிகள் | கல்வித் துறை | மக்கள் நலப் பணியாளர், நேரு இளைஞர் இணைப் பாளர் | சமூக நல அலுவலர், விரிவாக்கம், கல்வி அலுவலர் | மாவட்ட விளையாட்டு அலுவலர் |
| 17. | கலை மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் | தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டு துறை | மக்கள் நல பணியாளர்க ள், ஊர் நல அலுவலர்கள் | விரிவாக்க அலுவலர் கல்வி மற்றும் விரிவாக்க அலுவலர் சமூக நலம் | உதவி இயக்குநர் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டு துறை |
| 18. | மருத்துவம் | மக்கள் நலம் மற்றும் குடும்ப நலம் | தாய் சேய் நல உதவியாளர் கள், ஆரம்ப சுகாதார நிலையம் | சுகாதார ஆய்வாளர், ஆரம்ப சுகாதரா நிலையம் | இணை இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் |
| 19. | பொது சுகாதாரம் | மக்கள் நலம் மற்றும் குடும்ப நலம் | கிராம சுகாதார செவிலியர் மற்றும் தாய் சேய் நல உதவியாளர் | மருத்துவ அலுவலர், ஆரம்ப சுகாதார நிலையம் | இணை இயக்குநர், மருத்துவ மற்றும் குடும்ப நல பணி |
| 20. | குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதாம் | ஊரக வளர்ச்சித் துறை | ஊர் நல அலுவலர் | சுகாதார ஆய்வாளர் | செயற் பொறியாளர், குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21. | குடியிருப்பு | வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி | கூட்டுறவு ஆய்வாளர் (வீடு) | உதவி இயக்குநர், கூட்டுறவு (வீடு) | நிர்வாக பொறியாளர் மற்றும் துணை பதிவாளர் |
| 22. | ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மற்றும்இதர பிற்பட்டோர் நலன் | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | ஆய்வாளர், ஆதிதிராவிடர் நலம் | தனி வட்டாட்சியர், ஆதிதிராவிடர் நலம் | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| 23. | ஊட்டச் சத்து | சமூக நல துறை | சத்துணவு அமைப்பாளர் | குழந்தைகள் , ஊட்டச்சத்து நல அலுவலர் | திட்ட ஒருங்கிணை ப்பாளர், ஊட்டசத்து |
| 24. | இதர சமூக நலப் பணிகள் | சமூக நலத் துறை | ஊர் நல அலுவலர் | விரிவாக்க அலுவலர், சமூக நலம் | மாவட்ட சமூக நல அலுவலர் |
| 25. | எரிசக்தி | எரிசக்தி துறை | ஊர் நல அலுவலர் | ஆணையர், சாண எரிவாயு | நேர்முக உதவியாளர் (திட்டம்), ஊரக வளர்ச்சித் துறை |
| 26. | முறைசாரா எரிசக்தி | ஊர் நல அலுவலர் | ஆணையாளர் , | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | வ.வ.அ (சாண எரிவாயு) |
| 27. | ஊரக மற்றும் சிறு தொழில்கள் | சிறு தொழில் துறை | ஆணையாளர் | ஆணையாளர் | பொது மேலாளர் மாவட்ட தொழிற் மையம் |
| 28. | நடுத்தர மற்றும் பெரிய தொழில் துறை | தொழில் துறை | ஊர் நல அலுவலர் | ஆணையாளர் | பொது மேலாளர், மாவட்ட தொழிற் மையம் |
| 29. | சுரங்கத் தொழில் | தொழில் மற்றும் வணிகத் துறை | ஊர் நல அலுவலர் | ஆணையாளர் | ஆணையாளர் கணிமம் மற்றும் சுரங்கத் தொழில் |
| 30. | எடை மற்றும் அளவைகள் | தொழிலாளர்க ள் மற்றும் வேலை வாய்ப்பு துறை | - | தொழிலாளர் நல அலுவலர் | துணை ஆணையாளர் தொழிலாளர் நலம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31. | துறைமுகம், கலங்கரை விளக்கம் மற்றும் கப்பல் போக்குவரத்து | நெடுஞ்சாலை துறை | – | ஒன்றிய பொறியாளர் | கோட்ட பொறியாளர் |
| 32. | சாலைகள் மற்றும் பாலங்கள் | நெடுஞ்சாலை துறை | – | ஒன்றிய பொறியாளர் | கோட்ட பொறியாளர் |
| 33. | சாலைகள் மற்றும் உள்நாட்டு படகு போக்குவரத்து | நெடுஞ்சாலை துறை | – | உதவி பொறியாளர் | கோட்ட பொறியாளர் |
| 34. | அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் | கல்வித் துறை | – | — | இயக்குநர், தொழில் நுட்ப கல்வி |
| 35. | சுற்றுப்புற பாதுகாப்பு | சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை | – | – | தலைவர், மாவட்ட மாசு கட்டுபாட்டு வாரியம் |
| 36. | சுற்றுலா | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை | | | சுற்றுலா அலுவலர் |
| 37. | பொருளாதார முன்னேற்றம் மற்றும் புள்ளியியல் | பொருளா தாரம் மற்றும் புள்ளியல் துறை | – | வட்டார புள்ளி அலுவலர் | உதவி இயக்குநர், புள்ளியியல் |
| 38. | உணவு பொருள் வழங்கல் | உணவு மற்றும் கூட்டுறவு துறை | வருவாய் அலுவலர் | வட்டார அலுவலர் | மாவட்ட வழங்கல் அலுவலர் |

# இயல் – V

## ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான ஆய்வு, மேற்பார்வை மற்றும் ஆலோசனை பொறுப்புகள்

பல்வேறு அரசு துறைகள், நிறுவனங்கள் மற்றும் முகமைகளால் நிறைவேற்றப்படும் பல்வகைப்பட்ட வளர்ச்சித் திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆய்வு செய்வதற்கான அதிகாரங்களையும், கடமைகளையும் 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் அளித்துள்ளது. அது மட்டுமின்றி சில குறிப்பிட்ட அரசுத் திட்டங்கள், பணிகள் மற்றும் நிறுவனங்களை மேற்பார்வையிட அதிகாரங்களையும் பெற்றுள்ளன. உயர்மட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகள் கீழ்நிலை அமைப்புகளுக்கு ஆலோசனை அளிக்கும் பொறுப்பும் கொண்டுள்ளன. மேலும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் பற்றி அரசுக்கு ஆலோசனை அளிக்கக்கூடிய பங்கும் மாவட்ட ஊராட்சிக்கு உள்ளது. தமிழ்நாடு அரசு ஏற்கெனவே மாவட்ட ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிறைவேற்றப்படும் திட்டங்களை கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் அதிகாரம் அளித்துள்ளதோடு அது தொடர்பாக அறிவுரைகள் அளிக்கவும் அனுமதித்துள்ளது. மேற்கண்ட நிலைமைகளை கருத்தில் கொண்டும் ஏற்கெனவே நடைபெற்ற விரிவான விவாதங்களின் அடிப்படையிலும், மாவட்ட ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு குறிப்பான சில கூடுதல் அதிகாரங்கள் மூலம் ஆய்வு, கண்காணிப்பு மற்றும் அறிவுரை வழங்கும் பொறுப்புகளை அளிக்கவும் குழு பரிந்துரைக்கிறது.

# ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள மற்றும் ஒப்படைக்க வேண்டியுள்ள உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள்

## ஆய்வு, ஆலோசனை மற்றும் மேற்பார்வை

### 1. வேளாண்மைத்துறை

| வ. எண் | பொருள் | அளிக்கப்பட்ட பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ளும் அலுவலர் |
|---|---|---|---|
| 1 | காய்கறி வித்துக்களை கொள்முதல் செய்தலும், வழங்குதல் திட்டம் | செயல்படுத்த உதவுதல் | உதவி இயக்குநர் (தோட்டக் கலைத்துறை) |
| 2 | தரிசு நில மேம்பாட்டுக்கான சிறப்பு திட்டம் | செயல்படுத்த உதவுதல் | வேளாண்மை வளர்ச்சி அலுவலர் |
| 3 | கழிவுநீரையும் கழிவுப்பொருட்களையும் பயன்படுத்துவதன் மூலம் உள்ளூர் எரு ஆதாரங்களை மேம்படுத்தும் திட்டம் | செயல்படுத்த உதவுதல் | வேளாண்மை வளர்ச்சி அலுவலர் |
| 4 | தோட்டக்கலை திட்டத்தின்கீழ கன்றுகள் வழங்குதல் திட்டம் | உதவி செய்தல் | உதவி இயக்குநர் (தோட்டக் லைத்துறை) |
| 5 | வறட்சிப்பாங்கான பகுதி திட்ட ஒருங்கிணைப்பு | ஆலோசனை வழங்குதல் | வேளாண்மை வளர்ச்சி அலுவலர் |
| 6 | ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாடு திட்ட ஒருங்கிணைப்பு | ஆலோசனை வழங்குதல் | வேளாண்மை வளர்ச்சி அலுவலர் |
| 7 | ஒருங்கிணைந்த நீர்வரத்துப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | ஆலோசனை வழங்குதல் | உதவி செயற் பொறியாளர் , வேளாண்மை பொறியியல் துறை |
| 8 | மானாவாரிப்பகுதி தேசீய நீர்வரத்துப்பகுதி மேம்பாட்டுத்திட்டம் | ஆலோசனை வழங்குதல் | உதவி செயற் பொறியாளர் , வேளாண் பொறியியல் துறை |
| 9 | விரிவான நீர் வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | ஆலோசனை வழங்குதல் | உதவி செயற் பொறியாளர் , வேளாண் பொறியியல் துறை |

| வ.எ ண். | பொருள் | அளிக்கப்பட வேண்டிய பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ளும் அலுவலர் |
|---|---|---|---|
| 1 | வறட்சி பகுதி திட்டம் | ஆய்வு செய்தல் | உதவி செயற் பொறியாளர், வேளாண் பொறியியல் துறை மற்றும் உதவி இயக்குநர், வேளாண்மை துறை |
| 2 | சிறுபாசன சிறப்புத் திட்டம் (முன்னாள் ஜமீன் குளங்கள் மற்றும் பொது பணி திட்டம்) | ஆய்வு செய்தல் | உதவி செயற் பொறியாளர் வேளாண் பொறியியல் துறை மற்றும் உதவி செயற் பொறியாளர், நீர் ஆதாரத் துறை. |

## 2. வருவாய் துறை

| வ. எ ண் | பொருள் | அளிக்கப்பட்ட பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ளும் அலுவலர் |
|---|---|---|---|
| 1 | பகிர்வு உபரிநிலத்தை மேம்படுத்துதல் மற்றும் நிலஉச்சவரம்புகளை செயலாக்கும் திட்டம் | மேற்பார்வையிடுதல் | வட்ட ஆட்சியர் (நில உச்சவரம்பு) |
| 2 | நில ஆவணங்களை இப்போதைய நிலைக்கு கொணரும் திட்டம் | மேற்பார்வையிடுதல் | தாலுகா நிலஅளவை அலுவலர் |
| 3 | பிற நிலசீர்திருத்தச் சட்டங்களை செயலாக்கும் திட்டம் | மேற்பார்வையிடுதல் | வட்ட ஆட்சியர் |

## 3. கால்நடைபராமரிப்பு மற்றும் மீன்துறை
## (கால்நடை, பால்பண்ணை மற்றும் கோழிப் பண்ணை)

| வ. எண் | பொருள் | அளிக்கப்பட்ட பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ளும் அலுவலர் |
|---|---|---|---|
| | (2) | (3) | (4) |
| 1 | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உறைவிந்து வசதிகள் திட்டம் | செயல்படுத்துதல் | உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்பு துறை |
| 2 | இறைச்சிக்கொட்டில் பராமரிப்பு திட்டம் (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்) | செயல்படுத்துதல் | உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்பு துறை |
| 3 | செம்மறியாடு வளர்ப்பதற்காக சிறு உழவர்களுக்கு/ சொற்ப உழவர்களுக்கு விவசாயக்கூலி நிதியுதவி திட்டம் (மாநில மற்றும் மத்திய திட்டம்) | செயல்படுத்துதல் | உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்பு துறை |
| 4 | பன்றி வளர்ப்பு திட்டம் (மாநில திட்டம்) | செயல்படுத்துதல் | உதவி இயக்குநர், கால்நடை துறை |
| 5 | முயல் வளர்ப்பு, கோழி வளர்ப்புக்கு நிதியுதவி திட்டம் (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம் ) | செயல்படுத்துதல் | உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்பு துறை |
| 6 | மேய்ச்சல் நில மேம்பாட்டு நிதியுதவி திட்டம் (மாநிலத்திட்டம் ) | செயல்படுத்துதல் | உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்பு துறை |
| 7 | விலங்குகள், பறவைகள் வழங்குதல் திட்டம் (மாநில திட்டம்) | செயல்படுத்துதல் மற்றும் பார்வையிடல் | உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்பு துறை |
| 8 | பால்பண்ணை கூட்டுறவு சங்கங்கள் திட்டம் (மத்திய பொருளுதவி பெறும் திட்டம்) | ஆய்வு செய்தல் | பால் வளர்த்துறை ஆய்வாளர் |
| 9 | ஒருங்கிணைந்த பால்பண்ணை மேம்பாட்டுத்திட்டம் (ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம்) | ஆய்வு செய்தல் | பால் வளர்த்துறை ஆய்வாளர் |
| 10 | தரமான கறவை மாடுகள் வழங்குதல் (ஒ.ஊ.வ.தி) | ஆய்வு செய்தல் | கால்நடை விரிவாக்க அலுவலர் |
| 11 | மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் | ஆய்வு செய்தல் | உதவித் திட்ட அலுவலர் |

| | | | |
|---|---|---|---|
| | திட்டப்பணிகள் திட்டம் (மாநில திட்டம்) | | |
| 12 | மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் திட்டபணிகள் திட்டம் (மாநில திட்டம்) | ஆய்வு செய்தல் | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட அலுவலர் |
| 13 | கால்நடை துணைமையம் / மருத்துவமனை திட்டம் (மாநில திட்டம்) | செயல்படுத்துதல் மற்றும் பார்வையிடல் | உதவி இயக்குநர் கால்நடை பராமரிப்புத் துறை |
| 14 | துணை மையங்களில் செயற்கை முறையில் இனப்பெருக்கம் திட்டம் (வெளிநாட்டு உதவி பெறும் திட்டம்) | செயல்படுத்துதல் மற்றும் பார்வையிடல் | உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத் திட்டம் |
| 3 | மரபு சாரா எரிபொருள் சாதனங்கள் தாயாரிப்பாளர்கள் மற்றம் உபயோகிப்பாளர்களுடன் மாவட்ட அளவிலான பயிற்சி மாநாடுகள் | ஏற்பாடு செய்தல் | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |

| வ. எண் | பொருள் | அளிக்கப்பட உள்ள பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | காற்று சக்தியைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் கருவிகள் நிறுவுதல் | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| 2 | சூரிய அடுப்பு, சூரிய ஆற்றல், மின் நீர் ஏற்றம் முறை மற்றும் சூரிய சக்தி மூலம் நீரை கொதிக்க வைக்கும் முறை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| 3 | எரிவாயு, (சாண எரிவாயு) கலன்கள் (தனிப்பட்டவர்கள் மற்றும் சமுதாய நலனுக்காக நிறுவுதல் | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| 4 | ஊக வளர்ச்சித் துறையின் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி திட்டம்(மா.பொ.தி.) | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| 5 | சாண எரிவாயு வளர்ச்சி தேசிய திட்டங்கள்(மா.பொ.தி.) | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |

## 11.பள்ளிக் கல்வித் துறை

| வ. எண் | பொருள் | அளிக்கப்பட்ட பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | படிப்பகங்கள் | திறத்தல் | மாவட்ட நூலக அலுவலர் |
| 2 | பள்ளிக்கூடக்கட்டிடம், கழிப்பறைகள் ஆகிவற்றை பழுதுபார்த்தல் பராமரிப்பு செய்தல் குடிநீர் வசதி செய்து தருதல் | பார்வையிடுதல் | செயற் பொறியாளர், ஊரக வளர்ச்சி |

| வ. எண் | பொருள் | அளிக்கப்பட உள்ள பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு தேவையான கட்டிடங்கள் கட்டுதல் | ஆய்வு செய்தல் | செயற் பொறியாளர், ஊரக வளர்ச்சி |
| 2 | சிறப்பு நல நிதியிலிருந்து பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் | ஆய்வு செய்தல் | செயற் பொறியாளர், ஊரக வளர்ச்சி |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 3 | அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுதல் | ஆய்வு செய்தல் | முதன்மை கல்வி அலுவலர் |
| 4 | மாவட்ட தொடக்கக்கல்வித் திட்டம் | ஆய்வு செய்தல் | மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் |
| 5 | கிராம அளவில் திட்டமிடுவதன் மூலம் 100 சதவீதம் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான திட்டம் | ஆய்வு செய்தல் | மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் |
| 6 | தொடக்க ஆரம்ப பள்ளிகளுக்கு குறைந்த அளவு அறைக்கலன்கள் விளையாட்டுப் பொருட்கள், மின்விசை வழங்குதல் | ஆய்வு செய்தல் | மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் |
| 7 | தொடக்க ஆரம்பப் பள்ளிகளுக்கு ஒலி நாடா பெட்டி வழங்குதல் | ஆய்வு செய்தல் | மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் |
| 8 | மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் வழங்குதல் ஆதி திராவிடர்களுக்கான சிறப்பு கூறுத் திட்டம் | ஆய்வு செய்தல் | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் |
| 9 | மாணவ மாணவியருக்கு பள்ளி சீருடை வழங்குதல், ஆதி திராவிடர்களுக்கான சிறப்பு கூறுத் திட்டம் | ஆய்வு செய்தல் | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் |
| 10 | கிராம நலப் பணியாளர் வாயிலாக வயது வந்தோர் எழுத்தறிவு திட்டத்தை செயல்படுத்துதல் | ஆய்வு செய்தல் | மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலர் |
| 11 | வயது வந்தோர் எழுத்தறிவுத் திட்டம் | ஆய்வு செய்தல் | மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலர் |
| 12 | படிப்பை இடையில் நிறுத்தியவர்களுக்கும் பள்ளிக் கல்வி தொடங்கப் பெறாதவர்களுக்கும் நலன் அடைவதற்கான பள்ளி சாரா கல்வித் திட்டம் | ஆய்வு செய்தல் | மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலர் |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 13 | எழுத்தறிவு பெற்றவர்க்கான மேல்நிலை கல்வி பெறும் திட்டம் | ஆய்வு செய்தல் | மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலர் |
| 14 | அறிவொளி இயக்கம் வாயிலாக கல்வி அறியாமையை முழுமையாக அகற்றுவதற்கான சிறப்புத் திட்டம் | ஆய்வு செய்தல் | மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலர் |
| 15 | பழங்குடியினர் பகுதியில் வயது வந்தோர் கல்வி அறிவுத் திட்டம் | ஆய்வு செய்தல் | மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலர் |

## 12.வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

| வ. எண் | பொருள் | அளிக்கப்பட்ட பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் செயல்படுதல் | ஆய்வு செய்தல் | துணை இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி |

## 13.பள்ளிக் கல்வித்துறை ( நூலகம்)

| வ. எண் | பொருள் | அளிக்கப்பட்ட பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | மாவட்டத்தில் புது நூலகங்ளையும் படிப்பகங்களையும் திறக்க உள்ளூர் நூலக ஆணை குழுவிற்கு பரிந்துரைத்தல் | ஆலோசனை கூறல் | மாவட்ட நூலக அலுவலர் |
| 2 | மாவட்ட ஊராட்சியின் ஒரு உறுப்பினரை மாவட்ட நூலக ஆணை குழுவிற்கு பரிந்துரைத்தல் | தேர்ந்தெடுத்து அனுப்புதல் | மாவட்ட நூலக அலுவலர் |

| வ. எண் | பொருள் | அளிக்கப்பட உள்ள பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1. | நலிவடைந்த வட்டார ஆணைக் குழுக்களுக்கு நூல்களை வாங்குவதற்கு உதவி செய்தல் | ஆய்வு செய்தல் | மாவட்ட நூலக அலுவலர் |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 1. | தொடக்க மற்றும் ஆரம்ப நிலைப் பள்ளிகள் | ஆய்வு செய்தல் | மாவட்ட கல்வி அலுவலர் |
| 2. | மாவட்ட மைய நூலகம் | ஆய்வு செய்தல் | மாவட்ட நூலக அலுவலர் |
| 3. | நடமாடும் நூலகம் | ஆய்வு செய்தல் | மாவட்ட நூலக அலுவலர் |
| 4. | பகுதி நேர நூலகம் | ஆய்வு செய்தல் | மாவட்ட நூலக அலுவலர் |

## 14. பள்ளிக் கல்வித்துறை (பண்பாடு)

| வ. எண் | பொருள் | அளிக்கப்பட்ட பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | கரந்தை தமிழ்ச்சங்கத்திற்கு உதவியளிக்கும் திட்டம் | ஆய்வு செய்தல் | முதன்மை கல்வி அலுவலர் |
| 2 | ஜவகர் சிறுவர் இல்லத்திற்கு உதவி அளிக்கும் திட்டம் | ஆய்வு செய்தல் | முதன்மை கல்வி அலுவலர் |
| 3 | மாவட்ட கலைக்கூடங்களையும் கலை மன்றங்களையும் நிறுவும் திட்டம் | ஆய்வு செய்தல் | முதன்மை கல்வி அலுவலர் |
| 4 | இசைப்பள்ளியை நிறுவுதல், பயனாளிகளை கண்டறிதல் | ஆய்வு செய்தல் | முதன்மை கல்வி அலுவலர் |

| வ. எண் | பொருள் | அளிக்கப்பட உள்ள பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | ஜவகர் சிறுவர் இல்லம் | ஆய்வு செய்தல் | இளைஞர் ஒருங்கிணைப்பாளர் நேரு யுவ கேந்திரா |
| 2 | மாவட்ட கலைக்கூடங்களும் மன்றங்களும் | ஆய்வு செய்தல் | முதன்மை கல்வி அலுவலர் |
| 3 | மாவட்ட இசைப்பள்ளிகள் | ஆய்வு செய்தல் | முதன்மை கல்வி அலுவலர் |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 4 | விளையாட்டு பள்ளிகளும் விளையாட்டு விடுதிகளும் | ஆய்வு செய்தல் | மாவட்ட விளையாட்டு அலுவலர் |
| 5 | விளையாட்டு திடல்கள்/ வியைாடும் இடங்கள் | ஆய்வு செய்தல் | மாவட்ட விளையாட்டு அலுவலர் |
| 6 | கைவினைப் பொருட்கள் அருங்காட்சியகம் | ஆய்வு செய்தல் | முதன்மை கல்வி அலுவலர் |

## 15. ஊரக வளர்ச்சித் துறை (சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்)

| வ. எண் | பொருள் | அளிக்கப்பட உள்ள பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | பொது அங்காடிகள் | அறிவுரை மற்றும் ஆய்வு செய்தல் | உதவி இயக்குநர் (ஊராடசிகள்) |
| 2 | தனியார் அங்காடிகள் | அறிவுரை மற்றும் ஆய்வு செய்தல் | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) |
| 3 | தொடக்க கூட்டுறவு அங்காடிகள் | அறிவுரை மற்றும் ஆய்வு செய்தல் | இணை பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள் |
| 4 | ஒழுங்குமுறை விற்பனை கூடம் | அறிவுரை வழங்குதல் | மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைகூட அலுவலர் |

## 16.மருத்துவம் மற்றும் பொது சுகாதார துறை
## (மருத்துவ மனைகள்,ஆரம்ப சுகாதார நிலையங்கள்,மருந்தகங்கள்)

| வ. எ ண் | பொருள் | அளிக்கப்பட்ட பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலு;வலர் |
|---|---|---|---|
| 1 | மாவட்ட / வட்ட தலைமையக மருவத்துவ மனைகள் மேம்படுத்தும் திட்டம் | ஆய்வு செய்தல் | இணை இயக்குநர், மருத்துவம் |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 2 | காசநோயை கட்டுப்படுத்தல் , மலேரியா நோய் ஒழிப்பு , உயிர் கொல்லி நோய் , எய்ட்ஸ் நோயை கட்டுப்படுத்துதல், தொழுநோயை கட்டுப்படுத்துதல் போன்ற தேசீய சுகாதார திட்டங்கள் | மேற்பார்வை மற்றும் ஆய்வு செய்தல் | இணை இயக்குநர், மருத்துவம் |
| 3 | பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மருந்தகங்களை ஏற்படுத்துதல் | ஆய்வு செய்தல் | இணை இயக்குநர், மருத்துவம் |
| 4 | தொலைதூர பகுதிகளில் இயங்கும் நடமாடும் மருத்துவ பிரிவுகளின் பயனுக்காக நிதியுதவி திட்டம் | ஆய்வு செய்தல் | இணை இயக்குநர், மருத்துவம் |
| 5 | நோய்களை கட்டுப்படுத்துதல் / தடுத்தல் ஆகிய நடவடிக்கை களில் மக்களை ஈடுபட செய்யும் திட்டம் | ஆய்வு செய்தல் | துணை இயக்குநர், பொது சுகாதாரம் |
| 6 | மாவட்ட அளவில் சித்த / ஆயுர்வேத / யுனானி மருத்துவத்தை மேம்படுத்துதல் | ஆய்வு செய்தல் | மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் |
| 7 | மருத்துவமனை கழிவுகளை பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கான உதவி | ஆய்வு செய்தல் | இணை இயக்குநர், மருத்துவம் |
| 8 | தொடக்க சுகாதார மையங்கள் / மகப்பேறு மையங்கள் ஆகியவற்றின் கட்டுமானம் / மேற்பார்வை / பராமரிப்பு | ஆய்வு செய்தல் | செயற் பொறியாளர், பொது பணி துறை |
| 9 | தொடக்க சுகாதார மையங்களில் பலநோக்கு சுகாதார பணியாளர்களுக்கான பயிற்சிகளை நடத்துவதற்கு நிதியுதவி | ஆய்வு செய்தல் | துணை இயக்குநர், பொது சுகாதாரம் |
| 10 | துப்புரவு பணிகள் திட்டம் | ஆய்வு செய்தல் | துணை இயக்குநர், பொது சுகாதாரம் |

| (1) | (2) | (3) | (4) |
| --- | --- | --- | --- |
| 11 | இளம்பிள்ளைவாதம் , தொண்டை அடைப்பான போன்றவற்றிற்கு எதிரான பள்ளி செல்லும் வயது அடையாத குழந்தைகள் தடுப்பு ஊசி போட உதவி | மேற்பார்வையிடுதல் | துணை இயக்குநர், பொது சுகாதாரம் |
| 12 | பள்ளி சுகாதார திட்டம் | ஆலோசனை வழங்குதல் | துணை இயக்குநர், பொது சுகாதாரம் |
| 13 | பிறப்பு, இறப்பு புள்ளி விவரங்களை பதிவு செய்வதை மேம்படுத்துதல் | ஆலோசனை வழங்குதல் | துணை இயக்குநர், பொது சுகாதாரம் |
| 14 | கண்சிகிச்சை முகாம்கள், குடும்பநலமுகாம்கள் முதலியவற்றை ஏற்படுத்துவதில் தொண்டுநிறுவனங்களை ஈடுபடசெய்தல் | நிர்வாகம் மற்றும் பராமரிப்பு | துணை இயக்குநர், பொது சுகாதாரம் |
| 15 | தூய்மையான சுற்றுபுறசூழலின்முக்கியம் குறித்தும் நோய்களை கட்டுப்படுத்துவது குறித்தும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் | நிர்வாகம் மற்றும் பராமரிப்பு | துணை இயக்குநர், பொது சுகாதாரம் |
| 16 | குடும்பநல மையங்களை அமைத்து பராமரிக்கும் திட்டம் | ஆய்வு மற்றும் மேற்பார்வையிடல் | துணை இயக்குநர், பொது சுகாதார துறை |
| 17 | வட்டார குடும்பல பயிற்சி மையம் / மாவட்ட குடும்ப நல அமைப்பு ஆகியவற்றை அமைத்தல் | ஆய்வு மற்றும் மேற்பார்வையிடல் | துணை இயக்குநர், பொது சுகாதார துறை |
| 18 | குடும்பநல திட்டங்களில் உள்ளாட்சி அமைப்புகள் அரசு சாரா அமைப்புகள் ஆகியவற்றை ஈடுபடசெய்தல் | ஆய்வு செய்தல் | துணை இயக்குநர், பொது சுகாதார துறை |
| 19 | குடும்பநலம் குறித்து பணியாளர்களுக்கு பயிறசி அளித்தல் | ஆய்வு செய்தல் | இணை இயக்குநர், மருத்துவம் |
| 20 | குடும்நலதிட்டம் குறித்து மக்களுக்கு கல்வி புகட்ட நிதி உதவி / ஆண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை திட்டம் | ஆய்வு செய்தல் | இணை இயக்குநர், மருத்துவம் |

| வ. எண் | துறைகள்/ நிறுவனங்கள்/ மையங்கள் | அளிக்கப்பட உள்ள பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | சுகாதார துணை நிலையங்கள் | ஆய்வு செயதல் | மாவட்ட சுகாதார அலுவலர் |
| 2 | ஆரம்ப சுகாதார நிலையங்கள் | ஆய்வு செயதல் | மாவட்ட சுகாதார அலுவலர் |
| 3 | அரசு மருந்தகங்கள் மற்றும் நடமாடும் மருத்துவ மருந்தகம் | ஆய்வு செயதல் | மாவட்ட மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்ட சுகாதார அலுவலர் |
| 4 | வட்டார மருத்துவமனை மற்றும் இதர மருத்துவமனைகள் | ஆய்வு செயதல் | மாவட்ட மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்ட சுகாதார அலுவலர் |
| 5 | மகப்பேறு நிலையங்கள் | ஆய்வு செயதல் | மாவட்ட மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்ட சுகாதார அலுவலர் |

## 17. ஊரக வளர்ச்சித்துறை

| வ. எண் | பொருள் | அளிக்கப்பட்ட பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | வறட்சிக்கு இலக்காகும் திட்டம்(ம.பொ.தி) | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| 2 | ஊரக இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்பு திட்டம் | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மா.ஊ.வ.மு. |
| 3 | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மா.ஊ.வ.மு. |
| 4 | மகளிர் மற்றும் குழந்தை நல மேம்பாட்டுத் திட்டம் | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மா.ஊ.வ.மு. |
| 5 | பரவலாக்கப்பட்ட திட்டத்திற்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு உதவி அளித்தல் | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மா.ஊ.வ.மு. |
| 6 | ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மா.ஊ.வ.மு. |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 7 | பத்தாவது நிதிக்குழுவின் பரிந்துரைகளின் கீழ் உள்ளாட்சி மன்றங்களுக்கான மான்யங்கள் | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மா.ஊ.வ.மு. |
| 8 | இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மா.ஊ.வ.மு. |
| 9 | மில்லியன் கிணறுகள் திட்டம் | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மா.ஊ.வ.மு. |
| 10 | ஊராட்சி மன்றங்களால் மேற்கொள்ளப்படும் உள்ளமைப்புகள் மேம்பாடு (மாநிலத் திட்டம்) | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மா.ஊ.வ.மு. |
| 11 | வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மா.ஊ.வ.மு. |
| 12 | சிறப்பு அம்சத் திட்டம் | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மா.ஊ.வ.மு. |
| 13 | டேனிடா உதவியுடன் கடலூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரகத் துப்புரவு மற்றும் குடிநீர் வழங்கல் திட்டம் | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மா.ஊ.வ.மு. |
| 14 | மைய ஊரக துப்புரவுத் திட்டம் | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மா.ஊ.வ.மு. |
| 15 | சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்ட இணைப்பு செயலாக்கத்திற்கு உதவி | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மா.ஊ.வ.மு. |

| வ. எண் | துறைகள்/ நிறுவனங்கள்/ மையங்கள் | அளிக்கப்பட உள்ள பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | குழந்தை நல மையங்கள் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 2 | சமுதாய சத்துணவு மையங்கள் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 3 | சத்துணவு மையங்கள் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 4 | மகளிர் மன்றங்கள் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 5 | குழந்தையர் காப்பகங்கள் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 6 | அனாதை இல்லங்கள் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |

## 18.சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை
### (பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு)

| வ. எண் | பொருள் | அளிக்கப்பட்ட பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | சத்துணவு மையங்களை ஏற்படுத்தி நிர்வகித்தல் | ஆய்வு செய்தல் | மாவட்டஆட்சியரின் நேர்முகஉதவியாளர் (சத்துணவு) |
| 2 | ஒருங்கிணைந்த குழந்தை நல மேம்பாட்டுத் திட்டம் / துணை ஊட்டச்சத்து திட்டம் | ஆய்வு செய்தல் | மாவட்ட ஊட்டச்சத்து அலுவலர் |
| 3 | பள்ளிகள் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத்திட்ட மையங்கள் முதலியவற்றை சத்துணவு திட்டத்தை செயல்படுத்துதல் (மாநில திட்டம் / மத்தி அரசு பொறுப்பேற்கும் திட்டம் வெளி நாடு உதவி பெறும் திட்டம்) | ஆய்வு செய்தல் | மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்ட அலுவலர் |
| 4 | பால்வாடிகள் மற்றும் பாலர் பள்ளிகள் தொடங்கும் திட்டம் | ஆய்வு செய்தல் | மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்ட அலுவலர் |
| 6 | மகளிர்களுக்கான பணி நிலையங்களையும் உற்பத்தி பிரிவுகளையும் மேற்பார்வை | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 7 | வாழ்க்கை தொழிற்பயிற்சி , ஏழை விதவை தாயின் குழந்தைகள், ஏழை விதவையின் மகளிர் திருமணத்திற்கு உதவியளித்தல் அனாதை பெண்கள் ஆகியோர்க்கு பல்வேறு மகளிர் நல திட்டங்கள் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 8 | மகளிர் மற்றும் அதன் பொருளாதா நடவடிக்கைகுறித்த திட்டம் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 9 | பணிக்கு செல்லும் மற்றும் உடல் நலம் இல்லாத பெண்களின் குழந்தைகளுக்காக காப்பகங்களை மேற்பார்வை (மாநில திட்டம் / மத்தி அரசு பொறுப்பேற்கும் திட்டம் வெளி நாடு உதவி பெறும் திட்டம்) | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 10 | மாவட்டங்ளில் உள்ள மகளிர்களுக்கான தொண்டு இல்லங்கள் பார்வையிடுதல் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 11 | மகளிர்க்கான அனைத்து நல திட்டங்கள் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 12 | மகளிர் தொழில் கூட்டுறவு சங்கங்களை மேற்பார்வையிடுதல் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 13 | அனாதைஇல்லங்களின் செயற்பாட்டை மேற்பார்வையிடல் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 14 | வறுமை கோட்டிற்குகீழே உள்ள கருவுற்ற தாய்மார்களுக்கு நிதியுதவி திட்டம் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 15 | வறுமைகோட்டிற்கு கீழே உள்ள பெண்களின் திருமணத்திற்கான நிதிஉதவி திட்டம் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 16 | பெண்குழந்தை நலத்திட்டத்திற்கான நிதி உதவி | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 17 | ஆதரவற்ற கைம்பெண்கள் / கைவிடப்பட்ட மகளிர்க்கு தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 18 | ஏழை கைம்பெண்களின் மகளுக்கு திருமண முன்பணம் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 19 | ஐ.எப்.ஏ.டி. திட்டத்தின்கீழ் மகளிர் மேம்பாட்டு திட்டம் | ஆய்வு செய்தல் | திட்ட அலுவலர், மகளிர் திட்டம் |
| 20 | முதியோர் இல்லங்கள் செயல்பாடு குறித்த திட்டம் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 21 | உழைக்கும் மகளிர் இல்லங்கள் | பார்வையிடுதல் | மாவட்ட சமூகநல அலுவலர் |

## 19. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை (மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் ஊனமுற்றோர் உள்ளிட்ட சமூக பாதுகாப்புத் திட்டம்)

| வ. எண் | துறைகள்/ நிறுவனங்கள்/ மையங்கள் | **அளிக்கப்பட உள்ள பொறுப்புகளின் தன்மை** | **கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர்** |
|---|---|---|---|
| 1 | பார்வையற்றோர்களுக்கான / ஊனமுற்றோர்களுக்கான மறுவாழ்வு இல்லங்களின் செயல்பாடு | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 2 | உடல் ஊனமுற்றோர்கான நடத்தப்படும் பள்ளிகள் / விடுதிகள் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 3 | ஊனமுற்ற பள்ளி மாணவர்களுக்கு படிப்பு உதவி தொகை | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 4 | கல்வி நிலையங்கள் அரசு துறைகளில் உடல் ஊனமுற்றோர்க்கு இட ஒதுக்கீடு செயல்படுத்துதல் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 5 | ஒருங்கிணைந்த இளம்பிள்ளைவாத ஒழிப்பு திட்டத்திற்கு நிதிஉதவி | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 6 | உடல்ஊனமுற்ற / மனநலகுன்றிய குழந்தைகளின் மறுவாழ்வுக்கான அரசு சாராத அமைப்புகளுக்கு உதவி | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 7 | உடல் ஊனமுற்றோர், காது கேளான்மை , வாய்பேசாமை ஆகியோருக்கு புதிய பள்ளிகள் தொடங்குதல் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 8 | வேலைவார்ப்பகத்தில் பதிவு செய்த பார்வையற்ற வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குதல் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 9 | பார்வையற்ற மாணவர்களுக்கு எழுத்தர் உதவி (மாநிலத் திட்டம்) | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் |
| 10 | உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்குப் படிப்புதவித் தொகை (மாநிலத்திட்டம்) | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 11 | தொழிற்பயிற்சி பள்ளிகளில், சீர்திருத்த பள்ளிகளிலிருந்து விடுபட்ட மாணவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான உதவி | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 12 | சமுதாயத்தில் தீங்கு பயக்கும் இளங்குற்றவாளிகளைத் தடுத்து கட்டுப்படுத்தி நன்னெறிப்படுத்தும் திட்டங்கள் | ஆய்வு செய்தல் | பொது மேலாளர், மாவட்ட தொழிற் மையம் |
| 13 | சீர்திருத்த இல்லங்கள் விழிப்புப்பணி நிறுவனங்கள், சிறுவர் சீர்திருத்தப்பள்ளிகள் ஆகியவற்றின் செயல்பாடுகள் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |

| வ. எண் | துறைகள்/ நிறுவனங்கள்/ மையங்கள் | அளிக்கப்பட உள்ள பொறுப்புகள் | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | சிறப்பு பள்ளிகள் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 2 | இளம் குழந்தையர் பள்ளிகள்,காப்பகங்கள் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 3 | கவனிப்பு இல்லங்கள் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 4 | சிறப்பு இளங்குற்றவாளிகள் இல்லங்கள் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 5 | பாதுகாப்புக்குரிய கண்காணிப்பு இல்லங்கள் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 6 | பின்காப்பு நிறுவனங்கள் | ஆய்வு செய்தல் | மாவட்ட சமூகநல அலுவலர் |

## 20.ஆதிதிராவிடர் நலத்துறை

| வ. எண் | பொருள் | அளிக்கப்பட்ட பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | கொத்தடிமை தொழிலாளர்களுக்கு மறு வாழ்வு அளிக்கும் திட்டம், | ஆய்வு செய்தல் | மாவட்ட தொழிலாளர்கள் நல அலுவலர் |
| 2 | பட்டியல் இன மற்றும் பழங்குடியினர் நலனுக்காக செயற்படுத்தப்படும் பிற நலத்திட்டங்கள் | மேற்பார்வையிடுதல் | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| 3 | இடுகாட்டிற்கும் சுடுகாட்டிற்கும் நடைபாதை அமைக்கும் திட்டம் | மேற்பார்வையிடுதல் | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| 4 | பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கும் வீடுகளுக்கும் மின்வசதி அளிக்கும் திட்டம் | மேற்பார்வையிடுதல் | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| 5 | சமூகநலத்துறையால் செயல்படுத்தப்படும் கலப்புதிருமணத்திற்கு பரிசுத்திட்டம் | மேற்பார்வையிடுதல் | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| 6 | சிறுவியாபாரிகளுக்கு உதவி திட்டம் | மேற்பார்வையிடுதல் | மாவட்ட மேலாளர், ஆதிதிராவிடர், வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக்கழகம் (தாட்கோ) |
| 7 | பட்டியல் இன மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு நீடிக்கப்பட்டுள்ள கல்வி சலுகைகளை (புத்தகங்கள், சீருடைகள் மற்றும் படிப்பு உதவி தொகைகள் முதலியன) மேற்பார்வை மற்றும் சீருடை தைத்து தருவதை செயற்படுத்துதல் மற்றும் ஏடுகள், பாட நூல்கள் சீருடை வழங்கல் | கண்காணித்தல் | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 8 | சமூதாயகூடம் மற்றும் துணி வெளுக்கும் இடங்கள் கட்டுதல் | மேற்பார்வை யிடுதல் | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| 9 | 1955ஆம் ஆண்டு குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 வன்கொடுமை தடுப்புச்சட்டம் நடைமுறைப் படுத்துதல் | மேற்பார்வை யிடுதல் | காவல் துறை துணை கண்காணிப்பாளர் (குடியுரிமை பாதுகாப்பு சட்டம்) |
| 10 | பொதுமக்களிடம் தீண்டாமை ஒழிப்பை பரப்புதல் | மேற்பார்வை யிடுதல் | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| 11 | பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்களுக்கு பயிற்சி திட்டமும் சிறப்பு பயிற்சி திட்டமும் அளித்தல் | மேற்பார்வை யிடுதல் | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| 12 | பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்குதல் | மேற்பார்வை யிடுதல் | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |

## 21. கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை (பொது பகிர்வு முறை)

| வ. எண் | பொருள் | அளிக்கப்பட்ட பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் ஊராட்சியிலுள்ள நியாயவிலைகடைகளில் பார்வையிட்டு குறைகள் ஏதும் காணப்பட்டால் மாநில மற்றும் வருவாய் கோட்ட அளவிலான அமைப்புகளுக்கு தெரிவிப்பது | ஆலோசனை கூறல் | இணைப் பதிவாளர் கூட்டுறவு துறை மற்றும் மாவட்ட விநியோக அலவலர் |

| வ. எண் | துறைகள் / நிறுவனங்கள்/ மையங்கள் | அளிக்கப்பட உள்ள பொறுப்புகள் | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | நியாய விலைக் கடைகள் | ஆய்வு செய்தல் | மாவட்ட வழங்கல் அலுவலர் மற்றும் இணை பதிவாளர் (பொது விநியோகம்) |
| 2 | பகுதி நேர நியாய விலைக்கடைகள் | ஆய்வு செய்தல் | மாவட்ட வழங்கல் அலுவலர் மற்றும் இணை பதிவாளர் (பொது விநியோகம்) |
| 3 | நடமாடும் நியாய விலைக் கடைகள் | ஆய்வு செய்தல் | மாவட்ட வழங்கல் அலுவலர் மற்றும் இணை பதிவாளர் (பொது விநியோகம்) |
| 4 | நவீன அரிசி ஆலைகள் மற்றும் பகுப்பாய்வு சார்ந்த ஆய்வகங்கள் | ஆய்வு செய்தல் | அலுவலர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் |

## 22.ஊரக வளர்ச்சித்துறை (சமுதாய சொத்துக்கள் பேணுதல்)

| வ. எண் | பொருள் | அளிக்கப்பட்ட பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | சமுதாய சொத்துக்களை விற்பனை, குத்தகை மாற்றம் ஆகியவற்றிற்கான கருத்துரு வழங்கல் | ஆய்வு மற்றும் மேற்பார்வை யிடுதல் | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) |
| 2 | சமுதாய சொத்துக்களை தவறாக பயன்படுத்துதல் , ஆக்கிரமிப்பு சேதம் மற்றும் இழப்பிற்கு எதிரான பாதுகாப்பு | ஆய்வு மற்றும் மேற்பார்வை யிடுதல் | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) |
| 3 | சமுதாய சொத்துக்களை அடையாளம் காணல் பதிவு செய்தல், வீதங்களை அறுதியிடல், சமுதாயச் சொத்துக்ளுக்கானப் பயன்படுத்துவோர் கட்டணங்கள் | பார்வையிடல் | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) |

# 23. சமூக காடுகள் மற்றும் பண்ணைக்காடுகள்

| வ. எண் | பொருள் | அளிக்கப்பட உள்ள பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | சமூக மற்றும் பண்ணைக்காடுகள் திட்டம் | ஆய்வு செய்தல் | மாவட்ட வன அலுவலர் (சமூகக் காடுகள் திட்டம்) |
| 2 | மலைத் தோட்ட கூழ்மரத் திட்டம் (மாநிலத் திட்டம்) | ஆய்வு செய்தல் | மாவட்ட வன அலுவலர் ( சமூகக் காடுகள் திட்டம்) |
| 3 | பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களுக்கும் அரசு துறைகளுக்கும் தோட்டப் பயிர்களுக்கு விதைகளையும் செடிகளையும் இலவசமாக வழங்குதல் (மாநிலத் திட்டம்) | ஆய்வு செய்தல் | உதவி இயக்குநர், தோட்டக் கலை |
| 4 | மூங்கில் பண்ணைகள் அமைத்தல் | ஆய்வு செய்தல் | மாவட்ட வன அலுவலர் |
| 5 | சமூக தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் | ஆய்வு செய்தல் | இணை இயக்குநர், வேளாண்மை |
| 6 | பழங்குடியினர் பகுதிகளில் பயிர்களை வளர்த்தல் (மாநிலத் திட்டம்) | ஆய்வு செய்தல் | இணை இயக்குநர், வேளாண்மை |
| 7 | பழங்குடியினர் பகுதிகளில் பள்ளிகளை கட்டுதல், வனச்சாலைகளை அமைத்தல் (மாநிலத் திட்டம்) | ஆய்வு செய்தல் | மாவட்ட வன அலுவலர் |
| 8 | மக்கள் நாற்றாங்கால்களை நிறுவுதல் | ஆய்வு செய்தல் | இணை இயக்குநர், வேளாண்மை |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 9 | ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி அதிகாரத்தில் உள்ள சாலைகளில் நிழல் தரும் மரங்களை அமைத்து பேணுதல் | ஆய்வு செய்தல் | மாவட்ட வன அலுவலர் (சமூகக் காடுகள் திட்டம்) |
| 10 | தேன், மரப் பட்டைகள், புளி, ஏலக்காய், மூங்கில் போன்ற சிறிய வன உற்பத்தி பொருட்களை முறைப்படுத்துதல் ( மாநிலத்திட்டம்) | ஆய்வு செய்தல் | மாவட்ட வன அலுவலர் |
| 11 | வனத்துறையின் சிறுதிர வன உற்பத்தி பொருட்கள் மேம்பாட்டுத் திட்டம் (மாநிலத் திட்டம்) | ஆய்வு செய்தல் | மாவட்ட வன அலுவலர் |
| 12 | பெரிய வகை பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் | ஆய்வு செய்தல் | இணை பதிவாளர் , கூட்டுறவு சங்கங்கள் |
| 13 | வனத்துறையின் ஊரக எரிபொருள் விறகு பயிரிடும் திட்டம் ( மாநிலத் திட்டம்) | ஆய்வு செய்தல் | மாவட்ட வன அலுவலர் |
| 14 | வனத்துறையின் தரம் தாழ்ந்த காடுகளை மீன்வளர்ச்சி தீவனம், எரிபொருள் பயிரிடும் திட்டம் ( மாநிலத் திட்டம்) | ஆய்வு செய்தல் | மாவட்ட வன அலுவலர் |
| 15 | எரிபொருள் மற்றும் தீவனம் ஆகியவற்றை சமூக தரிசு நிலங்களில், குளங்களில் பாசன பகுதிகளில் பயிரிடுதல் | ஆய்வு செய்தல் | மாவட்ட வன அலுவலர் (சமூகக் காடுகள்) |
| 16 | தீவன சிறு தொட்டிகளையும் வேர் நாற்று முனைகளையும் வழங்குதல் | ஆய்வு செய்தல் | மாவட்ட வன அலுவலர் (சமூகக் காடுகள்) |
| 17 | தேசிய தரிசு நில மேம்பாட்டு வாரியத்தால் நிதி உதவி பெறப்பட்டு வனத்துறையின் கீழான தீவன மேம்பாட்டுத் திட்டம் | ஆய்வு செய்தல் | மாவட்ட வனஅலுவலர் |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 18 | ஊரக வளர்ச்சித் துறையின் எரிவாயு தேசிய வளர்ச்சித் திட்டம் | ஆய்வு செய்தல் | உதவிப் பொறியாளர் (கரிம வாயு) |
| 19 | ஊரக வளர்ச்சித் துறையின் நவீன எரி அடுப்பிற்கான தேசியத் திட்டம் | ஆய்வு செய்தல் | உதவிப் பொறியாளர் (கரிம வாயு) |

## 24.தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

| வ. எண் | பொருள் | அளிக்கப்பட உள்ள பொறுப்புகளின் தன்மை | கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | தன்னிறைவுத் திட்டம் - ஊரக குடியிருப்புகள் உள்ளடங்காத பகுதிக்கான ஊரக குடிநீர் வழங்கும் திட்டம் | ஆய்வு செய்தல் | மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |
| 2 | குறைந்த பட்ச தேவைகள் திட்டத்தின்கீழ் உவர் நீரினை கட்டுப்படுத்தி உப்பு தன்மையால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீா வழங்குதல் | ஆய்வு செய்தல் | மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |
| 3 | ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் சிறப்புத் திட்டம் | ஆய்வு செய்தல் | மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |

# இயல்–VI

## முடிவுரை

இவ்வறிக்கையில் இயல்கள் II மற்றும் III–ல் கண்டுள்ள பொது பொருள்கள் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பட்டியல் நான்கில் குறிப்பிடப்பட்டுள்ள 29 இனங்கள் பற்றிய பரிந்துரைகள் மற்றும் இயல்கள் IV மற்றும் V–ல் கண்டுள்ள திட்டங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சி செயல் திட்டம் தயாரித்தல், மேற்பார்வை மற்றும் ஆய்வு பணிகளை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்குதல் தொடர்பான பரிந்துரைகள் யாவும், இது குறித்து அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவால் ஆராய்ந்து, விவாதித்து ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கலாம் என்று முடிவு செய்யப்பட்ட பரிந்துரைகளாகும். இயல்கள் II மற்றும் III–ல் கண்டுள்ள பரிந்துரைகளை அரசு ஆராய்ந்து ஓராண்டுக்குள் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குமாறு குழு கேட்டுக் கொள்கிறது. அறிக்கையின் இயல்கள் IV மற்றும் V–ல் கண்டுள்ள பரிந்துரைகளை செயல்படுத்த அரசு உடனடி நடவடிக்கைகள் எடுக்க இக்குழு தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது.

செயல்பாட்டு பொறுப்புக்கள் மற்றும் நிதி ஒதுக்கீடு ஆகியவை ஒன்றுக்கொன்று ஒத்து போகின்ற வகையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மேலும் புதிய அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் கடமைகள் வழங்குவதில் இவ்வரசு மிகுந்த அக்கரை கொண்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டமன்ற பேரவையில் உள்ளாட்சி அமைப்புக்களை மேலும் வலுப்படுத்த தேவையான பரிந்துரைகளை வழங்கும் பொருட்டு இந்த உயர்மட்டக் குழு அமைக்கப்படும் என்று அறிவித்ததே இதற்கு தக்க சான்றாகும்.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக பொறுப்புக்களும் கடமைகளும் ஒப்படைப்பது ஓர் தொடர்நிலை செயலாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புக்களின் திறமையான செயல்பாடுகளுக்கு அதிக அதிகாரங்களும், பொறுப்புக்களும் வரும் காலங்களில் ஒப்படைப்பு செய்வது அவசியமான ஒன்றாகும். எனவே, மாநில அரசு இக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட இந்த அதிகாரங்களையும், பொறுப்புக்களையும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க விரைந்து முடிவு எடுக்கப்படும் என்றும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்கள் மேலும் வழங்க இது போன்ற குழுவினை இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் அமைக்க அரசு ஆவண செய்யும் என்று இக்குழு எதிர்பார்க்கிறது.

# இணைப்பு - 1.1

## மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்க பரிந்துரை செய்ய உயர்மட்டக் குழு அமைத்து வெளியிடப்பட்ட அரசு ஆணை.

(அரசு ஆணை (நிலை)எண்.320 ஊரக வளர்ச்சி(சி1) துறை, நாள் 11.11.1997)

சுருக்கம்

ஊராட்சிகள் - மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களை வழங்க வழிவகைகளை ஆராய குழு அமைக்கப்பட்டது - மேலும் இருவரை உறுப்பினர்களாக குழுவில் சேர்த்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆணை:-

இந்திய அரசியலமைப்பின் 73வது திருத்தச் சட்டத்திற்கு இணங்க உருவாக்கப்பட்ட மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளான ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு தேர்தல் நடைபெற்று பிரதிநிதிகள் பதவி ஏற்றுள்ளனர். மேற்கூறிய சட்டத்தின் பிரிவுக்கூறு 243ஜி மற்றும் 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிசகள்ள சட்டத்தின் பிரிவு 257-க்கிணங்க பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களை தீட்டி செயல்படுத்தவும் மற்றும் 1994ஆம் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பட்டியல் IVல் உள்ள இனங்களை செயல்படுத்தவும் தேவையான பொறுப்புக்களை ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கலாம் என்பது குறித்த ஆலோசனை கூறுமாறு மாநில திட்டக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. அவ்வாறே மாநில திட்டச்குழு தனது இரண்டு அறிக்கைகளில் பல இனங்களின் மீது அரசுக்கு அறிக்கைகளை அனுப்பியது. இவ்வறிக்கைகளை பிற துறைகளுடன் கலந்து ஆராய்ந்து அரசு பல ஆணைகளை பிறப்பித்துள்ளது. இன்னும் சில ஆணைகள் பிறப்பிக்கப்படவுள்ளது. தற்பொழுது, மாநில திட்டக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று மாவட்ட ஊராட்சி , ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சிகளுக்கு இதுவரை வழங்கியுள்ள அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் பல்வேறு திட்டங்களை கண்காணிக்கும் பணிகள் ஆகியவற்றை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆய்வு செய்து மேலும் எத்தகைய மாற்றங்களை செய்யலாம், எத்தகைய உரிமைகளையும், பொறுப்புகளையும், அதிகாரங்களையும் அளிக்கலாம் என்பது பற்றி பரிந்துரை செய்ய சட்டப்பேரவையில் உள்ள கட்சிப் பிரதிநிதிகளை அமைச்சர் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அவர்களை அமைப்பாளராகக் கொண்டு குழு ஒன்று அமைக்கப்படும் என்றும் இக்குழுவில் ஆளுங்கட்சி சார்பிலும், பிராதான எதிர்கட்சி சார்பிலும் முறையே இரண்டு உறுப்பினர்களும் மற்ற கட்சிகளின் சார்பில் ஒவ்வொரு உறுப்பினரும் நியமிக்கப்படுவர் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

2. அதன் அடிப்படையில் கீழ்க்கண்டவர்களைக் கொண்ட குழுவை அமைக்க அரசால் ஆணைகல் பிறப்பிக்கப்படுகின்றது:-

| | |
|---|---|
| 1. மாண்புமிகு திரு.கோ.சி.மணி, அமைச்சர்<br>ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை | அமைப்பாளர் |
| 2. திரு.பெ.சு.திருவேங்கடம், சட்டமன்ற உறுப்பினர், தி.மு.க. | உறுப்பினர் |
| 3.திரு.பரமத்தி சண்முகம், கரூர் மாவட்ட தி.மு.க. செயலாளர் | உறுப்பினர் |
| 4.திரு.கே.எஸ்.அழகிரி, சட்டமன்ற உறுப்பினர், த.மா.கா. | உறுப்பினர் |
| 5.திரு.என்.ஆர்.அழகராஜா, சட்டமன்ற உறுப்பினர், த.மா.கா. | உறுப்பினர் |
| 6.திரு.அப்துல் லத்தீப், சட்டமன்ற உறுப்பினர், இ.தே.லீக் | உறுப்பினர் |
| 7.திரு.சொ.கருப்பசாமி, சட்டமன்ற உறுப்பினர் அ.இ.அ.தி.மு.க. | உறுப்பினர் |
| 8.திரு.இராசேந்திரன் (எ) தீரன், சட்டமன்ற உறுப்பினர், பா.ம.க. | உறுப்பினர் |
| 9.திரு.இலா.சந்தானம், சட்டமன்ற உறுப்பினர், அ.இ.பா.பிளாக் | உறுப்பினர் |
| 10.திரு.ஜி.இராமகிருஷ்ணன், பி.ஏ.பி.எல்.,<br>மாநில செயற்குழு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி(மார்க்கிஸ்ட்) | உறுப்பினர் |

11.திரு.ஏ.எம்.கோபு,
மாநில செயற்குழு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்

12.திரு.பி.அய்யாக்கண்ணு, தலைவர், திருச்சி புறநகர மாவட்ட ஜனதாதளம், உறுப்பினர்
13.டாக்டர் வா.மைத்ரேயன், மாநில பொது செயலாளர், பாரதிய ஜனதா கட்சி, உறுப்பினர்

3. மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சிகளுக்கு இதுவரை வழங்கியுள்ள அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் பல்வேறு திட்டங்களை கண்காணிக்கும் பணிகள் ஆகியவற்றை ஆய்வு செய்து மேலும் எத்தகைய மாற்றங்களைச் செய்யலாம் மற்றும் எத்தகைய உரிமைகளையும், பொறுப்புகளையும், அதிகாரங்களையும் அளிக்கலாம் என்பது பற்றியும் அரசுக்கு பரிந்துரை செய்தல் இக்குழுவின் ஆய்வு வரம்புகளாகும்.

4. இக்குழு ஒரு முதல் நிலைக் குழுவாக இருக்கும். தனது அறிக்கையினை ஆறு மாத காலத்துக்குள் அரசுக்கு அளிக்கும்படி இக்குழு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. இவ்வாணை நிதித் துறையின் ஒப்புதலுடன் பிறப்பிக்கப்படுகிறது.
(அ.சா.கு.எண்.5370/நி.செ./P/97 நாள் 3.11.1997)

(ஆளுநரின் ஆணைப்படி)

இரமேஷ் சந்திர பண்டா,
அரசுச் செயலாளர்.

# இணைப்பு - 1.2

## மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்க பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவிற்கு கூடுதல் இரண்டு உறுப்பினர் நியமித்து வெளியிடப்பட்ட அரசு ஆணை.

(அரசு ஆணை (நிலை)எண்.78, ஊரக வளர்ச்சி(சி1) துறை, நாள் 28.4.1998)

சுருக்கம்

ஊராட்சிகள் - மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களை வழங்க வழிவகைகளை ஆராய குழு அமைக்கப்பட்டது - மேலும் இருவரை உறுப்பினர்களாக குழுவில் சேர்த்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

படிக்கப்பட்டது:

அரசு ஆணை(நிலை) எண்.320, ஊ.வ.துறை, நாள் 11.11.97

ஆணை:-

பார்வையில் கண்ட அரசாணையில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்க வழி வகைகளை ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை செய்ய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராக கொண்டு சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள கட்சிகளின் பிரதிநிதிகளாக கீழ் கண்ட நபர்களைக் கொண்டு குழு அமைத்து ஆணையிடப்பட்டது.

| | |
|---|---|
| 1. திரு.பெ.சு.திருவேங்கடம், சட்டமன்ற உறுப்பினர் | தி.மு.க. |
| 2.திரு.பரமத்தி சண்முகம் | தி.மு.க. |
| 3.திரு.கே.எஸ்.அழகிரி, சட்டமன்ற உறுப்பினர் | த.மா.கா. |
| 4.திரு.என்.ஆர்.அழகர்ராஜா, சட்டமன்ற உறுப்பினர் | த.மா.கா. |
| 5.திரு.சொ.கருப்பசாமி, சட்டமன்ற உறுப்பினர் | அ.இ.அ.தி.மு.க. |
| 6.திரு.எம்.அப்துல் லத்தீப், சட்டமன்ற உறுப்பினர் | இ.தே.லீக் |
| 7.திரு.இராசேந்திரன் (எ) தீரன், சட்டமன்ற உறுப்பினர் | பா.ம.க.(II) |
| 8.திரு.இலா.சந்தானம், சட்டமன்ற உறுப்பினர் | அ.இ.பா.பிளாக் |
| 9.திரு.ஜி.இராமகிருஷ்ணன் | இ.க.(மார்க்சிஸ்ட்) |
| 10.திரு.ஏ.எம்.கோபு | இ.க. |
| 11.திரு.பி.அய்யாக்கண்ணு | ஜனதாதளம் |
| 12.டாக்டர் வா.மைத்ரேயன் | பா.ஜ.க. |

தற்போது இக்குழுவில் மேலும் புதிதாக டாக்டர் கே.கிருஷ்ணசாமி, சட்டமன்ற உறுப்பினர், புதிய தமிழகம் கட்சி மற்றும் திரு.ஐ.கணேசன், சட்டமன்ற உறுப்பினர், பாட்டாளி மக்கள் கட்சி(1)யை சேர்ந்தவர்களையும் இக்குழுவில் உறுப்பினர்களாக நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி மேற்குறிப்பிட்ட டாக்டர் கே.கிருஷ்ணசாமி, சட்டமன்ற உறுப்பினர், புதிய தமிழகம் கட்சி மற்றும் திரு.ஐ.கணேசன், சட்டமன்ற உறுப்பினர், பாட்டாளி மக்கள் கட்சி(1) ஆகியோர்களை இக்குழுவின் உறுப்பினராக நியமித்து அரசு ஆணை வெளியிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரமேஷ் சந்திர பண்டா,
அரசுச் செயலாளர்.

# இணைப்பு - 1.3

## மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்க பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் பதவி காலம் ஆறு மாத காலத்திற்கு நீட்டித்து பிறபிக்கப்பட்ட அரசு ஆணை.

(அரசு ஆணை (நிலை)எண்.100, ஊரக வளர்ச்சி(சி1) துறை, நாள் 22.5.1998)

சுருக்கம்

ஊராட்சிகள்- மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்க வழிவகைகளை ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை செய்ய முதல்நிலை குழு அமைக்கப்பட்டது - குழுவின் பதவி காலம் நீட்டிப்பு - ஆணை வெளியிடப்படுகிறது.

---

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை (நிலை) எண்.320, ஊ.வ.துறை, நாள் 11.11.97.
2. அரசு ஆணை (நிலை) எண்.78 ஊ.வ.துறை , நாள் 28.4.98.

ஆணை:

பார்வையில் படிக்கப்பட்ட அரசு ஆணை ஒன்று மற்றும் இரண்டில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்க வழிவகைகளை ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை செய்ய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளாராகக் கொண்டு சட்டமன்றத்தில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் பிரதிநிதிகளாக கீழ்கண்ட நபர்களைக் கொண்டு முதல்நிலைக் குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

| உறுப்பினர்களின் பெயர்கள் | சார்ந்துள்ள கட்சி |
|---|---|
| 1.திரு.பெ.சு.திருவேங்கடம், சட்டமன்ற உறுப்பினர் | தி.மு.க. |
| 2.திரு.பரமத்தி சண்முகம் | தி.மு.க. |
| 3.திரு.கே.எஸ்.அழகிரி, சட்டமன்ற உறுப்பினர் | த.மா.கா. |
| 4.திரு.என்.ஆர்.அழகர்ராஜா, சட்டமன்ற உறுப்பினர் | த.மா.கா. |
| 5.திரு.எம்.அப்துல் லத்தீப், சட்டமன்ற உறுப்பினர் | இ.தே.லீக். |
| 6.திரு.சொ.கருப்பசாமி, சட்டமன்ற உறுப்பினர் | அ.இ.அ.தி.மு.க. |
| 7.திரு.ஏ.இராசேந்திரன் (எ) தீரன், சட்டமன்ற உறுப்பினர் | பா.ம.க.(2) |
| 8.திரு.இலா.சந்தானம், சட்டமன்ற உறுப்பினர் | அ.இ.பா.பிளாக் |
| 9. டாக்டர் கே.கிருஷ்ணசாமி, சட்டமன்ற உறுப்பினர் | புதிய தமிழகம் கட்சி |
| 10.ஐ.கணேசன், சட்டமன்ற உறுப்பினர் | பா.ம.க.(1) |
| 11.திரு.ஜி.இராமகிருஷ்ணன் | இ.க.(மார்க்சிஸ்ட்) |
| 12.திரு.ஏ.எம்.கோபு | இ.க. |
| 13.திரு.பி.அய்யாக்கண்ணு | ஜனதாதளம் |
| 14.டாக்டர் வா.மைத்ரேயன் | பா.ஜ.க. |

2. இக்குழு தனது அறிக்கையை ஆறு மாத காலத்திற்குள் அரசுக்கு அளிக்க வேண்டும். இக்குழு இது வரை மூன்று முறை கூடி 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகளின் சட்டத்தில், பட்டியல்-IVல் கண்டுள்ள 29 இனங்களில் ஐந்து இனங்கள் மீது விவாதித்து தனது கருத்தை தெரிவித்துள்ளது. இந்நிலையில் இக்குழுவின் ஆறு மாத பதவிக்காலம் 10.5.98 உடன் முடிவடைந்தது.

3. 1994ம் ஆண்டு ஊராட்சிகளின் சட்டம், பட்டியல் IVல் குறிப்பிடப்பட்டுள்ள மீதமுள்ள இனங்களில் கண்டுள்ள பொருள்கள் மீது குழு விவாதித்து கருத்து தெரிவிக்க வேண்டியுள்ளதால் குழு தனது பணியை தொடர்வது அவசியம் என்று அரசு கருதுகிறது. எனவே இக்குழுவின் பதவிகாலத்தை நீட்டிப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி இக்குழுவின் பதவிகாலத்தை 11.5.98 முதல் மேலும் ஆறு மாத காலத்திற்கோ அல்லது குழு தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்கும் வரையிலோ இதில் எது முந்தியோ அதுவரை நீட்டித்து அரசு ஆணையிடுகிறது.

4. 11.5.98 முதல் இவ்வாணை வெளியிடும் நாள் வரை இக்குழு தொடர்ந்து பணிபுரிந்து வந்தமைக்கு பின்னேற்பு ஆணை வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இக்குழுவின் உறுப்பினர்களாக இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் பயணப்படி மற்றும் தினப்படி ஆகியவை 1951-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊதியம் வழங்குதல் கூட்டத்தின்படியும், சட்டமன்ற உறுப்பினர் அல்லாத உறுப்பினர்கள் தமிழ்நாடு பயணப்படிகள் விதி பாகம், II, விதி 11(2)ன் கீழும் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைபெற்ற கூட்டங்களில் கலந்து கொண்ட மற்றும் இனி மேல் நடைபெறும் கூட்டங்களில் கலந்து கொள்ளும் நாட்களுக்கு கீழ் பெற தகுதியுடையவராவர். இதற்கு ஆகும் செலவினங்கள் கீழ் கண்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

"3451-00 தலைமைச் செயலகம், பொருளாதாரப் பணிகள் -
090 - தலைமைச் செயலகம் - I திட்டத்தில் சேராதது -
AE - ஊரக வளர்ச்சித் துறை - 34 ஏணைய செலவுகள்
01 - ஏனைய இனங்கள் (DPC.3451-00-090-AE-3410)"

6. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.
(அ.சா.கு.எண்.1873/FS/P/98, நாள் 5.5.98)

(ஆளுநரின் ஆணைப்படி)

இரமேஷ் சந்திர பண்டா,
அரசுச் செயலாளர்.

# இணைப்பு - 1.4

## மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்க பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் பதவி காலம் மேலும் நீட்டித்து பிறபிக்கப்பட்ட அரசு ஆணை.

(அரசு ஆணை (நிலை)எண்.247, ஊரக வளர்ச்சி(சி4) துறை, நாள் 23.11.1998)

சுருக்கம்

ஊராட்சிகள் - மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்க வழிவகைகளை ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை செய்ய முதல்நிலைக் குழு அமைக்கப்பட்டது - குழுவின் பதவி நீட்டிப்பு காலம் 10.11.98 உடன் முடிவடைந்தது - மறு நீட்டிப்பு - ஆணை வெளியிடப்படுகிறது.

---

படிக்கப்பட்டது.

1. அரசு ஆணை நிலை எண்.320, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 11.11.97.
2. அரசு ஆணை நிலை எண்.78, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 28.4.98.
3. அரசு ஆணை நிலை எண்.100, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 22.5.98.

* * *

ஆணை

பார்வையில் படிக்கப்பட்ட அரசு ஆணை ஒன்று மற்றும் இரண்டில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்க வழிவகைகளை ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை செய்ய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும் சட்டமன்றத்தில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் முதல்நிலைக் குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை 6 மாத காலத்திற்குள் அரசுக்கு அளிக்கவேண்டும். இக்குழு முதல் 6 மாத காலம் 10.5.98-உடன் முடிவடைந்ததால் இக்குழுவின் பதவிக்காலத்தை மேலும் 6 மாத காலத்திற்கோ அல்லது குழு தனது அறிக்கையை சமர்ப்பிக்கும் வரையிலோ இதில் எது முந்தியதோ அதுவரை நீட்டித்து பார்வையில் மூன்றில் கண்ட அரசு ஆணையில் ஆணையிடப்பட்டது.

2. இக்குழுவின் பதவி நீட்டிப்பு காலம் 10.11.98-உடன் முடிவடைந்தது. குழு தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் குழு தனது பணியை தொடர்வது அவசியம் என்று அரசு கருதுகிறது. எனவே இக்குழுவின் பதவிக் காலத்தை நீட்டிப்பது என்று அரசு முடிவு செய்தது. அதன்படி இக்குழுவின் பதவிக்காலத்தை 11.11.98 முதல் இரண்டு மாத காலத்திற்கோ அல்லது குழு தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்கும் வரையிலோ இதில் எது முத்தியதோ அதுவரை நீட்டித்து அரசு ஆணையிடுகிறது.

3. 11.11.98 முதல் இவ்வாணை வெளியிடும் நாள் வரை இக்குழு தொடர்ந்து பணிபுரிந்து வந்தமைக்கு பின்னேற்பு ஆணை வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. இக்குழுவின் உறுப்பினர்களாக இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் பயணப்படி மற்றும் தினப்படி ஆகியவை 1951-ம் ஆண்டு தமிழ்நாடு ஊதியம் வழங்குதல் சட்டத்தின்படியும், சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லாத உறுப்பினர்கள்

தமிழ்நாடு பயணப்படி விதிகள் பாகம் II விதி 11(2)-ன் கீழ் பெற தகுதியுடையவராவார். இதற்கு ஆகும் செலவினங்கள் கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:-

"3451-00 தலைமைச் செயலகம், பொருளாதாரப் பணிகள் - 090 - தலைமைச் செயலகம் - I திட்டத்தில் சேராதது - AE - ஊரக வளர்ச்சித் துறை - DP Code No.3451 - 00 - 090 - AE - 0100".

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 4558/FS/P/98, நாள் 3.11.98-ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரமேஷ் சந்திர பண்டா,
அரசுச் செயலாளர்.

# இணைப்பு - 2.1

## 28.11.97 அன்று மாலை 3 மணி அளவில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற முதல்நிலைக் குழுவின் கூட்ட நடவடிக்கை குறிப்பு.

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் அதிகாரங்களை வழங்குவது குறித்து ஆராய அமைக்கப்பட்ட முதல் நிலைக் குழுவின் முதல் கூட்டம் 28.11.97 அன்று மாலை மூன்று மணியளவில் தலைமைச் செயலகம், பிராதான கட்டிடத்திலுள்ள கூட்ட அறையில் மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) மற்றும் குழுவின் அமைப்பாளர் திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

2. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்

1. திரு.பெ.சு.திருவேங்கடம், சட்டமன்ற உறுப்பினர்.தி.மு.க.
2. திரு.பரமத்தி சண்முகம், தி.மு.க..,
3. திரு.கே.எஸ்.அழகிரி, சட்டமன்ற உறுப்பினர், தா.மா.க.
4. திரு.சொ.கருப்பசாமி, சட்டமன்ற உறுப்பினர், அ.இ.அ.தி.மு.க.
5. திரு.ஏ.எம்.கோபு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி,
6. திரு.பி.அய்யாக்கண்ணு, திருச்சி புறநகர் ஜனதா தளம் தலைவர்
7. டாக்டர் வா.மைத்ரேயன், பா.ஜ.க

3. செயலரின் முகவுரையுடன் கூட்டம் ஆரம்பமானது. கூட்டத்தில் இதுவரை ஊராட்சிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் குறித்தும், கூட்டத்தின் பொருள் நிரல் குறித்தும் விவாதிக்கப்பட்டது. இது முதல் நிலைக் குழுவின் முதல் கூட்டமாதலால் கீழ்கண்ட முடிவை அனைத்து உறுப்பினர்களும் செயற்படுத்துவதென முடிவு மேற்கொள்ளப்பட்டது.

குழுவின் அனைத்து உறுப்பினர்களும் ஊராட்சி மன்றத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களைச் சந்திப்பது எனவும், மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் அளிக்க வேண்டிய அதிகாரம் குறித்து அளிக்கப்படும் மனுக்களை உறுப்பினர்ககளின் கருத்துக்களுடன் எழுத்து மூலமாக நேரிடையாக, செயலர், ஊரக வளர்ச்சி துறை அவர்களுக்கு பதினைந்து தினங்களுக்குள்ள அனுப்பி வைக்க வேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது. அம்மனுக்களின் மீதான இறுதி முடிவை அடுத்த கூட்டத்தில் குழு மேற்கொள்ளும் என தீர்மானிக்கப்பட்டது.

ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்.

## இணைப்பு - 2.2

## 7.4.98 அன்று மாலை 3 மணி அளவில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற முதல்நிலைக் குழுவின் இரண்டாவது கூட்ட நடவடிக்கை குறிப்பு.

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்குவது குறித்து ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட முதல் நிலைக் குழுவின் இரண்டாவது கூட்டம் 7.4.98 அன்று மாலை 3 மணியளவில் தலைமைச் செயலகம், பிரதானக் கட்டிடத்திலுள்ள கூட்ட அறையில் மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) மற்றும் குழுவின் அமைப்பாளர் திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் கீண்கண்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

| | |
|---|---|
| 1.திரு.பெ.சு.திருவேங்கடம், சட்டமன்ற உறுப்பினர் | தி.மு.க. |
| 2.திரு.பரமத்தி சண்முகம் | தி.மு.க. |
| 3.திரு.கே.எஸ்.அழகிரி, சட்டமன்ற உறுப்பினர் | த.மா.கா. |
| 4.திரு.என்.ஆர்.அழகராஜா, சட்டமன்ற உறுப்பினர் | த.மா.கா. |
| 5.திரு.சொ.கருப்பசாமி, சட்டமன்ற உறுப்பினர் | அ.இ.அ.தி.மு.க. |
| 6.திரு.ஏ.இராசேந்திரன் (எ) தீரன், சட்டமன்ற உறுப்பினர் | பா.ம.க. |
| 7.திரு.இலா.சந்தானம், சட்டமன்ற உறுப்பினர் | அ.இ.பா.பிளாக் |
| 8.திரு.ஜி.இராமகிருஷ்ணன் | இ.க.(மார்க்சிஸ்ட்) |
| 9.திரு.ஏ.எம்.கோபு | இ.க. |
| 10.திரு.பி.அய்யாக்கண்ணு | ஜனதாதளம் |
| 11.டாக்டர் வா.மைத்ரேயன் | பா.ஜ.க. |

ஊரக வளர்ச்சித் துறை செயலரின் வரவேற்புரையுடன் கூட்டம் துவங்கியது. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு என்னென்ன உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்கலாம் என்று மாநில திட்டக்குழு பரிந்துரைத்து அளித்துள்ள அறிக்கையில் உள்ள 29 இனங்களில் 25 இனங்கள் மீது அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது. அவ்வரசாணைகளை தொகுத்து அதன் நகல்கள் உறுப்பினர்களுக்கு கூட்டத்தில் வழங்கப்பட்டது. முதல் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி உறுப்பினர்கள் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களை சந்தித்து இது குறித்து மனுக்களை பெற்று அம்மனுக்கள் மீது தங்கள் கருத்துக்களுடன் ஊரக வளர்ச்சி துறை செயலருக்கு அனுப்பி வைப்பது என்று முடிவு செய்தபடி எந்தவொரு உறுப்பினர்களுடமிருந்தும் கருத்துக்கள் பெறப்படவில்லை என்று குழு அமைப்பாளர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தெரிவித்தார்.

மாவட்ட திட்டக் குழுத் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவர் நியமிக்கப்பட்டுள்ளதற்கு பதிலாக மாவட்ட ஊராட்சித் தலைவரையே மாவட்ட திட்டக்குழுவின் தலைவராக நியமனம் செய்வது குறித்தும் மற்றும் சிற்றூராட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுக் கூட்டங்களிலும் ஒன்றியக் குழு உறுப்பினர்கள் சிற்றூராட்சி மன்றக் கூட்டங்களிலும் ஒன்றியக் குழுத் தலைவர்கள் மாவட்ட ஊராட்சி மன்ற கூட்டங்களிலும், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் ஒன்றியக் குழு கூட்டங்களில் கலந்து கொள்ள வகை செய்ய வேண்டும் என்றும் உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர். 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் இவற்றிற்கு வழி வகை செய்யப்படவில்லை என்று இக்குழுவின் அமைப்பாளரும் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தெரிவித்தார். எனினும் இது குறித்து உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எழுத்து மூலம் தெரிவித்தால் அவற்றை இக்குழுவில் பரிசீலிக்கலாம் என்று இக்குழுவின் அமைப்பாளரும் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தெரிவித்தார்.

சிற்றூராட்சிகளில் கிராம சபைகள் இதுவரை இயங்காதது குறித்து உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர். கிராம சபை கூட்டங்களில் என்னென்ன சிரமங்கள் ஏற்படும் என்று இக்குழுவின் அமைப்பாளரும் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் குறிப்பிட்டார். எனினும் இது குறித்து குழு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை ஊரக வளர்ச்சித் துறை செயலருக்கு அனுப்பி வைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

மாநிலத் திட்டக்குழு ஊராட்சி அமைப்புகளுக்கு என்னென்னஅதிகாரங்கள் வழங்கலாம் என்று பரிந்துரை செய்துள்ள 29 இனங்களில் 25 இனங்கள் மீது அரசு ஆணைகள் வாயிலாக மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் ஒப்படைப்பு செய்துள்ளது. மேலும் என்னென்ன உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்கலாம் என்பது குறித்து ஆய்வு செய்யலாம் என்று குழு முடிவு செய்தது. மாநிலத் திட்டக் குழு பரிந்துரைகளில் முதல் 5 இனங்களான (1) வேளாண்மை மற்றும் வேளாண்மை விரிவுபடுத்துதல். (2) நில சீர் திருத்தம் நில உச்சவரம்பு செயல்படுத்துதல் (3) சிறுபாசனம் – நீர்வளம் மேம்பாடு மற்றும் நீர்வள பாதுகாப்பு (4) கால்நடை, பால்பண்ணை மற்றும் கோழிப் பண்ணை (5) மீன்வளம் ஆகியவற்றின் மீது அரசு ஆணைகள் மூலம் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் போக மீதமுள்ளவற்றின் மீது குழு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை ஊரக வளர்ச்சித் துறை செயலருக்கு 20.4.98க்குள் அனுப்பிவைப்பது என்றும் அவற்றின் மீது 25.4.98க்கு பிறகு தொடர்ந்து கூட்டப்படும் கூட்டங்களில் விவாதிக்கலாம் என்று குழு முடிவு செய்தது. மீதமுள்ள இனங்களில் கண்டுள்ள பொருள்கள் குறித்து 30.4.98க்குள் உறுப்பினர்கள் தங்கள் கருத்தினை ஊரக வளர்ச்சிச் செயலருக்கு தெரிவிக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்.

# இணைப்பு - 2.3

## 28.4.98 அன்று மாலை 3 மணி அளவில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற முதல்நிலைக் குழுவின் மூன்றாவது கூட்ட நடவடிக்கை குறிப்பு.

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்குவது குறித்து ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட முதல் நிலைக் குழுவின் மூன்றாவது கூட்டம் 28.4.98 அன்று மாலை 3 மணியளவில் தலைமைச் செயலகம், பிரதானக் கட்டிடத்திலுள்ள கூட்ட அறையில் மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) மற்றும் குழுவின் அமைப்பாளர் திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

2. அக்கூட்டத்தில் கீண்கண்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

| | |
|---|---|
| 1.திரு.பெ.சு.திருவேங்கடம், சட்டமன்ற உறுப்பினர் | தி.மு.க. |
| 2.திரு.கே.எஸ்.அழகிரி, சட்டமன்ற உறுப்பினர் | த.மா.கா. |
| 3. திரு.எல்.சந்தானம், சட்டமன்ற உறுப்பினர், | அ.இ.பா.பிளாக். |
| 4. திரு.அப்துல் லத்தீப், சட்டமன்ற உறுப்பினர், | இ.தே.லீக் |
| 5.திரு.ஐ.கணேசன், சட்டமன்ற உறுப்பினர் | பா.ம.க. |
| 6.திரு.ஏ.எம்.கோபு | இ.க. |
| 7.திரு.ஜி.இராமகிருஷ்ணன் | இ.க.(மார்க்சிஸ்ட்) |
| 8.டாக்டர் வா.மைத்ரேயன் | பா.ஜ.க. |
| 9.திரு.பி.அய்யாக்கண்ணு | ஜனதாதளம் |

